# சார்ல்ஸ் ஸ்பர்ஜனின் போதனைகள்



2

# சார்ல்ஸ் ஸ்பர்ஜனின் போதனைகள்

(1834 - 1892)

**பாகம் - 2**

மொழிபெயர்ப்பு: விநோதா சுரேந்தர்

பூர்வபாதைகள் வெளியீடு

தொடர்பு கொள்ள: 99424 38063 **jpsurendar@yahoo.com**

*First Edition: November 2013 (Copies:1500)*
*Second Edition: July 2017 (Copies: 1000)*

*Logo design: Arun Gnanasekar*
*Cover design: Prasanna Surendar*

# பூர்வ பாதைகள்!

***"வழிகளிலே நின்று, பூர்வபாதைகள் எவையென்று கேட்டு விசாரித்து, நல்ல வழி எங்கே என்று பார்த்து, அதிலே நடவுங்கள். அப்பொழுது உங்கள் ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்" - எரே 6:16***

தமிழ்க் கிறிஸ்தவர்களுக்கு, சரியான ஆவிக்குரிய போதனையை அளிக்கும் நூல்கள் தமிழில் அதிகமாக இல்லை என்பது வருந்தத் தக்க விஷயம். ஆங்கிலம் சுலபமாக படிக்கக் கூடியவர்களுக்கு ஆங்கிலத்தில் இருக்கும் கணக்கிலடங்கா நல்ல நூல்களோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் தமிழில் வெளிவந்துள்ள நல்ல ஆவிக்குரிய போதனைகள் சொற்பமே. ஆகவேதான் 16ஆம் 18ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த தலைசிறந்த போதகர்களின் நூல்களை அப்படியே மொழிபெயர்ப்பு செய்து வெளியிட்டால் தமிழ்க்கிறிஸ்தவர்கள் ஆவிக்குரிய வாழ்க்கையில் சிறந்த முன்னேற்றத்தைக் காண இயலும் என நாங்கள் நம்புவதால்தான் இந்த சிறிய முயற்சியை எடுக்கிறோம். ஸ்பர்ஜன், ஜெ.சி.ரைல் போன்ற ஊழியர்கள் வாழ்ந்திருந்த காலத்தில் கிறிஸ்தவம் சரியான முறையில் தழைத்தோங்கியிருந்தது. இம்மாதிரியான முன்னோர்கள் சென்ற பூர்வபாதைகளை கண்டறிந்து அவர்கள் காட்டும் வழிகளில் செல்வது நமக்கு நன்மை பயக்கும். தமிழர்களின் மத்தியில் இந்த சான்றோர்களின் நல்ல அறிவுரைகளை பரப்புவதே எங்கள் நோக்கம். இந்தப் புத்தகத்தினால் பயனடைந்தவர்கள் அதை மற்ற தமிழ்க் கிறிஸ்தவர்களுக்கும் அறிமுகப்படுத்துவதை உங்கள் நோக்கமாகக் கொண்டீர்களானால், கிறிஸ்துவுக்காக நீங்களும் ஒரு சிறு பங்கு ஊழியம் செய்கிறவர்கள் ஆவீர்கள். தேவன்தாமே உங்கள் செயலை ஆசீர்வதிப்பாராக.

இந்த ஊழியம் லாப நோக்கில் செய்யப்படவில்லை. இதன் மூலமாக பெறப்படும் தொகை, மேலும் இது போன்ற நல்ல புத்தகங்களை அச்சிடுவதற்கென்றே உபயோகப்படுத்தப்படும்.

***"நாளானது சமீபித்து வருகிறதை எவ்வளவாய் காண்கிறீர்களோ, அவ்வளவாய் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லுங்கள்." - எபி 10:25***

# பொருளடக்கம்

## 1. கலியாண விருந்துக்கு அழைத்த உவமை 7

அ) உன்னதமானதொரு திட்டம் 10

ஆ) உன்னதமான முறை 16

இ) தடையை ஏற்படுத்திய காரியம் 23

ஈ) பெருந்தன்மையான மறுஅழைப்பு 28

## 2. காலேப் - எக்காலத்திற்கும் உகந்தவர் 35

அ) தேவனை உண்மையோடு பின்பற்றியவர் 38

ஆ) காலேபு அடைந்த விரும்பத்தகும் வெகுமதி 50

இ) காலேபின் இருதயத்தில் மறைந்திருந்த குணாதிசயம் 57

## 3. நமது கர்த்தரின் பயபக்தியான கேள்வி 61

அ) கைவிடப்பட்ட நிலையிலும் தேவனையே நோக்கியிருந்தார். 64

ஆ) கைவிடப்பட்ட நிலையிலும், தேவனை இறுகப் பற்றியிருந்தார் 68

இ) வேதனையின் கசப்பு இவ்வார்த்தைகளில் வெளிப்பட்டாலும், கர்த்தரின் மௌனம் கற்பிக்கும் பாடம் அதிகம். 72

ஈ) நமது கர்த்தர், அன்பான பிள்ளையாக தேவனை நோக்கிக் கூப்பிட்டார் 74

உ) தேவனால் கைவிடப்பட்டாலும், நமது கர்த்தர், தமது பிதாவின் பணியை தொடர்ந்து நிறைவேற்றுகிறார் 77

ஊ) கர்த்தர் மகிமையான பதிலைப் பெற்றுக் கொண்டார் 79

## 4. பிதாவின் பணியில் கிறிஸ்து 83

அ) கிறிஸ்துவின் ஆவி 85

ஆ) கிறிஸ்துவின் சிந்தையோடு பணி செய்யுங்கள் 96

## 5. சமாதானத்தோடே போ 109

அ) நிச்சயத்தன்மை: "உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது." 113

ஆ) அனுப்பிவிடுதல்: "சமாதானத்தோடே போ." 122

# 1. கலியாண விருந்துக்கு அழைத்த உவமை

*பரலோகராஜ்ஜியம் தன் குமாரனுக்குக் கலியாணஞ்செய்த ஒரு ராஜாவுக்கு ஒப்பாயிருக்கிறது. அழைக்கப்பட்டவர்களைக் கலியாணத்திற்கு வரச்சொல்லும்படி அவன் தன் ஊழியக்காரரை அனுப்பினான். அவர்களோ வர மனதில்லாதிருந்தார்கள். அப்பொழுது அவன் வேறு ஊழியக்காரரை அழைத்து, நீங்கள் போய், இதோ, என் விருந்தை ஆயத்தம் பண்ணினேன். என் எருதுகளும் கொழுத்த ஜந்துக்களும் அடிக்கப்பட்டது. எல்லாம் ஆயத்தமாயிருக்கிறது. கலியாணத்திற்கு வாருங்கள் என்று அழைக்கப்பட்டவர்களுக்குச் சொல்லுங்களென்று அனுப்பினான். - மத் 22:2-4*

இந்த உவமையின் முழு பாகத்தையும் தியானிப்பதற்கு இப்போது இயலாது. ஆகவே, அந்த ராஜரீக விருந்தின் ஆரம்ப காட்சிகளை மாத்திரம் நாம் இப்போது தியானிப்போம். இதை தியானிப்பதற்கு முன்பாக நாம் தேவனுக்கு உள்ளத்தின் ஆழத்திலிருந்து மிகுந்த நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். ஏன் தெரியுமா? அளவிடவே முடியாத அளவுக்கு ஞானமுள்ளவராகிய தேவன், ஞானத்தில் மிகவும் கீழான நிலையிலிருக்கும் நாம் விளங்கிக் கொள்ள வேண்டுமென்பதற்காக, நமது நிலைக்கு இறங்கி வந்து, உவமைகளின் மூலமாக நமக்கு விளங்க வைக்க முயற்சிக்கிறாரே. அதை நினைத்து நாம் அவருக்கு நன்றி செலுத்த வேண்டுமல்லவா! அவரது ராஜ்ஜியத்தைக் குறித்து நாம் விளங்கிக் கொள்ள வேண்டுமென்பதற்காக,

பலவிதங்களில் உவமைகளாக அதை நமக்கு எடுத்துக்கூறுவதைப் பார்க்கையில் பிரமிப்பாக இருக்கிறதல்லவா!

மனிதர்களிலே அறிவுஜீவியாக இருக்கிற சிலபேர், தங்கள் கருத்துக்களை எளியவர்களும் விளங்கிக் கொள்ள வேண்டுமென்பதற்காக, தங்களையே தாழ்த்தி அவர்களுக்கு எளிமையாக எடுத்துக் கூறுவதைக் காணும்போது நாம் அவர்களின் அன்பைக் குறித்து பாராட்டுகிறோம். எல்லையில்லாத ஞானமுள்ள தேவன், அறியாமையும், மந்தபுத்தியும் கொண்டிருக்கிற நம்மிடம், வானத்திலிருந்து இறங்கி வந்து, பக்கத்தில் உட்கார்ந்து சிறுபிள்ளைகளுக்குச் சொல்லுவது போல உவமைகளாக விளக்கிச் சொல்லப் பார்ப்பதை நாம் உணர்ந்து கொண்டோமானால் அவரது அளவற்ற அன்பையும் உணர்ந்து வியந்துதான் போவோம். ஒரு கல்லூரிப் போராசிரியர் தமது மாணாக்கர்களுக்கு வகுப்பறையில் தத்துவசாஸ்திர பாடங்களை உயர்ந்த நடையில் விளக்கிவிட்டு, வீட்டுக்குச் சென்றதும் தமது குழந்தையிடம் அதன் வயதுக்கும் புரிந்து கொள்ளும் திறமைக்கும் ஏற்றவிதத்தில் அதனிடம் குழந்தை மொழியில் பேசும்போது, அதில் அவரது அன்பு விளங்குமல்லவா.

எல்லையற்ற ஞானக்கடலாகிய தேவனுக்கு முன்பாக சேராபீன்களெல்லாம் கைகட்டி பணிந்து கொண்டிருக்கையில், பாவமானிடராகிய நாம் இரட்சிப்பின் வழியை விளங்கிக் கொள்ள வேண்டுமே என்கிற ஆதங்கத்தோடு அவர் உவமைகளின் மூலமாக மானிடரிடம் பேசுகையில் இதுவல்லவா அன்பு என நாம் நன்றியோடு நினைக்க வேண்டும். சிறு குழந்தைகள் எளிதாக புரிந்து கொள்வதற்காக நாம் படங்களைக் காண்பித்து அவர்களுக்கு கற்றுக் கொடுத்து அவர்கள் இருதயத்தில் பதிய வைக்க முயற்சிக்கிறோம். அதுபோலவே, தேவனும் பலவிதமான உவமைகள், கதைகள், நிகழ்ச்சிகள், உதாரணங்களைக் கொண்டு நமது கவனத்தை ஈர்த்து, பரிசுத்தஆவியானவரின் மூலமாக நமக்குத் தெளிந்த புத்தியை அருளப் பார்க்கிறார். அவரது குரலுக்கு மலைகளெல்லாம் அதிரும். இருந்தாலும் நம்மிடம் பேசும்போது அவர் மெல்லிய குரலிலே பேசுகிறார். நாம் மரியாளைப் போன்று அவர் பாதத்தில் அமர்ந்து அவர் கூறுவதைக் கற்றுக் கொள்ள முயற்சிப்போம். கற்றுக் கொள்ளுகிறதான ஆவியை அவர் ஒவ்வொருவருக்கும் அருளுவாரானால், அதுவே அவரது மனதை அறிந்து கொள்வதற்கு முதலாவது படியாக இருக்கும். யாரெல்லாம்

## கலியாண விருந்துக்கு அழைத்த உவமை

சிறுபிள்ளைக்கொத்த மனதோடு கற்றுக் கொள்ள ஆவலாக இருக்கிறார்களோ அவர்களுக்கு ஏற்கனவே தேவன் கற்றுத்தர ஆரம்பித்துவிட்டார் என்று அறிந்து கொள்ளலாம். கருத்தாழம் நிறைந்த இந்த உவமையை கற்றுக் கொண்டு நாமும் உணர்வடைவோம். அது தேவனுடைய பார்வையில் பிரியமாயிருக்கும். உண்மையான தேவபக்தியைக் கற்றுக் கொண்டிருக்கிறோம் என்பதை நமது வாழ்க்கையே வெளிப்படுத்திக் காட்டிவிடும். நாம் பரிசுத்தமுள்ளவர்களாயிருந்தால், ஞானமுள்ளவர்களாயிருப்போம், இயேசுக்கிறிஸ்துவின் சித்தத்திற்குக் கீழ்ப்படிந்து வாழ்வதே, தேவன் கற்றுத் தருபவைகளை விளங்கிக் கொண்டிருக்கிறோம் என்பதற்கு அடையாளமாக இருக்கும்.

இந்த உவமையை விளங்கிக் கொள்வதற்கு நாம் குறிப்பாக ஒருசில காரியங்களின் மீது நமது கவனத்தை செலுத்துவோம். முதலாவதாக, அந்த ராஜாவின் திட்டத்தைக் குறித்து சற்று சிந்திப்போம் - அவர் ***உன்னதமானதொரு திட்டத்தை*** வைத்திருக்கிறார். தனது குமாரனின் கலியாணத்தில் தனது குமாரனை மிகவும் கனப்படுத்த விருப்பம் கொண்டிருக்கிறார். அடுத்தபடியாக தனது நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு அவர் எவ்வளவு ***தயாளத்தோடு செயல்படுகிறார்*** என்பதையும் பார்ப்போம். அவர் ஒரு பெரிய விருந்தை ஆயத்தம் பண்ணினார். அநேகரை அழைத்தார். தம் குமாரனை வேறு எவ்வளவோ விதங்களில்கூட கனம் பண்ணலாம். என்றாலும், அவர் இந்த விதத்தையே தெரிந்து கொண்டார். ஏனென்றால் அதன் மூலமாக அவரது தயாளகுணம் நன்றாக பிரசித்தமாகிறது.

அடுத்தபடியாக, அவர் இவ்வளவு தயாளத்தோடு தயாரித்த திட்டத்தை நிறைவேறவிடாமல் செய்யும் ***தடங்கலையும்*** நாம் அதிக துயரத்தோடு ஆராய்வோம். அழைக்கப்பட்டவர்கள் விருந்துக்கு வரவில்லை. இவ்வளவு ஐசுவரியமுள்ள ராஜாவின் விருந்துக்கு எவ்வித தடங்கலும் ஏற்பட வழியேயில்லை. விருந்துக்காக அவர் தமது செல்வத்தை கணக்கின்றி செலவிட்டிருந்தார். ஆனால் இதுவோ வித்தியாசமானதொரு தடங்கல். எளிதில் நீக்க முடியாத கடினமானதொரு தடங்கல். அழைக்கப்பட்டவர்கள் வர மனதில்லாதிருந்ததுதான் அந்தத் தடங்கல். அடுத்தபடியாக, அந்த ராஜா மிகுந்த தயாள மனப்பான்மையோடு அந்த தடங்கலை நீக்குவதற்கு ***மாற்றுத் திட்டம்*** தயாரித்ததையும் நாம் ஆராய்வோம். - அவர் வேறு ஊழியர்களை

அனுப்பி விருந்துக்கு வாருங்கள் என்று மீண்டுமாக அழைப்பிக்கிறார். இந்த மூன்று வசனங்களை ஆழமாக ஆராய்ந்து மேற்கூறிய காரியங்களை தெளிவாக விளங்கிக் கொண்டோமானால் அதுவே இந்த தியானத்திற்குப் போதுமானதாக இருக்கும்.

## அ) உன்னதமானதொரு திட்டம்

மிகப்பரந்த பிரதேசத்தை ஆளுகின்றதான வல்லமை பொருந்திய ஒரு ராஜா திட்டமொன்று வகுத்தார். அவர் ஒரு மாபெரும் விருந்துக்கு ஏற்பாடு செய்கிறார். ஏனெனில், பட்டத்து வாரிசாகிய அவரது குமாரன் தனக்கொரு துணைவியைக் கொள்ளப் போகிறார். அந்த திருமண வைபவத்தில் தனது மகனை மிகவும் அதிகமாகக் கௌரவிக்க அந்த ராஜா ஆசைப்படுகிறார். பூலோகக் காட்சியிலிருந்து இப்போது நீங்கள் பரலோகக் காட்சிக்கு உங்கள் மனதைத் திருப்புங்கள்.

பிதாவாகிய தேவனுக்கு உன்னதமானதொரு நோக்கம் இருக்கிறது. அது தமது குமாரனை ***மகிமைப்படுத்துவதே***. எவ்விதங்களிலெல்லாம் குமாரனை கனப்படுத்தலாம் என்பதை நாம் சற்று சிந்திப்போம். ***"பிதாவைக் கனம் பண்ணுகிறதுபோல எல்லாரும் குமாரனையும் கனம்பண்ண வேண்டுமென்பதே"*** அவருடைய சித்தமாயிருக்கிறது(யோவா 5:22). பிதாவாகிய தேவனின் குமாரனாகிய இயேசுக்கிறிஸ்து, தெய்வீகத் தன்மையோடு ஏற்கனவே கனம்பொருந்தியவராகத்தான் இருக்கிறார். தேவதூதர்கள் எல்லாரும் அவரைத் தொழுது வணங்கிக் கொண்டிருக்கிறார்கள். அவருடைய மகிமை பரலோகத்தையே நிரப்பியிருக்கிறது. சிருஷ்டிப்பின்போது அதில் அவரும் ஈடுபட்டது, அவருக்கிருந்த மகிமையை விளங்க வைக்கிறது. பூரணமகிமை பொருந்தியவராகவே அவர் இருக்கிறார். "அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது. பரலோகத்தில் உள்ளவைகளும் பூலோகத்தில் உள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும் காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களானாலும், துரைத்தனங்களானாலும், அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக் கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது" என்கிற வசனத்தில் அவருடைய மகிமையை காண்கிறோம்.

### கலியாண விருந்துக்கு அழைத்த உவமை

வெளிச்சம் உண்டாகக் கடவது என அவர் ஒரு வார்த்தை கூறியவுடனே வெளிச்சம் பாய்ந்து வந்து சகலத்தையும் நிரப்பிற்று. மலைகள் உண்டாகக் கடவது என்கிற சொல் அவர் வாயினின்று பிறந்தவுடனே வானளாவிய மலைகளும் ஏற்பட்டன. தண்ணீர்களை சிருஷ்டித்தார். அவை ஓடக்கூடிய வழிகளைக் கட்டளையிட்டார். அவற்றிற்கு ஒரு எல்லையையும் குறித்தார். ஆதியிலேயே இருந்தவரான வார்த்தையாகிய குமாரனுக்கு எந்த மகிமைக்கும் குறைவில்லை. அவர் சொல்ல ஆகும், அவர் கட்டளையிட நிற்கும். அவர் ஆதியிலிருந்தே இருக்கிறவரானதால், சகலமும் அவருக்குள் பாதுகாக்கப்பட்டு வருகிறது. அதன்காரணமாகவும் அவர் புகழப்படத் தக்கவராயிருக்கிறார். அவர் சகலத்தையும் தாங்குகிறதான முக்கியமான ஸ்தானத்தை வகிக்கிறவராயிருக்கிறார்.

பரலோகத்தின் திறவுகோலும், மரணம், பாதாளம் ஆகியவற்றின் திறவுகோல்களும் அவர் வசத்திலிருக்கிறது. அதிகாரமும் ஆட்சியுரிமையும் அவர் தோள்களின் மீது இருக்கிறது. அவருடைய நாமம் ஆச்சரியமானது. எல்லா நாமத்துக்கும் மேலான நாமத்தை உடையவராக அவர் இருக்கிறார். வானத்திலும் பூமியிலும் பூமியின் கீழுள்ள சகல முழங்கால்களும் அந்த நாமத்துக்கு முன்பாக முடங்கும். அவர் சகலத்திற்கும் மேலான ஆண்டவர். அவர் எப்பொழுதும் ஸ்தோத்தரிக்கப்படுகிறவர். இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமான அவருக்கு அண்டசராசரங்களும் துதியை ஏறெடுத்துக் கொண்டேயிருக்கும். குமாரன் அவ்வளவு மகிமையையும் ஏற்கனவே உடையவராகத்தான் இருக்கிறார்.

ஆனாலும் இன்னொரு உறவின் அடிப்படையிலும் அவர் கனத்திற்கு உரியவராயிருக்கிறார். அதாவது ***'இரட்சகர்'*** என்கிற ஸ்தானத்தில் மனுக்குலத்திற்கு முன்பாக வருவதற்கு குமாரனானவர் சித்தங்கொண்டார். மனிதகுலத்தை இரட்சிக்கும் மணவாளனாக தான் ஆகின்ற பொறுப்பை அவர் ஏற்றுக் கொண்டார். அவர் ஏற்கனவே சகலவிதங்களிலும் மகிமை பொருந்தியவர்தாம். இருந்தாலும், அவர் இருதயத்தின் நோக்கமானது, அவருடைய இரக்கத்தை நமக்குத் தெளிவாக விளங்கப்பண்ணுகிறது. அவருடைய செய்கை பெருந்தன்மை வாய்ந்தது. அவருடைய வல்லமையைக் காட்டிலும் அவரது இரக்கம் முக்கிய இடத்தை வகிக்கிறது. ஆகவேதான் அவர் மனிதசாயலைத் தரித்துக் கொண்டு, பாவத்திற்குரிய தண்டனையை மனிதர்கள் அடையாதபடிக்கு, அதற்குண்டான

பிராயச்சித்தத்தை தாம் ஏற்றுக் கொண்டு, மனிதர்களை மீட்க சித்தங்கொண்டார்.

தனது குமாரன் ஒரு ***இரட்சகராக*** கனமடைய வேண்டும் என்பதை பிதா விரும்புகிறார். தேவனுடைய குமாரனாக அவர் ஏற்கனவே மிகுந்த கனமுடையவராகத்தான் இருக்கிறார். ஆனால், தனது குமாரன் "இரட்சகர்" என்கிற ஸ்தானத்தில் கனமடைய வேண்டும் என்பதைப் பிதா ஆதிகாலம் முதலே திட்டமிட்டிருந்தார். ***அவரே இரட்சகர்*** என்பதை உறுதிப்படுத்துகிறதான விழாதான் இந்த கலியாண விருந்து. இந்தப் புதிய உறவை கனப்படுத்துகின்ற விருந்துக்குதான் பிதா அழைப்புவிடுக்கிறார். கிறிஸ்து சபையோடு கொள்கின்ற ஆவிக்குரிய உறவை கனப்படுத்தும் வகையில்தான் சுவிசேஷ விருந்து பிதாவால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. அது ஒரு ராஜரீக விருந்தாக இருக்கிறது.

சகோதரரே, இதை நான் ஒரு முக்கியமான விருந்து என்று சொல்வதற்குக் காரணம், ***பிதாவின் பார்வையில் அது மிகமிக முக்கியமான விஷயமாயிருக்கிறது.*** ஆகவே நமக்கும் அது முக்கியமான நிகழ்ச்சியாக இருக்க வேண்டுமல்லவா! குமாரனை மகிமைப்படுத்துவதில் நாமும் அதிக சந்தோஷத்தைக் காண்பிக்க வேண்டும். உலகில் எந்த ராஜ்ஜியமாக இருந்தாலும், அங்கு நடக்கின்ற ராஜபரம்பரைத் திருமணங்களில் அதன் குடிமக்கள் அதிக ஆர்வமும் முக்கியத்துவமும் காண்பிப்பார்கள். மிகவும் மகிழ்ச்சியோடு அவற்றைக் கொண்டாடுவார்கள். இங்கு நமக்கு முன்பாக வைக்கப்பட்டிருக்கின்ற கலியாண விருந்து ராஜாதி ராஜாவுடையது. அவரது குடிமக்கள் விசேஷித்தவிதத்தில் அதைக் குறித்து சந்தோஷப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறார்கள். நமது நிமித்தமாகத்தான் இந்த விசேஷமான வைபவமே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்பதால் நாம் இன்னும் அதிகமதிகமாக சந்தோஷமும், நன்றியும் உடையவர்களாக இருக்க வேண்டும் அல்லவா? இந்த மகத்துவமான ராஜாதிராஜாவின் கலியாணஐக்கியம் யாரோடு? தேவதூதர்களுடனா? இல்லை. அவர் தேவதூதருக்கு உதவியாகக் கைகொடாமல் என்று சொல்லப்பட்டிருக்கிறதே. அது, மனிதசந்ததியாரோடு அவர் கொள்ளப்போகிற ஐக்கியத்தை வெளிப்படுத்துகிறது. அவர் ஆபிரகாமின் சந்ததிக்கு உதவியாகக் கைக்கொடுத்தார் என வசனத்தில் காண்கிறோம். பரலோகத்தின் கர்த்தரானவர், மனிதசந்ததியை பாவத்தின் வீழ்ச்சியிலிருந்து

மீட்கும்பொருட்டாக, தனது உன்னத நிலைமையிலிருந்து தாழ பூமிக்கு இறங்கி, மனிதனாக அவதரித்ததைக் குறித்து நாம் மகிழ்ச்சியடைய வேண்டாமா?

பரலோகத்தின் தேவசேனைகள் யாவரும் அந்த சம்பவத்தைக் குறித்து மிகுந்த மகிழ்ச்சியடைந்தார்கள். என்றாலும் அவர் வந்தது நமக்காக என்பதினால் நாம்தான் அவர்களைவிட அதிகமாக சந்தோஷப்பட வேண்டும் அல்லவா? தாம் தேவனுக்கு சமமாக இருந்தாலும் அதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மால் தெரிந்துகொள்ளப்பட்ட மனிதர்களுடன் ஒன்றாயிருக்கும்படியாக, மனிதசாயலைத் தரித்துக் கொண்டவராக பூமியில் அவர் வந்ததே நமது மிகப் பெரிய மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். இயேசுக்கிறிஸ்து, சபையோடு உடன்படிக்கை செய்து கொள்வதற்காக இவ்வுலகில் வந்தார். மேலும் தனது மணவாட்டியாகிய சபையை மீட்க வேண்டுமானால் அச்சபையுடன் ஒரே சரீரமாயிருக்கவும் வேண்டுமென்பதற்காக இவ்வுலகில் வந்தார். அதையும் தவிர்த்து மறுமையிலே அவரோடுகூட சிங்காசனத்தில் அமரத்தக்கதாக சபையை மகிமைப்படுத்தும்பொருட்டாகவும் அவர் பூமியிலே மனிதனாக வந்து அவதரித்தார். இதைக் குறித்து மனிதராகிய நாமல்லவா அதிகமாக பூரித்துக் களிகூற வேண்டும்! தூங்குகிறவர்களே, விழித்துப் பாருங்கள்! "என் மகிமையே விழி, வீணையே, சுரமண்டலமே, விழியுங்கள்"(சங் 57:8) என ஆவியில் கூறி களிப்படையக்கூடிய சந்தர்ப்பம் இதைக் காட்டிலும் வேறு என்ன இருக்கக்கூடும்?

ராஜாவின் வீட்டு விருந்துக்கு தாங்கள் அழைக்கப்பட்டிருப்பதை நினைத்து, மகிழ்ச்சியோடும், களிகூறுதலோடும் வரவேண்டியதற்குரிய காரணங்கள் அந்த அழைக்கப்பட்டவர்களுக்கு ஏராளமாக இருக்கிறதே. அதேவிதமாக, இயேசுவின் சுவிசேஷஅழைப்புக்கு சந்தோஷத்தோடு உடன்பட்டு, துரிதமாக வரவேண்டியதற்கு நமக்கும் ஏராளமான காரணங்கள் இருக்கிறதல்லவா!

தவிரவும், மணவாளனாகிய இயேசுக்கிறிஸ்து எத்தகைய ***ராஜரீக பாரம்பரியத்தை*** கொண்டிருக்கிறார் என்பதையும் நாம் நினைக்க வேண்டும். அவ்வகையிலும் அவர் கனத்திற்குரியவர். தேவாதிதேவனுடைய குமாரனாகிய அவரும் தேவனாகவே இருக்கிறார். அவரைக் கனப்படுத்தும்படிக்கு நாம் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறோமா? ஆம்,

அவரைத் தவிர்த்து வேறு யார்தான் கனத்திற்குரியவராக இருக்கக்கூடும்! நம்மை சிருஷ்டித்தவரும், நம்மைப் பாதுகாப்பவருமாகிய அவரையே நாம் மகிமைப்படுத்தி, கனப்படுத்துகிறவர்களாக இருக்க வேண்டும். சகல கனத்திற்கும் மரியாதைக்கும் உரியவராகிய அவரை கனப்படுத்த மறுக்கின்றவர்கள், வேண்டுமென்றேதான் அவருக்குக் கீழ்ப்படியாமல் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட கர்த்தருக்கு சேவை செய்வது மோட்சானந்தமாகவல்லவா இருக்கும்! அவருடைய மகிமை வானபரியந்தம் எட்டுகிறதே! அவரே என்றென்றும் சதாகாலங்களிலும் புகழப்படத் தக்கவராயிருப்பாராக. வாருங்கள், நாம் எல்லோரும் போய் அவரைத் தொழுது கொள்ளுவோம். நாம் தேவனின் கட்டளைகளுக்கு முழுமனதோடும் கீழ்ப்படிவோம். அதனால் குமாரனல்லவோ கனமடைவார்!

அதையுந்தவிர்த்து, ***'இம்மானுவேல்' என்கிற ஸ்தானத்தில்*** வந்த அவருடைய பணியை நினைத்துப் பாருங்கள். அதிலே அவர் எவ்வளவு மரியாதைக்குரியவராயிருக்கிறார்! தேவன் நம்மோடிருக்கிறார் என்றால் அவர் எவ்வளவு மகிமைக்குரியவர் என்பது விளங்கும். தேவனின் ஒரே பேறான குமாரனாகிய அவருடைய புகழ் உலகமெங்கும் பரவி பிரஸ்தாபமடைய வேண்டும் என்பதைக் குறித்து நாம் ஏற்கனவே பார்த்தோம். இப்போது, இம்மானுவேலாக நாம் அவரைக் காண்பதின் அர்த்தம் என்னவென்றால், அவரை ஒரு மனிதஅவதாரமாக, நமது சகோதரனாக, நமது எலும்பின் எலும்பும், மாம்சத்தில் மாம்சமும் கொண்டவராக. நம்மைப் போலவே சகலவிதங்களிலும் சோதிக்கப்பட்டிருந்தாலும் ஒருபோதும் பாவத்தில் விழாதவராக, பாவத்தினால் கறைபடாமல் அதை மேற்கொண்ட ஒரே மனிதனாக அவரை அடையாளங்காண்பதாகும். இது நமக்கு அதிக மகிழ்ச்சியைத் தருகிறதல்லவா? இரண்டாம் ஆதாமாக மனிதகுலத்திற்கே தலைவராக இருக்கின்ற அவரை மகிமைப்படுத்தாமலும் கனப்படுத்தாமலும் இருக்க முடியுமா? தேவனின் சிங்காசனம் இருக்கின்ற ஸ்தலத்திற்கு நம்மை உயர்த்திய அவரை நாம் மகிமைப்படுத்த வேண்டுமல்லவா?

அவருடைய ***குணாதிசயங்களை***யும் நினைத்துப் பார்த்து அவருக்கு மரியாதை செலுத்துங்கள். அவரைப் போல யாராவது இவ்வுலகில் வாழ்ந்திருக்கிறார்களா? அவருடைய தெய்வீக குணாதிசயங்களைப் பற்றி இப்போது நான் குறிப்பிடப் போவதில்லை. அதைக் கூறினால், அவரை விழுந்து நமஸ்கரிக்கக்கூடிய அளவிற்கு ஏராளமான காரணங்கள் இருக்கும்.

## கலியாண விருந்துக்கு அழைத்த உவமை

அவரது மனித அம்சத்தில் இருக்கின்ற குணாதிசயங்களையே இப்போது நினைத்துப் பாருங்கள். ஓ, எவ்வளவு மனதுருக்கம் நிறைந்தவர், எவ்வளவு இரக்கம் நிறைந்தவர், அதே சமயத்தில் பரிசுத்த வைராக்கியமும் உடையவர்! பாவிகளின் மீது எவ்வளவு அன்புடையவர், அதே சமயத்தில் சத்தியத்தின் மீதும் மிகுந்த அன்புடையவர்! அவரை விரும்பாத மனிதர்கள்கூட அவரை வியந்து நோக்கினார்கள். அவரை ஏற்க விரும்பாத இருதயங்கள்கூட, அவருடைய வாழ்க்கையைக் குறித்துப் படித்து அறிந்தபின் மிகுந்த பாதிப்புக்குள்ளாவதைக் காண்கிறோமே. "ஆயிரங்களுள் சிறந்தவரும், மிகவும் நேசிக்கப்படத்தக்கவருமாய்" இருக்கிற அவரை நாம் புகழ்ந்து ஸ்தோத்தரித்து கனம் பண்ண வேண்டும். மனிதர்களில் தலைசிறந்தவரும், தூதர்களோடு ஒப்பிடக்கூடாதவருமாகிய அவரைக் குறித்து புகழ வேண்டிய சந்தர்ப்பங்களில் நாம் மௌனமாயிருப்போமானால் அது அவருக்கு செய்யும் மிகப்பெரும் துரோகமாகும். ராஜாவின் குமாரனாகிய அவருடைய கலியாணத்திற்கு மணவாட்டியானவள் ஆயத்தமாக்கப்பட்டிருப்பதை உணர்ந்து, அந்தக் கலியாணவிருந்தை நினைக்கும்போதெல்லாம் கைதட்டி ஆர்ப்பரியுங்கள்.

அவர் ***நிறைவேற்றி முடித்த பணிகளை***யும் நினைத்துப் பார்த்து அவருக்கு மரியாதை செலுத்துங்கள். ஒரு ராஜ்யத்தை ஆளுகின்ற இளவரசனை கனப்படுத்தும்பொழுது அவர் ஆற்றிய வீரதீரச் செயல்களையெல்லாம் நினைவுக்குக் கொண்டு வந்து அவரைப் புகழுவார்கள். பரலோகத்தின் இளவரசனாகிய இயேசுக்கிறிஸ்து நமக்காக செய்திருக்கும் காரியங்களையும் நாம் நினைத்துப் பார்க்க வேண்டுமல்லவா? அவர் நமக்காக என்ன செய்தார் என்பதைவிட, நமக்காக அவர் என்ன செய்யவில்லை என்கிற கோணத்தில் சிந்திப்போமானால் இப்போது உபயோகமாயிருக்கும். நம் அனைவருடைய பாவங்களும் அவர் தோளின் மீது ஏற்றி வைக்கப்பட்டபோது, அதை உதறித் தள்ளவில்லை. அவ்வளவையும் சுமந்துகொண்டு அவர் நகரத்திற்குப் புறம்பே சென்றார். அங்கு அவைகளையெல்லாம் முற்றிலுமாக ஒழித்துவிட்டார். நமது சத்துருக்கள் எல்லாம் அவருக்கு விரோதமாகச் சென்றன. நமது நிமித்தமாக அவை யாவற்றையும் யுத்தகளத்தில் அவர் சந்தித்து, அவற்றை கடலின் ஆழத்தில் போட்டுவிட்டார். கடைசி சத்துருவாகிய மரணத்தையும் அவர் வென்று மேற்கொண்டார். அதனால் மிகவும் பலவீனமான மனிதன்கூட, "மரணமே, உன் கூர் எங்கே? பாதாளமே

உன் ஜெயம் எங்கே?" என்று அவர் மூலமாகக் கேட்கக்கூடிய சிலாக்கியத்தை நமக்காக சம்பாதித்துக் கொடுத்திருக்கிறார்.

அவரே மோட்சத்தின் கதாநாயகன். அண்டசராசரங்களின் ஆரவாரத் தொனிகள் முழங்க, அவர் தமது பிதாவண்டைக்குத் திரும்பச் சென்று அவரது வலது பாரிசத்தில் அமர்ந்திருக்கிறார். நமக்காகப் போர்புரிந்தவரும், நமக்காக வெற்றிசிறந்தவருமாகிய அவரை புகழ்ந்து ஸ்தோத்தரிக்க நமக்கு ஆவல் எழவேண்டுமல்லவா? நமது உள்ளத்திலிருந்து இடைவிடாமல் முழுபெலத்தோடும் அவரைத் துதித்து ஸ்தோத்தரிக்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம். ராஜகிரீடத்தைக் கொண்டு வந்து அவர் சிரசில் வைப்போம். அது அவரை அறிந்திருக்கிறோம் என்று கூறிக்கொள்ளுகிற யாவர் மீதும் விழுந்த கடமையல்லவா? மனிதகுலம் முழுவதும் அதை உணர்ந்து அவரைத் துதிக்க வேண்டுமல்லவா? கிழக்கிலும் மேற்கிலும் வடக்கிலும் தெற்கிலும் இருக்கின்ற யாவரும் அவருடைய கலியாணவிருந்தை நினைத்து சந்தோஷங்கொண்டாட வேண்டுமல்லவா? ராஜாவின் மைந்தனுக்குத் திருமணம் என்றால் ராஜகுமாரன் எவ்வளவாக கொண்டாடப்பட வேண்டும்! அவருக்கே சகலமேன்மையும் கனமும் அளிக்கப்படுவதாக. ராஜா என்றென்றும் வாழ்வாராக. ஸ்திரீகள் தம்புரோடும் நடனத்தோடும் களிப்புடன் அவரை வரவேற்பார்களாக. இசைக்கலைஞர்கள் இனியபாடல்களினால் அவரைத் துதிப்பார்களாக. "ஓசன்னா, ஓசன்னா, கர்த்தரின் நாமத்தினால் வருகிறவர் ஸ்தோத்தரிக்கப்பட்டவர்" என்று நாசியில் சுவாசமுள்ள யாவும் அவரை ஓயாமல் புகழ்ந்து ஸ்தோத்தரித்த வண்ணமாகக் காணப்படுவதாக.

## ஆ) உன்னதமான முறை

இரண்டாவதாக தேவன் தமது உன்னதமான திட்டத்தை மிகவும் ***உன்னதமான முறை***யிலே செய்து முடித்தார். ஒரு ராஜாவின் குமாரனுடைய திருமணத்தில் அந்த மணமகன் கனமடைய வேண்டுமானால் அதை எந்தவிதத்தில் செய்தால் சரியாக இருக்கும்? நாகரீகமற்ற ராஜ்ஜியங்கள் அதை மிகப் பெரிய விழாக்களாகக் கொண்டாடுகிறார்கள். ஆனால், என்ன பரிதாபம்! அதை முறையற்ற விதங்களிலே செயல்படுத்துகிறார்கள். மனிதர்களைக் கொலைசெய்து, நரபலி கொடுத்து அதில் ஆனந்தக் களிப்படைகிறார்கள்.

## கலியாண விருந்துக்கு அழைத்த உவமை

இன்றும்கூட அவ்வித காட்டுமிராண்டித்தனம் காணப்படுகின்ற பிரதேசங்கள் உண்டு. நூற்றுக்கணக்கான மனிதர்களைக் கட்டி வைத்து, கொலை செய்து அதில் சந்தோஷமடைகிறார்கள். தங்கள் குமாரருக்கு மரியாதை செய்வதாக அந்த இராட்சதர்கள் நினைத்துக் கொண்டு கொடூர பிசாசுகள் போல செயல்படுகிறார்கள்.

பரலோகத்தின் ராஜாவாகிய பரமபிதாவின் குமாரனைக் கனப்படுத்துவதற்கு ஒரு சொட்டு இரத்தம்கூட சிந்தப்படத் தேவையில்லை. அவருடைய கருணையை ஏற்காதவர்களை அழித்து, இரத்தம் சிந்துவதால் குமாரன் கனமடைந்துவிட மாட்டார். தமது குமாரன் கனமடைய வேண்டும் என்பதற்காகவே அவர் ஜனங்களைத் தெரிந்தெடுத்திருக்கிறர். அவருடைய இரக்கத்தின் காரணமாக குமாரன் கனமடைய வேண்டுமேயொழிய, அவருடைய கோபாக்கினையினால் அல்ல. அத்திருமணத்தில் இரத்தம் சம்பந்தப்படுவதாக இருக்குமானால் அது குமாரனுடைய சொந்த இரத்தமேயல்லாமல் வேறு இரத்தம் சிந்துவதால் அல்ல. மனிதகுலத்தை வேரறுப்பது அவருக்கு சந்தோஷத்தைத் தராது. ஏனென்றால் அவர் கொடூரமானவரல்ல, அவர் சாந்தமும் மனத்தாழ்மையுமாயிருக்கிறார். மனிதர்களின்பேரில் பிரியம் வைத்தவராக இருக்கிறார்.

பல ராஜ்ஜியங்களில் ராஜதிருமணம் நடக்கவிருக்கையில் ஜனங்களின் மீது புதிதாக வரிவசூலிக்கப்பட்டு பணம் சேகரிக்கப்படும். இளவரசியாக வருபவரிடமிருந்து ஏராளமாக வரதட்சணைகூட வாங்கப்படும். வசதிபடைத்த பெண்வீட்டாரும் அதை சந்தோஷத்தோடு கொடுப்பார்கள். ஆனால், பரலோகத்தின் ராஜா மனிதர் நடக்கிற பிரகாரமாக நடப்பதில்லை என்பதை இந்த உவமையிலிருந்து அறிகிறோம். தனது குமாரனுக்காக அவர் எதையுமே ஜனங்களிடமிருந்து எதிர்பார்க்கவில்லை. தான் அவர்களுக்கு செய்யப்போகிற காரியங்களினாலே அந்த திருமணம் சிறப்புடையதாக நடக்க வேண்டுமென அவர் செய்கிறாரேயொழிய யாரிடமும் எதுவும் அவர் கேட்கவில்லை. அவர்களுக்காக அவர் பல நன்மையானவைகளை தயார் செய்து வைத்திருக்கிறார். அவர் கேட்பதெல்லாம் மனதார விருந்துக்கு வாருங்கள் என்பதுதான். சந்தோஷத்தோடு வந்து குமாரனை கனம் பண்ணுங்கள் என்கிறார். பரிமாறும் வேலைகூட செய்ய வேண்டியதில்லை. அவர்கள் வந்து, அவர் அளிக்கும் நன்மைகளைப் பெற்றுக் கொண்டு

திருப்தியடைந்தவர்களாக சந்தோஷப்பட வேண்டும் என்பதே அவர் எதிர்பார்ப்பது.

திருமணவிருந்தின் மூலமாக தேவன் தமது குமாரனைக் கனப்படுத்துகின்ற உன்னதமானதொரு திட்டத்தை நீங்கள் இங்கே காண்கிறீர்கள். விருந்தின் நோக்கம் என்னவென்பதை மாத்யூ ஹென்றி என்பவர் குறிப்பிடுவதை கவனியுங்கள்: "விருந்து, சிநேகத்துக்காகவும், சந்தோஷப்படுதலுக்காகவும் செய்யப்படுகிறது. அது திருப்தியடைவதற்காகவும், ஐக்கியத்துக்காகவும் செய்யப்படுகின்றது." சுவிசேஷத்திலும் அப்படித்தான் நடக்கிறது. அது, அன்பிற்கான அழைப்பு. பாவியே, நீ வந்து பிதாவோடு ஒப்புரவாகும்படிக்கு அழைக்கப்படுகிறாய். அவர் உனது பாவங்களையெல்லாம் நிச்சயமாகவே மன்னிப்பேன் என வாக்குறுதி கொடுக்கிறார். உன் மீது அவர் தமது கோபத்தை காண்பிக்க மாட்டார். அவருடைய குமாரனின் மூலமாக வந்து அவரோடு ஒப்புரவாகு. அப்படி வருகின்ற பாவிக்கும் தேவனுக்கும் இடையில் அன்பு உருவாகிறது. சந்தோஷமும், களிப்பும், மகிழ்ச்சியும் உன் ஆத்துமாவில் ஏற்படுவதற்காக அவர் உன்னை அழைக்கிறார். இயேசுக்கிறிஸ்துவை விசுவாசித்து, அவர் மூலமாக தேவனிடம் வருகின்றவர்களின் உள்ளத்தில் சமாதானம் பூரணமாக நிரப்பப்படும். அந்த சமாதான நதியிலிருந்து எழும்புகின்ற மகிழ்ச்சி அலைகள் தங்கள் கைகளைக் கொட்டி ஆரவாரிக்கும்.

உன்னதமான தேவன், தமது குமாரனை மகிமைப்படுத்துகிறதான விஷயத்துக்கு ஜனங்களை அழைக்கிறாரே என்று அவர்கள் விசனப்படத் தேவையில்லையே. அதற்காக சந்தோஷமல்லவா அடையவேண்டும்! கல்வாரி சிலுவையில் மரித்த இயேசுவை விசுவாசித்து, ஜீவனை அடைவதற்காக அவர் விடுக்கிற அழைப்பைக் குறித்து அலுத்துக்கொள்ளாமல், அதற்காக ஆவலோடும் மகிழ்ச்சியோடும் வரவேண்டும். மேலும், விருந்தானது விருந்தினரை திருப்தி செய்வதற்காகவே கொடுக்கப்படுகிறது. பசியோடும் தாகத்தோடும் இருக்கிற மனிதன், கிருபையின் ஆசீர்வாதங்களால் பூரண திருப்தியடைவான். மனிதகுலத்தின் தேவைகள் யாவையும் சுவிசேஷமானது பூர்த்தி செய்வதாயிருக்கிறது. தேவனிடத்தில் இரக்கத்தைப் பெற்றுக் கொண்டிருக்கிற எந்த ஆத்துமாவுக்கும் அதன் தேவைகளில் யாதொரு குறைவும் ஏற்படாது. நாம் அவரால் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்வோம்.

கழுகைப் போல பலமுடையவர்களாக ஆவோம். "நான் விடாய்த்த ஆத்துமாவைச் சம்பூரணமடையப்பண்ணி, தொய்ந்த எல்லா ஆத்துமாவையும் நிரப்புவேன்."

இந்த ஆசீர்வாதங்கள் யாவற்றிற்கும் மேலாக மற்றுமொரு மகத்தான ஆசீர்வாதத்தை நாம் மகுடமாக சூட்டிக் கொள்ளுகிறோம். அது, நாம் பிதாவோடும் அவரது குமாரனோடும் சுவிசேஷத்தின் மூலமாக ஐக்கியப்பட ஆரம்பிப்பதாகும். கிறிஸ்துவின் மூலமாக நாம் திரித்துவ தேவனோடு தொடர்புகொள்கிறோம். தேவன் நமக்கு பிதாவாக ஆகிறார், அவரது அன்பின் இருதயத்தை நமக்கு வெளிப்படுத்துகிறார். உலகத்திற்கு அல்ல, நமக்கே இயேசுவானவர் தம்மை வெளிப்படுத்துகிறார். பரிசுத்த ஆவியானவரின் ஐக்கியமும் வழிநடத்துதலும் நமக்கு கிடைக்கிறது. அந்த ஐக்கியம், தாவீதுக்கும் யோனத்தானுக்கும் இருந்தது போல நெருக்கமாக இருக்கிறது. அல்லது யோவானுக்கும் இயேசுக்கிறிஸ்துவுக்கும் இருந்தது போல நெருக்கமாக ஆகிறது என்றும் கூறலாம். நாம் வானத்தின் அப்பத்தை புசிக்கிறவர்களாகவும், பரிசுத்தமான திராட்சை ரசத்தைப் பருகுகிறவர்களாகவும் திருப்தியை அடைகிறோம். பரலோக விருந்துக்கு நாம் அழைத்துவரப்படுகிறோம். கர்த்தரின் இரகசியங்களெல்லாம் நமக்கு வெளிப்படுத்தப்படுகிறது. பிதாவோடு உள்ள நெருங்கிய ஐக்கியத்தை உணர்ந்து கொண்ட நமது இருதயம் அவர் முன்னிலையில் மெழுகாக உருகுகிறது. மிகுந்த இரக்கத்தையும் தயவையும் அவர் நமக்குக் காண்பிக்கின்றார். விலையேறப்பெற்ற விருந்தையல்லவா அவர் நமக்காக தயாரித்திருக்கிறார்! ஓ, பாவியே உன்னால் கற்பனை பண்ணிக்கூட பார்க்க முடியாத அளவிற்கான உயர்ந்ததொரு நிலைமைக்காக அவர் உன்னை அழைக்கிறார். நித்திய நித்தியமாக உனக்கு வேண்டியவைகளை அவர் தமது குமாரன் மூலமாக ஆயத்தப்படுத்தி வைத்திருக்கிறார். எந்தவிதமான பணமோ பொருளோ கொடுக்காமல், இலவசமாகவே அவைகளைப் பெற்றுக் கொள்ளும்படியாக உன் முன்னதாக அவர் வைத்திருக்கிறார். இதற்கு நீங்கள் என்ன பதில் கூறப்போகிறீர்கள்?

விருந்து செலவு முழுவதும் அவருடையது என்பதை நான் ஏற்கனவே உங்களுக்குக் கூறினேன். அது மிகவும் விலையுயர்ந்ததான விருந்து. எருதுகளும், கொழுத்தவைகளும் அடித்து ஆயத்தமாக்கப்பட்ட விருந்து. அவைகளில் ஒன்றாகிலும் அழைக்கப்பட்டவர்களின் மந்தையிலிருந்தோ,

அவர்களின் கடைகளில் இருந்தோ பெற்றுக்கொள்ளப்பட்டதல்ல. முழுவதும் அவருடைய சொந்த செலவு. சுவிசேஷத்திற்காக மிகப் பெரும் விலைக்கிரயம் செலுத்தப்பட்டிருக்கிறது. இந்த மகத்தான விசேஷத்துக்காக கிறிஸ்துவின் இருதயம் முற்றிலுமாக வார்க்கப்பட்டு, கடைசி சொட்டு இரத்தம் வரைக்கும் கிரயமாக செலுத்தப்பட்டிருக்கிறது. ஆனால், பாவியோ அதற்கு ஒரு கிரயமும் செலுத்த அவசியமில்லை - பணமோ, தகுதிகளோ, நற்குணமோ, ஆயத்தங்களோ எதையுமே அவர் பாவிகளிடம் எதிர்பார்க்கவில்லை. நீ இருக்கிறவண்ணமாகவே அவரிடம் வா. விருந்துக்கு வர உனக்கு ஒரெயொரு தேவைதான் இருக்கிறது. அந்த ஒரே தேவையாகிய கலியாண வஸ்திரத்தையும் அவரே உனக்குத் தருகிறார். இலவசமாகத் தருகிறார். நீ இருக்கின்றவண்ணமாகவே வந்து, இயேசுக்கிறிஸ்துவை விசுவாசிக்கும்படியாக அழைக்கிறார். நீ ஒன்றும் செய்ய வேண்டியதில்லை, அவரிடம் வந்து அவருடைய பரிபூரணத்திலிருந்து பெற்றுக்கொள். ஏனென்றால், "அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார்." கலியாணவிருந்துக்கு உங்கள் பங்காக எதையும் கொடுக்கும்படி அவர் கேட்கவில்லை. அளவற்ற இரக்கத்தினால் அவர் அளிக்கும் அந்த தெய்வீகவிருந்தில் விருந்தினராக மாத்திரம் வந்து பங்கேற்கும்படியாக அவர் அழைக்கிறார்.

இந்த நற்செய்தியை ஏற்றுக்கொள்கிறவர்களுக்கு அது எவ்வளவு கௌரவமுள்ளது! ராஜதிருமணங்களுக்கு அழைக்கப்படுவது மிகவும் விசேஷமானதாகும். பிரதமமந்திரி, ஜனாதிபதி போன்ற பெரியமனிதர்களின் இல்லத் திருமணங்களுக்கு நம்மை அழைத்தார்களானால் அதை நாம் எவ்வளவு கௌரவத்திற்குரியதாக நினைப்போம்! நமது வாழ்க்கையிலேயே மறக்கமுடியாத ஒரு நிகழ்ச்சியாக அதை எண்ணுவோம். இந்த உவமையிலுள்ள ஜனங்களும் அப்படிப்பட்டதான ஒரு திருமணத்திற்குத்தான் அழைக்கப்பட்டிருந்தார்கள். ராஜகுமாரனின் திருமணம் என்பது ஒவ்வொரு நாளும் நடக்கும் வைபவம் அல்ல. தவிரவும் அதற்கு எல்லாரையுமே அழைக்க மாட்டார்கள். அதற்கு அழைக்கப்பட்டு அதில் பங்குபெற்றவர்கள் யாவரும், "என்ன ஒரு நேர்த்தியான திருமணம். நானும் அதற்குச் சென்றிருந்தேன். வெகுவிமரிசையாக நடந்தேறியது" என்று வாழ்நாள் முழுவதும் சொல்லிக் கொண்டேயிருப்பார்கள். இவ்வளவு

## கலியாண விருந்துக்கு அழைத்த உவமை

விமரிசையான திருமணத்தை அநேகர் தங்கள் வாழ்நாளில் பார்த்திருக்கவே மாட்டார்கள். நல்ல உணவுவகைகளும், பெரியமனிதர்களின் சகவாசமும், விமரிசையான நிகழ்ச்சிநிரல்களும் ஆகியவைகளை இதற்கு முன்னதாக அவர்கள் அனுபவித்தேயிருந்திருக்க மாட்டார்கள்.

சகோதரர்களே, சுவிசேஷத்தை ஏற்றுகொள்வதைக் காட்டிலும் ஒரு மனிதனுக்கு மேலானது வேறு எதுவுமில்லை. விசுவாசத்தைக் கொண்டு அவன் இயேசுக்கிறிஸ்துவை மகிமைப்படுத்தும்போது, இயேசுக்கிறிஸ்துவும் அவனை கனப்படுத்துவார். இதில் பாருங்கள், தேவனுடைய குமாரனின் திருமணவிருந்துக்கு வருகிறவர்கள் யாவரும் தேவனுடைய குமாரர்களாகவே ஆகிவிடுகிறார்கள். ஒரு ராஜாவின் குமாரனாக இருப்பதென்பது சாதாரண விஷயமல்ல. அவருடைய சகல மகிமையிலும் பங்குபெறக்கூடிய சுதந்திரவாளிகளாக அவர்கள் கருதப்படுகிறார்கள்.

இப்பேர்பட்ட மகிமையான விதத்தில் தனது குமாரனுடைய திருமணவிருந்தை நடத்த பிதா தீர்மானித்திருக்கையில், மனிதர்கள் எதனால் அதை உதாசீனம் செய்கிறார்கள் என்கிற கேள்வி எனக்குள் எழுகிறது. விருந்தினர்களை சகலவிதத்திலும் கனப்படுத்தி, அன்புகாட்டும் இவ்வித அழைப்பை எதனால் ஏற்க மறுக்கிறார்கள்? ஆயத்தம் செய்யப்பட்ட விருந்தோ மிகவும் அதிகமான விலைக்கிரயமுடையது. ஆனால், விருந்தினருக்கோ அது இலவசமாக அளிக்கப்படுகிறது. அது விருந்தினரை அதிகமாக கௌரவிக்கக்கூடியது. இருந்தாலும் இதை ஏற்க மறுக்கும் அறிவீனத்திற்குக் காரணம் என்ன? புதுப்பிக்கப்படாத நிலையில் பாவத்தில் மூழ்கியுள்ள இருதயந்தான் காரணமோ? பாவத்தினால் தேவனுக்கு விலகி நிற்கின்ற இருதயந்தான் காரணமோ? மோசேயின் நியாயப்பிரமாண கற்பலகைகளுக்கு இஸ்ரவேலர் எதிர்த்து வாழ்ந்ததைக் காட்டிலும், இரக்கத்தினாலும் கிருபையினாலும் அழைக்கின்ற தேவனுக்கு ஜனங்கள் புறமுதுகு காட்டி விலகுவதைக் குறித்துதான் நான் அதிகமாக ஆச்சரியப்படுகிறேன். உன்னதமானவைகளும், நித்தியமானவைகளுமான வெகுமதிகளை வேண்டாமெனப் புறக்கணித்து வாழுகின்ற மனிதனின் நிலையைக் குறித்து என்னவென்று சொல்லுவது!

தேவனின் நியாயத்திற்கு எதிர்த்து நிற்பது குற்றம். ஆனால் அவருடைய இரக்கத்தையே புறக்கணிப்பதைக் குறித்து என்ன சொல்லுவது?

இந்தவிதமான நன்றிகெட்டதனத்தை குறிப்பிடுவதற்கு ஒரு புதிய வார்த்தையைத்தான் கண்டுபிடிக்க வேண்டும் போலும். பயப்படத்தக்கவரான தேவனை எதிர்த்து நிற்பதே மகாமுட்டாள்தனமாகும். அதிலும், இரக்கத்தில் ஐசுவரியவானாகிய பிதாவின் குணாதிசயத்தை அலட்சியப்படுத்திவிட்டு செல்வது அதைவிட எவ்வளவு பெரிய அறிவீனமாக இருக்கும்! தெய்வீக நன்மைகளைப் பெற்றுக் கொள்வதைக் காட்டிலும், அதனின்று விலகி ஓடுவது பாவத்தின் உச்சகட்ட நிலையைத்தான் காண்பிக்கிறது. இதை நான் சொல்லிக் கொண்டிருக்கும்போதே தேவனுடைய குமாரனை மகிமைப்படுத்த வேண்டிய ஏவுதல் எனக்குள் ஏற்படுகிறது. இதை தியானிக்கின்ற உங்களுக்கும் அழைப்புவிடுக்கின்றேன். வாருங்கள், கலியாணவிருந்துக்கு வாருங்கள். அவருடைய கிருபைகளைப் பெற்றுக் கொண்டு அவரை மகிமைப்படுத்துங்கள். அவருடைய நீதிக்கு முன்பாக உங்களுடைய கிரியைகளை வைப்பது அவரை மகிமைப்படுத்தாது, உங்கள் கிரியைகள் ஒன்றுக்கும் உதவாது. அவருடைய இரத்தத்துக்கு ஒப்பாக உங்கள் மனந்திரும்புதலை வைத்தீர்களானால் அதுவும் அவரை மகிமைப்படுத்தாது. பாவிகளே, உங்கள் பாவநிலையை உணர்ந்தவர்களாக அவரிடம் வாருங்கள். உங்களிடம் எதையும் எதிர்பார்க்காமல், அவர் இலவசமாகத் தருகின்ற இரக்கத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள். அவரை விசுவாசிப்பவர்களின் பாவமன்னிப்பிற்காக அவர் சிந்தின இரத்தத்தின் பலாபலன்களை பெற்றுக் கொள்ளுங்கள்.

அழைக்கப்பட்டவர்களை அழைத்துவரச் சென்ற ஊழியக்காரர்கள், அவர்கள் வர மனதில்லாதிருந்த நிலையைக் கண்டு ஆச்சரியத்தினால் வாயடைத்துப் போயிருந்திருப்பார்கள். ராஜா எவ்விதமாக விருந்தை தயாரித்திருந்தார் என்பதை அந்த ஊழியர்கள் பார்த்திருந்தார்கள். கொழுத்த மாடுகளையும், சுவையான பதார்த்தங்களையும், அவை தயாரிக்கப்பட்ட நேர்த்தியையும் அவர்கள் அறிந்திருந்தார்கள். அவர்களுக்கு அந்த ராஜாவையும் நன்றாகத் தெரியும். அவருடைய குமாரனையும் நன்றாக அறிவார்கள். ராஜா ஆயத்தம் பண்ணின விருந்து எவ்வளவு மகிழ்ச்சிகரமானது என்பதும் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அழைக்கப்பட்டவர்கள் ஒவ்வொருவரும் அதை அலட்சியம் பண்ணி அவரவர் தங்கள் தங்கள் அலுவல்களுக்கு சென்றபோதும், அந்த ஊழியர்கள் ஆவலோடு திரும்பத் திரும்ப அவர்களை அழைத்தார்கள். நன்மை செய்ய நினைக்கின்ற ராஜாவுக்கு எதிராக, ராஜதுரோகிகளாக அவர்கள் நடந்துகொள்வதைக் கண்டு

ஆச்சரியப்பட்டுப்போனார்கள். முதலில் அந்த ஊழியர்களுக்குக் கோபங்கூட வந்திருக்கும். அதன் பிற்பாடு இப்பேர்பட்ட ராஜதுரோகிகளுக்கு என்னவிதமான தண்டனை கிடைக்கும் என்பதை உணர்ந்து அவர்கள் மேல் பரிதாபமும் ஏற்பட்டிருக்கும். தங்களுடனேயே வசிக்கின்றவர்களாகிய அந்த மற்ற பிரஜைகள், தங்களுடைய முட்டாள்தனத்தினாலே நல்லதொரு வாய்ப்பை தவறவிடுகிறார்களே என்று அந்த ராஜாவின் ஊழியர்கள் மிகவும் வருத்தமும் அடைந்திருப்பார்கள். நானும்கூட என் ஆத்துமத்திலே இவ்விதமான உணர்ச்சிகளால் அலைக்கழிக்கப்படுகிறேன். ஓ, தேவனே, நீர் அருமையாக இந்த சுவிசேஷத்தை எங்களுக்கு அளித்திருக்கிறீர். இங்குள்ள யாரும் அதை அலட்சியம் பண்ணாதிருப்பார்களாக. அதன் காரணமாக உமது குமாரனையும் உம்மையும் அவமரியாதைக்கு உட்படுத்திவிடுவார்களே. சபையின் மணவாளனாகிய உமது குமாரனை நீர் மகிமைப்படுத்துகின்ற திட்டத்தில் இவர்கள் யாவரும் களிகூருவார்களாக. அவர்கள் மனப்பூர்வமாக வந்து, நீர் ஏற்படுத்தியிருக்கின்ற கலியாணவிருந்தில் பங்கெடுத்து உம்மையும் குமாரனையும் மகிமைப்படுத்துவார்களாக.

## இ) தடையை ஏற்படுத்திய காரியம்

தியானத்தின் அடுத்தபகுதிக்கு நாம் செல்லுவோம். இது, அந்த சந்தோஷமான கலியாணவிருந்துக்கு சற்று நேரம் தடையை உருவாக்கினதான விஷயம். அதை நாம் துக்கத்துடன் ஆராய்வோம்.

அந்த ராஜா மனதுக்குள் பெரிய திட்டம் போட்டு வைத்திருந்தார். "நான் மிகப் பெரியதான ஒரு விருந்தை ஆயத்தம் பண்ணுவேன். அதற்கு மகா திரளான ஜனங்களை அழைப்பேன். அவர்கள் வந்து என் ராஜ்ஜியத்தின் சகல நன்மைகளையும் அனுபவிக்கட்டும். அதன் மூலமாக நான் என் மகனை எவ்வளவாக நேசிக்கிறேன் என்பதை அவர்கள் உணர்ந்து கொள்ளட்டும். வருகின்ற விருந்தினர் அனைவருக்கும் இந்த திருமணமானது, இனிமையான நல்ல எண்ணங்களை அவர்கள் வாழ்நாள் முழுவதுக்கும் தரும்" என்று தீர்மானித்திருந்தார். இப்படி ஒரு விழா நடக்கப் போகிறதென்பதை அவர் ஏற்கனவே அறிவித்திருந்தார். ஜனங்களை அழைத்துமிருந்தார். அந்த நேரம் வந்தபோது, அவர்களை அழைத்துவரும்படி தமது ஊழியக்காரரை அனுப்பினார். ஆனால் அந்த ஊழியக்காரர் கண்டது என்ன? அவர்கள் வர

மனதில்லாதிருந்தார்கள். வர இயலாதவர்களாயிருந்தார்கள் என வேதம் கூறவில்லை. அவர்களுக்கு வர மனதில்லை. ஒவ்வொருவரும் ஒரு காரணத்தை வைத்துக் கொண்டு சாக்குபோக்கு கூறினாலும், அவர்களுக்கு வரமனதில்லை என்பதுதான் உண்மை.

ராஜாவின் உன்னதமான நோக்கத்திற்கு இங்கு ஒரு பெரிய தடை ஏற்படுகிறது. ராஜா தனது அதிகாரத்தை உபயோகித்து அவர்களை இழுத்து வந்து பந்தியில் அமர வைக்க முடியாதா? முடியும். ஆனால் அது அவருடைய உன்னதமான நோக்கத்தை நிறைவேற்றுவதாயிருக்காது. அடிமைகளாக யாரும் தனது ராஜ்ஜியத்தில் பிரவேசிப்பதை அவர் விரும்பவில்லை. கட்டாயப்படுத்தி திருமணவிருந்தில் அமர வைப்பதால் ஒரு பிரயோஜனமும் இல்லை. அப்படி செய்வதால் ராஜாவுக்கு என்ன நன்மை கிடைக்கப்போகிறது? ஒன்றுமில்லை. ராஜாங்கத்தின் பிரஜைகளுக்கு, அரண்மனையில் விருந்தினராக வந்து அமரக்கூடிய ஒரு சந்தர்ப்பத்தை ராஜா கொடுக்கிறார். அவர்கள் சந்தோஷத்தோடு வருவதே அவ்விழாவுக்கு பெருமை சேர்ப்பதாயிருக்கும். ஆனால் அவர்களுக்கோ வர மனதில்லை. ஏன்? எதனால் அவர்களுக்கு வர மனதில்லை? இதற்குரிய விடையானது இன்னொரு கேள்விக்கும் பொருத்தமானதாக இருக்கும்.

நீங்கள் ஏன் இயேசுக்கிறிஸ்துவை விசுவாசிக்க மாட்டோமென்கிறீர்கள்? பலபேருக்கு இந்த முழு சம்பவமுமே மிகவும் அலட்சியமானதாக இருக்கிறது. ராஜாவைக் குறித்தோ அவருடைய குமாரனைக் குறித்தோ யாருக்கும் அக்கறை இல்லை. ராஜதிருமணம் என்பது பெரிய மனிதர்கள் சம்பந்தப்பட்டது. நாங்களோ சாதாரண மக்கள். வயலுக்குப் போகிறோம். விவசாயம் செய்கிறோம். வேலியடைக்கிறோம். வியாபாரிகளாக இருந்தால், கொடுக்கல் வாங்கல் செய்து ரசீது கொடுக்கிறோம். அரண்மனையைப் பற்றியோ, ராஜா, அவர் மைந்தன், அவர் மணவாட்டி, திருமணம், விருந்து - இதைப் பற்றியெல்லாம் எங்களுக்கு என்ன என்று அவர்கள் நினைப்பது போல இருக்கிறது. திருமணவிருந்து ஒரு நல்ல காரியந்தான், ஆனால் அதற்கும் எங்களுக்கும் சம்பந்தமில்லை எனக் கூறுவது போல இருக்கிறது அவர்களின் போக்கு. நம்மில் அநேகர் இப்போதும் இதே விதமான சிந்தை கொண்டவர்களாகத்தான் இருக்கிறோம் என்பது நிதர்சனமான உண்மை. எவ்வளவு வேலை எனக்கு இருக்கிறது, இதற்கெல்லாம் நேரம் ஒதுக்க என்னால் முடியுமா எனக் கூறுபவர்கள் எத்தனைபேர் இருக்கிறார்கள்!

## கலியாண விருந்துக்கு அழைத்த உவமை

எங்கள் அலுவல்களை கவனிக்கவே நேரம் போதவில்லை. பக்திக்குரிய காரியங்களுக்கு எந்த நேரத்தை செலவிடுவது என நினைப்பவர்கள் ஏராளம். இத்தகைய அறிவீனத்துக்கு கர்த்தர் இரங்குவாராக. இதுதான் சுவிசேஷம் சந்திக்கின்ற மிகப்பெரிய தடை. தமது குமாரனை கனம்பண்ணுகிறதான உன்னதமானதொரு திட்டத்தை பிதா வகுத்திருக்கிறார். ஆனால் மனிதனின் மனதோ அதை உணர்ந்து கொள்ளாமல் அலட்சியப்படுத்துவதுதான் மிகப்பெரும் தடையாக இருக்கிறது.

அவர்கள் விருந்துக்கு வர மறுத்ததற்கு காரணம், அவர்கள் அடிப்படையிலேயே நம்பிக்கை துரோகிகள். அதனால்தான் அவர்கள் விருந்துக்கு வர மனதில்லாதவர்களாக இருந்தார்கள். ராஜாவின் சந்தோஷத்தில் அவர்களுக்கு விருப்பமில்லை. மற்றவர்கள் ராஜாவைப் புகழ்ந்து மகிமைப்படுத்துவதை கேட்கவும் அவர்களுக்கு விருப்பமில்லை. விருந்துக்கு வராமல் இருப்பதன் மூலமாக அவர்கள் ராஜாவை அவமானப்படுத்துகிறார்கள். ராஜாவாக இருந்தால் என்ன? அவர் குமாரனாக இருந்தால் எங்களுக்கென்ன? என்கிற மனப்பான்மை அவர்கள் செயலிலே தெரிகிறது. ராஜாவின் அழைப்பை நிராகரிப்பதின் மூலமாகத் தங்களுடைய எதிர்ப்பைத் தெரிவித்துக் கொள்ள முடிவு செய்கிறார்கள். "அவர் ராஜாவாக இருப்பதாலோ, அல்லது அவருடைய குமாரன் என்பதாலோ, நாங்கள் என்ன செய்துவிட முடியும்? அவரைச் சுற்றிலும் சூழ்ந்திருக்கும் முக்கியஸ்தர்கள்தான் விழாவினை சிறப்பிப்பார்கள். விருந்து நன்றாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. விரும்பத்தக்கதாகத்தான் இருக்கும். ஆனால், எங்களுடைய ஆர்வத்தை அடக்கிக் கொள்வதின் மூலமாக நாங்கள் எங்கள் சுயகௌரவத்தை காப்பாற்றிக் கொள்வோம். நாங்கள் அதற்கு எதிர்த்து நின்று அவ்விருந்துக்குப் போகாமலிருக்கத் தீர்மானம் பண்ணிக் கொள்கிறோம்" என்பதே அவர்களுடைய மனநிலையாக இருக்கிறது.

இயேசுக்கிறிஸ்துவை விசுவாசிக்காத நீங்களும், பிதாவின் அழைப்பை நிராகரிப்பதினால், உங்களை சிருஷ்டித்தவருக்கே விரோதமாக இப்படிப்பட்ட எண்ணமுடையவர்களாகத்தான் இருக்கிறீர்கள். அண்டசராசரங்களையும் ஆட்சிசெய்கின்ற உன்னதமானவருக்கு விரோதமாக செயல்படுகின்ற துரோகிகளாக இருக்கிறீர்கள். பணிந்து வழிபட வேண்டிய அவருக்கே விரோதமாக கலகம் செய்யும் மனப்பான்மை கொண்டிருக்கிறீர்கள். "மாடு தன்

எஜமானையும், கழுதை தன் ஆண்டவனின் முன்னணையையும் அறியும்." ஆனால், நீங்களோ அறிவில்லாமலும், உணர்வில்லாமலும் இருக்கிறீர்கள். பரலோகத்தின் தேவனுக்கு விரோதமாகக் கலகம் செய்கிறவர்களாகவும் இருக்கிறீர்கள்.

அவரிடம் வர மறுப்பது ராஜாவையும் அவருடைய குமாரனையும் அவமதிப்பதற்கு ஒப்பாகும். இயேசுவின் தெய்வீகத்தன்மையையும், அவருடைய பரிகார பலியையும் விசுவாசியாதவர்கள் அவரை ஏற்க மறுக்கிறார்கள். அதனால்தான் அவர்கள் சுவிசேஷத்தை ஏற்றுக் கொள்ள மனதில்லாமல் இருக்கிறார்கள். இயேசுவின் தெய்வீகத்தையும், பிதாவின் ஒரே பேறான குமாரன் அவர் என்பதையும் உணர்ந்து அவரை மதிக்காதவர்களைக் காட்டிலும் கடினஇருதயமுள்ள எவரும் இருக்க முடியாது. "குமாரன் கோபங்கொள்ளாமலும், நீங்கள் வழியிலே அழியாமலும் இருக்கும்படிக்கு, அவரை முத்தஞ்செய்யுங்கள். கொஞ்சக்காலத்திலே அவருடைய கோபம் பற்றியெரியும்". அவர்கள் வரமனதில்லாதிருந்ததில் அவர்களுடைய அலட்சியம் தெளிவாகத் தெரிகிறது. ராஜாவின் அழைப்பை லேசான காரியமாக எண்ணிவிட்டார்கள். அவர்களின் அலட்சியபுத்தியை ஆராய்ந்து பார்த்தோமானால் அதில் ராஜதுரோகமும், குமாரனை கனப்படுத்த இஷ்டமில்லாமல் இருப்பதும் புலப்படும்.

அவர்களுள் சிலபேருக்கு அந்த விருந்தின்மீதே வெறுப்பு இருந்திருக்கும் என்பதிலும் சந்தேகமில்லை. அவ்வளவு பெரிய ராஜாவின் விருந்து என்பது பிச்சைக்காரர்களுக்குப் போடும் சாப்பாடு போல இருக்காது என்பது அவர்களுக்கும் தெரியும். இருந்தாலும், அது ஒன்றும் எங்களுக்குத் தேவையில்லை என்பதுபோல அவர்கள் நடந்து கொள்ளுகிறார்கள். சுவிசேஷம் எங்களுக்கு விளங்கவில்லை எனக்கூறி எத்தனை பேர் அதை வெறுக்கிறார்கள் தெரியுமா? அப்படிக் கூறுபவர்களை நன்றாக ஆராய்ந்து பார்த்தீர்களானால் அவர்கள் சுவிசேஷத்தை ஒழுங்காகப் படித்திருக்கவே மாட்டார்கள். கிருபை என்கிற சத்தியத்தை உணர்ந்திருக்கவே மாட்டார்கள். சுவிசேஷத்தை தூஷித்துக் குறை சொல்லுகிற மனிதனைக் காண்பீர்களானால், அவன் ஒன்றுமறியாத மூடனாயிருக்கிறான் என்பதை உணர்ந்து கொள்ளலாம். அவன் சுவிசேஷத்தை நன்றாகப் படித்து, பாரபட்சமில்லாமல் யோசிக்கக் கூடியவனாக இருந்தால், சுவிசேஷத்தை அவன்

ஏற்றுக்கொள்ளாவிட்டாலுங்கூட, அதன் மேன்மையை எண்ணி வாயடைத்துப் போவான்.

எனது அருமை நண்பர்களே, இந்தக் கலியாணவிருந்தானது உங்களுக்கு மிகவும் அவசியமானதாகும். ஏன் தெரியுமா? அது உங்கள் கடந்த காலத்திற்கு மன்னிப்பை வழங்குகிறது, நிகழ்காலத்தில் உங்களைப் புதுப்பிக்கிறது, எதிர்காலத்தில் உங்களை மகிமைக்குள் கொண்டுசெல்லுகிறது. இதில் பிதா நமக்கு உதவியாயிருக்கிறார், குமாரன் வழிநடத்துகிறார், பரிசுத்தஆவி நமக்குப் போதிக்கிறார். பிதாவின் அன்பு நம்மை சந்தோஷப்படுத்துகிறது, குமாரனின் திருரத்தம் நம்மைப் பரிசுத்தப்படுத்துகிறது, பரிசுத்தஆவியானவர் மரித்தவர்களாயிருந்த நம்மை உயிர்ப்பிக்கிறார். சுவிசேஷம் அறிவிக்கின்ற நன்மைகளில் ஒரு நன்மையும் உங்களுக்குக் குறைவுபடாது. அவரது அழைப்பை ஏற்று நீங்கள் விசுவாசத்தோடு அவரிடம் வருவீர்களானால் இயேசுக்கிறிஸ்து மகிமைப்படுவார்.

இங்கேதான் மனிதரால் தடைகள் வருகிறது. மனிதர் அவரிடம் வர மனதில்லாமல் இருக்கிறார்கள். நம்மில் சிலபேர் நினைக்கலாம், ஒருவேளை சுவிசேஷத்தை இன்னும் வேறுவிதமாக சொன்னால் கேட்பார்களோ - அவர்கள் மனமாற்றம் அடையக்கூடியவிதத்தில் நம்மால் சொல்லக்கூடுமோ என்ற சிந்தனைகள் தோன்றலாம். சுவிசேஷத்தை வெளிப்படையாகவும், எளிதாகவும் கூறுவதைத் தவிர்த்து வேறு எப்படிக் கூறினாலும் எக்காலத்திலும் பலன் கிடைக்கப் போவதில்லை. ஏனென்றால் பரிசுத்தஆவியானவரின் உறுதியான அழைப்பு மாத்திரமே ஒருவனை கிறிஸ்துவிடம் கொண்டுவரும். அதுவரைக்கும், "எங்களால் கேள்விப்பட்டவைகளை விசுவாசிப்பவன் யார்"? என்கிற வியாகுலம் ஊழியர்களிடம் இருந்துகொண்டுதான் இருக்கும். தமது எஜமானனுக்காக உண்மையான ஊழியம் செய்துவருகின்ற ஊழியக்காரருங்கூட, கற்பாறைகளில் விதைக்கிறேனோ, முளைக்காத இடங்களில் விதையைத் தெளிக்கிறேனோ என்கிற அங்கலாய்ப்போடுதான் தங்கள் ஊழியத்தை நிறைவேற்றுவார்கள். உலகத்தில் வந்த பிரசங்கிகளிலேயே மாபெரும் பிரசங்கியானவர் சொல்லுகிறதைக் கவனியுங்கள்: "வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள். அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே. என்னைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறவைகளும்

அவைகளே. அப்படியிருந்தும் உங்களுக்கு ஜீவன் உண்டாகும்படி என்னிடத்தில் வர உங்களுக்கு மனதில்லை" என்கிறார். அந்தோ பரிதாபம்! எத்தகைய இரக்கம் அலட்சியப்படுத்தப்பட்டு, பரலோகராஜ்ஜியமே உதாசீனப்படுத்தப்படுகிறது!

## ஈ) பெருந்தன்மையான மறுஅழைப்பு

அடுத்தபடியாக, தமது திட்டத்திற்கு வந்த தடையை அந்த ராஜா எவ்வாறு கையாளுகிறார் என்பதை நாம் பார்க்கலாம். அதை, பெருந்தன்மையான மறுஅழைப்பு என்கிற வார்த்தைகளினாலே விவரிக்கலாம். ராஜாவின் குமாரனின் திருமணம் குறித்த அறிவிப்பு ஏற்கனவே செய்யப்பட்டிருந்தது. அதற்காக அநேகருக்கு அழைப்பும் அனுப்பப்பட்டிருந்தது. ராஜவழக்கத்தின் பிரகாரம், விழா நாட்கள் நெருங்கிக் கொண்டிருப்பதைக் குறித்து அவ்வப்போது செய்திகள் வந்து கொண்டிருந்தது. ஆகவே, அழைப்பைப் பெற்றவர்கள் அதைக் குறித்து எங்களுக்குத் தெரியாது என்று கூற வழியேயில்லை. இருந்தும் அவர்கள் என்ன செய்தார்கள் என்பதை நாம் பார்த்தோம். இரண்டாம் முறையாக ராஜா தமது ஊழியரை நேரில் அனுப்பி அவர்களை அழைத்துவரச் சொல்லியபோதும் அதைத் துணிகரமாக நிராகரித்தார்கள். அந்த ராஜா என்ன செய்தார்? உடனடியாக ஆட்களை அனுப்பி, அவர்களை அழித்துப் போட்டாரா? இல்லை. அவர் பல கோணங்களில் அவர்கள் மறுப்புக்கு காரணம் என்னவாயிருக்கும் என்பதை ஆராய்ந்து பார்த்தார். "ஒருவேளை, அழைக்கச் சென்ற எனது ஊழியர்களை அவர்கள் வேறு யாரோ எனத் தவறாக எண்ணியிருப்பார்களோ? அல்லது ஒருவேளை கலியாண நாள் இதுதான் என்பதை மறந்திருப்பார்களோ? அல்லது ஊழியர்கள் சொன்னது மிகவும் சுருக்கமாக இருந்ததினால் அதன் செய்தியை விளங்கிக் கொள்ளாமல் இருந்திருக்கலாம். அல்லது ஏதாவது காரணங்களால் என்னையேகூட தற்காலிகமாக புரிந்து கொள்ளாமல் இருந்திருக்கலாம். மீண்டும் யோசித்துப் பார்த்தார்களானால், இவ்வளவு கடினமாகவும் நன்றிகெட்டதனமாகவும் இருந்திருக்க வேண்டியதில்லையே என்பதை ஒருவேளை உணர்ந்து கொண்டு கலியாணவிருந்துக்கு வருவதற்கு அவர்கள் பிரியப்படலாம். என்னுடைய விருந்திற்கு வராமலிருக்கும்படிக்கு நான் அவர்களுக்கு என்ன தீங்கு செய்தேன்? அழைப்பினை ஏற்று, கலியாணத்திற்கு வந்து என் குமாரனை கௌரவிக்காதபடிக்கு என் குமாரன்

**கலியாண விருந்துக்கு அழைத்த உவமை**

அவர்களுக்கு செய்த தீமைதான் என்ன? மனிதர்களுக்குத்தான் விருந்து விழாக்கள் என்றால் பிரியமாயிற்றே. அதிலும் இது குமாரனை கௌரவிக்கிற அற்புதமான விருந்து. இதற்கு வருவதற்கு அவர்களுக்கு ஏன் மனதில்லை? நான் நடந்தவைகளை மறந்து மறுபடியுமாக முதலிலிருந்து ஆரம்பித்துப் பார்க்கிறேன்" என்கிறவிதமாக அவர் சிந்தனை செய்தார். இன்னொரு முறை அழைப்புக் கொடுக்கிறார். இந்த செய்தியைக் கேட்கிறவர்களே, பிதா உங்களுக்கும் அநேகம் முறை இதற்கு முன்னதாக அழைப்பை அனுப்பியிருக்கிறார். நீங்களோ கேட்க மனதில்லாமல் இயேசுக்கிறிஸ்துவை நிராகரித்திருக்கிறீர்கள். உங்களுடைய இருதயக் கடினத்தையும், அலட்சியத்தையும் பொருட்படுத்தாதவராக, மீண்டும் ஒருமுறை, இன்றைக்கு என் மூலமாகவும் அவர் உங்களை அழைக்கிறார். குமாரனின் கலியாணவிருந்துக்கு வாருங்கள் என அழைப்பு விடுக்கிறார். அவருடைய பொறுமையானது சாதாரணமானதல்ல. உங்களுக்கு நன்மை ஏற்பட வேண்டுமென்பதற்காக உங்களது பழைய அலட்சிய போக்கைப் பொருட்படுத்தாமல், தொடர்ந்து உங்கள் மீது அவர் காண்பிக்கிற இரக்கம் விலைமதிக்க முடியாதது.

அந்த ராஜா இன்னொரு முறை அழைப்பை அனுப்புகிறார் - "எல்லாம் ஆயத்தமாயிருக்கிறது. கலியாணத்திற்கு வாருங்கள்" என்று சொல்லியனுப்பினார். இந்த முறை வேறு ஊழியக்காரர்களை அனுப்பியதை நீங்கள் கவனிக்கலாம். "அப்பொழுது வேறு ஊழியக்காரரை . . அனுப்பினான்." ஆம் நானும் சிலவேளைகளில் நினைக்கிறேன், ஒருவேளை என்னுடைய பரமபிதா வேறு ஊழியர்களை உங்களிடம் பேசும்படிக்கு இந்த பிரசங்க மேடைக்கு அனுப்பினாரென்றால் நீங்கள் கேட்க மனதாகி, இரட்சிக்கப்படுவீர்களோ என்று. அப்படியிருக்குமானால், நான் இப்போதேகூட மரித்துவிட ஆயத்தமாயிருக்கிறேன். உங்களில் சிலருக்கு என்னுடைய பிரசங்கம் அலுப்பைத் தருவதாக இருக்கலாம். நானும் பலவிதமான மாற்றங்களைக் கொடுத்து உங்களுக்கு பிரசங்கிக்கப் பார்க்கிறேன். குரலிலும், உதாரணங்களிலும் வேறுபாடுகளை உண்டாக்கி எப்படியாவது உங்களை தேவனிடத்திற்கு வரச் செய்யமுடியுமா என முயற்சிக்கிறேன். ஒருவரையே அடிக்கடி கேட்டுக் கொண்டிருப்பது அலுப்பைத் தருவதாக இருக்கலாம். நான் பிரசங்கிக்கும் விதம் ஒருவேளை உங்களது ஆத்துமத் தேவைகளை சந்திக்காமல் இருந்திருக்கலாம். அப்படியிருக்குமானால், பிதாவே உமது அடியானை ஒரு பொருட்டாக

எண்ணாமல் இவர்களுக்கு வேறு ஊழியக்காரரைத் தந்தருளும் என நான் வேண்டிக் கொள்கிறேன். அதனால் சிலர் இரட்சிக்கப்படுவார்களானால் அதுவே விரும்பத்தகும் காரியமாகும். ஆனால், உங்களில் சிலருக்கோ, நான் ஏற்கனவே "வேறு ஊழியக்காரனாக"த்தான் இருக்கிறேன். உங்களிடம் ஏற்கனவே பிரசங்கித்திருந்தும் இரட்சிப்பின் பாதைக்கு உங்களைத் திருப்ப முடியாமற்போன மற்ற ஊழியர்களைக் காட்டிலும் நான் எவ்விதத்திலும் சிறந்தவனல்ல. இருந்தாலும் சிலருக்கு நான் இரண்டாம் முறையாக அனுப்பப்பட்டிருக்கும் ஊழியக்காரன். "இயேசுக்கிறிஸ்துவிடம் வாருங்கள், அவருடைய பரிகார பலியின் மீது நம்பிக்கை வையுங்கள், அவரை விசுவாசியுங்கள், அவரையே நோக்கிப் பார்த்திருந்து ஜீவனைப் பெற்றுக் கொள்ளுங்கள்" என்று நானும் அழைக்கின்ற இந்த அழைப்புக்கு செவிகொடுங்கள். முன்னதாக உங்களிடம் அனுப்பப்பட்ட ஊழியர்களும் இதையேதான் சொன்னார்கள். ஒருவேளை நான் அழைக்கும்விதம் சற்று வித்தியாசமானதாக இருக்கலாம். இப்போதாவது கேட்டு உணர்வடையுங்கள்.

அடுத்தபடியாகப் பாருங்கள், அந்த ராஜா சொல்லியனுப்பிய செய்தியிலும் சற்று வித்தியாசம் இருக்கிறது. முதலாவது மிகவும் சுருக்கமான செய்தியையே அவர் தமது ஊழியர் மூலமாக சொல்லியனுப்பினார். மனிதருடைய இருதயம் சரியான பக்குவத்தில் இருக்குமானால் சுருக்கமான செய்தியே போதுமானது. மனிதரின் மனப்பக்குவம் ஏற்றவிதத்தில் இருந்தால், "வாருங்கள்" என்கிற சொல்லே போதுமானது. அவர்களுக்கு அதிக உபசரணையான வார்த்தைகள் தேவையிருக்காது. ஆனால், அவர்களுடைய இருதயம் சரியானபிரகாரமாக இல்லாததினாலே, இன்னும் அதிகமான வார்த்தைகளை உபயோகித்து விவரமாக சொல்லியனுப்ப வேண்டியதாக இருந்தது. "இதோ, என் விருந்தை ஆயத்தம் பண்ணினேன். என் எருதுகளும், கொழுத்த ஜெந்துக்களும் அடிக்கப்பட்டது. எல்லாம் ஆயத்தமாயிருக்கிறது. கலியாணத்திற்கு வாருங்கள்" என்று அவர்களுக்கு விவரமாக சொல்ல வேண்டியதாக இருந்தது. பாவிகளை கிறிஸ்துவிடம் வரவழைப்பதற்கு மிகவும் சிறந்த வழி, சுவிசேஷத்தை அவர்களுக்கு விவரித்துச் சொல்லுவதே. சுவிசேஷ அழைப்பை மாத்திரம் கொடுப்பது சிலபேரை கிறிஸ்துவிடம் வழிநடத்த போதுமானதாக இல்லாமல் இருக்கலாம். அதற்கு செய்யப்பட்ட ஆயத்தங்களைப் பற்றியும், அதன் மகா மேன்மையைப் பற்றியும், அது இலவசமாகவே கிடைப்பதைக் குறித்தும் விவரமாக எடுத்துக் கூறுவது சிலபேரை ஈர்க்கலாம். சிலருக்கு, "நீ இயேசுக்கிறிஸ்துவை விசுவாசி,

அப்போது இரட்சிக்கப்படுவாய்" என்கிற ஒரே வார்த்தையே போதுமானதாக இருக்கும். ஏனென்றால் ஏற்கனவே பக்குவப்பட்டுள்ள அவர்களது இருதயம், "இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?" என கேட்கிறதான நிலமையிலே இருக்கிறது. சிலரையோ கலியாண விருந்தின் கொழுமையான பதார்த்தங்களைக் கூறி அவர்களை கவர்ந்து கொள்ள வேண்டியதாயிருக்கிறது.

நாங்கள் சுவிசேஷத்தை உங்களுக்கு முழுவதுமாகத்தான் பிரசங்கிக்கிறோம். ஆனாலும், அவருடைய கிருபையின் ஐசுவரியங்களை எங்களால் முற்றிலுமாக எடுத்துக்கூற இயலாது. பூமியைப் பார்க்கிலும் வானங்கள் எவ்வளவு உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப் பார்க்கிலும் அவர் வழிகளும், உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் அவர் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது. உங்கள் பாவங்களையும் உங்கள் சிந்தனைகளையும் விட்டுவிட்டு அவர் புறமாகத் திரும்புங்கள். அவர் உங்களை முற்றிலுமாக மன்னிப்பார். நீங்கள் கெட்டகுமாரனைப் போல மனந்திரும்பி பிதாவின் சமூகத்தைத் தேடி வந்தீர்களானால், அவர் உங்களைத் தனது அன்பின் இருதயத்தில் ஏற்றுக் கொண்டு, அன்போடு முத்தமிடுவார். சுவிசேஷமானது அன்பினாலாகிய நதியைப் போன்றது. அது அன்பின் பெருங்கடலாகும். அது வானளாவிய அன்பு! அண்டசராசரங்களைக் காட்டிலும் பெரிதான அன்பு! சுவிசேஷம் அன்பினால் நிறைந்தது. பாவிகளின் மீது பிதா காண்பிக்கும் கிருபையை வார்த்தைகளால் கூறவே முடியாது. எந்த பாவமும், அது எவ்வளவு பெரிதாக இருந்தாலும், எவ்வளவு பயங்கரமானதாக இருந்தாலும், இரத்தக் கறை படிந்து சிவப்பானதாக இருந்தாலும், சபிக்கப்பட்டதாய் இருந்தாலும், அவரால் மன்னிக்க முடியாத பாவமே இல்லை. சிலுவையில் அறையப்பட்டவரான அவருடைய குமாரனை நீங்கள் நோக்கிப் பார்ப்பீர்களானால், உங்களுடைய சகல பாவங்களும் தேவதூஷணங்களும் உங்களுக்கு மன்னிக்கப்படும். அவரிடம் மன்னிப்பு உண்டு. இயேசுக்கிறிஸ்து மனந்திரும்புதலை அளித்து பாவமன்னிப்பைக் கொடுக்கிறார். அதற்குப் பிறகு நீங்கள் பெற்றுக் கொள்ளப்போகிற சந்தோஷத்துக்கும் சமாதானத்துக்கும் அளவேயில்லை. நீங்கள் மோட்சானந்தத்தை பூமியிலேயே அநுபவிப்பீர்கள். பரலோகத்தின் சந்தோஷம் உங்களுக்குக் கிடைக்கும். மெய்யான தேவன் உங்கள் தேவனாக இருப்பார். நீங்கள் இயேசுக்கிறிஸ்துவின் நண்பனாவீர்கள். நித்தியமான ஆசீர்வாதங்கள் உங்களுக்குக் கிடைக்கும்.

ராஜா கடைசியாக சொல்லியனுப்பிய செய்தியில் மிகவும் மென்மையான அழைப்பு தொனிப்பதை கவனியுங்கள். அவர்களுக்குக் கொஞ்சமாவது மனசாட்சி இருந்திருக்குமானால், அது அவர்களுடைய இருதயத்தை அசைத்திருக்க வேண்டும். அந்த ஊழியர்கள் என்னவிதமாக அவர்களை மீண்டுமாக அழைக்கிறார்கள் என்பதைப் பாருங்கள். அவர்கள் எப்படி கூறவில்லை என்பதை முதலில் சிந்தித்துப் பார்ப்போம். "உடனே வாருங்கள், இல்லையென்றால் விருந்தைத் தவறவிட்டு விடுவீர்கள் - வாருங்கள், இல்லையானால் ராஜாவுக்குக் கோபம் வந்துவிடும் - வாருங்கள், வாருங்கள், இல்லையென்றால் உங்களுக்கு ஒன்றும் கிடைக்காது" என்றெல்லாம் அவர்கள் மிரட்டவில்லை. நான் அதைப் படித்துப் பார்க்கையில் எனக்கு ஒரு கருத்துத் தோன்றுகிறது. நான் தவறாக நினைப்பேனென்றால் ஆண்டவர் என்னை மன்னிப்பாராக. அந்த ஊழியர்கள் அவர்களை அழைத்தவிதம் எப்படியிருக்கிறதென்றால், அந்த ராஜாவானவர் ஏதோ பரிதாபத்துக்குரியவர் என்பது போலவும், இவர்கள் வராவிட்டால் அவருக்கு அவமானமாகிவிடும் என்பது போலவும் அந்த ஊழியர்கள் அவர்களைத் திரும்பத் திரும்ப அழைப்பதாக எனக்குத் தோன்றுகிறது. அவர்கள் எப்படி அழைக்கிறார்கள்? - "என் விருந்தை ஆயத்தம் பண்ணினேன். என் எருதுகளும் கொழுத்த ஜெந்துக்களும் அடிக்கப்பட்டது. கலியாணத்திற்கு வாருங்கள்" என்று கெஞ்சுவது போலிருக்கிறது. ஆனால் நடந்தது என்ன? ஒருவரும் வரவில்லை. அந்த ராஜாவோ வாருங்கள், வாருங்கள் என அழைக்கிறவராக காணப்படுகிறார்.

சிலசமயங்களிலே சுவிசேஷத்தின் சில வசனங்களைக் கவனிக்கும்போது, நாம் இரட்சிக்கப்படுவதால் தேவனுக்கு ஏதோ நன்மை ஏற்படுவதுபோல அவர் அழைப்பதைக் காண்கிறோம். நம் மீது அவருக்கு எவ்வளவு அன்பிருந்தால், மனுஷர் பேசுகிற பிரகாரமாக நமக்காக அவர் பேசுகிறார். நம்மால் அவருக்கு என்ன லாபம்? நாம் அழிந்து போனோமானால் அதனால் அவருக்கு என்ன நஷ்டம் வந்துவிடப் போகிறது? ஒரு தகப்பன், தனது பிள்ளை திரும்பவும் வீட்டிற்கு வரவேண்டும் என ஏங்குவது போல அவர் சுவிசேஷங்களில் தன்னைக் காண்பித்துக் கொள்கிறார். சர்வவல்லவராகிய அவர், தம்மோடு நாம் ஒப்புரவாக வேண்டுமென கெஞ்சிக் கொண்டு நிற்பது போலத் தன்னை வெளிப்படுத்துகிறார். நமது நிலைமைக்குத் தன்னையே அவ்வளவு வளைத்து இறங்குகிறார்.

## கலியாண விருந்துக்கு அழைத்த உவமை

ஒரு வியாபாரியைப் போல, "ஓ தாகமாயிருக்கிறவர்களே, நீங்கள் எல்லோரும் தண்ணீர்களண்டைக்கு வாருங்கள். பணமில்லாதவர்களே, நீங்கள் வந்து, வாங்கிச் சாப்பிடுங்கள்" எனக் கூவி அழைக்கிறார். இயேசுக்கிறிஸ்து எருசலேமைப் பார்த்து அழுதபோது, அவர் தனக்காகவும் அவர்களுக்காகவும் அழுதார் என்பதை கவனித்திருக்கிறீர்களா? "நான் எத்தனைதரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச்சேர்த்துக் கொள்ள மனதாயிருந்தேன்" என அங்கலாய்க்கிறார். தனக்கே ஏதோ துன்பம் நேர்ந்துவிட்டது போல, தேவன் தீர்க்கதரிசியின் மூலமாகப் புலம்புகிறார்: "எப்பிராயீமே, நான் உன்னை எப்படிக் கைவிடுவேன்? இஸ்ரவேலே, நான் உன்னை எப்படி ஒப்புக் கொடுப்பேன்? நான் உன்னை எப்படி அத்மாவைப் போலாக்குவேன்? உன்னை எப்படி செபோயீமைப் போல வைப்பேன்?" என்கிறார். தீர்க்கதரிசிகளின் மூலமாக உரைக்கும் பிதா, பிள்ளைகள் அடையும் நஷ்டம் ஏதோ தனக்கே வந்த நஷ்டம் போல காண்பிக்கிறார். பாவியாகிய ஒருவன் மரிப்பது அவனுக்கு மாத்திரமல்ல, தனக்கும் நஷ்டமே என்கிற ரீதியில் அவர் உணர்ச்சியைக் காட்டுவதாகத் தெரிகிறது. தேவனுடைய சுவிசேஷம் நிராகரிக்கப்படும்போது உங்களுக்கே அவர் மீது பரிதாபம் தோன்றுகிறதல்லவா? இயேசுக்கிறிஸ்துவின் சிலுவை உயர்த்தப்பட்டிருக்கிறது. ஆனால் அதை நோக்கிப் பார்ப்பவர்கள் ஒருவரும் இல்லையா? இயேசு மரித்திருக்கிறார் - அவர் மரணத்தினால் வரும் இரட்சிப்பு மனிதருக்கு தேவையில்லையா? ஓ, கர்த்தாவே, வேறு எதுவும் எங்களை உம்மிடம் ஈர்க்கவில்லையென்றாலும், நீர் அழைத்தும், நாங்கள் வராத காரணத்தால் நீர் கேவலப்பட்டுப் போய்விடக்கூடாது என்கிற காரணத்துக்காகவாவது நாங்கள் உம்மிடம் வருகிறோம். உன்னதமானவரே, நாங்கள் மனமகிழ்ச்சியோடு வருகிறோம். வந்து நீர் எங்களுக்காக ஆயத்தம் பண்ணி வைத்திருப்பவைகளில் பங்கு பெறுகிறோம். ஏழைப் பாவிகளாக உம் முன் வந்து, நீர் தரும் இரக்கங்களைப் பெற்றுக் கொண்டவர்களாக, குமாரனை மகிமைப்படுத்துவதற்கு வருகிறோம்.

தன்னை கௌரவிப்பதை அநேகர் அறுவெறுக்கின்றனர் என்பதை அவர் காண்கிறார். உலகமும்கூட அப்படித்தானிருக்கிறது. ஆகவே சகோதர, சகோதரிகளே, அவரில் அன்பு கூறுகிற நீங்கள் அவரை அதிகமாகக் கனப்படுத்துங்கள். ஏனென்றால் உலகம் ஒருபோதும் அவரை கனப்படுத்தப் போவதில்லை. அவரிடம் அழைத்து வரப்பட்டு, பந்தியில் இருக்கிறவர்களாகிய நீங்கள் மிகுந்த மகிழ்ச்சியோடு அவரைப் பாடித்

துதியுங்கள். நீங்கள் வீட்டுக்குச் சென்றபிறகு இன்னும் அவரிடம் வராதவர்களை நினைத்துப் பார்த்து அவர்களுக்காகத் தேவனிடம் விண்ணப்பம் செய்யுங்கள். அவர்களுக்கு தேவன் தெளிந்த புத்தியைத் தந்து, அவர்களுடைய மனதை மாற்றி, இயேசுக்கிறிஸ்துவை விசுவாசிக்கச் செய்ய வேண்டுமென பிரார்த்தியுங்கள்.

இந்த செய்தியைக் கேட்டு இருதயத்தில் மென்மையாக அவருடைய கிருபையினால் தொடப்பட்டிருக்கிற மற்றவர்களை, அவரிடம் வந்து கலியாணவிருந்தில் பங்கெடுக்குமாறு நான் அழைக்கிறேன். அவர் கூறுகிற நற்செய்தியானது மிகவும் உன்னதமானது - விருந்து மிகவும் பிரமாதமானது. அவர் மகிமையின் ராஜா - அவர் மிகவும் நல்லவர். நம்மை ஏற்றுக்கொண்டு இரட்சிக்கிற மணவாளனும் மிகவும் அருமையானவர். எல்லாமே மிகவும் அருமையானவைகள் - இன்று உங்களுக்கு அனுப்பப்படுகிற அழைப்பை ஏற்றுக் கொண்டவர்களாக அவரிடம் வருவீர்களானால் அவர் உங்களையுங்கூட உன்னதமான சிருஷ்டியாக மாற்றுவார். "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெறுகிறவன் இரட்சிக்கப்படுவான். விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்". "இயேசுக்கிறிஸ்துவை விசுவாசி. அப்போது இரட்சிக்கப்படுவாய்." தமது அருமைக் குமாரனின் நிமித்தமாக தேவன்தாமே தமது ஆவியானவரை அனுப்பி, இந்த அழைப்பை பயனுள்ளதாகச் செய்வாராக. ஆமேன்

*(பிப்ரவரி 12, 1871ஆம் ஆண்டு, மெட்ரோபாலிடன் டேபர்நாகிள் சபையில், கர்த்தருடைய நாளில் சார்ல்ஸ் ஸ்பர்ஜன் அளித்த தியானத்தின்(0975) சாராம்சம்)*

## 2. காலேப் - எக்காலத்திற்கும் உகந்தவர்

*என்னுடைய தாசனாகிய காலேப் வேறே ஆவியை உடையவனாய் இருக்கிறபடியினாலும், உத்தமமாய் என்னைப் பின்பற்றி வந்தபடியினாலும், அவன் போய்வந்த தேசத்திலே அவனைச் சேரப்பண்ணுவேன். அவன் சந்ததியார் அதைச் சுதந்தரித்துக் கொள்ளுவார்கள் - எண் 14:24*

"காலேப்" என்கிற பெயர் ஒருவிதத்தில் பார்த்தால் சற்று கடூரமான அர்த்தத்தைக் கொண்டது. அநேக மொழிபெயர்ப்பாளர்கள் அது "நாய்" என்கிற அர்த்தத்தை உடையது என்கிறார்கள். ஆனால் மனிதனின் பெயரில் என்ன இருக்கிறது? அவர் ஒருவேளை சற்று முரட்டுத்தனமாகவும் இருந்திருக்கலாம். தைரியமுடைய மனிதர்களில் பலர் அப்படிப்பட்டவர்களாகத் தோற்றமளிக்கலாம் அல்லவா. கரடுமுரடாகத் தோன்றுகின்ற சிப்பிக்கு உள்ளாகத்தானே விலைமதிப்பில்லாத முத்து இருக்கின்றது. பலநேரங்களில் மேன்மையான காரியங்களை கரடுமுரடானவைகள் மூடிக் கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். மேலும், நாய் என்பது ஒரு மோசமான விலங்கல்லவே. அது தனது எஜமானைப் பின்பற்றுகிறதான நற்பண்பைக் கொண்டிருக்கிறது. காலேபுக்கு அந்தப் பெயர் மிகவும் பொருத்தமானதுதான். காலேபு தனது எஜமானாகிய தேவனைப் பின்பற்றிய அளவிற்கு நாய் ஒருபோதும் தனது எஜமானைப் பின்பற்றியிருக்காது. தனது எஜமான் குதிரையில் அமர்ந்து விரைவாகப் போகும் சமயங்களிலும் நாயானது அவனை விசுவாசமாக பின்பற்றி

செல்லும். சகதியிலும், சேற்றிலும், புழுதியிலும் போகும்போதுகூட, குதிரையின் கால்களில் இடறிவிழுமளவிற்கு அது எஜமானைத் தொடர்ந்து செல்லும். அதேவிதமாகத்தான் காலேபும் தேவனுடன் காலமுழுவதும் நெருக்கமாகப் பயணப்படுகிறார். ஜனங்கள் கல்லெறிவதற்கு வந்தால்கூட அதைப் பொருட்படுத்தாமல் தேவனை முழுமையாகப் பின்பற்றுவதில் காலேப் உறுதியோடிருக்கிறார்.

காலேப் என்கிற பெயருக்கு இன்னொரு அர்த்தமும் இருக்கிறது. அது நமக்குப் பிடிக்கும். அந்த அர்த்தம் "முழு இருதயம்" என்பதாகும். தனது முழுஇருதயத்தினாலும் தேவனைப் பின்பற்றிய இந்த மனிதனுக்கு அந்தப் பெயர் மிகவும் பொருத்தமானதுதான். தேசத்தை வேவுபார்த்துத் திரும்பி வந்தபோது, தன் இருதயத்திலுள்ளபடியே மோசேக்கு செய்தி கொண்டுவந்ததாக காலேப் தன்னைக் குறித்துக் குறிப்பிடுகிறார். அவர் ஆரோக்கியமான ஆவியையும், வலிமை நிறைந்த ஆவியையும் உடைய மனிதனாயிருந்தார். அவர் எதையும், மனதில்லாமல் செய்கிறவர் அல்ல. குளிருமில்லாமல் அனலுமில்லாமல் இருந்த லவோதிக்கேயர்களைப் போன்ற ஆவியை உடையவரும் அல்ல. அப்படியிருந்தால் தேவன் வாந்தி பண்ணிப் போடுவார். ஆவிக்குரிய பரிசுத்த அனலையும், மிகுந்த தைரியத்தையும் காலேப் கொண்டிருந்தார். அவர் சிங்கத்தைப் போன்ற தைரியமுள்ள இருதயங் கொண்டவர்.

இவ்வுலகில் அநேகம்பேர் இருதயமே இல்லாதவர்களாக இருக்கிறார்கள். மனிதர்களுக்கு விளங்கிக் கொள்ளக்கூடிய தலை இருக்கிறது, நடக்கக் கால்கள் இருக்கிறது, வேலை செய்ய கைகள் இருக்கிறது, ஆனால் இரக்கமுடைய நல்ல இருதயம் மாத்திரம் பலபேரிடம் காணப்படுவதில்லை. அப்படிப்பட்ட அநேகம் பேரை, நீங்களும்கூட உங்கள் வாழ்க்கையிலே சந்தித்திருப்பீர்கள் என்பதில் சந்தேகமில்லை. அப்படிப்பட்டவர்களிடம் சற்று பழகினவுடனேயே அவர்கள் இருதயமற்றவர்கள் என்பது உங்களுக்குத் தெரிந்துவிடும். அட்லாண்டிக் கடலில் பயணம் செய்கிறவர்களுக்கு, பனிப் பாறைக்கு அருகில் நெருங்கிக் கொண்டிருப்பது சற்றுத் தொலைவிலேயே தெரிந்துவிடுமாம். திடீரென வருகின்ற மிகக் குளிர்ந்த மாறுதலை வைத்து அதை அவர்கள் உணர்ந்துவிடுவார்கள். அதே போல இருதயமில்லாதவர்களையும் உணர்ந்துவிடலாம். அவர்களிடம் கை குலுக்கிப் பாருங்கள். எந்த உணர்வுமற்றவர்களாக செத்த மீனைப் போல காணப்படுவார்கள். அவர்களிடம் பேசிப் பாருங்கள். உறைந்து போன

நிலையிலிருக்கும் அவர்களுடைய ஆத்துமாவை நீங்கள் எவ்வளவு முயற்சி செய்தாலும் அசைக்க முடியாது. தன்னை ஒரு கிறிஸ்தவராக காண்பித்துக் கொள்ள விருப்பமுடையவரிடம் வேதகாரியங்களைக் குறித்து பேசிப் பாருங்கள். அவர் அதைப் பற்றி கொஞ்சமாகத்தான் பேசுவார். அவருக்கு வார்த்தைகளே வராது. ஏனென்றால் அவருடைய இருதயம் வேதகாரியங்களில் இல்லை. இயேசுவை அறிந்திருக்கின்ற ஜனங்களால் அவரைக் குறித்து, உணர்வோடு பேசாமல் இருக்க முடியாது. அப்படிப்பட்டவர்கள் இந்த சமுதாயத்தில் இருக்க எதிர்பார்க்கிறேன். தங்கள் எஜமானனின் பெயரைக் கேட்ட மாத்திரத்தில் அவர்களுடைய நாடிநரம்புகளிலெல்லாம் உற்சாகம் பெருக்கெடுத்தோடும்.

அவர்கள் பாடல்கள் பாடுவதாக இருந்தால் தாவீதோடு சேர்ந்து, "வீணையே, சுரமண்டலமே, விழியுங்கள், நான் அதிகாலையில் விழிப்பேன்" என்று உற்சாகத்தோடு பாடுவார்கள். அவர்கள் ஜெபிப்பதாக இருந்தால், யாப்போக்கு என்கிற ஆற்றங்கரையிலே யாக்கோபு, தேவனோடு போராடி ஜெபித்தது போல ஜெபிப்பார்கள். அவர்கள் தேவனுக்கு சேவை செய்கிறவர்களாயிருந்தால், "எதைச் செய்தாலும், மனுஷர்களுக்கென்று அதைச் செய்யாமல், கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய் செய்யுங்கள்" என்கிற அப்போஸ்தலரின் வார்த்தைகளை கடைப்பிடிப்பார்கள். ஆம், காலேப் அப்படி ***மனப்பூர்வமாய்*** தேவனுக்கு சேவை செய்கிறவர்தான். ஆகவே நாம் அவருடைய பெயருக்கு இந்த வார்த்தையையே அர்த்தமாகக் கொள்ளுவோம். ஆனால் நாம் அவ்விரு வார்த்தைகளையும் சேர்த்துக் கூறினாலும்கூட, காலேப் ஒரு நன்றியுள்ள ***நாயைப்*** போல தனது எஜமானாகிய கடவுளை ***மனப்பூர்வமாய்*** பின்பற்றுகிறவர் என அர்த்தம் கொள்ளலாம். ஏனென்றால் அவர் தமது தேவனை முழுமனதோடும் பின்பற்றுகிறவர்.

காலேபைக் குறித்து நாம் மூன்று காரியங்களை கவனிப்பது பிரயோஜனமாயிருக்கும். முதலாவது அவர் தேவனை உண்மையாக பின்பற்றியவர். இரண்டாவது அவர் அடைந்த விரும்பத்தகும் வெகுமதி. மூன்றாவது, அவருடைய உள்ளத்தில் மறைந்திருந்த குணாதிசயம். அவர் தமது தேவனை முழுமனதோடு பின்பற்றியதின் இரகசியம் என்னவென்றால் "அவர் வேறே ஆவியை உடையவராய்" இருந்ததுதான்.

## அ) தேவனை உண்மையோடு பின்பற்றியவர்

இந்த மாவீரனை முதலாவதாக நமக்கு முன்பாக நிறுத்தி, அவர் தமது தேவனை உண்மையாகப் பின்பற்றினதைப் பார்த்து அதிலிருந்து நாமும் சில பாடங்களைக் கற்றுக் கொள்வோம்.

***அவர் ஒருபோதும் தேவனுக்கு முன்பாகச் சென்றதில்லை*** என்பதை உணருங்கள். அது துணிகரம். பரிசுத்தவான்கள் அதிகபட்சமாக ***தேவனோடு*** நடந்து சென்றார்களே தவிர, அவருக்கு ***முன்பாக*** ஒருபோதும் நடந்து சென்றதில்லை. ஜீவனுள்ளோருடைய தேசத்திலே நாம் அவருக்கு முன்பாக நடப்போம் என்பது உண்மைதான். ஆனால் அது வேறு அர்த்தத்தில் சொல்லப்பட்டுள்ளது. அதாவது அவருடைய ***கண்களுக்கு முன்பாக*** என்று அது அர்த்தப்படும். கடவுளின் நடத்துதலை மீறி, நம்மை நாமே நடத்திக் கொள்ளுகிறவர்களாக, அவருக்கு முன்னே ஓடுகிறவர்களாக நாம் ஒருபோதும் இருக்கக் கூடாது. மேக ஸ்தம்பத்திற்கு முன்பாக விரைந்தோடுகிறவர்களை கருமேகங்கள் சூழ்ந்து கொள்ளும். அக்கினி ஸ்தம்பங்களை விட்டு விலகி, தங்களுக்குத் தாங்களே வழிகாட்டியாக செல்கிறவர்கள் வெகுசீக்கிரத்தில் வேறு அக்கினிக்குள்ளாக மாட்டிக் கொள்வார்கள். அப்போது அவர்களை விடுவித்துத் திரும்பக் கொண்டுவருவதற்கு அவர்களுக்கு ஒரு வழிகாட்டியும் இருக்க மாட்டார்கள்.

நமது கர்த்தரை நாம் ***பின்பற்றுகிறவர்களாகவே*** இருக்க வேண்டும். ஆடு தன் மேய்ப்பனைத் தொடர்ந்து செல்ல வேண்டும். "ஆடுகளின் மேய்ப்பன் தன்னுடைய ஆடுகளை வெளியே விட்டபின்பு அவைகளுக்கு முன்பாக நடந்து போகிறான். ஆடுகள் அவனுக்குப் பின் செல்கிறது" என்று இயேசுக் கிறிஸ்து சொல்லுகிறார். ஒரு இராணுவ சேவகன் தனது தளபதிக்குப் பின்னால் செல்வது போல அவை செல்கின்றன. அந்த தளபதி ஆபத்துகளை எதிர்கொண்டவனாக முன்னாலே செல்கிறான். உண்மையான சேவகன் தனது தலைவனுக்கு அருகாமையிலேயே அவனைப் பின்தொடர்ந்து செல்கிறான். சீஷர்கள் தமது எஜமானைப் பின்பற்றியது போல அவர்கள் இருக்கிறார்கள். அவர்கள், எஜமானுக்கே போதிப்பவர்களாகவோ, எதிர்வாதம் செய்பவர்களாகவோ, மறுத்துப் பேசுகிறவர்களாகவோ இல்லாமல், அவர் நடத்திச் செல்கின்ற வழிகளே ஞானமானவைகள் என்பதை நம்பினவர்களாக அவருடைய பாதத்தின் அருகில் அமர்ந்திருப்பார்கள். அவர்

வெளிப்படுத்தியிருக்கும் காரியங்களுக்கு மேலாக நம்மையே ஞானவான்களாக்க நினைத்தோமானால் நாம் சோதனைகளும் கண்ணிகளுமான குழிக்குள் விழுந்துவிடுவோம்.

காலேப் தேவனைப் பின்பற்றினார். இன்னும் பலரும் தேவனைப் பின்பற்றினார்கள். ஆனால் காலேபைக் குறித்து வேதாகமம் குறிப்பிடுகின்ற அந்த தங்கமான பாராட்டை அவர்கள் அடையவில்லை. கர்த்தரை "உத்தமமாய்" பின்பற்றினவன் என்று ஒரு வசனம் குறிப்பிடுகிறது. இன்னொரு வசனம் "முழுமையாக" பின்பற்றினவன் என்று குறிப்பிடுகிறது. நம்மில் சிலர் தேவனைப் பின்பற்றுகிறோம். ஆனால் சிலசமயங்களில் பேதுருவைப் போல சற்று பின்வாங்கி விடுகிறோம். அல்லது சவுல் ராஜாவைப் போல எப்போதாவது தேவனைப் பின்பற்றுகிறவர்களாக இருக்கிறோம். நாம் இடைவிடாமல் தொடர்ந்து பின்பற்றுவதில்லை. அப்படியிருந்தால் நாம் நமது முழுஇருதயத்தையும் தேவனுக்குக் கொடுத்தவர்கள் அல்ல. "உத்தமம்" என்கிற வார்த்தையில்தான் தேவனை முழுமையாகப் பின்பற்றுவதின் விஷயமே அடங்கியுள்ளது. **"முழுமையான"** என்பதின் அர்த்தம் என்னவென்பதற்கு மாத்யூ ஹென்றி என்பவர் கொடுத்திருக்கும் விளக்கத்தையே எடுத்துக் கூறுகிறேன். இதைவிட சிறப்பாக என்னால் சிந்திக்க முடியாது:

1. முதலாவதாக, காலேப் தேவனை முழுமையாகப் பின்பற்றினார். அதாவது ***எதையும் விட்டுவைக்காது, எல்லாவற்றிலும், முழுமையாக*** தேவனைப் பின்பற்றினார். தன் எஜமான் கூறிய யாவையும் முழுமையாக செய்து முடித்தார். "கடவுள் நியமித்த வழிகள் எல்லாவற்றிலும் அவர் தொடர்ந்து சென்றார்." அவர் ஒருபோதும், "நான் இந்த கட்டளைகளை மாத்திரம் செய்வேன். மற்றவற்றை விட்டுவிடுவேன். இந்த சில விஷயங்கள் வரைக்கும் நான் என் மனசாட்சிக்கும் தேவனுக்கும் முன்பாக உத்தமமாய் நடந்து கொள்வேன். மற்ற விஷயங்களை பிற்பாடு பார்த்துக் கொள்ளலாம்" என கூறியதேயில்லை. தனக்கு இடப்பட்ட கட்டளைகள் யாவையும் அவர் அப்படியே எடுத்துக் கொண்டார். பத்து கட்டளைகள் அவருக்கு அளிக்கப்பட்டிருந்தால் அவர் ஒன்பதை மாத்திரம் எடுத்துக் கொள்ளவேண்டுமென விரும்பியவரில்லை. தேவன் கொடுத்த வரிசையை மாற்ற விரும்பியவருமில்லை. தேவன் முதலாவதாக கூறிய கட்டளையை இரண்டாம் இடத்துக்கு மாற்றியவரில்லை. கட்டளைகளை பிரிக்க முயன்றவரில்லை. தேவன் இணைத்திருப்பதை அவர் பிரிக்க

விரும்பியதில்லை. தனக்கு இஷ்டமானவைகளை மாத்திரம் தேர்ந்தெடுத்துக் கொண்டு தனது எஜமானைப் பின்பற்றுகிறவராக இல்லாமல், எஜமானின் சகல கட்டளைகளுக்கும் கீழ்ப்படிந்து நடப்பவர்.

சகோதரரே, தங்களைக் கிறிஸ்தவர்களாக அறிக்கையிடுகிற எல்லோரும் இப்படிப்பட்டவர்களாய் இருக்க வேண்டுமென நான் விரும்புகிறேன். காலேபைப் பாருங்கள். அவர் திராட்சைக் குலையை சுமந்து வருகிற வேலையை செய்வதற்கு மாத்திரமல்லாமல், இராட்சதர்களோடு போரிடவும் தயாராக இருந்தார். நம்மில் அநேகர் சிறிய வேலைகளை செய்வதற்கும், மனதிற்கு இன்பமான வேலைகள் செய்வதற்கும், ஆவிக்குரிய நிகழ்ச்சிகளில் பங்கெடுப்பதற்கும் எப்போதும் முன்வருவோம். ஆனால் இராட்சதர்களோடு போரிட வேண்டுமானால், "தயவு செய்து என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லி விலகிவிடுகிறவர்கள் எத்தனை பேர்! விரோதிகளை எதிர்த்து கிறிஸ்துவுக்காக வாதிடுவதிலும், கடிந்துகொள்வதிலும், தனி ஆளாகச் சென்று கிறிஸ்துவின் எதிரிகளுடன் போரிடுவதிலும் அநேகம்பேர் பின்வாங்கி விடுவார்கள். அதிலும் சிலர் பின்வாங்கி அழிவின் பாதைக்கே சென்றுவிடுவார்கள். ஏனென்றால் கர்த்தருடைய சித்தத்தை மாத்திரமே செய்கிறதான புதிய இருதயத்தை அவர்கள் பெற்றிராதபடியால்தான் தடம் மாறிவிடுகிறார்கள். உங்களுடைய வேலைக்காரி, நீங்கள் இடும் வேலைகளில் தனக்கு இஷ்டமானதை மாத்திரமே செய்வேன் என்று எதிர்த்து நிற்பாளானால் அவள் வேலைக்காரியல்ல, அவளே எஜமானியாக இருப்பாள் அல்லவா! சகோதரரே, கர்த்தருடைய சித்தத்தை செய்வதில், "நான் இவைகளை மாத்திரம் செய்வேன், மற்றவற்றை செய்ய மாட்டேன்" என நீங்களே தீர்மானித்தீர்களானால், உங்களை நீங்களே எஜமானாக ஆக்கிக் கொள்கிறீர்கள். எதிர்க்கிற ஆவி உங்களிடம் செயல்படுகிறது. நீங்கள் கடவுளுடைய வழிகளிலிருந்து விலகி தவறிப் போய் கொண்டிருப்பது மாத்திரம் அல்லாமல், அவைகளை வெறுக்கவும் செய்கிறீர்கள். அநேக வேதனைகளால் உங்களை உருவக் குத்திக் கொள்ளாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்.

சில கடமைகளை, அவை செய்ய அவசியமற்றவை என பலர் அலட்சியப்படுத்துகிறார்கள். கிறிஸ்துவை உண்மையாய் பின்பற்றுகிறவர்கள் ***எல்லா கடமைகளையும்*** செய்ய வேண்டியதில்லை என்பது போல அவர்கள்

நினைத்துக் கொள்கிறார்கள். "அவை அவசியமில்லை", "இதில் ஒன்றுமில்லை" என்று அவைகளைக் குறித்து மனிதர்கள் நினைத்துக் கொள்கிறார்கள். உண்மையில் பார்த்தால் அவ்வளவு முக்கியமானதில்லை என்று தோன்றுகிற கடமைகள்தான் மிகவும் முக்கியமானதாகவும் இருக்கும். பழங்காலத்தில் மிகுந்த செல்வந்தர்களான நில உரிமையாளர்கள் தங்கள் நிலங்களை ஏழைகளுக்குக் குத்தகைக்குக் கொடுத்து, வருடத்தில் ஒரு முறை மாத்திரம் அவர்கள் ஒரு சொற்பமான காரியத்தை அந்த எஜமானர்களுக்கு செலுத்துமாறு விதித்திருப்பார்கள். அது ஒருவேளை ஒரு சின்ன பறவையாகவோ, ஒரு புல் கட்டாகவோ, அல்லது ஒரு இலையாகவோகூட இருக்கும். அப்படியிருக்கும்போது குத்தகை எடுத்திருக்கிற அந்த ஏழை, இது என்ன அற்பமான காரியம், அவ்வளவு பெரிய செல்வந்தருக்கு இது அவசியமா என நினைத்து வருடம் ஒரு முறை அதை செலுத்த தவறினானென்றால் அந்த எஜமான் என்ன செய்வான்? அந்த நிலத்தை அவனிடமிருந்து பறிமுதல் செய்து, தனது எஜமான உரிமையை நிலைநாட்டிக் கொள்வானல்லவா?

அதேவிதமாகத்தான் சில விசுவாசிகளும் இருக்கலாம். உதாரணமாக, ஞானஸ்நானத்தைக் குறித்த விஷயத்தில் ஒருவன் அதை அலட்சியமாக நினைக்கக் கூடும். "இது என்ன, ஒரு சிறிய காரியம்தானே, இதை செய்யாமல் விட்டுவிடுவதால் பெரிய தவறொன்றும் இல்லை" என்று நினைக்கிறவன், கடவுள் எதிர்பார்க்கிற செயலை செய்யாமல் இருக்கிறான் என்றுதான் அர்த்தம். சாதாரண விஷயம் போலத் தோன்றினாலும், அது மிகுந்த அர்த்தத்தை உள்ளடக்கியுள்ளது. அது மகிமையுள்ள ராஜாவின் மேலான உரிமையை உறுதிப்படுத்துகின்றது. அது அவசியமில்லாதது என்று யார் உங்களுக்குச் சொன்னது? அதை செய்யாமல் விட்டுவிடலாம் என்று உங்களுக்கு வழிகாட்டுவது யார்? நிச்சயமாக இருளின் ஆவிதான் அப்படியாக உங்களிடம் பேசியிருக்கும்!

பழங்காலத்து யூதர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு விருத்தசேதனம் செய்யாமல் விடக்கூடாது. அந்த வேதனையுள்ள சடங்கை அந்த குழந்தைக்கு செய்யாவிட்டால் அக்குழந்தை இஸ்ரவேல் ஜனத்திலிருந்து அறுப்புண்டு போவான். இஸ்ரவேல் ஜனம், பஸ்கா இரவில் தேவன் நியமித்திருந்த அந்த உணவை தேவையில்லை என மறுக்கக் கூடாது. அப்படி ஒருவன் அதை அநுசரிக்காதிருந்தால் சங்கார தூதன் அவனுடைய வீட்டாரை அழிப்பான்.

பஸ்காவில் எல்லா காரியங்களையும் கட்டளையிட்டிருந்த பிரகாரம் அநுசரிக்க வேண்டும். ஒரு எலும்புகூட உடைக்கப்படக் கூடாது. பலி ஆட்டை பச்சையாகவோ, தண்ணீரில் அவித்தோ சாப்பிடக்கூடாது. அது நெருப்பினால் சுடப்பட வேண்டும். கசப்பான கீரையோடு சாப்பிட வேண்டும். இவ்வாறாக ஒவ்வொரு நுணுக்கமான விஷயங்களும் அறிவிக்கப்பட்டிருந்தது. இவை ஒவ்வொன்றிலும் கர்த்தரின் கட்டளை இருந்தது. இஸ்ரவேலரின் தலைமுறைதோறும் அந்த ஜனங்கள் இவை ஒவ்வொன்றையும் தவறாமல் கவனத்தோடு அநுசரிக்க வேண்டும்.

அதே போலத்தான் கிறிஸ்தவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் நியமனங்களும். அவை பரலோகத்தின் ராஜாவினால் அளிக்கப்பட்டுள்ளது. அவைகளை பயமில்லாமல் நாம் மீறக் கூடாது. அவைகளில் ஒன்றையாகிலும் சாதாரணமானதென்று கூறி, நம்மை மீறும்படியாக செய்ய வைப்பது, நரகத்திற்கு நம்மை இட்டுச் செல்கிற பிசாசின் ஆவியேயல்லாமல் வேறில்லை. அரைகுறையான கீழ்ப்படிதல் என்பது முழுமையான கீழ்ப்படியாமை ஆகும். ஒரு வயதான தீர்க்கதரிசியை பெத்தேலுக்குச் சென்று ஒரு காரியத்தை செய்து வரும்படி தேவன் சொன்னார். வழியிலே எதையும் குடிக்காமலும், சாப்பிடாமலும், யாருடனும் பேசாமலும் சென்று வரும்படி தேவன் கட்டளையிட்டிருந்தார். ஆனால் நடந்தது என்ன? அவர் திரும்ப வருகையில் இன்னொரு தீர்க்கதரிசியின் வாயிலிருந்து வருவதாக எண்ணி, அவர் சொற்படி கேட்டு, புசித்துக் குடித்ததால் சிங்கத்துக்கு இரையானார். ஏனென்றால் அவர் தேவன் சொல்லியிருந்தபடி நடக்காததால் தேவனுக்கு விரோதமானவைகளைச் செய்தவரானார். பரிசேயரைப் போல வெந்தயத்திலும் சீரகத்திலும் தசமபாகம் செலுத்திவிட்டு, நியாயப்பிரமாணம் கற்பித்திருக்கிற விசேஷமானவைகளை செய்யாமல் விட்டுவிடக்கூடாது. "இவைகளையும் செய்ய வேண்டும், அவைகளையும் விடாதிருக்க வேண்டும்" என்று இயேசுக்கிறிஸ்து கூறியிருப்பதை நாம் நினைவில் வைக்க வேண்டும். ஆகவே வெந்தயமும் சீரகமுமாகிய சிறிய காரியங்களிலும் கர்த்தருக்கு செலுத்த வேண்டியதை செலுத்த வேண்டும். கர்த்தருடைய கற்பனைகள் கற்பிக்கிற பெரிய காரியங்களிலும் அவருக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும். ஆகவே நண்பர்களே, காலேபைப் போல ***சகல காரியங்களிலும், எதையும் விட்டு வைக்காது முற்றிலுமாக*** தேவனைப் பின்பற்றுங்கள்.

சகோதரரே, உங்கள் மனசாட்சியிடம் ஒரு கேள்வி கேட்கிறேன்! உங்களுடைய எஜமானனின் சித்தம் என்பதை அறிந்தும் எதையாவது செய்யாமல் விட்டுவைத்திருக்கிறீர்களா? நண்பரே, நீங்கள் இன்னமும் கீழ்ப்படியாமல் இருக்கிற தேவனுடைய கட்டளை ஏதும் இருக்கிறதா? உங்களையே வெறுக்க வேண்டியதான காரியம் எதையாவது தள்ளிப்போட்டுக் கொண்டிருக்கிறீர்களா? உங்கள் சகோதரருக்கு நன்மை விளைவிக்கக் கூடிய எதையாவது செய்யாமல் இருக்கிறீர்களா? உங்கள் கர்த்தருக்கு செலுத்த வேண்டிய மகிமையை செலுத்தாமல் கவனக்குறைவாக நடந்து கொண்டிருக்கிறீர்களா? அப்படி இருந்ததானால் அவைகளில் கவனம் செலுத்துங்கள். ஏனென்றால் காலேபைப் போல, நீங்கள் சகல காரியங்களிலும் முழுமையாக அவருக்குக் கீழ்ப்படியவில்லையென்றால் ஆசீர்வாதங்களைப் பெற மாட்டீர்கள்.

2. இரண்டாவதாக, காலேப் ***மிகவும் உண்மையோடு, சற்றும் மாய்மாலம் இல்லாமல்*** கர்த்தரை முழுமையாகப் பின்பற்றினார். அவர் மாய்மாலக்காரர் அல்ல. தேவனைத் தமது முழுஇருதயத்தோடும் பின்பற்றினவர். ஒருவன் எதிலாவது உண்மையானவனா என்பதை பரிசோதிக்கும் சுலபமான வழி, அவன் அந்தக் காரியத்திற்காக பாடனுபவிக்கவும் உறுதியாக இருக்கிறானா என்று பார்ப்பதே. தேசத்தை வேவு பார்க்கச் சென்ற அந்த பன்னிரெண்டு பேரும், பிற்பாடு ஒரு இடத்தில் சந்தித்து, தாங்கள் பார்த்தவைகளை பகிர்ந்து கொண்டு, என்னவிதமான பதிலை இஸ்ரவேல் மக்களுக்கு எடுத்துச் செல்லலாம் என்பதைக் குறித்து பேசியிருப்பார்கள் என நான் நம்புகிறேன். நீதிமன்றத்தில் நடக்கும் வழக்குகளின் விசாரணையை கவனித்து தங்கள் அபிப்ராயத்தை நீதிபதிக்குத் தெரிவிக்கும் குழுவைப் போல அந்த பன்னிரெண்டு பேரும் தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டிருந்திருப்பார்கள். அதில் பத்துப் பேர், "அது பாலும் தேனும் ஓடுகிற தேசம்தான். ஆனால் அது தன் குடிகளைப் பட்சிக்கிற தேசம். அதன் ஜனங்கள் இராட்சதர்கள். அதன் பட்டணங்கள் அரணிப்பானவைகளும் மிகவும் பெரியவைகளுமாயிருக்கிறது. நாம் போய் அந்த ஜனங்களை எதிர்க்க முடியாது" என்கிற எண்ணமுடையவர்களாய் இருந்தார்கள். ஆனால் யோசுவாவும் காலேபும் மாத்திரம் அதற்கு நேர்மாறான அபிப்ராயம் கொண்டிருந்தார்கள். அவர்கள் வேவு பார்த்த பின்பாக கூடிப் பேசிக் கொண்டபோது, அவர்களுக்கிடையே என்னவிதமான வாக்குவாதங்களும், அபிப்ராயபேதங்களும், கேலிப் பேச்சுகளும், சீறல்களும் நடந்தது

என்பதைக் குறித்து என்னால் கூற முடியாது. ஆனால் காலேபும் யோசுவாவும் மாத்திரம் அந்த மற்ற பத்து பிரபுக்களினின்றும் தனித்து விடப்பட்டவர்களாக இருந்ததாகக் கூறலாம்.

அவர்கள் அனைவரும் திரும்ப வந்து இஸ்ரவேலருக்கு முன்பாக அந்த தேசத்தைக் குறித்த தங்கள் அபிப்ராயத்தைத் தெரிவித்தபோது, காலேப் மாத்திரம் தனித்து நின்று, தான் அவர்கள் நினைக்கிற விதமாக நினைக்கவில்லை என்கிற கருத்தை தைரியமாகக் கூறினதை நாம் அறிவோம். யோசுவா அவ்விடத்தில் தன் கருத்தைச் சொல்லவில்லை. யோசுவா, மோசேயின் ஊழியனாக இருப்பதினால், யோசுவாவின் கருத்து மோசேயின் கருத்துக்கு ஒத்ததாகத்தான் இருக்கும் என ஜனங்கள் நினைத்து, யோசுவா சொல்வதில் அவர்கள் அதிக கவனம் செலுத்த மாட்டார்கள் என்கிற முன்ஜாக்கிரதையின் காரணமாகவும் யோசுவா அமைதலாக இருந்திருக்கலாம். ஆகவே காலேப் மாத்திரம் அந்த ஜனக்கூட்டத்தாரின் கலகத்துக்கு தனி ஆளாக எதிர்த்து நிற்கிறார். நாற்பது வயதே நிரம்பியவராக இருந்த அவர், அந்த பத்து பிரபுக்களின் அபிப்ராயத்தை எதிர்த்து, "நாம் உடனே போய் அதை சுதந்தரித்துக் கொள்வோம். நாம் அதை எளிதாய் ஜெயித்துக் கொள்ளலாம்" என்று மிகுந்த தைரியத்துடன் அறிவிக்கிறார். எப்படியான தைரியமுள்ளவர் அவர்! ஜனங்கள் அவர்கள் மீது கல்லெறிய வேண்டுமென சொன்னபோது, யோசுவாவும் காலேபுடன் சேர்ந்து பேச வேண்டியதாயிற்று. அது சின்ன விஷயமல்ல. திரளான ஜனக்கூட்டத்தாரின் வன்முறைக்கு முன்பாக அந்த தேசத்தைக் குறித்த நல்ல செய்தியை கூறவேண்டுமானால் அதற்கு மிகுந்த மனதைரியம் இருக்க வேண்டும். அந்த தருணத்திலும் காலேபு தனது கர்த்தரை உத்தமமாகப் பின்பற்றினார்.

அருமையானவர்களே, கடவுளைப் பின்பற்றுகிறோம் எனக் கூறுகின்றவர்களில் எத்தனை பேர் அரை மனதாய் அவரைப் பின்பற்றுகிறவர்களாயிருக்கிறார்கள்! உண்மையான பக்தியைக் காட்டிலும், பக்தியாக இருப்பது போன்ற வெளித் தோற்றமே அநேகருக்கு திருப்தியை அளித்துவிடுகிறது. ஒரு சிறந்த ஓவியன் வரைந்த பிச்சைக்காரனின் ஓவியத்தை வாங்குவதற்கு பலர் பல்லாயிரக்கணக்கான பணத்தை செலவழிப்பார்கள். ஆனால் உண்மையான பிச்சைக்காரனுக்கு ஒரு பைசாகூட தரமாட்டார்கள். பிச்சைக்காரனைக் கண்ட மாத்திரத்தில் ஆத்திரம் அடைவார்கள் என்று ஒருவர் சொன்னார். இது எவ்வளவு உண்மையாயிருக்கிறது! அதைப் போலவே, வெளிப்பிரகாரமாக பக்தியைக்

காலேப் - எக்காலத்திற்கும் உகந்தவர்

காண்பித்துக் கொள்வதில் அதிகப் பிரயாசை எடுப்பவர்கள், உண்மையாகவே பக்தியாயிருக்க எந்த முயற்சியும் செய்ய மாட்டார்கள். பெரும்பாலான ஆலயங்களில் கற்களால் செய்யப்பட்ட சிலுவைகள் வைக்கப்பட்டுள்ளது. ஆனால், ஆராதிக்க வருபவர்களில், அனுதினமும் கிறிஸ்துவின் சிலுவையை எடுத்துக் கொண்டு அவரைப் பின்பற்றுவதில் கவனம் செலுத்துபவர்கள் எவ்வளவு குறைவாய் இருக்கிறார்கள்!

பக்தியுள்ள மனிதர்களிடம் மற்றவர்கள் மரியாதை செலுத்துவதற்குக் காரணம் அவர்களுடைய பக்தி அல்ல, வேறு பல காரணங்களுக்காகவே. உங்களிடம் இருக்கிற பக்தியை ஒன்றும் அவர்கள் மதிப்பதில்லை. ஒரு கரடியைக் கூண்டில் அடைத்து நகர மக்களிடம் சென்று காண்பித்தால், அவர்கள் அதைப் பார்ப்பதற்காக பணம்கூட கொடுப்பார்கள். ஆனால் அதே கரடியை அவர்கள் மத்தியில் அவிழ்த்து விட்டால், அதை விரட்டுவதற்கு இரண்டு மடங்கு பணம் கொடுப்பார்கள் அல்லவா! அதே போலத்தான் பக்தியும். பக்தியுள்ள மனிதர்கள் சிலரிடம் நல்ல குணங்களும் திறமையும் வரங்களும் இருக்கும். அதற்காக மற்றவர்கள் அவர்களை மதித்துப் பாராட்டுவார்கள். ஆனால் அவர்களுடைய தினசரி நடவடிக்கைகளில் அந்த பக்தியானது வெளிப்பட்டு, அவர்களை வித்தியாசமானவர்களாக அடையாளம் காட்டும்போது, பாராட்டினவர்களே அவர்களை வெறுக்கத் தொடங்கிவிடுவார்கள். அநேகர் இயேசுவிடம் காட்டும் அன்பில் உண்மையில்லை. பரிசுத்தமில்லாமல் அவரை அறிக்கையிடுகிறவர்களாய் இருக்கிறார்கள். ஒருநாள் வரப்போகிறது. அந்நாளிலே தவறானவைகள் யாவும் அழிக்கப்படப் போகிறது. இயேசுவின் கையில் இருக்கிற தூற்றுக்கூடை, கோதுமை மணியின்மீது ஒரு பதரைக் கூட விட்டு வைக்கப் போவதில்லை. மாபெரும் அக்கினியால் அவர் புடமிடும்போது உலோகத்தின் அழுக்குகள் யாவும் நீக்கப்படும். எவனுடைய விசுவாசம் உண்மையாயிருக்கிறதோ, எவனுடைய மனந்திரும்புதல் சரியாக இருக்கிறதோ, யார் உண்மையாக கீழ்ப்படிகிறானோ, யார் தமது எஜமானுக்கு தனது முழுஇருதயத்தையும் தந்திருக்கிறானோ அவனே சந்தோஷமான மனிதனாக காணப்படுவான்.

3. ***வாக்குவாதம் செய்யாமல், சந்தோஷத்தோடு*** காலேபு கர்த்தரை முழுமையாகப் பின்பற்றினார். இது மிகவும் கவனிக்க வேண்டிய கருத்து. தங்களுக்கு விருப்பமில்லாத ஒன்றை செய்வது போல முகவாடலாக கர்த்தருக்கு ஊழியம் செய்கிறவன் அவருடைய ஊழியன் அல்ல.

அடிமைகள் தமது சிங்காசனத்தை அலங்கரிப்பதை தேவன் விரும்புகிறவரல்ல. தேவனுடைய தூதர்கள், முறுமுறுக்கிறவர்களாக அல்ல, பாடிக் கொண்டே, சந்தோஷத்தோடு அவருக்கு சேவை செய்து கொண்டிருக்கிறார்கள். தமது சிருஷ்டிப்புகள் சந்தோஷத்துடன் தமக்குக் கீழ்ப்படிவதையே அவர் விரும்புகிறார். வேண்டாவெறுப்பாக அவருக்குக் கீழ்ப்படிதல், கீழ்ப்படிதலே அல்ல என்றுதான் நான் சொல்லுவேன். ஏனென்றால் தேவன் இருதயத்தைப் பார்க்கிறவராய் இருக்கிறார். நாம் அவர் மீது கொண்டுள்ள அன்பின் காரணமாக இல்லாமல், கட்டாயத்தின்பேரில் அவருக்கு ஊழியம் செய்கிறோம் என்று அவர் கண்டாரானால் நமது கைகளின் பிரயாசத்தை அவர் தள்ளிவிடுவார். சந்தோஷத்தோடு செய்கிற காரியமே முழுமனதினாலும் செய்கிற உண்மையான சேவையாக இருக்கிறது.

ஒரு கிறிஸ்தவன் சந்தோஷத்தோடு சேவை செய்யாவிட்டால் அவன் உண்மையாக அவரைப் பின்பற்றுகிறவனல்ல. ஒருவனைப் போர்க்களத்திற்கு செல்லுமாறு கட்டாயப்படுத்த வேண்டியதாயிருந்தால் அவன் உண்மையான தேசபக்தனாக இருப்பானா? "தேசத்திற்காக உயிரை விடுவது எவ்வளவு இனிமையானது" என்று கண்களில் ஒளிவீசப் பாடிக் கொண்டே செல்கிறவன்தான் தன்னை ஒரு உண்மையான தேசபக்தனென்று நிருபிக்கிறான். மகிழ்ச்சிதான் ஒருவனுடைய ஊழியத்தை பெலப்படுத்தும் காரியமாயிருக்கிறது. ரயில் வண்டியின் சக்கரத்திற்கு எண்ணெய் போடுவது போன்றதுதான் நமது ஊழியத்தில் இருக்க வேண்டிய மகிழ்ச்சி. எண்ணெயில்லாமல் வண்டி ஓட்டும்போது விபத்துகள் நேர்ந்துவிடும். அதுபோலவே பரிசுத்தமான சந்தோஷத்தோடு நமது ஊழியத்தை செய்யாவிட்டால் அதை சரியாக நிறைவேற்ற முடியாது. சந்தோஷத்தோடு சேவைபுரிகிறவன் கர்த்தருக்குத் தான் கீழ்ப்படிந்து நடப்பதை நிருபிக்கிறான். நமது சுபாவத்தோடு தொடர்புடையதான கீழ்ப்படிதலையே தேவன் ஏற்றுக் கொள்கிறார். நான் கூறுவதை சரியாகப் புரிந்து கொள்ளுங்கள். பாவ சுபாவத்தைக் கொண்டிருக்கிற உலக மனிதன் ஒருவன், பரிசுத்தவான் செய்கிறதைப் போலவே செய்தாலும், அவனுடைய உள்ளான சுபாவமானது அவனுடைய சேவையைக் கெடுத்துவிடும். எந்தவிதமான சுபாவத்தை கொண்டிருக்கிறவர்கள் தமக்கு சேவை செய்கிறார்கள் என்பதைக் கர்த்தர் அறிவார். ஆவிக்குரியதான, புதுப்பிக்கப்பட்ட, மறுஜென்மம் அடைந்திருக்கிறதான சுபாவத்தோடுகூடியதான நம்முடைய கீழ்ப்படிதலை அவர் அறிவார். ஆகவே நமது கீழ்ப்படிதலை அவர் ஏற்றுக் கொள்வார்.

காலேப் - எக்காலத்திற்கும் உகந்தவர்

உங்கள் எல்லோரிடமும் இந்தக் கேள்வியைக் கேட்கிறேன். சகோதரரே, நீங்கள் மனமகிழ்ச்சியோடு கர்த்தருக்கு சேவை செய்கிறீர்களா? கேட்டால் மாத்திரமே கர்த்தருடைய ஊழியங்களுக்காக கொடுக்கிறவர்கள் இருக்கிறார்கள். மனதில்லாமல் நீங்கள் அளிக்கும் சொற்ப தொகையின் மீது கர்த்தர் கவனம் செலுத்துவார் என நினைக்கிறீர்களா? அதை நீங்களே வைத்துக் கொள்ளலாம். அதனால் உங்களுக்கு ஆசீர்வாதம் எதுவும் வரப்போவதில்லை. தேவனுடைய பணிகளுக்கு நீங்கள் கொடுக்கும்போது அதை உற்சாகத்தோடு கொடுங்கள். முணுமுணுத்துக் கொண்டே ஒருவன் கொடுக்கக் கூடாது. அப்படிக் கொடுக்கிறவன், தேவன் ஏற்றுக் கொள்ளாததைதான் அவருக்குக் கொடுக்கிறவனாவான். வாராந்திர கூட்டங்களுக்கு நீங்கள் வரும்போது ஆர்வத்தோடு வருகிறீர்களா அல்லது வரவேண்டுமே என்கிற கட்டாயத்தின்பேரில் வருகிறீர்களா? யார் உண்மையாகவே காலேபைப் போல தேவனுடைய பிள்ளைகள் என்பதை இது அடையாளம் காட்டும். "உம்முடைய கட்டளையின்படி என்னை நடக்கப் பண்ணும், அது சந்தோஷமான பாதை" என்று அவன் பாடுவான். சரியான இருதயத்தைக் கொண்டிருப்பவன், கர்த்தரின் பணிகளை செய்வதில் உற்சாகமாய் இருப்பான். "நமது கால்களை சந்தோஷத்தோடும் கீழ்ப்படிதலோடும் விரைந்தோட வைப்பது அவருடைய அன்புதான்" என்று அவன் மகிழ்ச்சியாய் பாடுவான். சந்தோஷத்தோடும் உற்சாகத்தோடும் கர்த்தருக்கு சேவை செய்தவர்களில் காலேபும் ஒருவர்.

4. காலேபு, ***சற்றும் குறையாமல், தொடர்ந்து*** கர்த்தரை முழுமையாகப் பின்பற்றினார். வேவு பார்க்கச் சென்றிருந்த அந்த நாற்பது நாட்களிலும் ஆரம்பம் முதற்கொண்டு முடிவு வரைக்கும், தேசத்தை சரியானபடி பார்த்து, உள்ளதின்படியே மறுசெய்தி கொண்டுவர வேண்டுமென தீர்மானித்திருந்தபடியாக, மிகச் சரியான செய்தியையே அவர் கொண்டு வந்தார். நாற்பத்தைந்து ஆண்டு காலம் அவர் இஸ்ரவேலரோடு வனாந்திரத்திலே வாழ்ந்தார். எல்லா நேரங்களிலும் அவர் கர்த்தரை பின்பற்றி நடந்தார். ஒருமுறைகூட அவர் முறுமுறுக்கிற கலகக்காரரோடு கூட்டுசேர்ந்ததில்லை. எண்பத்தைந்து வயதில், தேசத்தில் தனது சுதந்திரவீதத்தைக் கேட்கிற நேரம் வந்தபோதும் தேவனை குறைவின்றி, முழு இருதயத்தோடும் பின்பற்றினவராகவே காணப்பட்டார். அவர் பேசுகிற விதமே அதை வெளிப்படுத்துகிறது. உறுதியான இருதயம் தனக்கு இருப்பதை அவர் காண்பிக்கிறார்.

காலேபின் வாலிப நாட்களில், தேவன் அவருடைய ஆத்துமாவில் தனது முத்திரையை இட்டார். நரை மயிர் நிறைந்த முதிர் வயதிலும் கர்த்தருக்குரியவராக அவர் தொடர்ந்து இருந்தார். தேவனை அறிக்கையிடுகிறவர்களில் எத்தனை பேர் தவறிப் போயிருக்கிறார்கள். ஏதோவொரு வேகத்தில் அவர்கள் ஆரம்ப நாட்களில் தேவனைப் பின்பற்றத் தொடங்குகிறார்கள். ஆனால் அவர்கள் நம்முடையவர்களாய் இல்லாதபடியினால் நம்மை விட்டுப் பிரிந்து போய்விடுகிறார்கள். கடலில் உள்ள மீன் ஆகாயத்தில் துள்ளிக் குதிப்பது போல அவர்கள் பக்திக்குள் வருகிறார்கள். ஆனால் அந்த மீன் திரும்பவும் கடலுக்குள்ளேயே போய் விழுந்துவிடுவது போல அவர்களும் தங்களுடைய பாவ வாழ்க்கைக்குத் திரும்பவும் சென்றுவிடுகிறார்கள். முட்செடி எரிவது போல கொஞ்ச காலம் படபடவென்று நல்ல பெயரை எடுக்கிறார்கள். ஆனால் அந்த அக்கினியோ வெகு சீக்கிரத்தில் தணிந்து போய்விடுகிறது. ஏனென்றால் அவர்கள் மோசேயின் முன்பாக அற்புதமாக எரிந்து கொண்டிருந்த முட்செடியைப் போன்றவர்கள் அல்ல. அவர்களில் தேவன் வாசமாயிருக்கவில்லை. ஆனால், காலேபு, விசுவாசத்தின் மூலமாக இரட்சிப்பை அடையும்படிக்கு தேவனுடைய வல்லமையினால் காத்து வைக்கப்பட்டிருந்தார். "வழுவாதபடி என்னைக் காக்க வல்லவரான தேவனுக்கு கனமும் மகத்துவமும் வல்லமையும் அதிகாரமும் இப்பொழுதும் எப்பொழுதும் உண்டாவதாக" என்று யூதாவோடு கூட சேர்ந்து காலேபும் சொல்லக்கூடும்.

பிச்சை எடுப்பதற்காக மற்றவர்களுக்கு முன்பாக நாளெல்லாம் நொண்டியைப் போல வேஷமிட்டுக் கொண்டிருந்துவிட்டு, இரவிலே தனது வேஷத்தைக் கலைத்துவிட்டு திருடர்களோடு சேர்ந்து குடித்து கும்மாளமிடும் வேஷதாரியைப் போன்றவர் அல்ல காலேபு. எப்போதும் ஒரே மனநிலையைக் கொண்டிருந்தவர். நன்மைக்கு தயங்குகிறவராயும் துன்மார்க்கத்திற்கு விரைகிறவராயும் இராமல் எப்போதும் சீரான நடையை கொண்டவராக அவர் இருந்தார். நேர் வழியிலே நடந்தார். மாய்மாலக்காரராயிராதபடி தேவன் அவரைத் தப்புவித்து, அதற்கு பதிலாக சீரான தன்மையைத் தந்தார். உண்மையற்றவர்களின் மத்தியிலே அவர் ஒருவர் மாத்திரம் உண்மையோடிருந்த போது அவர் எவ்வளவு பிரகாசமாக தனித்து நின்று ஒளி வீசினார். அந்நேரத்திலே யோசுவாகூட பேசவில்லை. பழங்காலத்தில் ஒருவர்(Gotthold) உவமையாக சொன்ன ஒரு கதையைக் கொண்டு நாம் காலேபை ஒப்பிட்டுப் பார்க்கலாம். அந்த வயதானவர் ஒரு

காலேப் - எக்காலத்திற்கும் உகந்தவர்

காட்டின் வழியாகப் போய்க் கொண்டிருந்தார். கடுமையான புயல் வீசிக் கொண்டிருந்தது. அநேகம் மரங்கள் வேரோடே சாய்ந்து கிடப்பதை அவர் கண்டார். சற்று தொலைவில் ஒரு மரம் தனியாக நின்று கொண்டிருந்தது. அந்த கொடிய புயலிலும் அசையாமல் நின்று கொண்டிருந்த அந்த மரத்தைக் கண்டு அவர் ஆச்சரியப்பட்டார். "இது எப்படி? ஒன்றோடொன்று சேர்ந்திருந்த மரங்கள் எல்லாம் விழுந்து விட்டதே. தனித்து இருந்த இந்த மரம் மாத்திரம் நிற்கிறதே!" என அவர் அதிசயித்தார். அதைக் குறித்து சிந்தித்தபோது, அருகருகே வளர்ந்திருந்த மரங்கள் தங்கள் வேர்களை அதிக பரவலாக பூமிக்குள் செலுத்த முடியாமலிருந்ததென கண்டுகொண்டார். அவை ஒன்றையொன்று சார்ந்திருந்தன. ஆனால் தனித்து நின்றிருந்த அந்த மரமோ தனது வேர்களை பரவலாகவும், ஆழமாகவும், கற்களுக்குள்ளாகவும், பாறைகளுக்குள்ளாகவும் செலுத்தியிருந்தது. ஆகவே புயல் வீசிய போது அதனால் அசையாமல் உறுதியாக நிற்க முடிந்தது. அதைப் போன்றவர்தான் காலேபும். அவர் எப்போதும் மனிதனை சார்ந்து இருக்காமல் தேவனையே சார்ந்தவராக தனித்து நின்றார். ஆகவேதான் ஜனக்கூட்டம் எதிர்த்த சந்தர்ப்பத்திலும் அவரால் உறுதியாக நிற்க முடிந்தது.

இன்று காலையிலே நான் இன்னொரு மரத்தைக் கண்டேன். அது ஆற்றுக்கு மிகவும் அருகாமையிலிருந்தது. ஒரு பெரும் புயல் வீசினால் அந்த மரம் சாய்ந்துவிடும் என்பது உறுதி. ஆனால் ஆற்றிலிருந்து சற்று தொலைவில் இருக்கும் மரங்கள் அவ்விதமாக சாய்ந்துவிடாமல் நிலையாக நிற்கும். செல்வமும், வசதிகளும், அனுசரணைகளும், உதவிகளும் தண்ணீரைப் போல தாராளமாக நமக்குக் கிடைக்கும்போது, அவற்றை சார்ந்து நம்மை வேர்கொள்ள வைக்கிறது. ஆனால், எதுவும் தாராளமாகக் கிடைக்கும்போது, அத்தோடு சேர்ந்து சோதனைகளும் வரும். நாம் பெலமுள்ளவர்கள் என நினைத்துக் கொண்டிருப்போம். ஆனால் நாம் உண்மையில் எப்போதும் பலவீனராய்த்தான் இருப்போம். காலேப் நிலையாக நின்றவர். ஏனென்றால் அவர் கர்த்தரில் வேர்கொண்டிருந்தார். அவருடைய வெற்றிகூட அவரை நிலைதடுமாறச் செய்ததில்லை. அவர், ஆழமான மண் இல்லாததால், வெகு சீக்கிரமாக முளைத்துவிடுகிற செடியைப் போன்றவர் அல்ல. அவர் தேவனை உறுதியாகப் பற்றிக் கொண்டிருந்தவர். இதோ, சகோதரிகள் தங்களுடைய ஆபரணங்களை எவ்வளவாக நேசித்து அதை அணிந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் பார்க்கிறேன். ஒவ்வொரு கிறிஸ்தவனும் அவ்விதமான ஆவலோடு கிருபையைத் தரித்துக் கொள்ள வேண்டுமென நான் விரும்புகிறேன். விசுவாசமாகிய ஆபரணத்தைக் காத்துக்

கொள்வதற்கு இடைவிடாமல் தேவனைப் பற்றியிருத்தல் என்கிற ஆபரணத்தையும் சேர்த்து எப்போதும் அணிந்து கொள்ளுமாறு வலியுறுத்துகிறேன். காலேப் தனது இருதயத்தில் அந்த முத்திரையைக் கொண்டிருந்தார். தேவனில் அன்பு என்னும் ஆபரணத்தை தன் கரங்களில் அணிந்திருந்தார். அவருடைய அன்பானது மரணத்தைக் காட்டிலும் உறுதியானது. கல்லறை வரைக்கும் அந்த அன்பு நீடித்திருந்தது. அவர் கர்த்தரைக் கண்டார், அவரை நேசித்தார், அவர் மீது நம்பிக்கை கொண்டார். இந்த காரணங்களுக்காக அவர் முழு இருதயத்தோடும் கர்த்தரைப் பின்பற்றினார். அவருக்கிருந்த விடாப்பிடியான பரிசுத்த தன்மை உங்களுக்கும் இருக்கிறதா என்று சோதித்துப் பாருங்கள். "என்னை விடாதேயும், அப்போது நான் பத்திரமாய் இருப்பேன்" என்று ஜெபியுங்கள். காலேப் தன்னை யாருக்கு ஒப்புவித்திருந்தாரோ அவரிடமே உங்களையும் ஒப்புவியுங்கள். கர்த்தரின் கரங்களில் உங்களை ஒப்புவியுங்கள்.

காலேபு எவ்விதங்களில் முழுமையாகத் தேவனைப் பின்பற்றினார் என்பதைப் பற்றி மேற்கூறியதான நான்கு காரியங்களையும் நான் உங்களுக்கு மீண்டுமாக நினைவுபடுத்துகிறேன்.

*1. சற்றும் குறையாமல், முழுவதுமாக*

*2. மாய்மாலமாக அல்ல, உண்மையாக*

*3. வாக்குவாதம் செய்யாமல், சந்தோஷத்தோடு*

*4. தளராமல், தொடர்ச்சியாக*

## ஆ) காலேபு அடைந்த விரும்பத்தகும் வெகுமதி

கர்த்தரை உத்தமமாய்ப் பின்பற்றியதால் காலேபுக்குக் கிடைத்த வெகுமதிகளைப் பார்ப்போம்.

தேவன் தீர்ப்பு கூறிய போது ***அவருடைய ஜீவன் பாதுகாக்கப்பட்டது***. தனது எஜமானை உண்மையாக பின்பற்றியதற்காக அவருடைய உயிர் அவருக்கு வெகுமதியாகக் கிடைத்தது. வேவு பார்க்கச் சென்ற மற்ற பத்து பிரபுக்களும் வாதையினாலே செத்தார்கள். ஆனால் காலேபு தப்புவிக்கப்பட்டார். யாக்கோபின் தேவன் மேல் தன் நம்பிக்கையை வைத்திருக்கிற மனிதன்

ஆசீர்வதிக்கப்பட்டவன். "உன்னதமானவரை அடைக்கலமாகக் கொண்டிருக்கிறவன் சர்வ வல்லவருடைய நிழலில் தங்குவான். இரவிலும் பகலிலும் அவருடைய நிழலில் தங்குவான். அவன் பக்கத்தில் ஆயிரம் பேரும், வலதுபுறத்தில் பதினாயிரம் பேரும் விழுந்தாலும் தீமை அவனை அணுகாது. பொல்லாப்பு அவனுக்கு நேரிடாது. வாதை அவன் கூடாரத்தை அணுகாது."

கர்த்தருடைய கரத்திலிருந்து விசேஷித்தவிதமான பாதுகாப்பை அடைந்தவர்களில் காலேபும் ஒருவர். கடவுளை முழுவதுமாக பின்பற்றினபடியால் கடவுளும் காலேபை முழுவதுமாகப் பாதுகாத்துக் கொண்டார். உங்களுடைய எஜமான் மகிமை அடைய வேண்டும் என்பதில் மாத்திரம் நீங்கள் கவனம் செலுத்துவீர்களானால், அவரும் உங்களை மேன்மைப்படுத்துவார். எலிசபெத் மகாராணி ஒரு வியாபாரியை ஹாலந்து நாட்டுக்கு ஒரு பணியின் நிமித்தமாகப் போகச் சொன்னார். அந்த வியாபாரி, "நான் அங்கே போனேன் என்றால் எனது வியாபாரம் நஷ்டமாகிவிடும்" என்று பதிலளித்தார். அதற்கு ராணி, "நீ என் வேலையை செய். நான் உன்னுடைய வியாபாரத்தைப் பார்த்துக் கொள்கிறேன்" எனக் கூறினாராம். அதே போலத்தான் கடவுளுடைய காரியங்களிலும். "ஊழியனே, நீ என் வேலையை செய். உன் வேலையை நான் பார்த்துக் கொள்கிறேன்" என்பார். தன் எஜமானுக்காக காலேபு தனது உயிரையும் கொடுக்கத் தயாராக இருந்தார். அதனால் தேவன் காலேபின் உயிருக்கு ஆபத்து வராமல் பாதுகாத்துக் கொண்டார். தமது ஜீவனைக் காத்துக் கொள்ள விரும்புகிற அநேகர் அதை இழந்து போவார்கள். கிறிஸ்துவுக்காக ஜீவனையும் கொடுக்கிறவர்கள் அதை நித்தியமாக பெற்றுக் கொள்வார்கள்.

அத்தோடு, காலேபுக்கு ***தேகபலமுள்ள நீடித்த வாழ்வும்*** வெகுமதியாகக் கொடுக்கப்பட்டது. எண்பத்தைந்து வயதிலும் அவருக்கு நாற்பது வயதிலிருந்த பலம் இருந்தது. அப்போதும் இராட்சதர்களை எதிர்க்கக் கூடிய பலம் இருந்தது. முதிர் வயதில்கூட, விசுவாசத்திலும் தைரியத்திலும் பலமுள்ள ஒரு கிறிஸ்தவனைக் கண்டீர்களானால், அவன் இளமையிலிருந்து கர்த்தரை முழுமையாகப் பின்பற்றி நடந்தவன் என்பதை அறிந்து கொள்ளலாம். இளம் வயதிலேயே கர்த்தருக்காக தன்னை அர்ப்பணித்திருந்த ஒருவர் நம் சபையில் இருப்பதை நான் அறிவேன். அவர் தமது வாலிப நாட்களில் வைராக்கியத்தோடு சபை ஊழியங்களில் ஈடுபட்டிருந்தவர்.

கர்த்தரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் நன்மை அடைவதை பார்க்கிற சிலாக்கியம் அவருக்கு கிடைத்திருக்கிறது. கடவுளின் இரக்கங்களைக் கண்டு அவருடைய இருதயம் பூரித்திருக்கிறது. அவரும் சிமியோனுடன் கூட சேர்ந்து, "ஆண்டவரே, உமது வார்த்தையின்படி உமது அடியேனை இப்பொழுது சமாதானத்துடனே போகவிடுகிறீர். உம்முடைய இரட்சண்யத்தை என் கண்கள் கண்டது" என்று கூற ஆயத்தமாயிருக்கிறார். கடவுளை உத்தமமாய் பின்பற்றுகிற வாலிபர்களிலிருந்துதான் நாம் வயதான பரிசுத்தவான்களை பெறுகிறோம். சிறந்த அனுபவசாலிகளையும், நீதியின் வழியில் வந்த மகிமையின் நரை மயிரினால் அலங்கரிக்கப்பட்ட வெற்றி வீரர்களையும் நம் மத்தியில் காண வேண்டுமானால், யாரெல்லாம் இளம் வயதில் தங்களை முழுவதுமாக கர்த்தருக்கு அர்ப்பணித்து வாழ்ந்திருந்தவர்களோ அவர்களில் பார்க்க வேண்டும். அவர்கள் தங்கள் வாலிபப் பிராயத்திலேயே தங்கள் எஜமானனின் வேலைக்காக தங்களை முற்றிலுமாக கீழ்ப்படிதலுக்கு ஒப்புவித்து, தேவனுக்காக தங்களை பரிசுத்தப்படுத்தி வாழ்ந்திருப்பார்கள். கர்த்தருடைய வழிகளில் யாரெல்லாம் உற்சாகத்தோடும் ஆர்வத்தோடும் நடக்கிறார்களோ அவர்களுக்கு நமது கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து அனுபவம், ஞானம், தயவு ஆகியவைகளை வெகுமதியாக அளிக்கிறார்.

***இஸ்ரவேலருக்குள்ளே மிகுந்த மரியாதை*** அடைகிறதான இன்னொரு வெகுமதியையும் காலேப் பெற்றுக் கொண்டார். யோசுவாவைத் தவிர்த்து மற்ற இஸ்ரவேலர் அனைவரையும் விட குறைந்தபட்சம் இருபது வயது மூத்தவராக காலேப் இருந்தார். காலேப் தெருவில் நடக்கும்போது, இளம் தாய்மார்கள் தங்கள் பிள்ளைகளை அணைத்துக் கொண்டு அவரை எவ்வளவு மரியாதையுடன் பார்த்திருப்பார்கள்! "திரளாக எகிப்திலிருந்து கிளம்பின இஸ்ரவேலரில் எல்லோரும் மடிந்து போனார்கள். இந்த மனிதனைத் தவிர எல்லோருடைய பிணங்களும் வனாந்திரத்தில் புதைக்கப்பட்டதே. இவரும், நூணின் குமாரனாகிய யோசுவாவும் தவிர அனைவரும் மடிந்து போயினர்" என்று சொல்லியிருப்பார்கள். ஒரு ராஜாவைப் போலவும் மதிப்பு மிக்க தலைவனைப் போலவும் இஸ்ரவேலர் மத்தியிலே காலேபு வாசம் செய்தார். ஆல்ப்ஸ் மலையின் சில சிகரங்கள் மற்றவைகளைக் காட்டிலும் உயரமாக வானத்தைத் தொடும் அளவில் இருக்கும். அதன் உச்சியில் காணப்படுகின்ற வெண்மையான பனியானது வானலோகத்து பிரஜைகளோடு உறவாடிக் கொண்டிருப்பது போலிருக்கும்.

**காலேப் - எக்காலத்திற்கும் உகந்தவர்**

அதைப் போலவே இந்த நரைமயிருள்ள மனிதன் இஸ்ரவேலர் மத்தியிலே மதிப்பு மிக்கவராக நடமாடிக் கொண்டிருந்தார். யோசுவாவின் காலத்திற்குப் பிறகு இஸ்ரவேலிலே முதன் மந்திரி போல இவர் கருதப்பட்டிருப்பார்.

ஆம், சகோதரரே, நாம் நமது இருதயத்தை கர்த்தருக்கு முழுவதுமாகக் கொடுத்தோமானால் அவர் நம்மையும் காலேபைப் போல மாற்றுவார். நாம் கர்த்தரை மகிமைப்படுத்தினால் அவரும் நம்மை மகிமைப்படுத்துவார். "என்னை கனம் பண்ணுகிறவனை நானும் கனம் பண்ணுவேன். என்னை அலட்சியப்படுத்துகிறவன் அற்பமாய் எண்ணப்படுவான்." கிறிஸ்தவர்களாக இருந்தும், கடவுளுடைய பணிகளில் முழுமையாக ஈடுபடாமல் அரைகுறையாக இருப்பவர்களுக்கு சபையில் மதிப்பு கிடைக்காது. அப்படிப்பட்டவர்கள் சபையில் கடைசி இடத்தில் இருப்பார்கள். அவர்களை மற்றவர்கள் சகித்துக் கொண்டிருப்பார்கள். பாராட்டுதல் கிடைக்காது. ஆனால் அனலான ஆவியையும், உற்சாகமும் வைராக்கியமுமான ஆவியைக் கொண்டிருப்பவர்கள் யோசேப்பின் அரிக்கட்டைப் போல சகோதரருக்கு முன்பாக நிமிர்ந்து நிற்பார்கள். மற்றவர்கள் அவர்களை சுற்றி வணங்கி நிற்பார்கள்.

மேலும், ***கடினமான பணிக்கு நியமிக்கப்பட்டது*** காலேபுக்குக் கிடைத்த ஒரு விசேஷித்த வெகுமதி என்று கூறுவேன். அப்படி சொல்வது ஒருவேளை உங்களுக்கு விசித்திரமாகத் தோன்றலாம். மிகவும் உண்மையான ஊழியனை கடவுள் விசேஷமான பணிகளுக்கென்று நியமிக்கிறார். எபிரோன் மலையிலே மூன்று பெரிய படைகள் இருந்தன. அவர்களை எதிர்த்து அழிப்பதற்கு காலேபைத் தவிர ஒருவரும் துணியவில்லை. ஒவ்வொரு கையிலும் காலிலும் ஆறு விரல்களைக் கொண்டிருந்த ஏனாக்கின் குமாரராகிய இராட்சதரை எதிர்த்து விரட்டியடிக்க வேண்டியதாயிருந்தது. யார் அதை செய்வது? யாரும் அந்த பொறுப்பை ஏற்காவிட்டால், இதோ காலேப் இருக்கிறார் அதை செய்து முடிப்பதற்கு. அதை செய்யும்படி யாரும் அவரைக் கெஞ்சிக் கேட்க வேண்டியதில்லை. அவர்தாமே அந்த வேலையை செய்து முடிப்பதற்கு ஆவலாக எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார். ஏனென்றால், போரிலேயே அதுதான் மிகவும் கடினமான வேலை. அதை செய்வதால் வரும் கனத்துக்காக அவர் வாஞ்சிக்கிறார். என்ன மாதிரியான வயோதிபர் அவர்! இந்த மாதிரியான வேலையென்றால் உங்களில் அநேகர் பின்வாங்கி விடுவீர்கள் அல்லவா! கிறிஸ்துவுக்காக

உல்லாசமான எளிதான பணி ஏதாவது செய்ய வேண்டுமென்றால் நீங்கள் அனைவரும் போட்டி போட்டுக் கொண்டு முன்வருவீர்கள். ஆனால், அவருக்கான யுத்தத்தில் முன்னாலே நிற்க வேண்டுமானால், "ஓ, அந்த சகோதரன் அதை செய்யட்டும், இவர் செய்யட்டும்" என்று பின்வாங்குவீர்கள். ஆபத்துகளை எதிர் கொள்வதால் வருகின்ற கனத்தை மனிதர் எப்படி தள்ளி விடுகிறார்கள் என்று கவனித்திருக்கிறீர்களா? "என்னைக் காட்டிலும் அந்த சகோதரர் இதற்கு அதிகமான தகுதியை உடையவர். ஆகவே அதை அவர் செய்யட்டும்" என்று தட்டிக் கழிப்பார்கள்.

நாம் உண்மையான வீரர்களாயிருந்தால், கடினமான, நம்பிக்கையற்ற, ஆபத்தான பணிகளை செய்வதற்கு நாம் போட்டி போட்டுக் கொண்டு முன்வர வேண்டும். யார் அதிகப் புகழை அடைவார்கள்? செய்ய முடியாதவைகளையும் செய்கிறதற்குத் துணிகிறவன்தானே! இம்மாதிரியான காரியங்களில் முன்னிலையில் இருக்க வேண்டுமென பிரயாசைப்படுபவர்கள் வெகு கொஞ்சமே. ஏணியில் முதலாவதாக ஏறி, அங்கிருந்து தள்ளப்பட்டு, தரையில் விழுந்து, தலை வெடித்து மூளை சிதறிப் போவதாயிருந்தாலும் பரவாயில்லை என்கிற எண்ணம் அவர்களுக்குக் கிடையாது. அவர்கள், வெடிகுண்டு வெடித்தாலும் முன்னேறும் உற்சாகம் உடையவர்கள் அல்ல. உலகத்தின் சேவகர்களாக நாம் தைரியத்தோடும் தியாகத்தோடும் எதிரிகளோடு போரிட்டாலும்கூட நல்லதுதான். இராட்சதப் பிறவிகளான ஏனாக்கியரை எதிர்த்துப் போரிடுவதில் தலைமை தாங்கிச் செல்லும்படியாக காலேபுக்கு அனுமதி கிடைத்தது விசேஷித்த மேன்மையாகும். கர்த்தரை முழுமையாகப் பின்பற்றுங்கள். அப்போது சாத்தானும் உங்களைக் கண்டு பயப்படுவான். உங்களுடைய ஆண்டவரை நெருக்கமாகப் பின்பற்றுங்கள். அப்போது நரகத்தின் தீயசக்திகளையும் நீங்கள் எதிர்க்கலாம்.

கடந்த வாரத்திலே நான் வொர்செஸ்டர் என்கிற இடத்திலே பிரசங்கிப்பதற்கு லண்டனை விட்டுப் புறப்பட்டேன். நான் இதுவரை பார்த்திராத அளவுக்கு அவ்வளவு கடுமையான பனி பெய்துகொண்டிருந்தது. அதனால் என்ன? ரயில் வண்டியின் சக்கரம் தண்டவாளத்தில் நன்றாகப் பொருந்தியிருந்தால் பயணம் பத்திரமாக இருக்குமல்லவா! அதிக தொலைவு பார்க்க வேண்டிய அவசியமில்லை. ஏனெனில் ரயில் பாதை சரியாகப் போடப்பட்டிருப்பதால் வண்டி அதில் நன்றாக ஓடும். ஒரு கிறிஸ்தவனுக்குத் தான் செல்கிற பாதை சரியென்ற நிச்சயமிருக்கும்போது, அவன் எந்தப் பிரச்சனையிலும்

தொடர்ந்து முன்னேறிக் கொண்டே செல்வான். ஆனால் ஒருவன் பாதையை விட்டு விலகும்போது, அங்கு குழி இருக்கிறதா, தடை இருக்கிறதா என்பது தெரியாமல் தயங்கி நிற்க நேரிடும். வெகு சீக்கிரத்தில் அவன் ஆபத்தில் மாட்டிக் கொள்வான். உங்கள் இருதயங்களை சரிப்படுத்திக் கொள்ளுங்கள். அப்போது எந்த சூழ்நிலையிலும் நீங்கள் கலங்க மாட்டீர்கள். உங்கள் ஆத்துமாவை சரிப்படுத்திக் கொள்ளுங்கள். அப்போது பிசாசின் கூர்மையான அம்புகளை எதிர்த்து நிற்கிற திராணியை அடைவீர்கள். நாம் கர்த்தரோடு இருந்தோமானால் அவரும் நம்மோடு இருப்பார்.

***தான் பார்த்து வந்ததை அனுபவிக்கும் சிலாக்கியம்*** காலேபுக்கு அவருடைய முதிர்வயதிலே கிடைத்தது. "நாம் அதை எளிதாய் ஜெயித்துக் கொள்ளலாம்" என்று அவர் கூறினபோது அதைக் கண்களால் மாத்திரம்தான் பார்த்தவராக இருந்தார். மற்றவர்களோ, "இல்லை, அது முடியாது" என்று கூறினார்கள். முடியாது என்று கூறியவர்களுக்கு அதை அனுபவிக்க முடியாமலே போயிற்று. சபைகளிலும் பார்த்தீர்களானால் சில வயதானவர்கள் இருந்திருப்பார்கள். அவர்கள் தங்கள் ஓட்டத்தை முடித்து பரலோகம் சென்றிருப்பார்கள். அவர்கள் வாழ்ந்த காலத்திலே, சபை மூலமாக ஏதாவது புதிய காரியங்களை செய்ய வேண்டும் என்கிற யோசனை எழும்பும்போது, அவர்கள், "இல்லை, இல்லை, அதை செய்ய முடியாது" எனத் தடுத்துவிட முயற்சிப்பார்கள். ஒரு தாளையும், பென்சிலையும் வைத்துக் கொண்டு ஏதேதோ கணக்குப் போட்டு, "சபையில் தேவையான அளவுக்கு பணம் இல்லை. ஆகவே அதை செய்ய முடியாது" எனக் கூறிவிடுவார்கள். கர்த்தருடைய படையிலுள்ள இளம் வீரர்கள் "ஓ! அதை செய்யலாமே. நிச்சயமாக செய்யலாமே" என உற்சாகத்தோடு கூறுகிற வேளையிலே, விசுவாசித்து நடக்காத அந்த வயதானவர்கள், இளைஞர்களைப் பார்த்து, "அது விவேகமற்ற யோசனை" எனக் கடிந்து கொண்டிருந்திருக்கிறார்கள். இளைஞரின் உற்சாகத்தைத் தணிக்கக்கூடிய கடூரமான சொல் அது.

ஆனாலும் வேறு வகையான வயோதிபர்களையும் கர்த்தர் அருளிச் செய்திருப்பதால் அவருக்கு ஸ்தோத்திரம். அவர்கள், "எனக்கு நிச்சயமாகத் தெரியவில்லை. ஆனால், கர்த்தர் நமது ஜெபங்களைக் கேட்பார் என்கிற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அது கடவுளுக்குகந்த வேலையானால் அதை நாம் செய்யக் கூடும்" என்று நம்பிக்கையளிக்கும் விதத்தில் கூறுவார்கள். அந்த இளைஞரின் தோள்களில் தமது கரங்களை வைத்து,

கர்த்தர் ஆசீர்வதிப்பார், செயல்படுங்கள் என்று ஆசீர்வதிப்பார்கள். நான் விரும்புகிற காலேபு அப்படிப்பட்டவர்தான். அந்த மாதிரியான மனிதர்கள், தங்கள் நம்பிக்கைக்கான வெகுமதியைப் பெற்றுக் கொள்ளுமட்டும் வாழ்ந்திருப்பார்களாக. தாங்கள் நம்பியிருந்தது போலவே கர்த்தர் உண்மையுள்ளவர் என்பதை அவர்கள் தங்கள் கண்களால் காண்பார்கள். அவருடைய நாமத்தின் மேல் நம்பிக்கை வைத்தவர்களாக கடினமான காரியங்களை செய்யத் துணிகிறவர்களுக்கு அவர் வெகுமதி அளிக்கிறார். கர்த்தரின் ஊழியர்கள் அவருக்கென ஏதாவது விசேஷித்த பணிகள் செய்வதற்கு ஆவல் கொள்ளும்போது, அது உங்களுக்குப் பிடிக்காமல் இருந்தாலும் அதைத் தடை செய்யாதிருங்கள். உங்களால் உதவி செய்ய முடியாவிட்டாலும் பரவாயில்லை, எதிர்த்து நிற்காதீர்கள். முடிந்தால் அவர்களை உற்சாகப்படுத்தவும், தைரியப்படுத்தவும் செய்யுங்கள். நீங்கள் எப்போதும் இராட்சதர்களைப் பற்றியும், ஆபத்து, கஷ்டங்களைப் பற்றியுமே பேசிக் கொண்டிருந்தீர்களானால் உங்களால் ஒரு எபிரோனையும் ஜெயிக்க முடியாது, சபைக்கு உதவியாக இருக்கவும் முடியாது. அவைகளை மேற்கொண்டு ஜெயிக்க முடியும் என்று விசுவாசிக்கிற ஒருவனுக்கு எதுவும் கஷ்டமாயிருக்காது.

காலேபு தன் ***பிள்ளைகளுக்கும் ஆசீர்வாதத்தை*** விட்டுச் சென்றார். காலேபுக்கு அநேக மகன்கள் இருந்தார்கள். அவர்களுக்காகவும் அவர் போரிட்டு நிலங்களை சம்பாதித்துக் கொடுத்தார். அவருக்கு ஒரு மகளும் இருந்தாள். கீரியாத்செப்பேரை சங்காரம் பண்ணி பிடிக்கிறவனுக்கு என் மகளை விவாகம் பண்ணிக் கொடுப்பேன் என்று காலேபு அறிவித்தார். தன்னைப் போல போர்வீரனாக இருப்பவனே தனக்கு மறுமகனாக வரவேண்டும் என்கிற எண்ணம் உடையவர் காலேபு. அவர் இளைஞர்களிடம் தைரியத்தை காண்பதில் மகிழ்ச்சி அடைகிறவர். ஆகவேதான் தனது மகளை பரிசாகத் தருவதாக வாக்களிக்கிறார். அப்படி வென்ற ஒருவனுக்குத் தன் மகளை திருமணம் செய்து கொடுக்கிறார். அவள் கணவன் வீட்டுக்குப் போகும்போது தன் தகப்பனிடம் வந்து இரட்டிப்பான ஆசீர்வாதங்களைக் கேட்கிறாள். அவளுக்கு ஏற்கனவே காலேபு நிலங்களைத் தந்திருந்தார். நீர்ப்பாய்ச்சலான நிலத்தையும் தனக்குத் தர வேண்டுமென அவள் கேட்கிறாள். அப்போது காலேபு அவளுக்கு மேற்புறத்திலும் கீழ்ப்புறத்திலும் நீர்ப்பாய்ச்சலான நிலங்களைக் கொடுத்தார்.

**காலேப் - எக்காலத்திற்கும் உகந்தவர்**

எவனொருவன் தனது பிள்ளைகளுக்கு மேலோகத்திற்கும், இவ்வுலகத்திற்கும் உரிய ஆசீர்வாதங்களை விட்டுச் செல்லக் கூடியவனாக இருக்கிறானோ அவனே கர்த்தரை முழு இருதயத்தோடும் பின்பற்றி வாழ்ந்தவன். தனது இளமை முதற்கொண்டு முதிர்வயது வரைக்கும் கர்த்தருடைய கிருபையினாலே அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நடந்து வந்தவன், இவ்வுலகை விட்டுப் பிரியும்போது தன் பிள்ளைகளுக்கு இந்த உலகத்திற்கும் மறுமைக்கும் உரிய ஆசீர்வாதங்களை கூறிச் செல்வானாகில் அப்படிப்பட்ட மனிதனைப் பார்த்து நான் சற்று பொறாமை கொள்வேன். காலேபும் மேற்புறத்திலும் கீழ்ப்புறத்திலும் நீர்ப்பாய்ச்சலான நிலங்களை தனது சந்ததிக்கு அளிக்கக் கூடியவராக இருந்தது அவருக்கு கிடைத்த வெகுமதி. இந்த சபையிலே வாலிப வயதிலே ஆண்களும் பெண்களும் இருக்கிறோம். தேவன் கிருபையை அளிப்பாரானால், நமக்கு காலேபைப் போல ஆகக்கூடிய நல்லதொரு சந்தர்ப்பம் இருக்கிறது. யோசுவாவைப் போல தேவன் என்னையும் காலேபைப் போல உங்களையும் காத்துக் கொண்டாரானால், நமது தலை மயிர் நரைக்கும் வரையிலும், நமக்கு முன்னிருந்தவர்கள் கல்லறையில் இளைப்பாறச் சென்றது போல நாமும் இளைப்பாறச் செல்லும் வரைக்கும் நமது கர்த்தருக்காக சிறந்த பணிகளை நாம் செய்யலாம். இயேசுவின் அன்பும் பரிசுத்தஆவியானவரின் செயலும் நம் மீது இருக்கையிலே நாம் அவருக்குள்ளாக ஏற்றுக் கொள்ளப்படுவோம்.

## இ) காலேபின் இருதயத்தில் மறைந்திருந்த குணாதிசயம்

தேவன் அவரைக் குறித்து, ***"அவன் வேறே ஆவியை உடையவனாயிருக்கிறபடியால்"*** என்று சொல்லுகிறார். காலேபிடம் தைரியமும், தயாளகுணமும், துணிச்சலும், மதிப்பும், வீரத்தனமுமான ஆவியிருந்தது. அது மாத்திரமல்லாமல், மனிதருக்கும் உலகத்திற்கும் பயப்படாமல் இருக்கக்கூடிய, கடவுளின் செல்வாக்கை உடையதான வேறொரு ஆவியும் காலேபிடம் இருந்தது. ஆகவே காலேபு தேவனை முழுமையாகப் பின்பற்ற முடிந்தது. எந்த பாதையை தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதை கடவுள் காட்டினார், எப்படியாக நடந்து கொள்ள வேண்டும் என்பதை கோடிட்டுக் காட்டினார். காலேபு அதை முழுமையாக பின்பற்றி, எல்லாவற்றிலும் தமது எஜமானனின் சித்தத்தை மாத்திரமே பின்பற்றினார். ஆவி எப்படியோ அதன் பிரகாரமாகவே காரியங்கள் நடைபெறும். எண்ணெயில்லாத விளக்குகள் வெளிச்சம் கொடுப்பதில்லை.

எண்ணை நிரம்பவுள்ள விளக்குகள் நல்ல வெளிச்சம் தருகின்றன. வெளிச்சத்திற்கு முக்கிய காரணம் அதிலுள்ள எண்ணைதான். உள்ளே என்ன இருக்கிறதோ அதைப் பொறுத்து அதன் பலாபலன்களைக் கண்கூடாகப் பார்க்கலாம்.

புதிய ஜீவனை அடைய வேண்டுமானால் அதற்குரிய ஒரே வழி புதிய ஆவியைப் பெற்றுக் கொள்வதுதான். நாம் தேவனை முழுமையாகப் பின்பற்றுவோமானால் புதிய இருதயம் கொடுக்கப்படும். இயேசுக்கிறிஸ்துவின் கல்வாரி சிலுவையண்டையில் வழிந்த இரத்தத்தின் மூலமாக நமது இருதயம் புதுப்பிக்கப்படுகிறது. பரிசுத்தஆவியானவர் அந்த வேலையை நமது இருதயத்தில் செய்கிறார். நம்மை வேறுபடுத்திக் காட்டக் கூடியதான அந்த விசுவாச ஆவியை தேவன் நமக்கு அருள வேண்டுமென விரும்புகிறேன். அந்த ஆவியானது கடவுளின் வார்த்தைகளை அப்படியே ஏற்றுக் கொள்ளும், வாக்குத்தத்தங்களை வாசித்து, அவை யாவும் உண்மையானவையென்று அறிந்து கொள்ளும். இந்தவிதமான ஆவியைக் கொண்டிருப்பவன் தேவனை முழுவதுமாகப் பின்பற்றுவான்.

அவிசுவாசமானது பாவத்தைப் பிறப்பிக்கிறது. ஆனால் விசுவாசமோ நல்ல குணங்களை உருவாக்குகிறது. கர்த்தாவே அதிகமான விசுவாசத்தைத் தாரும், குழந்தை போன்ற விசுவாசத்தைத் தாரும். உண்மையான விசுவாசத்தினால் ***சாந்தமான*** ஆவி உருவாகிறது. சாந்தமான ஆவி ***தைரியமுள்ள*** ஆவியை உருவாக்குகிறது. காட்டிலிருக்கும் பழமை வாய்ந்த மரங்களே நல்ல வலிமையுள்ளதாயிருக்கும் என்று சொல்லுவார்கள். அவைகள் எளிதில் மக்கிப் போய்விடாது. ஆகவே அவைகளைக் கொண்டு நல்ல தரமான பொருட்களை செய்ய இயலும். அது போல சாந்தமுள்ள ஆவியைப் பெற்றிருக்கிற மனிதன், எதிரிகளால் வரும் பலவிதமான கஷ்ட நஷ்டங்களைப் பொறுத்துக் கொண்டு, பொறுமையோடும் பண்போடும் பல காலம் வாழ்ந்திருந்தபடியால், அவன் மிகுந்த தைரியமுள்ளவனாகவும் இருப்பான். இயேசுவின் கிருபையினால், உண்மையான விசுவாசி ***அன்பின்*** ஆவியையும் உடையவனாயிருப்பான். அவன் தேவன்பேரில் அன்பு செலுத்துகிறவனாயிருப்பான். அதனால் அவன் தேவனுடைய ஜனங்களையும், அவருடைய சிருஷ்டிப்புகளையும் நேசிப்பவனாய் இருப்பான். இவ்விதமான அன்பின் ஆவியைக் கொண்டிருக்கிறபடியால் அவனுக்குள் ***உற்சாகமுள்ள*** ஆவியும் காணப்படும். ஆகவே அவன் கடவுளுக்காக உழைப்பான், அவர் பணிக்கென தன்னையே ஊற்றிப்

போடுவான். அதன் காரணமாக அவனுக்குள் ***பரலோகத்தின்*** ஆவி உருவாகும். அவன் இங்கிருக்கும் போதே பரலோகவாசியாக வாழத் தொடங்குவான். தன்னை சுற்றிலும் இருப்பவர்களுக்கு பரலோகத்தைக் காண்பிப்பவனாக வாழுவான். தானும் அவர்களும் வெகு சீக்கிரத்திலேயே உண்மையான பரலோகத்தில் வசிக்கப் போகிறோம் என்பதை நம்பியவனாக வாழுவான்.

இந்த விதமான ஆவியை காலேபு கொண்டிருந்தார். அந்த ஆவியைப் பெற்றுக் கொள்ளாமல் நாம் அவரைப் போல வாழ இயலாது. தேவன் நம்மை உயிர்ப்பிக்காவிட்டால் நாம் செத்த பிணங்கள்தான். நாம் இருக்கிற வண்ணமாகவே இயேசுக்கிறிஸ்துவிடம் சென்று அவர் அளித்திருக்கும் அந்தப் பெரிதான வாக்குத்தத்தம் நம்மில் நிறைவேறும்படியாக கெஞ்சிக் கேட்கும்படி பரிசுத்த ஆவியானவர்தாமே நம்மை அவரிடம் வழிநடத்துவாராக! "நான் அவர்களுக்கு ஏக இருதயத்தைத் தந்து, அவர்கள் உள்ளத்தில் புதிய ஆவியை அருளுவேன்" என்று வாக்களித்திருக்கிறார்.

நீங்களும் நானும் கர்த்தரை முழுமையாகப் பின்பற்றவில்லையானால் என்ன செய்வது? முதலாவது நாம் தாழ்மையோடு மனந்திரும்புவோம். காலேப் என்கிற பெயருக்கு நாய் என்கிற அர்த்தமும் உண்டென பார்த்தோம். நாம் நாயிடமிருந்தும் ஒரு பாடத்தைக் கற்றுக் கொள்ளலாம். நாய் ஒழுங்கற்று நடக்கும் போது என்ன செய்வீர்கள். ஒரு குச்சியை எடுத்து அதை அடிக்கப் போவீர்கள். அது என்ன செய்யும். அது உடனே தரையில் படுத்து, பரிதாபமாக உங்களைப் பார்த்து ஊளையிட்டுக் கொண்டே உங்கள் கால்களை நோக்கி ஊர்ந்து வரும். நீங்கள் உடனே அந்தக் குச்சியைத் தூர எறிந்து விடுவீர்கள். அதையே நாமும் செய்வோம். நாம் எல்லோரும் இவ்விஷயத்தில் அந்த நாயைப் போல செயல்படுவோம். கடவுளின் நியாயத்தை நோக்கி ஊர்ந்து செல்வோம். கடவுளின் இரக்கத்தை நோக்கிப் பார்ப்போம். இயேசுக்கிறிஸ்துவின் மூலமாக அவர் நம்மை மன்னிப்பார். இதை நாம் செய்ததும், அவர் நம்மைக் கிறிஸ்துவில் விசுவாசம் கொள்ளும்படியாக மாற்றுவாராக!

ஒரு குழந்தையானது தனது தாயாரைப் பற்றிக் கொண்டு, அவளால் போஷிக்கப்படுவது போல, நாமும் கர்த்தராகிய இயேசுவைப் பற்றிக் கொண்டு அவருடைய காயங்களால் கழுவப்படுவோமாக. அவருடைய

மாம்சத்தில் புசித்து அவருடைய இரத்தத்தில் பானம் பண்ணுகிறவர்களாயிருந்து, அவரிடமிருந்து ஜீவனைப் பெற்றுக் கொள்வோமாக. அவரையே சார்ந்திருந்து அவர் தருகின்ற போஷிப்பினால் வளருவோமாக. நாம் இயேசுவையே சார்ந்து அவரருகில் வளர்ந்தோமானால் நாமும் காலேபுகளாக இருப்போம். இயேசுவோடு இணைந்திருப்பவன் தேவனைப் பின்பற்றுவான். ஏனென்றால் இயேசுக்கிறிஸ்து தமது பிதாவை பின்பற்றியதில் பூரணராயிருந்தார். இயேசுவின் அங்கமாக இருக்கிற நாமும் அவ்விதமாக தேவனைப் பூரணமாக பின்பற்ற இயலும். பரிசுத்தஆவியானவர் நம்மை, நாம் இருக்கும்வண்ணமாகவே இயேசுவில் இணைக்கும் பணியை ஆரம்பிக்க வேண்டும். அவரில் விசுவாசம் வைப்பதற்கு தேவன் நமக்கு உதவி செய்ய வேண்டும். அப்போது அவர் நம்மை காலேபுகளாக மாற்றி, கடைசி வரைக்கும் காப்பார். ஆமேன்.

*(நவம்பர் 1, 1863-ஆம் ஆண்டு, மெட்ரோபாலிடன் டாபர்நாகிள், நியுயிங்டன் என்கிற இடத்திலே, ஞாயிற்றுக்கிழமை காலையிலே, சார்ல்ஸ் ஸ்பர்ஜன் அளித்த தியானத்தின்(538) சாராம்சம்)*

# 3. நமது கர்த்தரின் பயபக்தியான கேள்வி

*ஏலி! ஏலி! லாமா சபக்தானி? அதற்கு, என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்? என்று அர்த்தமாம் - மத் 27:46*

நம்மில் யாராவது, இயேசுக்கிறிஸ்துவை மிகவும் நேசிக்கிறவர்களாக இருந்து, அன்றைக்கு அவர் இந்த வார்த்தைகளைக் கூறினபோது, சிலுவையின் அருகே நின்று இவைகளைக் கேட்டிருந்தோமானால், நமது இருதயமே துயரத்தினால் வெடித்திருக்கும். மரணநேரத்தில் அவர் சொன்ன இந்த வார்த்தைகள், சாகுமட்டும் நமது காதுகளில் ஒலித்துக் கொண்டே இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. பல வேளைகளில் இந்த வார்த்தைகள், இருளையும் கிழித்துக் கொண்டு, நமது காதுகளில் தெளிவாக ஒலித்துக் கொண்டேயிருந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. அந்த வார்த்தைகள் கூறப்பட்ட விதமும், அதன் முக்கியத்துவமும் திரும்பத் திரும்ப நமது மனதில் வந்து மோதிக் கொண்டேயிருந்திருக்கும் என்பதை மறந்துவிட இயலாது.

ஆனால், அவ்வார்த்தைகளை நாம் அன்று கேட்டிருந்தோமானால், ஒன்று மாத்திரம் நம்மால் நிச்சயமாக செய்ய முடிந்திருக்காது. ஆகவே, நானும் அதை இப்போது செய்யப் போவதில்லை. அதாவது, அந்த வார்த்தைகளின்பேரில் வியாக்கியானம் செய்ய முடிந்திருக்காது. அந்த வார்த்தைகளை பிரசங்கத்திற்கான வசனமாக எடுத்து வியாக்கியானம் செய்வது மிகவும் வேதனையைத் தருகிற காரியமாக இருந்திருக்கும். "அதை,

ஒரு முறை கேட்டதே போதுமானது" என்று சொல்லியிருப்போம். அவ்வார்த்தைகளை யாரால் முழுவதுமாக விளங்கிக் கொள்ள முடியும்? அதை விவரித்துச் சொல்ல வேண்டுமானால், ஓரளவிற்காவது அதன் உண்மையான அர்த்தம் தெரிந்திருந்தால்தான் பிரசங்கிக்க முடியும். அப்படியிருக்க, அதை விவரிக்க முற்படுவது வீணான முயற்சியாகத்தான் அமையும் என்பது நிச்சயம். அவைகளை விவரிக்கவியலாத தெய்வீக வார்த்தைகளாகவும், பயபக்திக்குரியதாகவும் எண்ணி, அமைதியோடும் மரியாதையோடும் அவற்றை மதித்து, மௌனமாக அதைப் போற்றுவோம். நான் அந்த வார்த்தைகளைப் படிக்கும்போதெல்லாம் அவை என்னிடம், "எங்களைக் குறித்து உன்னால் பிரசங்கிக்க முடியாது" என்று கூறுவது போலவே இருக்கும். மோசே முட்செடியின் அருகில் பாதரட்சைகளைக் கழற்றிப் போட்டு, அது பரிசுத்தபூமி என்று உணர்ந்ததைப் போலவே எனக்கும் இந்த வார்த்தைகளைப் படிக்கும்போது எப்போதும் இருக்கும்.

அருமையானவர்களே, இந்த வார்த்தைகளின்பேரில் பிரசங்கிக்கத் துணியாமல் இருப்பதற்கு இன்னொரு காரணமும் இருக்கிறது. நமது இரட்சகர் பட்ட பாடுகளின் அதிகபட்ச ஆழத்தை இவ்வார்த்தைகள் வெளிப்படுத்துவதால், அதை விவரித்துக் கூற நமக்குத் திராணியில்லை. நமது இரட்சகரின் துயரக்கடலில் ஓரளவிற்குத்தான் நம்மால் அவரோடு சென்று பார்க்க முடியும். ஆனால் கடவுளின் பேரலைகள் அவர் மீது பிரவாகமாகப் பொங்கி வந்து, அவரை அழுத்துகின்ற இடங்களில் நம்மால் செல்ல முடியாது. அவர் அடைந்த ஆத்தும வருத்தத்தின் ஆழத்தை நம்மால் கற்பனையிலும் காணமுடியாது. நாம் ஒருவேளை அவருடைய பாத்திரத்தில் பானம் பண்ணலாம், அவருடைய ஸ்நானத்தையும் பெறலாம். ஆனால் அவரைப் போல முழுவதையும் நம்மால் அனுபவிக்க முடியாது. ஆகவே, எவ்விஷயங்களில் அவருடைய பாடுகளின் முழு அளவையும் நம்மால் கணக்கிட முடியாதோ அவைகளை ஆராய்வதில் துணிகரமாக ஈடுபடக்கூடாது. அவர் எவ்வளவுக்கு நமக்கு வெளிப்படுத்தித் தந்திருக்கிறாரோ அதை விட்டு மீறக்கூடாது. மீறினால், யூகித்து கதை கட்டுகிற பாவத்துக்கு ஆளாவோம். "அறிவில்லாத வார்த்தைகளினால் ஆலோசனையை அந்தகாரப்படுத்துகிறவர்களாக" காணப்படுவோம்.

அது மாத்திரமல்ல, இன்னொரு விஷயமும் என் மனதுக்கு உறுதியாகத் தோன்றியது. இயேசு கூறிய இந்த வாக்கியத்திலுள்ள ஒவ்வொரு

வார்த்தையும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. என்றாலும் நாம் அதில் சில வார்த்தைகளுக்கு அதிக அழுத்தம் கொடுத்து, சிலவற்றை கவனிக்காமல் போகிற ஆபத்தும் இதில் உள்ளது. இயேசு, தேவனைக் கூப்பிட்டதில் உள்ள ஒவ்வொரு வார்த்தையும் முக்கியத்துவம் வாய்ந்தது என சரியாகத்தான் சொல்லியிருக்கிறார்கள். உதாரணமாக, தேவனைக் குறிப்பிடுகிற நீர் என்கிற வார்த்தையை எடுத்துக் கொள்வோம். "என் தேவனே, என் தேவனே, ஏன் என்னை (***நீர்*** - *thou*) கைவிட்டீர்? என்னுடைய சீஷர்கள் என்னை விட்டுவிட்டுப் போனதைக் குறித்து நான் ஆச்சரியப்படவில்லை. ஆனால் பிதாவாகிய என்னுடைய தேவனே, ***நீர்*** ஏன் என்னை விட்டுப் போய்விட்டீர்?" என்கிற விதமாக "நீர்" என்பதற்கு அழுத்தம் கொடுத்துப் படித்தால் அதில் அற்புதமான அர்த்தம் தொனிக்கிறது. அல்லது "கைவிட்டீர்" என்பதற்கு அழுத்தம் கொடுத்துப் பாருங்கள். "என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் ***கைவிட்டீர்*** ? நீர் ஏன் என்னை நொறுக்கினீர் என்பது எனக்குத் தெரியும். நீர் ஏன் என்னை சிட்சித்தீர் என்பதும் எனக்குத் தெரியும். ஆனால் ஏன் என்னைக் ***கைவிட்டீர்***? உமது கண்களிலிருந்து அன்பின் ஒளியை வீச மாட்டீரா? உமது பிரசன்னத்தை தரமாட்டீரா?". இது இயேசுக்கிறிஸ்து பருகின கசப்பான பானம். அப்பேர்பட்ட பயங்கரமான வேளையில் தேவன் அவரைக் கைவிட்டார். மேலும் "என்னை" என்கிற வார்த்தைக்கு அழுத்தம் கொடுத்து அதைப் படித்துப் பார்த்தால் அதில் இன்னொரு விளக்கம் தோன்றும். "என் தேவனே, என் தேவனே ஏன் ***என்னைக்*** கைவிட்டீர்? நான் உமது நேசகுமாரன். நித்தியமான நேசகுமாரன். பாவமில்லாதவன், தீமையில்லாதவன், பாடுகள் அனுபவித்த உமது குமாரன் - ***என்னை*** ஏன் கைவிட்டீர்?" இது ஆச்சரியத்திலும் ஆச்சரியமல்லவா? அவர் தமது பரிசுத்தவான்களைக் கைவிடுவதில்லை. பாவிகளைகூட முற்றிலுமாகக் கைவிட்டுவிடுவதில்லை, ஆனால் தமது ஒரே பேறான நேசகுமாரனைக் கைவிட்டாரே? அதையும் தவிர்த்து நாம் இப்போது அந்த வாக்கியத்தின் வினா பகுதிக்கு முக்கியத்துவம் அளித்துப் பார்க்கலாம். "என் தேவனே, என் தேவனே, ***ஏன்*** என்னைக் கைவிட்டீர்? அதற்கு காரணம் என்ன? உமது நோக்கம் என்ன? அன்பின் தேவனே, நீர் இப்படி நடந்து கொள்ளத் தூண்டுதலாக இருப்பது என்ன? சூரியன்தான் அந்தகாரப்பட்டிருக்கிறது. ஆனால் உமது அன்பின் வெளிச்சமும் ஏன் இருளடைந்தது? பாவியான மனுஷர்களின் ஜீவனை நீர் எடுத்துக் கொள்கிறீர். ஆனால் பாவமற்ற என்னிடமிருந்து உமது அன்பாகிய ஜீவனை ஏன் எடுத்துக் கொள்கிறீர்? ஏன், எதனால் நீர் இப்படி நடந்து கொள்கிறீர்?" என அங்கலாய்க்கிறார்.

நான் இப்போது எடுத்துக் காண்பித்ததைக் காட்டிலும் பல மடங்கு அதிகமாக ஒவ்வொரு வார்த்தைக்கும் முக்கியத்துவம் அளிக்க வேண்டியதாய் இருக்கிறது. அப்படியிருக்கையில் இந்த வாக்கியத்தை எடுத்து அதிலுள்ள ஒரு வார்த்தையைப் பிரசங்கித்துவிட்டு மற்றதை விட்டுவிட்டால் அது சரியல்ல. ஆகவே நாம் இப்போது இந்த வாக்கியத்தின்பேரில் பிரசங்கிக்க வேண்டாம். அதற்கு பதிலாக நாம் அமர்ந்திருந்து, அவைகளை நமது வாழ்க்கையோடு தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள முயற்சிப்போம்.

இந்த வாக்கியம் நமது ஆண்டவராகிய கிறிஸ்துவின் உணர்வை மட்டுமல்ல, தாவீதின் உள்ளத்தையும் வெளிப்படுத்துவதாயிருக்கிறது. 22ஆம் சங்கீதம் உங்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்கும். அந்த சங்கீதம் இந்த வார்த்தைகளோடுதான் ஆரம்பிக்கிறது. கிறிஸ்து சொன்னதையே தாவீதும் சொல்லியிருக்கிறார். அதனால், கடவுளின் பிள்ளைகளில் அநேகருங்கூட, முதற்பலனாகிய கிறிஸ்து சிலுவையில் கூறிய இந்த வார்த்தைகளையே தங்களுடைய வாழ்க்கையில் சொல்ல வேண்டியதிருக்கும் என நினைக்கிறேன். உபத்திரவத்தின் சூழ்நிலைகளுக்குள்ளாக கடந்து போகும் கடவுளின் பிள்ளைகளாகிய நீங்கள், கிறிஸ்துவை மாதிரியாகக் கொண்டிருப்பதால், அவர் செய்ததையே நீங்களும் செய்யுங்கள். அதைத்தான் நான் இன்று உங்களுக்கு விவரிக்கப் போகிறேன். அவர் பேசிய வார்த்தைகளின் அர்த்தத்தை விவரிக்காமல், அவருடைய செய்கையை விளக்கப் போகிறேன். நீங்கள் உபத்திரவத்தின் சூழ்நிலைக்குள்ளாக வந்தீர்களானால், அவரைப் போலவே நடந்து கொள்ளுவதற்காக, தேவனை நோக்கி உங்கள் இருதயங்களை உயர்த்துங்கள்

ஆகவே, இப்போது நாம் நமது இரட்சகரைக் குறித்து கற்றுக் கொள்வதற்கு பதிலாக, நமது நடக்கைக்கு அவரை முன்மாதிரியாகப் பார்ப்போம். எவைகளில் அவரைப் போலவே நடந்து கொள்வதென ஆராயலாம்.

### அ) கைவிடப்பட்ட நிலையிலுங்கூட தேவனையே நோக்கியிருந்தார்.

***இயேசுக்கிறிஸ்து தேவனையே நோக்கியிருந்தார்.*** தேவன் அவரை அவருடைய விரோதிகளின் கையிலே விட்டிருந்த நிலையிலே இயேசுக்கிறிஸ்து இந்த வார்த்தைகளைக் கூறினார். அவரைச் சூழ்ந்திருந்த

## நமது கர்த்தரின் பயபக்தியான கேள்வி

ரோமர்கள் யூதர்கள் மத்தியிலே புகுந்து, அவர்களுடைய அதிகாரத்தை அழிப்பதற்கு எந்த தேவதூதனும் அன்று அங்கு வரவில்லை. முற்றிலுமாக கைவிடப்பட்ட நிலையிலே இருப்பது போல அவர் காணப்பட்டார். மக்கள் அவரை பரியாசம் பண்ணும்படியாக விடப்பட்டிருந்தார். அவர்கள் தங்கள் இஷ்டம்போல அவரைப் பரியாசம் பண்ணிக் கொண்டிருந்தார்கள். மனிதநிலையிலிருந்த அவரிடமிருந்து தேவனின் அன்பு விலக்கப்பட்டுவிட்டது போலத் தோன்றியது. அவருடைய வாழ்நாள் முழுவதும் இதுவரைக்கும் அவரைத் தாங்கி வந்த கடவுளின் பிரசன்னம், கெத்சமனே தோட்டத்திலிருந்து மெதுவாக விலக ஆரம்பித்து, இப்போது சிலுவையில் மரண தறுவாயில் இருக்கும் வேளையில் முழுவதுமாக விலகிச் சென்றுவிட்டது போலத் தோன்றியது. அதையும் தவிர, பாவசுமையின் காரணமாக, தேவனின் கோபாக்கினையாகிய அலைகளும் அவர் மீது வந்து தாக்கி, அவரை மனமடிவடையச் செய்து, தேவனால் கைவிடப்பட்ட ஆத்துமாவைப் போன்ற நிலையை உருவாக்கியது.

சிலவேளைகளில் விசுவாசிகளும் இந்தவிதமான மனநிலைக்கு ஆளாகக் கூடும். இந்த அளவுக்கு இல்லையென்றாலும் ஓரளவிற்கு இவ்விதமான மனநிலைக்கு அவர்கள் ஆளாவார்கள். ஒரு நாள் அவர்கள் மிகவும் சந்தோஷமாக, கடவுளின் அன்பு தங்கள் இருதயத்தை நிறைத்திருப்பதாக உணர்வார்கள். இன்னொரு நாள், அவருடைய அன்பு விலகிவிட்டதாக எண்ணி, மனம் கலங்கி சஞ்சலப்படுவார்கள். அந்த மாதிரியான சந்தர்ப்பங்களில் தங்களுடைய இருதயத்தையே நோக்கிப் பார்க்கிற சோதனை அவர்களுக்கு ஏற்படும். அப்படி செய்யும்போது, தங்களுடைய பரிதாபகரமான நிலையை எண்ணி மேலும் மேலும் வருத்தப்படுவார்கள். முடிவில் நம்பிக்கை இழந்து போகிறதான நிலைமைக்கு உட்படுவார்கள். பரலோகத்திலிருந்து வெளிச்சம் வராவிட்டால், நாம் நமக்குள்ளாகவே ஆறுதல் பெற முடியாது. நமக்கு அளிக்கப்பட்டுள்ள அடையாளங்களும் வாக்குத்தத்தங்களும் சூரியகடிகாரம் போன்றவை. மேலேயிருந்து சூரியன் பிரகாசிக்கும்போதுதான், அதை வைத்து மணி என்ன என்பதை கூறிவிடலாம். ஆனால் சூரியன் பிரகாசிக்காதபட்சத்தில் சூரிய கடிகாரத்தின் உபயோகம் என்ன? அதேபோல், கடவுளின் அன்பு நம் ஆத்துமத்தின் மீது பிரகாசித்துக் கொண்டிருக்கையில், அவ்வித அடையாளங்களால் நமக்கு உபயோகம் இருக்கிறது. ஆனால் அவருடைய அன்பு வெளிப்படாதபோது, நமக்குள் இருக்கிற அடையாளங்களின் உபயோகம் வெகு சொற்பமே.

இப்போது நமது கர்த்தரை கவனித்துப் பாருங்கள். அவர் தேவனால் கைவிடப்பட்ட நிலையிலிருக்கிறார். அப்போது அவர் தனது ஆத்துமாவை நோக்கி கேள்விகள் கேட்டுக் கொண்டிருக்கவில்லை. "என் ஆத்துமாவே உனக்கு ஏன் இப்படி ஆனது? உனக்கு இந்த கதியா? நீ ஏன் கைவிடப்பட்டாய்? நீ ஏன் வருந்துகிறாய்?" என்றெல்லாம் அவர் கேட்கவில்லை. தனக்கு ஏற்பட்ட சஞ்சலங்களால், வறண்டு போன கிணற்றைப் போன்ற உள்ளத்தை நோக்கிக் கொண்டிராமல், நேரிடையாக ஜீவதண்ணீர் ஊற்றாகிய தேவனிடமே பேசுகிறார். "என் தேவனே" என்று கூப்பிடுகிறார். எங்கே நோக்கிப் பார்க்க வேண்டும் என்று அவருக்குத் தெரியும். இம்மாதிரியான நேரங்களிலே சாத்தானின் சோதனை வரும் என்பதை நான் ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் கூறுகிறேன். நீங்கள் சோர்ந்து போகும்போதும், முன்னிருந்தது போல பக்தி வழிகளில் சந்தோஷப்படாமல் இருக்கும்போதும் அவன் உங்களை சோதிப்பான். வருத்தம் உங்களை சூழ்ந்திருக்கும்போது, மலைபோல் குவிந்து கிடக்கும் உங்கள் கெட்ட குணங்களை ஆராய்வதிலும், உங்களுடைய உணர்ச்சிகளுக்கு அதிகமாக இடமளிப்பதிலும், நீங்கள் உணர்ந்தவைகளையும், உணராதவைகளையும் எண்ணி குழம்பிக் கொண்டிருப்பீர்கள். அம்மாதிரியான நேரங்களில் நீங்கள் உங்களுக்குள்ளாகப் பார்ப்பதற்கு பதிலாக மேலே நோக்கிப் பாருங்கள். மீண்டுமாக தேவனை நோக்கிப் பாருங்கள். ஏனென்றால் அங்கிருந்துதான் வெளிச்சம் வரவேண்டும்.

***நமது கர்த்தர் தமக்கு அருமையான யாரையும் இம்முறை நோக்கிப் பார்க்கவில்லை*** என்பதை நீங்கள் கவனியுங்கள். அவருடைய பாடுகளின் ஆரம்பத்தில் அவர் தமது சீஷர்களிடம் ஆறுதலைத் தேடினவர் போலக் காணப்பட்டார். ஆனால் அவர்களோ நித்திரை மயக்கத்திலிருந்தனர். ஆகவே, இந்த சந்தர்ப்பத்தில் அவர் யாரையும் சிறிதளவுகூட நோக்கிப் பார்க்கவில்லை. அவர் தேவனுடைய முகத்தின் வெளிச்சத்தைக் காணாதிருந்தார். அந்த இருளான நேரத்திலும் அவர் கீழேயிருப்பவர்களை நோக்கிப் பார்க்கவில்லை. "யோவானே, எனக்கு அருமையான யோவானே, நீ இங்கே இருக்கிறாயா? என்னுடைய மார்பில் சாய்ந்திருந்தவனே, எனக்கு ஆறுதல் கூற உனக்கு வார்த்தையில்லையா? தாயே, மரியாளே, இங்கே இருக்கிறீர்களா? என்னை மறந்துவிடாத சில நெஞ்சங்கள் இங்கே இருக்கிறதை எனக்குத் தெரிவிக்கும் வகையில், மரித்துக் கொண்டிருக்கும் உமது மகனிடம் சில ஆறுதல் வார்த்தைகள் கூற மாட்டீர்களா?" என்று அவர்

## நமது கர்த்தரின் பயபக்தியான கேள்வி

அங்கிருந்த யாரிடமும் கேட்டாரா? இல்லை, அருமையானவர்களே, இல்லை! சிருஷ்டிப்புகளை கர்த்தர் நோக்கவேயில்லை. மனிதநிலையில்தான் அவர் இந்த வார்த்தைகளைக் கூறினார் என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். ஆனாலும் அவர் எந்த மனிதனையோ, நண்பரையோ, சகோதரரையோ உதவிக்கு அழைக்கவில்லை. தேவ கோபாக்கினையை சந்தித்த நிலையில் இருந்தாலும், இயேசு, "என் தேவனே" என்று அவரைத்தான் அழைக்கிறார். ஆம், அது ஒன்றுதான் விசுவாசியின் வாயில் வரவேண்டிய கூப்பிடுதலாக இருக்கிறது.

தேவன் உங்களை கைவிட்டுவிட்டது போலத் தோன்றினாலும், தொடர்ந்து அவரிடமே வேண்டிக் கொண்டிருங்கள். மனிதரிடமோ பிராணிகளிடமோ ஆறுதல் தேடுவதை விட்டுவிட்டு, தேவனையே நோக்கிக் கொண்டிருங்கள். உங்களுடைய ஆர்வத்தைப் பொறுத்து அவர் சீக்கிரமாகவோ தாமதமாகவோ உங்களிடம் வருவார். அவர் உங்களை கைவிட மாட்டார். அவர்தான் உங்களுக்கு உதவி செய்ய வேண்டும். ஒரு சிறு குழந்தை, அதன் தாய் அடிக்கும்போது அதற்கு வலித்தாலும், அது தாயிடம்தான் செல்லும். தாயின் அன்பு அதற்குத் தெரியும். தாயின் தேவை தனக்கு எவ்வளவு அவசியம் என்பதை அது இயல்பாக உணர்ந்திருக்கிறது. தனது தேவைகளையெல்லாம் தாய் மாத்திரமே நிறைவேற்ற முடியும் என்பதும் அதற்குத் தெரியும். அன்பானவர்களே, நீங்களும் அந்தக் குழந்தையைப் போலவே இருங்கள்.

இங்கிருப்பவர்களில் யாராவது மனஆறுதல் இல்லாமல் இருக்கிறீர்களா? சாத்தான் உங்களிடம், "ஜெபிக்காதே" என்று தூண்டிவிடுகிறானா? பிரியமானவர்களே முன்பைக் காட்டிலும் அதிகமாக ஜெபியுங்கள். "தேவன் உன் மீது கோபமாயிருக்கிறார். அவரிடம் ஜெபிப்பதால் என்ன பயன்?" என்று உங்களை பிசாசு கேட்பான். கிறிஸ்துவிடமும் அதையேதான் கேட்டிருப்பான். "உன்னைக் கைவிடுகிறவரிடம் போய் நீ என் ஜெபிக்கிறாய்?" என்று கேட்டிருப்பான். ஆனால் இயேசு ஜெபித்தார். "ஏன் என்னைக் கைவிட்டீர்?" என்று கேட்டாலும் "என் தேவனே" என்று அவரிடம்தான் ஜெபித்தார். சாத்தான் ஒருவேளை உங்களிடம் இனி வேதத்தைப் படிக்காதே என்று சொல்லுவான். வேதாகமம் உனக்கு ஆறுதல் அளிக்கவில்லையே, அதன் வாக்குத்தத்தங்கள் உனது ஆத்துமாவுக்கு நன்மை செய்யவில்லையே, இனி இதைப் படிக்காதே என்பான். சகோதரரே, அவ்வேளைகளில் வேதாகமத்தைப் படியுங்கள். நிறுத்தாமல் படியுங்கள். எப்போதும்

### சார்ல்ஸ் ஸ்பர்ஜனின் போதனைகள்

வாசிப்பதைவிட இரண்டு மடங்கு வாசியுங்கள். வெளிச்சம் உங்களிடம் வரவில்லை என்பதற்காக நீங்கள் வெளிச்சத்தைவிட்டு விலகிப் போய்விடாதீர்கள். இல்லை, வெளிச்சம் இருக்கிற இடத்திலேயே இருங்கள்.

சாத்தான் உங்களிடம், "தேவனுடைய ஆலயத்துக்குப் போகாதே. திருவிருந்தில் பங்கெடுக்காதே. தேவன் தமது முகத்தை உனக்கு மறைத்திருக்கும்போது நீ திருவிருந்தின் மூலமாக அவரோடு ஐக்கியப்பட முடியுமா?" என்று சொல்லுவான். சகோதரரே புத்திசாலித்தனமாக நடக்க வேண்டிய வழியை நான் உங்களுக்கு கற்றுத் தருகிறேன். நான் கிறிஸ்துவின் உதாரணத்தையே உங்களுக்குக் கூறுகிறேன். தனிஜெபத்திலும், பொது ஆராதனையிலும் தொடர்ந்து தேவனிடம் வாருங்கள். திருவிருந்தின் ஐக்கியத்திலும் வாருங்கள். இயேசுவோடு கூட சேர்ந்து நீங்களும், "அவர் என்னை அடித்தாலும் நான் அவரையே நம்பியிருப்பேன். ஏனென்றால் நான் நம்பக்கூடிய வேறு யாரும் இல்லை. அவர் தமது முகத்தை எனக்கு மறைத்துக் கொண்டாலும், நான் அவரையே நோக்கிக் கூப்பிடுவேன். நான் கூப்பிடுவது, "என் நண்பர்களே" என்று இருக்காது. "என் தேவனே" என்றுதான் இருக்கும். என்னுடைய கண்கள் எனது ஆத்துமாவையோ, எனது நண்பர்களையோ, என்னுடைய உணர்வுகளையோ நோக்கிக் கொண்டிருக்காது. அவை அவரை மாத்திரமே நோக்கிக் கொண்டிருக்கும்" என்று சொல்லுங்கள். இது நாம் படிக்கிற முதல் பாடம். ஆனால் இது சுலபமானதல்ல. கேட்பதற்கு சுலபமாகத் தோன்றும். ஆனால் அதை வாழ்க்கையில் செயல்படுத்தும்போதுதான் அதன் சிரமத்தை உணர்வீர்கள். ஆனால், "நமது பலவீனங்களில் ஆவியானவர் உதவி செய்கிறார்."

## ஆ) கைவிடப்பட்ட நிலையிலும், தேவனை இறுகப் பற்றியிருந்தார்

"என்" என்று கூறியதில் தன்னை அவரில் இணைத்துக் கொள்பவராகவும், "தேவனே" என்பதில் அவரைத் தம்மோடு இணைப்பவராகவும் நமது கர்த்தர் இருப்பதை கவனியுங்கள். இரண்டு விஷயங்களும் "என் தேவனே" என்கிற இந்தக் கூப்பிடுதலில் இணைந்திருக்கிறது. இந்த நிலையிலும் தேவன் தன்னுடைய தேவன்தான் என்பதை அவர் நம்புகிறார். இருமுறை "என் தேவனே" "என் தேவனே" என்கிற அதே வார்த்தையில் கூப்பிட்டு, சொந்தங்கொண்டாடுவதை வெளிப்படுத்துகிறார்.

## நமது கர்த்தரின் பயபக்தியான கேள்வி

தேவன் தமது முகத்தை நம் மீது பிரகாசிக்கச் செய்கையிலும், நமது இருதயத்தில் அவருடைய அன்பை இதமாக அனுபவிக்கும்போதும் தேவன் நம்முடையவர் என்று நம்புவதற்கு சுலபமாக இருக்கும். ஆனால் அவர் கடினமான கட்டளைகளை அளிக்கும்போதும், அவர் தமது கோபத்தை நம் மீது செலுத்தும்போதும், பரிசுத்தஆவியானவர்கூட விலகிவிட்டாரோ என்கிற சந்தேகம் எழும்பும்போதும், நாம் எவ்வளவாக விடாமல் அவரைப் பற்றிக் கொண்டிருக்கிறோம் என்பதில்தான் நமது விசுவாசம் வெளிப்படுகிறது. எது வேண்டுமானாலும் விலகிப் போகட்டும், கடவுளை விட்டு விலகாதிருங்கள். கப்பல் மூழ்கிக் கொண்டிருக்கையில், புயல் வீசுகையில், பவுலின் கூட சென்றவர்கள் தட்டுமுட்டுகளையும் கோதுமையையும் கடலில் எறிந்து கப்பலை இலகுவாக்கியது போல, பொன்னை இழந்தாலும் பொருளை இழந்தாலும், தேவையான சகலத்தையும் இழந்தாலும், தேவனை மாத்திரம் இறுகப் பற்றிக்கொள்ளுங்கள். கடவுளை விட்டுவிடாதீர்கள். "எனது சந்தேகங்களிலும், பயங்களிலும், சகலவிதமான உணர்வுகளிலும் நான் அவரையே விடாமல் இறுகப் பற்றியிருப்பேன். அவர் என் தேவன். அவர் என்னை விட்டுப் போகும்படியாக விடமாட்டேன்" என்று உறுதியாக இருங்கள்.

நமது கர்த்தரின் பவ்யமான அந்தக் கேள்வி, மூலபாஷையில் "வல்லமை நிறைந்தவரே" என்று இருக்கிறது. "ஏலி, ஏலி" என்கிற வார்த்தை "என்னுடைய வல்லவரே, என் பலவானே" என்று அர்த்தம் தருகிறது. ஆகவே தேவன் தமது முகத்தை மறைத்துக் கொண்டது போலத் தோன்றினாலும், உங்களுடைய பலமெல்லாம் கடவுளில்தான் இருக்கிறது என்பதைத் தொடர்ந்து விசுவாசியுங்கள். கடவுள் உங்கள் பக்கமாகத்தான் இருக்கிறார் என்பதையும் விடாமல் நம்புங்கள். அவரால் நொறுக்கப்படுவது போல இருந்தாலும் தொடர்ந்து அவரையே விசுவாசியுங்கள். "என்னை ஒரேயடியாக அவருடைய வல்லமை அழித்துவிடாது. அவர் என்னை அடித்தாரானால் நான் என்ன செய்வேன்? இன்னும் அவரருகாக சேர்ந்து அவருடைய கரத்தைதான் பற்றிக் கொள்வேன். அவர் தமது பலத்தை எனக்குக் கொடுப்பார். யாக்கோபு தேவதூதனுடனே போராடியது போல நானும் கடவுளோடு போராடுவேன். அவர் என்னோடே போராடினால், நான் அவரிடமிருந்தே பெலனைப் பெற்றுக் கொண்டு, ஆசீர்வாதம் பெறும்வரைக்கும் போராடுவேன்" என்றுதான் விசுவாசம் சொல்லும். அருமையானவர்களே, நாம் தேவனையும் விட்டுவிடக்கூடாது, அவருடைய

பலம்தான் நம்மைக் காப்பாற்ற முடியும் என்கிற நமது உணர்வையும் விட்டுவிடக்கூடாது. அவர் நமக்கு சொந்தம் என்பதை இறுகப் பற்றியிருக்க வேண்டும். அவரைப் பற்றியிருத்தலே மேலானது என்கிற விசுவாசத்தை விட்டுவிடக்கூடாது. அவரே எல்லாம் வல்லவர், என்ன ஆனாலும் அவரே நமது தேவன் என்பதை விடாப்பிடியாக நம்பியிருங்கள்.

நான் உங்களிடம் நேரிடையாக ஒரு கேள்வி கேட்கிறேன். தேவனால் பரிசோதிக்கப்பட்ட கடவுளுடைய பிள்ளைகள் யாராவது இங்கு இருக்கிறீர்களா? அவர் உங்கள் மீது சந்தோஷப்படவில்லை என்பதற்காக நீங்கள் அவரை விட்டுவிடப் போகிறீர்களா? அவர் உங்களைப் பார்த்து எப்போதும் புன்முறுவல் பூத்துக் கொண்டிருந்தால்தான் அவர் மீது நம்பிக்கை வைப்பீர்களா? அப்படியானால் உங்கள் விசுவாசத்தின் அடித்தளம் சரியாக இல்லை. ஒரு விசுவாசியின் நம்பிக்கை தேவனின் புன்முறுவலில் இல்லை, அவருடைய வாக்குத்தத்தங்களில்தான் இருக்கிறது. அவருடைய அன்பில் தற்காலிகமாக பங்கெடுப்பதில் இல்லை. அவருடைய நித்தியமான அன்பில் நிரந்தரமாக சம்பந்தப்படுவதே விசுவாசியின் நம்பிக்கை. அந்த அன்பு அவருடைய உடன்படிக்கையிலும், வாக்குத்தத்தங்களிலும் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. ஒருவேளை இப்போது கடவுளின் புன்முறுவல் உங்களைவிட்டு சென்றுவிடலாம், ஆனால் அவருடைய வாக்குத்தத்தங்கள் ஒருபோதும் மறைந்து போகாது.

நீங்கள் தேவனுடைய வாக்குத்தத்தங்களை நம்பினீர்களானால், அவர் உங்கள் மீது கோபமடைந்தாலும், சந்தோஷமடைந்தாலும் நீங்கள் விசுவாசத்தில் உறுதியாய் இருப்பீர்கள். உடன்படிக்கையின் மீது உங்கள் நம்பிக்கையை வைக்கும்போது, அந்த உடன்படிக்கையானது வெளிச்சத்திலும் இருளான நேரத்திலும் மாறாமல் இருப்பதை உணருவீர்கள். உங்கள் இருதயம் தெய்வீக ஆசீர்வாதங்களில் நிரம்பியிருந்தபோது இருந்தவிதமாகவேதான், உங்கள் ஆத்துமாவுக்கு சற்றும் ஆறுதல் கிடைக்காத நேரங்களிலும் அந்த உடன்படிக்கை எப்போதும் நன்மையை அளிப்பதாய் இருக்கிறது. ஆகவே, இதிலே தரித்திருங்கள். அவருடைய உடன்படிக்கை எப்போதும் நன்மை செய்கிறது. கிறிஸ்து எப்போதும் மாறாதவராயிருக்கிறார். அவருடைய இரத்தம் எப்போதும் சமாதானம் செய்கிறது. கடவுளின் பிரமாணம் எப்போதும் மாற்ற முடியாததாய் இருக்கிறது. கடவுளின் அன்பை சந்தேகிக்க வைக்கிற சகல

எண்ணங்களையும் நாம் விலக்கிவிட வேண்டும். அவருடைய அன்பின் மீதுதான் நாம் நம்பிக்கை கொள்ள வேண்டும். அவருடைய பிரசன்னத்தை உணர்வதில் மட்டும் நமது சந்தோஷத்தை வைக்காமல், அவருடைய உத்தமத்திலும், அவருடைய சத்தியத்திலும் நாம் மகிழ்வதற்குப் பழகிக் கொள்ள வேண்டும். ஆகவே, கைவிடப்பட்டது போன்ற தருணங்களில் சோர்ந்து போய்விடாமல், அவரையே நோக்கி, "என் தேவனே" என்று கூப்பிடக்கூடியவர்கள் ஆகுங்கள்.

கடவுள் கோபமாயிருக்கிறார் என்பதற்காக அவரைவிட்டு விலகிவிடத் தீர்மானித்து விட்டீர்களானால், மேற்கொண்டு நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? அவர் கோபமாயிருந்தாலும் அவரை நம்பியிருப்பதுதானே, கடவுளையே நம்பாமல் போவதைக் காட்டிலும் சிறந்தது? ஒருவேளை நீங்கள் உங்கள் விசுவாசத்தைக் கைவிட்டுவிட நினைத்தீர்களானால் பிறகு என்ன செய்வீர்கள்? உலக மனிதனுக்கு விசுவாசம் என்றால் என்னவென்று தெரியாது. ஆகவே அவன், தனது குருட்டாட்டமான செத்த வழிகளிலே தொடர்ந்து சந்தோஷமாக நடப்பான். ஆனால், நீங்களோ உயிர்ப்பிக்கப்பட்டவர்கள், மனக்கண்கள் திறக்கப்பட்டவர்கள். நீங்கள் விசுவாசத்தை கைவிட்டால் உங்களுக்கு என்ன ஆகும்? வேண்டாம், அவரையே பற்றிக் கொண்டு நடவுங்கள்.

"விசுவாசக் கண்கள் மங்கினாலும்
இயேசுவையே தொடர்ந்து பற்றியிருங்கள்.
மூழ்கினாலும், நீந்தினாலும்
அவர் பாதபடியில் முழங்காலிடுங்கள்.
இஸ்ரவேலின் தேவனே
உங்களின் பெலனாயிருக்கட்டும்"
அவரை விட்டுவிடாதிருங்கள்.

தேவன் கோபமாயிருக்கிறார் என்பதற்காக உங்கள் விசுவாசம் அவரை விட்டுவிடத் தீர்மானிக்குமானால், அது என்னவிதமான விசுவாசம்? கோபங்கொள்ளுகிற கடவுளில் நீங்கள் நம்பிக்கை வைக்க மாட்டீர்களா? உங்களுடைய உயிர் நண்பன் உங்களைத் திட்டிவிட்டான் என்பதற்காக அவனை விட்டு விலகி விடுவீர்களா? "அவனுக்காக உயிரையும் கொடுப்பேன்" என்று சொல்லியிருந்த உங்களால் அவனுடைய கோபத்தைத்

தாங்கிக் கொள்ள முடியாதா? இதுதான் நீங்கள் உங்கள் நண்பன் மீது கொண்டிருக்கும் அன்பா? இவ்விதமாகத்தான் நீங்கள் உங்களுடைய தேவன் மீது வைத்திருக்கும் நம்பிக்கையும் இருக்குமா? யோபு எப்படி புருஷனாக நடந்து கொண்டார் என்பதைப் பாருங்கள். யோபிடமிருந்த எல்லாவற்றையும் தேவன் எடுத்துக் கொண்டபோது, அவர் தேவனுக்கு விரோதியாகிப் போனாரா? இல்லையே. "கர்த்தர் கொடுத்தார். கர்த்தர் எடுத்தார். கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம்" என்று சொன்னார். "அவர் என்னைக் கொன்றுபோட்டாலும், அவர்மேல் நம்பிக்கையாய் இருப்பேன்" என்று அவர் எவ்வளவு அழகாகச் சொன்னார்? சந்தோஷமான காலங்களில் மாத்திரம் விசுவாசமாயிருப்பதும், வெள்ளியும் பொன்னுமாக கடவுள் ஆசீர்வதிக்கும்போது மாத்திரம் விசுவாசமாயிருப்பதும், நடக்கும் பாதை சுலபமாக இருக்கும்போது மாத்திரம் தேவன் பேரில் நம்பிக்கை வைப்பதுமாயிருக்கிற விசுவாசம் என்ன விசுவாசம்? இப்படிப்பட்ட விசுவாசத்தை எங்கிருந்து பெற்றீர்கள்? நேபுகாத்நேச்சாரின் அக்கினி சூளையிலிருந்தாலும் கர்த்தரோடு சேர்ந்து நடப்பதும், மரணஇருளின் பள்ளத்தாக்கில் நடந்தாலும் அவரோடு கைகோர்த்து நடப்பதுமே உண்மையான விசுவாசம். அந்தவிதமான விசுவாசத்தைதான் நாடி பெற்றுக் கொள்ள வேண்டும். அதை தேவன் நமக்குக் கொடுக்கிறார். ஏனென்றால் அந்தவிதமான விசுவாசம்தான் சிலுவைமரத்திலே தேவனால் கைவிடப்பட்ட நிலையிலிருந்த இயேசுக்கிறிஸ்துவின் இருதயத்தில் இருந்தது. அந்த நேரத்திலும் அவர் "என் தேவனே" என்று கூப்பிடக்கூடியவராக இருந்தார்.

இதுவரை நாம் இரண்டு பாடங்கள் கற்றுக் கொண்டிருக்கிறோம். அவைகளை சொல்லக் கேட்டிருக்கிறோம், அவைகளை கற்றுக் கொண்டுவிட்டோமா? அவைகளை வாழ்க்கையில் செயல்படுத்த வேண்டும். வேதனையான நேரங்களிலும் கடவுளிடம் செல்லுங்கள். அவருடைய கரத்தை விட்டுவிடாதீர்கள்.

## இ) வேதனையின் கசப்பு இவ்வார்த்தைகளில் வெளிப்பட்டாலும், கர்த்தரின் மௌனம் கற்பிக்கும் பாடம் அதிகம்.

அவர் சிறிதளவுகூட முறுமுறுப்பைக் காண்பிக்கவில்லை. தமது தேவனுக்கு விரோதமாக எதையும் கூறவில்லை. "***என்*** தேவனே, ஏன் என்னைக்

கைவிட்டீர்?" என்கிற வார்த்தைகளை கவனியுங்கள். அதில் ஏதாவது களங்கம் இருப்பது போல உங்களுக்குத் தோன்றுகிறதா? எனக்குத் தோன்றவில்லை. அது வேதனையின் முழு வெளிப்பாடு. அதில் பாவத்தின் கறை இல்லை. தேவதூதர்களில் யாராவது இந்நிலையிலிருந்தாலும் இதைத்தான் சொல்லியிருப்பார்கள். தேவதூதர்களைக் காட்டிலும் பரிசுத்தவானாகிய தேவகுமாரன், துயரத்தின் விளிம்பில் அதையேதான் சொன்னார். யோபை கவனியுங்கள். யோபை குறைகூறுவதற்கு நமக்குத் தகுதியில்லை. அவரைப் போல நாம் பாதியளவுகூட துயரம் அனுபவிக்கவில்லை. ஆனாலும், யோபின் உணர்வை நாம் இச்சந்தர்ப்பத்தில் கவனிப்பது நல்லது. சிலவேளைகளில் யோபு தமது இருதயத்தின் கசப்பை வெளிப்படுத்தினார். தான் பிறந்த நாளை சபித்தல் போன்ற சில வார்த்தைகளை கூறியிருக்கிறார். ஆனால் இயேசுக்கிறிஸ்து அப்படி செய்யவில்லை. "பெத்லகேமில் நான் பிறந்த அந்த நாள் சபிக்கப்படுவதாக. கலகக்காரராகிய இந்த ஜனங்களின் மத்தியில் வந்தது சபிக்கப்படுவதாக" என்றெல்லாம் அவர் சொல்லவேயில்லை. அது போன்ற வார்த்தை ஒன்றுகூட அவர் வாயிலிருந்து வரவில்லை.

மிகவும் துயரமான நேரத்தில், மிகச் சிறந்தவனான மனிதனுங்கூட, அந்த துயரநிலமை மாற்றப்பட்டுப் போனால் எவ்வளவு நன்றாயிருக்கும் என்று நினைப்பான். தாவீதின் மகனாகிய அப்சலோம் இறந்தபோது, அப்சலோமுக்கு பதிலாக தான் இறந்திருந்தால் நலமாயிருந்திருக்குமே என்று தாவீது நினைத்தார். ஆனால் கிறிஸ்துவோ எதையும் மாற்றுவதற்கு விரும்பியதாகத் தெரியவில்லை. "தேவனே! ஏதோ தவறு நேர்ந்துவிட்டது. ஏரோது என்னை அழிக்கத் தேடியபோது அவன் கையினால் இறந்து போயிருந்தேனென்றால் நலமாயிருந்திருக்குமோ? அல்லது கப்பர்நகூமில் அவர்கள் என்னை மலை உச்சியிலிருந்து தள்ளிவிடப் பார்த்தபோதே இறந்திருந்தால் நன்றாயிருந்திருக்குமோ?" என்றெல்லாம் அவர் சொல்லவில்லை. அந்த மாதிரியாக அவர் பேசவேயில்லை. அவருக்கு வேதனை இருந்தது. ஆனால் அதில் முறுமுறுப்பு இல்லை. அவருக்கு துயரம் இருந்தது, ஆனால் அதை எதிர்க்கவில்லை.

இதைத்தான் நான் உங்களுக்குக் கூற விரும்புகிறேன். நீங்கள் எவ்வளவு துயரமான சூழ்நிலைக்குள் வந்தாலும், கடவுளின் அன்பும் சந்தோஷமும் உங்களைவிட்டு விலகிவிட்டது போன்ற வேதனையான அனுபவம்

உங்களுக்கு நேரிட்டாலும், உங்கள் கைகளினால் வாயை மூடிக் கொண்டு மௌனமாக இருங்கள். "நீரே இதைச் செய்தீர் என்று நான் என் வாயைத் திறவாமல் மௌனமாயிருந்தேன்" என்பதை நினைத்துக் கொள்ளுங்கள். என்ன நடந்தாலும் அவர் நல்லவர் என்கிற நம்பிக்கை உடையவர்களாய் இருங்கள். அதிலும் அவர் உங்கள் நன்மைக்காகவே சகலத்தையும் செய்கிறார் என்கிற நிச்சயத்தைக் கொண்டிருங்கள். எந்தவிதமான முணுமுணுப்பையும் உங்கள் வாயிலிருந்து வரவிடாதிருங்கள். அப்படி வந்துவிட்டதானால், அதை எண்ணி மனம் வருந்துங்கள். கடவுளோடு பேசுவதற்கு உங்களுக்கு உரிமை இருக்கிறது, ஆனால் அது முறுமுறுப்பாக இருக்க வேண்டாம். நீங்கள் கர்த்தராகிய இயேசுவைப் போல இருக்க வேண்டுமானால், "ஏன் என்னைக் கைவிட்டீர்?" என்று மாத்திரம் கேட்கலாம். அதற்கு மேல் ஒன்றும் பேசாதீர்கள். அத்தோடு விட்டுவிடுங்கள். உங்கள் கேள்விக்கு பதில் கிடைக்கவில்லையானால், பதில் கொடுக்கப்படாத அந்நிலையிலேயே திருப்தியாயிருங்கள்.

மீண்டும் சொல்லுகிறேன், இந்த பாடத்தை நான் கற்பிக்க முடியும், ஆனால் இதை என்னாலும் உங்களாலும் கடைப்பிடிக்க முடியுமா எனத் தெரியவில்லை. "நமது பலவீனங்களில் நமக்கு உதவி செய்கிற பரிசுத்த ஆவியானவர்தாம்" அவ்வித சூழ்நிலைக்குள் நாம் பிரவேசிக்கும்போது, "லாமா சபக்தானி" என்று மாத்திரம் கூறச் செய்து, அதற்கு மேல் போகாமல், நமது கர்த்தரைப் போலவே நடந்து கொள்ள உதவி செய்வாரென நம்புகிறேன்.

## ஈ) நமது கர்த்தர், அன்பான பிள்ளையாக தேவனை நோக்கிக் கூப்பிட்டார்

"என் தேவனே, ***ஏன்***, ஏன் என்னைக் கைவிட்டீர்?" என்பதை அவர் சந்தேகத்தோடு அல்ல, அன்போடு கேட்டார். அன்போடு அவர் தமது வேதனையை வெளிப்படுத்தினார். "ஏன், என் தேவனே, ஏன்? ஏன்?" என்று கேட்டார். இது நமக்கு ஒரு பாடம் கற்பிக்கிறது. ஏன் தேவன் தமது முகத்தை நமக்கு மறைத்துக் கொள்கிறார் என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். விசுவாசத்தின் முழு நிச்சயத்தைப் பெற்றுக் கொள்ளாமல் ஒரு கிறிஸ்தவனும் திருப்தியடைந்து விடக்கூடாது. கிறிஸ்து தம்முடையவர் என்கிற

## நமது கர்த்தரின் பயபக்தியான கேள்வி

நிச்சயமில்லாமல் ஒரு கிறிஸ்தவனும் நொடிப்பொழுதும் வாழக்கூடாது. அந்த நிச்சயம் இல்லாமல் போகுமானால் அவன் என்ன செய்ய வேண்டும்? அவன் கடவுளிடம் சென்று, "ஏன் எனக்கு அந்த நிச்சயம் இல்லை? உமது பிரசன்னத்தை நான் ஏன் உணரவில்லை? உமது முகத்தின் பிரகாசத்தில் நான் வாழ்ந்தது போல ஏன் இப்போது எனக்கு இல்லை?" என்று கேட்காமல் திருப்தியடைந்து விடக்கூடாது.

அந்த கேள்விக்கு பலவிதங்களில் விடை கிடைக்கலாம். "மகனே, மகளே, நீ என்னைக் கைவிட்டதால் நானும் உன்னைக் கைவிட்டேன். நீ கொஞ்சம் கொஞ்சமாக உன் இருதயத்தில் குளிர்ந்து போய்விட்டாய். நரை மயிர் வந்திருப்பது தெரியாதிருப்பது போல இருக்கிறாய். நீ பின்வாங்கிப் போனதை அறிந்து கொண்டு, துயரத்தோடு மனந்திரும்ப வேண்டும் என்பதற்காகவே இப்படி செய்தேன்" என்று அவர் கூறலாம். அல்லது, "என் பிள்ளையே, நீ ஒரு விக்கிரகத்தை உன் இருதயத்தில் வைத்துக் கொண்டிருக்கிறபடியால் நான் உன்னைக் கைவிட்டேன். நீ உன் பிள்ளையை அதிகமாக நேசிக்கிறாய், உன் பணத்தை அதிகமாக நேசிக்கிறாய். உன் வியாபாரத்தை அதிகமாக நேசிக்கிறாய். நான் மாத்திரமே உன் எஜமானாகவும், உனது நேசராகவும், மணவாளனாகவும், உனக்கு முக்கியமானவராகவும் இல்லாவிட்டால், உன் இருதயத்துக்குள் என்னால் இருக்க முடியாது" என்று கூறலாம். ஓ, அவரிடமிருந்து நமக்கு பதில் கிடைத்து விட்டதானால் எவ்வளவு சந்தோஷம்! பதிலைப் பெற்றுக் கொண்ட வேளையிலேயே நமது இருதயம் களிப்பாகப் பாடும்:

"எனக்கு அருமையானது எதுவாக இருந்தாலும்
அந்த விக்கிரகத்தை அதன் சிங்காசனத்தினின்று
உடைத்தெறிய உதவும்!
உம்மை மாத்திரமே பணிய உதவும்!"

சிலவேளைகளில் அவர் வேறுவிதமான பதிலையும் தருவார்: "என் பிள்ளையே, நீ என்னை உண்மையாகவே நேசிக்கிறாயா என்பதை சோதித்தறியவே நான் உன்னை விட்டு விலகிச் சென்றேன்" என்பார். உண்மையாக நேசிப்பவர்கள், கோபித்தாலும் தொடர்ந்து நேசம் காட்டுவார்கள். மேம்பூச்சாக நேசிப்பவர்கள், எல்லாம் நன்றாக இருக்கும்போது மாத்திரம்தான் நேசிப்பார்கள். கடவுளிடமிருந்து

நன்மையைப் பெற்றுக் கொள்ளும்போது மாத்திரம் அவரில் பிரியம் வைக்கிறவர்கள் அநேகர் இருக்கிறார்கள். ஆனால் உண்மையான விசுவாசிகள், தேவன் அடித்தாலும் அவரில் அன்பு செலுத்துவார்கள். அவர் காயப்படுத்தினாலும் அன்பு செலுத்துவார்கள். அப்படியானால் நாம், "ஓ! கர்த்தாவே இதற்காகத்தான் நீர் எங்களைக் கைவிட்டிருந்தீரானால், நாங்கள் இன்னும் அதிகமாக உம் மீது அன்பு வைப்போம். உமது கிருபை எங்கள் ஆத்துமாவை இன்னும் அதிகமாக உமக்காக பசியும் தாகமும் அடையச் செய்திருக்கிறது என்பதை நிருபிப்போம்" என்று கூறுவோம். இந்த பதில்களைப் பொறுத்து நாம் செயல்பட வேண்டும். துயரங்களிலிருந்து விடுபட வேண்டுமானால், அல்லது வேதனையான சந்தர்ப்பத்தில் உதவி பெற வேண்டுமானால் செய்யக் கூடிய சிறந்த வழி, கடவுளை நெருங்கி ஓடுவதுதான். ஒரு ஓவியத்தில் ஒரு மனிதன் இன்னொருவனை மிகப் பெரிய ஆணியால் அறைந்து கொண்டிருப்பான். இவன் அவனுக்கு எவ்வளவு அதிக தொலைவில் இருக்கிறானோ அவ்வளவுக்கு அவன் அதிகமாக ஓங்கி அறைய வேண்டியிருக்கும். கிட்ட இருந்தால் அடி கொஞ்சமாகத்தான் விழும். அதுபோல தேவன் ஒருவனை அடிக்கும்போது, அவன் தேவனுடைய அருகிலேயே ஒட்டிக் கொண்டு நடப்பானாகில் அவனுக்கு அது அதிக வேதனையாக இருக்காது. ஓ! என் தேவனே, என் தேவனே! துயரங்கள் எனக்கு அதிர்ச்சியை அளித்தாலும், நான் உமது அருகிலேயே நிற்பேன். அந்த துயரங்களும் நன்மைக்காகவே வந்திருப்பதாக எடுத்துக் கொள்வேன். பாடுகளையும் அவ்வாறாகவே கருதுவேன். அப்போதுதான் என் ஆத்துமா காயப்படாமல் இருக்கும்.

இந்த கருத்தைக் குறித்தும் நான் முந்தினவைகளில் சொன்னது போலவே சொல்லுகிறேன். சொல்லுவது சுலபம், செய்வது கடினம். ஒரு பிள்ளையைப் போல தேவனை நோக்கிக் கூப்பிட்டு விசாரியுங்கள். அதை நன்றாகக் கற்றுக் கொள்ளுங்கள். உங்களுக்கு மிகவும் அதிகமான துயரங்கள் ஏற்படுகிற வேளையிலே அதை செயல்படுத்துங்கள். இப்போதே அம்மாதிரியான சூழ்நிலைகளில் இருப்பவர்கள் அவ்விதமாக செயல்படுத்துங்கள். அவரிடம் தனித்துச் சென்று, "தேவனே, என்னை ஆராய்ந்து, என் இருதயத்தை அறிந்து கொள்ளும். என்னை சோதித்து என் சிந்தனைகளை அறிந்து கொள்ளும். வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து, நித்திய வழியிலே என்னை நடத்தும்" என்று ஜெபியுங்கள். இப்போது நான்

## நமது கர்த்தரின் பயபக்தியான கேள்வி

அடுத்ததாக கூறப்போகிற ஐந்தாவது பாடம் மிகவும் முக்கியமானது. அதைப் பொக்கிஷமாக இருதயத்தில் வைத்துக் காத்துக் கொள்ள வேண்டும்.

## உ) தேவனால் கைவிடப்பட்டாலும், நமது கர்த்தர், தமது பிதாவின் பணியை தொடர்ந்து நிறைவேற்றுகிறார்

தாம் எடுத்துக் கொண்ட வேலையை அவர் விட்டுவிடவில்லை. "என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்?" என்று கேட்டாலும், அவர் நிறைவேற்ற வந்த வேலையை பாதியில் விட்டுவிடவில்லை என்பதை கவனியுங்கள். அவர் சிலுவையை விட்டு இறங்கி வந்துவிடவில்லை. அவர் விரும்பியிருந்தாரானால், ஆணிகள் கழன்று விழும்படியாகச் செய்துவிட்டு இறங்கி வந்திருக்க முடியும். அவர் அப்படி செய்யவில்லை. தன்னைப் பரிகாசம் பண்ணிக் கொண்டு சுற்றி நின்று கொண்டிருந்த கூட்டத்தாரின் மீது பாய்ந்து, அவர்களைக் கடிந்து கொண்டு, விரட்டியடிக்கவில்லை. ஆனால் அவரோ தமது கடைசி சொட்டு இரத்தம் வடியும்வரைக்கும் பாடுகள் பட்டு, "முடிந்தது" என்று சொல்லும் வரைக்கும் தமது ஆவியை விடாமல் இருந்தார்.

கடவுளின் அன்பும், கிறிஸ்துவின் வெளிச்சமும் நம்மீது பிரகாசித்துக் கொண்டிருக்கும் போது கடவுளுக்கு ஊழியம் செய்வது எனக்கும் உங்களுக்கும் சுலபமாயிருக்கும். ஒவ்வொரு வசனமும் இருதயத்தை மகிழ்ச்சியாக்கும்போதும், ஆத்துமாக்கள் மனந்திரும்புவதைப் பார்க்கையிலும், கடவுளின் கிருபை பிரசங்கத்தில் தங்கியிருப்பதை உணருகையிலும் அவருக்கு தொடர்ந்து ஊழியம் செய்வது எளிதாக இருக்கும். அது மிகவும் சுலபம். ஆனால், உங்கள் ஊழியத்தில் பலன் ஒன்றையும் காணாமல், உங்கள் இருதயம் இருளடைந்து போயிருக்கையில், தொடர்ந்து அவருக்கு ஊழியம் செய்வது கடினமாயிருப்பதாக உணருவீர்கள். ஆம் அது ஒரு சோதனைதான். நீங்கள் ஒருவேளை அதில் அகப்பட்டிருக்கலாம். ஆரம்பத்தில் இருந்த உற்சாகம் இப்போது உங்களுக்கு இல்லாதபடியால், "நான் பிரசங்கிப்பதை விட்டுவிட வேண்டும். ஞாயிறு சிறுவர் பள்ளியில் பிள்ளைகளுக்கு சொல்லிக் கொடுப்பதை தவிர்த்துவிட வேண்டும். கடவுளின் முகப்பிரசன்னம் எனக்கு இல்லாவிட்டால் என்னால் எப்படி அவைகளைச் செய்ய . முடியும்? நான் அதையெல்லாம் விட்டுவிடத்தான் வேண்டும்" என்று சொல்லத் தொடங்குவீர்கள்.

அருமையானவர்களே, நீங்கள் அப்படி நினைக்கக்கூடாது. ஒரு தேசத்தில் தேசபக்தியுள்ள ஒரு குடிமகன் இருப்பதாக வைத்துக் கொள்வோம். அவன் செய்த ஏதோ ஒரு காரியம் அந்த ராஜாவை விசனப்படுத்திற்று. ஆகவே கோபமடைந்த அந்த ராஜா ஒரு நாள் அவனிடம் பேசாமல் தனது முகத்தைத் திருப்பிக் கொண்டான். ராஜா கோபமடைந்துவிட்டார் என்பதற்காக அந்த தேசபக்தன் தனது கடமைகளைச் செய்யாமல் எங்காவது போய்விடுவானா? அப்படி செய்ய மாட்டான் என்று நான் நினைக்கிறேன். அவன் தனக்குள்ளாக, "ராஜா ஏன் என் மீது கோபமாய் இருக்கிறார் என்று எனக்குத் தெரியவில்லை. அவர் ஒரு நல்ல ராஜா. அவர் நல்லவர் என்பது எனக்கும் தெரியும். நான் சரியாக இல்லை என்று அவர் நினைத்தாரானால், நான் முன்பைக் காட்டிலும் இன்னும் அதிகமாக அவருக்காக உழைக்கப் போகிறேன். அவர் என்னை நன்றாக வைத்துக் கொண்டால் மாத்திரம்தான் நான் அவருக்காக உழைப்பேன் என அவர் நினைத்துவிடாதபடிக்கு, அவர் கோபமாயிருந்தாலும் உழைத்து எனது உத்தமத்தை நிருபிப்பேன். நான் தேசபக்தியுள்ள குடிமகன். என்ன நேர்ந்தாலும் அதிலே மாறாமல் நிலைத்திருப்பேன்" என்று சொல்லிக் கொள்ளுவான்.

உங்கள் பிள்ளை தவறு செய்யும்போது நீங்கள் அவனைத் தண்டிக்கிறீர்கள். உடனே அவன், "என் தந்தை அனுப்பும் இடங்களுக்குச் சென்று நான் அவர் பணியை செய்ய மாட்டேன். வீட்டில் அவர் சொல்லும் வேலைகளை நான் இனி செய்ய மாட்டேன். ஏனென்றால் இன்றைக்குக் காலையிலே அவர் என்னை அடித்தாரல்லவா?" என்று கூறினானென்றால் நீங்கள் அவனைக் குறித்து என்ன சொல்லுவீர்கள்! அவனைக் கீழ்ப்படிதலில்லாத பிள்ளை என்றுதான் தீர்மானிப்பீர்கள் அல்லவா! உங்களுடைய கடிந்து கொள்ளுதல் அவனிடத்தில் சரியான விளைவை ஏற்படுத்தியிருக்குமானால் அவன், "தகப்பனே, இனி நான் தவறு செய்ய மாட்டேன். நீங்கள் மீண்டும் என்னை அடிக்க நேரிடாதபடிக்கு கவனமாக நடப்பேன்" என்று சொல்லுவான். நாமும் நமது தேவனிடம் அதேவிதமாக நடந்து கொள்வோமாக.

அதையும் தவிர்த்து, நமது நன்றியின் காரணமாகவும் நாம் தொடர்ந்து அவருடைய பணிகளில் ஈடுபட வேண்டாமா? அவர் நம்மை நரகத்திலிருந்து தப்புவித்திருக்கிறாரே! அவர் அடித்தாலும் நம்மை மன்னிக்கிறவராயிருக்கிறார். மரணதண்டனை அளிக்கப்பட்ட குற்றவாளிக்கு ஒரு நீதிபதி மன்னிப்பளித்தாலும் அவர், "உனக்கு அளித்திருக்க வேண்டிய

### நமது கர்த்தரின் பயபக்தியான கேள்வி

மரணதண்டனைக்கு உனக்கு விலக்கு அளிக்கப்பட்டாலுங்கூட, நீ சில ஆண்டுகள் சிறைதண்டனையை அனுபவிக்க வேண்டியது அவசியம்" என்று முடிவான தீர்ப்பைக் கூறுவார். அவன் என்ன சொல்லுவான், "ஓ! நீதிபதி அவர்களே, எனது உயிர் காப்பாற்றப்பட்டுவிட்டபடியால், இந்த சிறிய தண்டனையை நான் அனுபவிக்க தயார்" என்பான் அல்லவா! நாம் பாதாளத்தில் அழியாமல் இரட்சிப்படையும்படிக்கு, நமது தேவன் தம்முடைய சொந்த குமாரனையே நமக்காக மரிக்கக் கொடுத்தாரென்றால், நாம் அந்த ஒரு காரணத்துக்காகவே அவரை அதிகமாக நேசிக்க வேண்டுமல்லவா! "நான் என் சிநேகிதரோடே மகிழ்ந்திருக்கும்படிக்கு நீர் எனக்கு ஒரு ஆட்டுக்குட்டியையாவது தரவில்லையே" என்று அந்த மூத்த குமாரனைப் போல இவ்வுலக வாழ்க்கையில் குறைவு பட்டுக்கொண்டாலும், நாம் அவரில் அன்பு செலுத்தத்தான் வேண்டும். மேலோகத்தின் மகிமையான வாழ்க்கைக்கு முன்னால், எந்த நன்மையையும் அவர் நமக்கு இவ்வுலகில் அனுபவிக்கத் தரவில்லையென்றாலும், வியாதிப்படுக்கையைத் தந்திருந்தாலும், அதிகமான துன்பங்களைத் தந்திருந்தாலும் நாம் அவரைத் துதித்துப் போற்றத்தான் வேண்டும். ஏனென்றால் அவர் நரகத்தின் அழிவுக்கு நம்மை மீட்டு காத்திருக்கிறாரே! ஆகவே, நாம் இங்கே வாழும் காலமெல்லாம் அவரில் அன்புகூர வேண்டும். நீங்கள் கடவுளைக் குறித்து சரியானபிரகாரம் அறிந்து கொண்டீர்களானால், ஏற்றத் தாழ்வு இல்லாமல் எப்போதும் அவரோடு சீராக இணைந்து நடப்பீர்கள். அவர் உங்கள் மீது கோபமடைந்தாலும் அன்புசெலுத்தினாலும், உங்கள் முழு இருதயத்தோடும், ஆத்துமாவோடும், பெலத்தோடும் அவருக்கு ஊழியம் செய்வீர்கள்.

இந்த தியானத்தை முடிக்கும் முன்னதாக, நமது கர்த்தர் நமக்கு முன்மாதிரியாக இருக்கிற இன்னொரு காரியத்தையும் கூற வேண்டும். "ஏன் என்னைக் கைவிட்டீர்?" என்கிற கேள்வியின் மூலமாக நமக்கு என்ன நேரிடப் போகிறது என்பதற்கு அவர் ஒரு முன்னுதாரணமாக இருக்கிறார்.

### ஊ) கர்த்தர் மகிமையான பதிலைப் பெற்றுக் கொண்டார்

இருள் சூழ்ந்த காலத்திலே ஒவ்வொரு மனிதனும், இதேவிதமான கேள்வியை கேட்பான். நமது கர்த்தர் மரித்தார். அந்தக் கேள்விக்கு அவருக்கு பதில் கொடுக்கப்படவில்லை. அந்தக் கேள்வி பூலோகமெங்கும், பரலோகத்திலும்,

நரகத்திலும் எதிரொலி எழுப்பிக் கொண்டு சென்றது. மூன்று நாள் அவர் கல்லறையிலிருந்தார். சிறிது காலத்திற்குப் பிறகு அவர் பரலோகம் சென்றார். என்னுடைய கற்பனையில் நான் சில காட்சிகளைக் காண்கிறேன். அவர் பரலோகத்திற்குள் நுழைந்த வேளையிலே, "ஏன் என்னைக் கைவிட்டீர்?" என்கிற சத்தத்தின் எதிரொலி கொஞ்சம் கொஞ்சமாக அடங்கி மறைந்தது. அந்தக் கேள்விக்குரிய பதிலை பிதா அவருக்கு நடைமுறையில் கொடுத்தார். அங்கே பொன் தளமிட்ட வீதியிலே, வெண் வஸ்திரம் தரித்த பாடகர் குழு, மீட்பரைப் புகழ்ந்து பாடிக் கொண்டிருந்தார்கள். யெகோவாவின் பெயரையும் ஆட்டுக்குட்டியானவரின் பெயரையும் இடைவிடாமல் சொல்லிப் புகழ்ந்து கொண்டிருந்தார்கள். இயேசு சிலுவையில் கேட்ட கேள்விக்கான பதிலில் இது ஒரு பங்கு. தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட இந்த ஆவிகள், கிறிஸ்துவின் மூலமாகப் பிழைக்கும்படியாக தேவன், கிறிஸ்துவை கைவிட்டிருந்தார். அவர்கள்தான் அவருடைய ஆத்தும வருத்தத்தின் பலன். அவருடைய கேள்விக்கான பதில் அவர்கள்தான். அதற்குப் பின்பாக பரலோகத்திற்கும் பூலோகத்திற்கும் இடையே இந்த வர்த்தகம் இடைவிடாமல் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

உங்கள் கண்கள் திறக்கப்பட்டிருந்ததானால், நீங்கள் வானத்திலிருந்து விழுகின்ற நட்சத்திரங்களையல்ல, பூலோகத்திலிருந்து மேல் நோக்கி செல்கிற நட்சத்திரங்களை உணர்வீர்கள். உலகெங்கிலுமிருந்து, எங்கெல்லாம் சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டு விசுவாசம் ஏற்படுகிறதோ, புறமதஸ்தார் எங்கெல்லாம் கடவுளை ஏற்றுக் கொள்கிறார்களோ அங்கே மரணப்படுக்கைகளிலிருந்து பரலோகம் நோக்கி செல்லுகிற நட்சத்திரங்கள் ஏராளம். அவர்கள் கிறிஸ்துவினால் மகிமையை அடைகிறார்கள். அவருடைய பாடுகளினால் மீட்கப்பட்ட ஒவ்வொருவரும் பரலோகத்தை அடையும்போது, "ஏன் என்னைக் கைவிட்டீர்?" என்று கிறிஸ்து கேட்ட கேள்விக்கு மீண்டும் மீண்டுமாக புதிய பதில்களைக் கொண்டுவருகிறார்கள். பரலோகத்தில் மகிமையின் சிங்காசனத்தில் வீற்றிருக்கும் ஜீவாதிபதி பூலோகத்திலுள்ள தமது மக்களைப் பார்க்கிறார். இப்போது இந்த சபையிலுங்கூட நாம் அவருடைய நாமத்தில் கூடி அவருடைய பந்தியை சுற்றி அமர்ந்திருப்பதை கவனிக்கிறார். இங்குள்ளவர்களில் அநேகர் அவருடைய இரத்தத்தினால் மீட்கப்பட்டவர்களாக இரட்சிப்பின் சந்தோஷத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறோம் என நான் நம்புகிறேன். பிதாவானவர் இங்கு கூடியிருப்பவர்களையும், இது போல இன்னும் அநேக

## நமது கர்த்தரின் பயபக்தியான கேள்வி

இடங்களில் கர்த்தருடன் ஐக்கியப்படுவதற்காக கூடிவந்திருக்கிற ஆயிரக்கணக்கான விசுவாசிகளையும் தமது குமாரனுக்குக் காண்பித்து, "ஏன் என்னைக் கைவிட்டீர்? என்று நீ கேட்ட கேள்விக்கு பதில் இதுதான்" என்று சொல்லிக் கொண்டிருப்பது போல எனக்குத் தோன்றுகிறது.

பிரியமானவர்களே, நமது கேள்விக்கும் தேவன் இந்த மாதிரியான ஒரு பதிலைத்தான் வைத்திருப்பார். ஒருவேளை அது மோட்சத்திற்குப் போன பிறகுதான் நமக்குத் தெரியவரலாம். மூன்று மாதங்களுக்கு முன்னால் நான் சுகவீனமடைந்து படுக்கையில் வேதனையுடன் இருந்த போது, ஏன் எனக்கு அப்படியானது என்பது விளங்கவில்லை. இரவும் பகலும் தூக்கமின்றி கஷ்டப்பட்டேன். ஆனால் அதற்குப் பிற்பாடு அநேக ஆத்துமாக்களுக்கு பிரசங்கிக்க அவர் உதவி செய்தபோதுதான் அதன் காரணம் எனக்கு விளங்கிற்று. சில வேளைகளில் கடவுள் உங்களைத் தனியே விட்டுவிட்டு சென்றுவிடுகிறார். வேறுசில முக்கியமான தருணங்களில் உங்களோடு இருப்பதற்காக அப்படி செய்கிறார். ஒளியை மறைக்கிறார், ஆனால் பிற்பாடு ஏழு மடங்கு வெளிச்சத்தை உங்கள் ஆத்துமாவில் பிரகாசிக்கச் செய்கிறார். அவருடைய மகிமை விளங்கும்படியாகவே அவர் உங்களை விட்டுச் செல்கிறார் என்பதை உணரச் செய்கிறார். தமது மகிமை விளங்குவதற்காக அவர் உங்கள் விசுவாசத்தை சோதிக்கிறார். அந்நேரத்திலும் நீங்கள் பின்வாங்காமல் மாத்திரம் இருங்கள். அவரை நோக்கிக் கூப்பிடுங்கள். அவரை என் தேவனே என்று அழையுங்கள். ஒருபோதும் முறுமுறுக்காதீர்கள். ஏன் கர்த்தாவே என்று நீங்கள் கேட்கலாம். என்ன கஷ்டம் வந்தாலும் அவருடைய வேலையைத் தொடர்ந்து செய்யுங்கள். பூலோகத்தில் நீங்கள் கிறிஸ்துவின் மாதிரியைப் பின்பற்றுவீர்களானால், ஒருவேளை அவரைப் போலவே உங்களுக்கும் பரலோகத்தில் பதில் கிடைக்கும்.

இன்னும் ஒருசில வார்த்தைகளைக் கூறாமல் இந்த செய்தியை முடிக்க முடியாது. கடவுள் தமது ஜனத்தை நித்தியமாகக் கைவிடுவதில்லை. ஆனால் அவருடைய ஜனமாக இல்லாதவர்களை, அவரை விசுவாசிக்காதவர்களை அவர் நித்தியநித்தியமாகக் கைவிடுவார். "ஏன் எங்களைக் கைவிட்டீர்?" என்று நீங்கள் கேட்பீர்களானால், அதற்கு கிடைக்கும் பதில் நித்தியத்துக்கும் உங்கள் காதுகளில் எதிரொலித்துக் கொண்டேயிருக்கும். "நீ என்னைக் கைவிட்டாய்", "இவ்வளவு பெரிதான இரட்சிப்பை அலட்சியம் பண்ணினால்

நீ எப்படி தப்பித்துக் கொள்வாய்?", "கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவை விசுவாசி. அப்போது இரட்சிக்கப்படுவாய்" என்கிற பதில்கள் எதிரொலிக்கும்.

> "கிருபையின் சத்தத்தை உன் காதுகள் கேட்க மறுத்தால்,
> விசுவாசியாத ஜனமாகிய யூதரைப் போல
> கடின இருதயம் கொண்டிருந்தால்,
> தேவன் உறுதியாகக் கூறுவார்:
> இளைப்பாறுதலின் வாக்கை அலட்சியம் செய்த உனக்கு
> அதில் பங்கில்லை."

கிறிஸ்துவின் நாமத்தின் நிமித்தமாக, உங்களுக்கு அப்படியான நிலமை ஏற்பட தேவன் அனுமதியாமல் இருப்பாராக. ஆமேன்.

*(ஏப்ரல் 7, 1872-ஆம் ஆண்டு, மெட்ரோபாலிடன் டாபர்நாகிள், நியுயிங்டன் என்கிற இடத்திலே, ஞாயிற்றுக்கிழமை மாலையிலே, சார்ல்ஸ் ஸ்பர்ஜன் அளித்த தியானத்தின்(3507) சாராம்சம்)*

# 4. பிதாவின் பணியில் கிறிஸ்து

*என் பிதாவுக்கடுத்தவைகளில் நான் இருக்க வேண்டியதென்று அறியீர்களா? - லூக் 2:49*

மீட்பின் பணியில் பிதா எவ்வளவு ஆர்வமுடையவராய் இருக்கிறார் என்பதை பாருங்கள். அதை தமது "பிதாவின் அலுவல்" (His business) என்று இயேசுக்கிறிஸ்து குறிப்பிடுகிறார். இயேசுக்கிறிஸ்து மீட்பின் திட்டத்தை நிறைவேற்ற வந்திருந்தாலும், பாவமில்லாத பூரணநிலையை நமக்கு மாதிரியாக காண்பிக்க வந்திருந்தாலும், இரட்சிப்பின் வழியை நிறுவுவதற்காக வந்திருந்தாலும், அதைக் கிறிஸ்து தமது சொந்த அலுவலாக வராமல், பிதாவின் அலுவலாக வந்திருப்பதாக வெளிப்படுத்துகிறார். மனிதனுடைய இரட்சிப்பில் குமாரனைப் போலவே பிதாவும் அதிக அக்கறை காண்பிக்கிறார். குமாரனுடைய இரத்தம் வடியும் இருதயத்தைப் போலவே பிதாவின் இருதயமும் அன்பினால் நிரம்பி வழிகிறது. நமக்கு பதிலாளாகவும், நமது பணயமாகவும் நமக்கு எல்லாமுமாகவும் இருக்கின்ற இயேசுக்கிறிஸ்துவின் இளகிய மனதைப் போலவே, திரித்துவத்தின் முதலாம் நபராகிய பிதாவும், அவரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் மீது இளகிய மனதுடையவராயிருக்கிறார். ஆகவே அதை "என் பிதாவின் அலுவல்" என குமாரன் குறிப்பிடுகிறார்.

தமது சொந்த அலுவலாக அல்ல, தன் தகப்பனுடைய அலுவலை செய்வதற்காகத் தம்மை அவருடைய ஊழியனாகத் தாழ்த்திக் கொண்ட

கிறிஸ்துவின் வார்த்தையை கவனியுங்கள். ஒரு மானுடக் குழந்தையாக தன்னைத் தாழ்த்தி, தமது தாய்க்குக் கீழ்ப்படிந்திருந்ததை பாருங்கள். ஒரு மனிதனாக தம்மைத் தாழ்த்தி, தமது பிதாவாகிய கடவுளுக்கு அவர் பணிந்து நடந்ததைப் பாருங்கள். பிதாவுக்கு சமமான அதிகாரங்களை உடையவராக இருந்தாலும், மனித ரூபத்தை அவர் எடுத்துக் கொண்டார். "அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்கு சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத் தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷ சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத் தாமே தாழ்த்தினார்." ஆகவே, விசுவாசிகளே, திரித்துவத்தின் மூன்று நபர்களையும் சமமாக நேசிக்கக் கற்றுக் கொள்ளுங்கள். இரட்சிப்பின் பணியில் திரித்துவத்தின் மூவரும் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்பதை நினைவில் வையுங்கள். "மனிதனை உருவாக்குவோம்" என்று மூவரும் இணைந்து சிருஷ்டிப்பில் செயல்பட்டதைப் போலவே, "மனிதனைக் காப்பாற்றுவோம்" என்று இரட்சிப்பிலும் திரித்துவ தெய்வமாக அவர்கள் இணைந்து செயலாற்றுகிறார்கள்.

இரட்சிப்பின் பணியில் ஒவ்வொருவரும் தனித்தனியாகவும், இணைந்தும் தமது பங்கை நிறைவேற்றியிருக்கிறார்கள். ஏசாயாவின் தீர்க்கதரிசன வசனத்தை நினைவுகூருங்கள்: "அநேகரை அவருக்குப் பங்காகக் கொடுப்பேன். பலவான்களோடு அவர் தமது கொள்ளையைப் பங்கிட்டுக் கொள்வார்" (என ஆங்கில வேதாகமத்தில் பார்க்கிறோம்). கடவுள் பங்கிடுகிறார், கிறிஸ்துவும் பங்கிடுகிறார். வெற்றி தேவனுடையது! "பிதா அநேகரை அவருக்குப் பங்காகக் கொடுக்கிறார்". கிறிஸ்துவும் அதைப் போலவே "பலவான்களோடு பங்கிட்டுக் கொள்கிறார்." திரித்துவத்தின் மூவரும் சமமானவர்கள். அவர்களில் யாராவது ஒருவரை முதன்மைப்படுத்திப் பார்க்காதீர்கள். திரித்துவ தேவனுக்கு ஒரேவிதமான மரியாதையை செலுத்துங்கள். ஏனென்றால் அவர்கள் ஒன்றாயிருக்கிறார்கள். அவர்கள் ஒரே எண்ணமுடையவர்கள், ஒரே மாதிரியான குணமுடையவர்கள். மொத்தத்தில் ஒன்றாயிருப்பவர்கள். அவர்கள் மூவராயிருந்தாலும் ஒன்றாயிருப்பதால், நாம் அவர்களைப் புகழ்ந்து போற்ற வேண்டிய விதமாவது: "வானத்திற்கும் பூமிக்கும் தேவனாகிய அவர்

ஒருவருக்கே ஆதியிலும் இப்போதும் எப்போதுமான சதாகாலங்களிலும் இருக்கிறபடியே மகிமை உண்டாவதாக. ஆமேன்" என்பதாகும்.

இப்போது உங்கள் கவனத்தை இயேசு கூறின அந்த வார்த்தைகளில் திருப்ப விரும்புகிறேன். ***"நான் என் பிதாவுக்கடுத்த அலுவல்களில் இருக்க வேண்டும் என்பதை அறியீர்களா?"*** என்கிறார். அதை சொல்லுகையில் ***மீட்பர் என்னவிதமான ஆவியில்*** கூறினார் என்பதை விளக்கப் போகிறேன். அதற்குப் பிறகு, கடவுளின் பிள்ளைகளாகிய நீங்களும் ***அதேவிதமான ஆவியோடு பணி செய்ய வேண்டும்*** என்பதை உங்களுக்கு வலியுறுத்தப் போகிறேன். "என் பிதாவுக்கடுத்த அலுவல்களில் நான் இருக்க வேண்டும் என்பதை அறியீர்களா?" என்று நீங்களும் அதே உறுதியோடு சொல்லக்கூடிய விதமாக நான் உங்களுக்குக் கற்பிக்கப் போகிறேன்.

## அ) கிறிஸ்துவின் ஆவி

தமது பிதாவின் சித்தத்தை மாத்திரமே நிறைவேற்றும்படியாக, தம்மை முழுவதுமாக அர்ப்பணித்திருந்த ஆவியை உடையவராய் கிறிஸ்து இருந்தார். பிதாவுக்கு ஊழியம் செய்தேயாக வேண்டும் என்கிற வைராக்கியமான ஆவியைக் கொண்டிருந்தார். "வேண்டும்" என்கிற வார்த்தையின் அழுத்தத்தை கவனியுங்கள். "பிதாவுக்கடுத்த அலுவல்களில் நான் இருக்க **வேண்டும்** என்பதை அறியீர்களா?" மற்ற வேலைகளில் ஈடுபடாதபடிக்கு என்னிலுள்ள ஏதோவொன்று என்னைத் தடுக்கிறது. எங்கிருந்தாலும், எல்லா வேளைகளிலும், பிதாவின் அலுவல்களில்தான் ஈடுபட வேண்டும் என்று என்னைக் கட்டுப்படுத்துகிற ஏதோவொன்று என்னை முழுவதுமாக ஆட்கொண்டிருப்பதை நான் உணருகிறேன். அதுவே பரிசுத்தமும், மேன்மையும், உண்மையும், முழுமையும், உறுதியுமாக கடவுளுக்கென இருதயத்தை அர்ப்பணித்திருக்கிற ஆவி. "நான் என் பிதாவுக்கடுத்த அலுவல்களில் இருக்க வேண்டும் என்பதை அறியீர்களா?" என கேட்கும் ஆவி.

இத்தலைப்பின் கீழ் நாம் இரண்டு காரியங்களைப் பார்க்கப் போகிறோம். முதலாவது, பிதாவுக்கடுத்த அலுவல்களில் ஈடுபட வேண்டுமென கிறிஸ்துவை உந்திய சக்தி என்ன? இரண்டாவதாக, அவர் எப்படி தமது

பிதாவுக்கடுத்த அலுவல்களில் ஈடுபட்டார்? அது என்ன அலுவல்? என்பதாகும்.

## 1. கிறிஸ்துவை உந்திய சக்தி

### *கீழ்ப்படிதலின் ஆவி!*

"நான் என் பிதாவின் பணிகளில் ஈடுபட வேண்டும்" என்று கிறிஸ்துவை சொல்லத் தூண்டியது என்ன? அவருடைய இருதயத்தில் குடிகொண்டிருந்த ***கீழ்ப்படிதலின் ஆவி***யே அவரை அப்படி சொல்லத் தூண்டியதற்கு முதலாவது காரணம். அவர் அடிமையின் ரூபமெடுத்த போது, அவர் அடிமைக்குரிய கீழ்ப்படிதலின் ஆவியையும் பெற்றுக் கொண்டார். அதிகாரமுடையவராக இருந்தபோது எப்படி அதற்குரிய குணநலன்களை முழுமையாகக் கொண்டிருந்தாரோ அது போலவே அடிமைக்குரிய குணநலன்களையும் முழுமையாக ஏற்றுக் கொண்டார். அதைத் தமது வாழ்நாள் முழுவதுமாக ஒரு குறைவுமின்றி கடைப்பிடித்து வாழ்ந்தார். பிரியமானவர்களே, நீங்கள் மனந்திரும்பி கடவுளுக்குள்ளாக வந்த அந்த ஆரம்ப நாட்களிலே எப்படி இருந்தீர்கள் என்பதை ஞாபகத்தில் வைத்திருக்கிறீர்களா? மறுபிறப்பின் அனுபவத்தைப் பெற்ற அந்த ஆரம்ப நாட்களிலே உங்கள் ஆவியானது எவ்வளவு உறுதியாயும், சுறுசுறுப்பாயும் இருந்தது! தேவனுக்குக் கீழ்ப்படிவதில் எவ்வளவு தீவிரம் காட்டினீர்கள்! எவ்விதத்திலாவது அவருக்கு சேவை செய்ய வேண்டுமென எவ்வளவு ஆர்வம் காண்பித்தீர்கள்!

என்னைக் குறித்து எனக்கு ஞாபகம் இருக்கிறது. ஐந்து நிமிடத்துக்கொரு முறையாவது கிறிஸ்துவுக்கென ஏதாவது செய்யாமல் என்னால் சும்மா இருக்க முடிந்ததில்லை. நான் தெருவில் நடந்து சென்றேனென்றால் என் கைகளில் கைப்பிரதிகள் இருக்க வேண்டும். இரயில் நிலையத்திற்குச் சென்றால், ஜன்னல் வழியாக கைப்பிரதியை அந்த வண்டியில் வைக்க வேண்டும். எனக்கு நேரம் கிடைக்கும் போதெல்லாம் முழங்கால்படியிட்டு ஜெபிக்க வேண்டும். அல்லது வேதவாசிப்பில் ஈடுபட்டிருக்க வேண்டும். யாராவது தோழர்களை சந்தித்தால் அவர்களுடைய உரையாடலை கிறிஸ்துவின் பக்கமாகத் திருப்ப வேண்டும். அதன் மூலமாக என் எஜமானுக்கு நான் ஊழியம் செய்ய வேண்டும். இப்படியாக அந்நாட்களில் இருந்தேன். அத்தகைய பெலன் இப்போது எனக்கு இல்லை என்பதை நான் ஒத்துக்

கொள்ள வேண்டியதாகத்தான் இருக்கிறது. உங்களில் பல பேரிடமிருந்தும் அத்தகைய உற்சாகம் குறைந்து போயிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. நமது வாழ்க்கையின் ஆரம்ப நாட்களில் நாம் பல விஷயங்களை கர்த்தருக்காக செய்திருப்போம். அந்த பெலனும், உற்சாகமும் நமக்குத் திரும்பவும் கிடைத்ததானால் நாம் நமது எஜமானுக்காக பல ஊழியங்களை செய்து அவருக்குக் கீழ்ப்படிந்திருப்போம். அவருக்குக் கீழ்ப்படிந்திருப்பது எனக்கு சந்தோஷத்தை அளிக்கும் காரியம்.

கிறிஸ்துவும் தேவனுக்குக் கீழ்ப்படிந்திருப்பதை சந்தோஷமாக எண்ணினார். கடவுளுடைய பணிகளை அவர் செய்துதான் ஆக வேண்டும். தேவனுக்குக் கீழ்ப்படிந்திருக்க வேண்டும். அப்படி செய்யாமல் அவரால் இருக்க முடியாது. அவரில் இருக்கின்ற ஆவி, அவரை தேவனுடைய அலுவல்களில் ஈடுபட ஏவுகிறது. ஆனால், பாவிகளிடம் இருக்கும் ஆவியோ அவர்களை பாவம் செய்யத் தூண்டுகிறது. புயல் காற்றில் அகப்பட்ட இலையானது காற்றின் வேகத்தை எதிர்க்க முடியாமல் போவது போல, பாவிகளின் இச்சை அவனை பாவத்தை நோக்கி இழுத்துச் செல்கிறது. நம்மிடம் இருக்கும் இச்சை, மிகுந்த வலிமையானது. நாம் அதற்கு அடிமையாக இருக்கவே விரும்புகிறோம். நமது பழக்கவழக்கங்களை அறுத்து எறிய முடியாதபடிக்கு அவை நம் மீது கொடுங்கோலாட்சி செலுத்துகின்றன. காற்றில் அகப்பட்ட வைக்கோல், காற்றின் போக்கிலேயே செல்வது போல, நாம் தீமை செய்யும்படிக்கே விரைந்தோடுகிறோம். நமது இச்சைகளில் பிடிபட்டு அலைக்கழிக்கப் படுகிறோம். ஆனால் புதிய இருதயம் நமக்குள் வந்த பிறகு நாம் அதற்கு எதிர்மாறாக நடக்கிறோம். கீழ்ப்படிதலின் ஆவி நமக்குள் கிரியை செய்ய ஆரம்பிக்கிறது. கடவுளுக்கு வேலை செய்யும்படி நம்மை கட்டுப்படுத்துகிறது. "நாங்கள் எங்கள் பிதாவுக்கடுத்த அலுவல்களில் இருக்க வேண்டியது அவசியம்" என்று, விடுதலை பெற்ற ஆவி நம்மை உண்மையுடன் சொல்ல வைக்கிறது. அப்படி செய்யாமல் நம்மால் இருக்க முடியாது.

*புனிதமான அழைப்பு!*

இன்னொரு காரியமும் கிறிஸ்துவை உந்தியது. சில மனிதர்களிடம் மாத்திரமே செயல்படுகிற காரியம் அது. பிதாவின் பணியில் ஈடுபடுவதற்கு அவரை உற்சாகப்படுத்திய இன்னொரு விஷயம் என்னவென்றால், ***எடுத்துக் கொண்ட அலுவலை நிறைவேற்றும்படிக்கு அவருக்கு கொடுக்கப்பட்ட புனிதமான***

*அழைப்பு!* புனிதஅழைப்பு என்று பேசுவது ஒருவேளை உங்களுக்கு சற்று வித்தியாசமாகத் தோன்றலாம். அது எப்படித் தோன்றினாலும் நான் சொல்வது இதுதான் - ஒரு முக்கியமான காரியத்தை செய்வதற்கான விசேஷித்த அழைப்பை, தான் பெற்றிருப்பதாக நம்புவது ஒருவனுக்கு அதிகமான பெலனைத் தருகிறது. ஒரு முக்கியமான காரியத்தை செய்யும்படியாக தேவன் தன்னை வைத்திருக்கிறார் என்று ஒருவன் நம்புகிறான் என வைத்துக் கொள்வோம். அதைக் குறித்து ஒருவேளை நீங்கள் ஏளனம் செய்யலாம். அதைப் பற்றி அவனுக்குக் கவலையில்லை. நீங்கள் ஆதரித்தாலும் சரி, அல்லது ஏளனம் செய்தாலும் சரி அவன் பாதிக்கப்படுவதில்லை. அவன், தான் செய்ய நினைத்தவைகளை செய்யத்தான் செய்வான். தேவன், தன்னை அந்த வேலையை செய்யும்படி சொல்லுகிறார் என அவன் நம்புகிறான். நீங்கள் ஒருவேளை அப்படி இல்லையென மறுக்கலாம். அவன் உங்களுடைய அபிப்ராயத்தை ஒருபோதும் கேட்கவில்லை. தேவன் அதை கட்டளையிட்டதாக அவன் நினைக்கிறான். ஆகவே அவன் செயலாற்ற ஆரம்பிக்கிறான். அவனைத் தடுக்க உங்களால் முடியாது. அவன் எதுவும் செய்யாமல் இருந்தானென்றால் ஒரு ஆவி தன்னை ஏவுகிறதை உணர்வான். அது என்னவென்பதை அவன் அறிவான். வாழ்வில் தனக்கு ஒப்புவிக்கப்பட்ட அந்த பணியை செய்யாவிட்டால் அவன் சந்தோஷமாக இருக்க மாட்டான். தேவன் அவனைப் பேசச் சொல்லும்போது அவன் தன் வாயைத் திறவாமல் மௌனமாக இருந்தானென்றால் கர்த்தரின் வார்த்தை அவனுடைய எலும்புகளில் தீயாய் பற்றி எரியும். "வார்த்தைகள் எனக்குள் நிறைந்திருக்கிறது. என் உள்ளத்திலுள்ள ஆவி என்னை நெருக்கி ஏவுகிறது" என்று எலிகூவோடு சேர்ந்து அவனும் கூறுவான். நான் பேசாவிட்டால், வெடித்து விடுவேன். ஆகவே நான் பேசித்தான் ஆக வேண்டும் என்பான்.

கர்த்தருக்காக பெரிய காரியங்களை செய்தவர்கள், அதற்கென விசேஷித்த அழைப்பைப் பெற்றவர்கள் என்பதை தெரிந்து கொள்ளுங்கள். அப்போஸ்தலருடைய அழைப்பில் எனக்கு சிறிதும் சந்தேகம் இல்லாதது போலவே, மார்டீன் லூதரும் விசேஷித்தவிதமான காரியங்களை செய்ய அழைப்பைப் பெற்றவர்தான் என்பதில் எனக்கு சந்தேகமில்லை. அவருக்கும் அதில் சந்தேகமில்லை. மற்றவர்களுக்கு விருப்பமில்லை என்பதற்காகவே அவர் ஒரு காரியத்தைச் செய்தார். போப்பின் கள்ள உபதேசத்தை அடித்து நொறுக்குவதற்காக அவர் ஒரு கன்னியாஸ்திரியை திருமணம் செய்யத் தீர்மானித்தபோது, அவருடைய நண்பர்கள் அது பயங்கரமான காரியம் எனக்

கூறினர். லூதர் அவர்களிடம் கலந்து பேசினார். அவர்கள் அதற்கு மறுப்பு தெரிவித்தபடியினால், தாமதிக்காமல் வெகு விரைவாக தாம் செய்ய நினைத்ததை செய்து முடித்தார். ஒன்றை செய்ய விடாமல் தடுத்ததே, அவர் சீக்கிரமாக அதை செய்து முடிக்கக் காரணமாயிருந்தது என்பது ஒருவேளை உங்களுக்கு ஆச்சரியத்தைத் தரலாம். ஆனால் போப்பின் போதனைகளை முறியடிப்பதே தனக்கு நியமிக்கப்பட்ட பணி என்பதை அவர் உணர்ந்திருந்தார். அதற்காக அவர் எதை வேண்டுமானாலும் இழக்க தயாராயிருந்தார். நண்பர்களின் நட்பையும் இழந்துவிட தயாராக இருந்தார்.

இரவும் பகலும் அவர் செய்ய வேண்டிய பணி, போப்பை எதிர்ப்பது, அவருடைய போதனைகளை எதிர்ப்பது, அதன் சீர்கேடுகளை எழுதுவது. அதை லூதர் செய்து முடிக்கத்தான் வேண்டும். பல வேளைகளில் முரட்டுத்தனமான சவால்களை சந்திக்க வேண்டியிருந்தாலும் அதை லூதர் ஏற்கத்தான் வேண்டும். அது அவருக்கு அளிக்கப்பட்ட அழைப்பு. அதை அவர் செய்ய வேண்டும். அவருடைய நாவை அவர்கள் அறுத்திருந்தாலும், அவர் ஒரு பேனாவை எடுத்து, தீப்பொறி பறக்கும் வாசகங்களால் போப்பின் அதிகாரத்திற்கு முடிவு கட்டியிருப்பார். அவரால் அதை செய்யாமல் இருக்க முடியாது. ஏனென்றால் அப்பணியை செய்யும்படி பரலோகம் அவரை உந்தியது. அவருக்கு ஒப்புவிக்கப்பட்ட அலுவல் வானத்திலிருந்து வந்தது. காற்றை அடக்கவும், அலைகளை அமரப் பண்ணவும் ஒரு மனிதனாலும் முடியாதது போல, லூதரை தேவனுக்கடுத்த அலுவலை செய்யவிடாமல் தடுக்க யாராலும் முடிந்திருக்காது. நமது ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்துவுக்கு மிக மிக விசேஷித்த பணி நியமிக்கப்பட்டிருந்தது. "கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என் மேல் இருக்கிறார். சிறுமைப்பட்டவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்கக் கர்த்தர் என்னை அபிஷேகம் பண்ணினார்." இந்த அபிஷேகத்தை கிறிஸ்து உணர்ந்தார். அது தன்னை வல்லமையாய் ஏவுகிறதை உணர்ந்தார். ஆகவே அவர் சும்மா இருக்கக் கூடாது, இருக்க முடியாது. சும்மா இருப்பதற்கு அவர் துணிய மாட்டார். ஆகவே, "என் பிதாவின் பணிகளில் நான் ஈடுபட வேண்டும்" என்று அவர் அறிவிக்கிறார்.

### *பொருத்தனை!*

அடுத்தபடியாக, அவர் ஏற்றுக் கொண்டிருந்த ஒரு பொருத்தனை அவரை பிதாவுக்கடுத்த அலுவல்களில் ஈடுபட ஏவியது. நம்மில் ஒருசிலருக்கே

கிறிஸ்து தம் மீது ஏற்றுக் கொண்டிருந்த அந்த விஷயத்தைக் குறித்து ஆழமாகத் தெரியும். அவர் ***தம் மீது ஒரு பொருத்தனையை ஏற்றுக் கொண்டிருந்தார்***. அதை செய்து முடிக்க ஆதிமுதற்கொண்டு தீர்மானம் பண்ணியிருந்தார். உடன்படிக்கையின் பணயமாக அவர் தம்மை ஒப்புக் கொடுத்திருந்தார். பிதாவின் அலுவலை நிறைவேற்ற வேண்டும் என உறுதிபூண்டிருந்தார். மனிதனாக அவதரிக்க வேண்டுமென்ற புனிதமான சபதத்தை தன் மீது ஏற்றுக் கொண்டிருந்தார். தமது மக்களுக்காக ஒரு கிரயத்தை செலுத்துவதாக வாக்களித்திருந்தார். பூலோகத்தில் வந்து பிதாவின் அலுவலை செய்து முடிக்கத் தீர்மானித்திருந்தார். என்னவானாலும் இவைகளை நிறைவேற்ற வேண்டுமென்ற வைராக்கியம் கொண்டிருந்தார். "தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ, வருகிறேன், புஸ்தகச் சுருளிலே என்னைக் குறித்து எழுதியிருக்கிறது என்றார்." ஆகவே, அவருடைய உண்மையும், அவர் மேற்கொண்ட உடன்படிக்கையும், அவருடைய தீர்மானமும், பணயமும், எடுத்துக் கொண்ட சபதமும், பொருத்தனையும்தான் அவரை "நான் என் பிதாவுக்கடுத்த அலுவல்களில் ஈடுபட வேண்டும்" என்று சொல்ல வைத்தது.

சகோதரரே, நீங்கள் ஏதாவது பொருத்தனை செய்தீர்களானால் அதை கடைப்பிடிப்பதற்கு மிகவும் கவனமாயிருங்கள். அடிக்கடி பொருத்தனை செய்யாதீர்கள். பொருத்தனை செய்யும்படியாக தேவன் நம்மைக் கேட்கவில்லை. ஆனால் அவருடைய ஆவியானது நம்மில் கிரியை செய்து, பொருத்தனை செய்ய வைக்குமானால், அதைத் தவறாமல் நிறைவேற்ற வேண்டும். அவருடைய பெலனில் தரித்திருந்து, நேர்மையாக பொருத்தனை செய்கிறவர்களாயிருக்க வேண்டும். பொருத்தனை செய்தவன், தான் செய்த பொருத்தனையை செய்து முடிக்க வேண்டுமென தீர்மானித்துக் கொள்ள வேண்டும். அதற்கு இடையூறாக எந்தக் கஷ்டம் வந்தாலும் அதை செய்து முடியுங்கள். எவ்வளவு சிரமமாக இருந்தாலும் அதை கைவிட்டு விடாதிருங்கள். அந்த பொருத்தனையானது சரியானதாக இருக்குமானால், அதை நிறைவேற்றுவதற்கு தேவனும் உதவி செய்வார். ஓ! கர்த்தரின் நிமித்தமாக பொருத்தனை செய்து கொண்டவர்களே! அவரைப் பின்பற்றுவதாக உங்களில் அநேகர் பொருத்தனை செய்திருக்கிறீர்கள். அவருடைய புனிதமான ஒரு கட்டளையின் மூலமாக நீங்கள் உங்களை அவருக்கு அர்ப்பணித்திருக்கிறீர்கள். மற்றொரு புனித கட்டளையின்படியாக இயேசுக்கிறிஸ்துவோடு ஐக்கியப்படுகிறீர்கள். ஆகவே உங்கள்

## பிதாவின் பணியில் கிறிஸ்து

பொருத்தனையை நிறைவேற்றத் தவறாதிருங்கள். இரவும், பகலும், ஒவ்வொரு மணி வேளையிலும், தொடர்ச்சியாக, என்றென்றுமாக அதை அவருக்கு செலுத்துங்கள். அதுவே உங்களை, "நான் என் பிதாவுக்கடுத்த அலுவல்களில் ஈடுபட வேண்டும்" என்று சொல்லும்படியாக ஏவட்டும். இவைகளே கிறிஸ்துவை பரலோகப் பணிகளில் ஈடுபட ஏவிய காரணங்கள் என நினைக்கிறேன்.

அடுத்தபடியாக, பிதாவுக்கடுத்ததான அலுவல்களில் என்னவிதமான காரியங்கள் அடங்கி உள்ளன என்பதைப் பார்க்கலாம். இதில் மூன்று காரியங்களைக் காணலாம் - முன்மாதிரி, ஸ்தாபித்தல், பிராயச்சித்தம்.

## 2. பிதாவின் அலுவல்கள்

### *பரிபூரணமான முன்மாதிரி!*

பிதாவின் அலுவல்களில் ஒன்று, ***பரிபூரணரான முன்மாதிரியை*** அவர் நமக்காக, நாம் பின்பற்றுவதற்காக அனுப்புவதாகும். விதவிதமான பரிசுத்தவான்களின் வாழ்க்கையை அவர் தமது வேதபுத்தகத்தில் எழுதிக் கொடுத்திருக்கிறார். ஒரு பரிசுத்தவான் ஒரு நற்குணத்தில் சிறந்தவராகக் காணப்படுவார். மற்றொருவர் இன்னொரு காரியத்திலே சிறந்து விளங்குவார். கடைசியில் தேவன், இந்த நற்குணங்கள் யாவையும் ஒட்டு மொத்தமாக சேர்த்து, ஒரே மனிதனிடம் அளித்து அவரை உலகில் யாவருக்கும் முன்மாதிரியானவராக வைக்க சித்தம் கொண்டிருந்தார். அதன்படி அனைத்து நற்குணங்களையும் கொண்டவராக நமது கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து இவ்வுலகிலே வந்து நமக்கு உதாரணபுருஷனாக வாழ்ந்தார். தனித்தனியான முத்துக்களையெல்லாம் கோர்த்து ஒரு மாலையாக்குவது போல, அவர் இயேசுவில் சகல நற்குணங்களையும் சிறப்பிக்கச் செய்தார்.

ஒரு சிற்பக்கலைஞன், பல்வேறு சிற்பங்களைப் பார்க்கிறான். ஒன்றில் காலின் அமைப்பு நன்றாக இருக்கிறது. மற்றதில் கைகள் சிறப்பாக வந்திருக்கிறது. இன்னொன்றில் கண்கள் அழகாக உருப்பெற்றிருக்கிறது. மற்றொன்றில் தலை கம்பீரமாக காட்சியளிக்கிறது. இவை அனைத்தையும் மனதில் கொண்டவனாக புதிதான ஒரு சிற்பத்தை அவன் உருவாக்கும்போது அந்த சிற்பம் எவ்வளவு நேர்த்தியாக காணப்படும்! முதலாவது அதில் மிகுந்த அழகு காணப்படும். அடுத்தபடியாக அது மனித உருவமைப்புக்கு

நல்லதொரு உதாரணமாகக் காணப்படுமல்லவா! அது பிற்கால கலைஞர்களுக்காக என்றென்றும் நிலைத்திருக்கிற மாதிரி அமைப்பாக இருக்கும். அது போலவே கடவுளும் செய்திருக்கிறார்: "இதோ யோபு, பொறுமைக்குப் பெயர்போனவர். இதோ மோசே, சாந்தமும் மனத்தாழ்மையுமானவர். இன்னும் வேதத்தில் காணப்படுகிற அநேக பரிசுத்தவான்கள் விதவிதமான நற்குணங்களில் சிறந்தவர்கள். இவர்கள் அனைவருடைய குணங்களையும் ஒன்றாக சேர்த்து ஒரு மனிதனில் வைக்கப் போகிறேன். கிறிஸ்து இயேசுவாகிய அந்த மனிதர், அனைவருக்கும் என்றென்றைக்கும் உதாரணபுருஷராக இருப்பார்" என்று தேவன் தீர்மானித்தார். அதை கிறிஸ்து தமது வாழ்நாள் முழுவதுமாக நிறைவேற்றினார். அதைத் தமது பிதாவின் அலுவலாக அவர் செய்தார்.

உங்களால் பின்பற்ற முடியாத எந்தக் காரியத்தையும் கிறிஸ்து தமது வாழ்நாளில் செய்யவில்லை. அவர் ஞானஸ்நானம் எடுக்க வேண்டுமா என்று நினைப்பீர்கள். ஆனால் அவர் யோர்தானுக்குச் சென்று, நதியில் மூழ்கி, மரணத்துக்குள்ளாக அடக்கம்பண்ணப்படும் சாயலுக்கு ஒப்பாகி, மீண்டும் உயிரோடு எழுந்திருக்கும் விதமாக தண்ணீரினின்று வெளியே வந்தார். புதுஜீவனைப் பெற்றுக் கொள்ளும்விதமாக அப்படி மூழ்கி எழுந்திருக்க வேண்டிய அவசியம் அவருக்கு இல்லை. என்றாலும் அதை செய்தார். வியாதியஸ்தரை குணப்படுத்தினார், நாம் இரக்கத்தைக் கற்றுக் கொள்வதற்காக! மாய்மாலத்தைக் கண்டித்தார், நாமும் தைரியமாக இருக்கக் கற்றுக் கொள்வதற்காக! துன்பங்களை சகித்தார், நமக்கு உறுதியைக் கற்றுத் தருவதற்காக! ஏனென்றால் கிறிஸ்துவின் யுத்த வீரர்களாக நாம் நல்ல போராட்டத்தைப் போராட வேண்டுமே. நாம் தாழ்மையையும், பொறுமையையும் கற்றுக் கொள்வதற்காக, அவர் தமது விரோதிகளை மன்னித்தார். தமது ஜீவனையே கொடுத்தார், நாமும் தேவனுக்கு முழுவதுமாக நம்மையே ஒப்புவித்து, மற்றவர்களின் நன்மைக்காக விட்டுக் கொடுப்பதை கற்றுக் கொள்வதற்காக!

கிறிஸ்துவை ஒரு திருமண வீட்டில் வைத்துப் பாருங்கள். அங்கேயும் நீங்கள் அவருடைய மாதிரியைப் பின்பற்ற முடியும். ஆம், பாவமில்லாமல், நன்மையை மாத்திரம் செய்கிறவர்களாயிருக்க உங்களால் முடியும். இயேசுக்கிறிஸ்துவை ஒரு துக்க வீட்டிலே வைத்துப் பாருங்கள் - "இயேசு கண்ணீர் விட்டார்". உங்களாலும் அவரைப் பின்பற்றி

துயரப்படுகிறவர்களோடு துயரப்பட முடியுமல்லவா? இயேசுவை மலை உச்சியில் வைத்துப் பாருங்கள். தனிமையில் அவர் ஜெபித்துக் கொண்டிருப்பார். அதை உங்களால் பின்பற்ற முடியும். ஜனக்கூட்டத்தின் மத்தியில் அவரைப் பாருங்கள். அவர் சிறப்பாகப் பேசிக் கொண்டிருப்பார். அவரைப் பின்பற்றி பேசுவீர்களானால் உங்களாலும் சிறப்பாக பேச முடியும். விரோதிகளின் மத்தியில் அவரைப் பாருங்கள். அவர்களை பிரமிக்கச் செய்வார். இதிலும் அவர் உங்களுக்கு சிறந்த முன்மாதிரியை வைத்திருக்கிறார். நண்பர்களின் மத்தியில் அவரைப் பாருங்கள். "சகோதரனிலும் அதிக சொந்தமாய் சிநேகிப்பவனுமுண்டு" என்பதற்கு உதாரணமாகத் திகழுவார். அதையும் நீங்கள் பின்பற்றலாமே.

அவரை உயர்த்திப் புகழ்ந்து ஓசன்னா என பாடிக் கொண்டிருக்கும்போது அவர் சாந்தமும் மனத்தாழ்மையுமாக "கழுதையின் மீதும் கழுதைக் குட்டியின் மீதும்" ஏறிச் சென்று கொண்டிருப்பார். அவரை அவமானப்படுத்தி, முகத்தில் துப்பும்போதும் அவர் அமைதலாக சகித்துக் கொண்டிருப்பார். உலகம் அவரை உயர்த்தினாலும், தாழ்த்தினாலும், அவர் ஒரேவிதமான ஆவியைக் கொண்டவராக காணப்படுவது அவருடைய விசேஷித்த குணம். அதையே உங்களுக்கும் மாதிரியாக வைத்துப் போயிருக்கிறார். எல்லாவற்றிலும் நீங்கள் கிறிஸ்துவின் உதாரணத்தைப் பின்பற்ற முடியும். "மனுஷகுமாரன் போஜனபானம் பண்ணுகிறவராகவும் வந்தார்" என்பதிலுள்ள கருத்தையும் நீங்கள் பின்பற்ற முடியும். போஜனபானத்தைக் குறித்து தொடாதே, ருசிபாராதே என்று ஆச்சாரங்களை ஏற்படுத்தி வைத்திருந்த பரிசேயருடைய வீணான பாரம்பரியங்களை களைந்து போடுவதற்காகவே அவர் அப்படி வந்தார். அதை அங்கு நிறைவேற்றிக் காட்டினார். "வாய்க்குள் போகிறது மனுஷனைத் தீட்டுப்படுத்தாது. வாயிலிருந்து புறப்படுகிறதே மனுஷனைத் தீட்டுப்படுத்தும்" என்பதை அவர்களுக்கு விளங்கக் காட்டினார். உள்ளான மனுஷன் தீட்டுப்படாதபடிக்கு நாமும் எச்சரிப்பாக இருந்து கொள்ள வேண்டும். தமது பிரகாசமான பரிபூரண நிலையிலிருந்து அவர் ஒருபோதும் விலகவில்லை. எல்லா காரியங்களிலும் சிறந்த முன்மாதிரியைக் காண்பித்து, எப்போதும் பிதாவின் அலுவலை நிறைவேற்றுகிறவராக வாழ்ந்தார்.

***ஸ்தாபித்தல்!***

ஸ்தாபித்தல் என நான் குறிப்பிடுவது, அவர் இவ்வுலகில் ஒரு ***புதிய சகாப்தத்தை நிறுவுகிறார்*** என்பது. புதியவைகளை ஸ்தாபிப்பதின் மூலமாக கிறிஸ்து தமது பிதாவின் பணியை இவ்வுலகில் எப்போதும் நிறைவேற்றிக் கொண்டுவந்தார். சாத்தானால் சோதிக்கப்படும்படியாக வனாந்திரத்திற்கு நடத்தப்பட்டபோதும், தமது பிதாவின் பணியை நிறைவேற்றுகிறவராக இருந்தாரா? ஆமாம், சகோதரரே, அப்போதும் அதை செய்து கொண்டுதான் இருந்தார். "அவர் ஜனத்தின் பாவங்களை நிவர்த்தி செய்கிறதற்கேதுவாக, தேவகாரியங்களைக் குறித்து, இரக்கமும் உண்மையுமுள்ள பிரதான ஆசாரியனாயிருக்கும்படிக்கு, எவ்விதத்திலும் தம்முடைய சகோதரருக்கு ஒப்பாக வேண்டியதாயிருந்தது. ஆதலால், அவர்தாமே சோதிக்கப்பட்டு பாடுபட்டதினாலே, அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவி செய்ய வல்லவராயிருக்கிறார்." ஆகவே அங்கேயும் அவர் பிதாவுக்கடுத்த அலுவல்களில் ஈடுபட்டவராயிருந்தார். அவர் பேசுகையில் தமது பிதாவின் வார்த்தைகளை உறுதிப்படுத்துவதைக் காண்பீர்கள். அவர் பேசாமல் மௌனமாக இருக்கையிலும் பிதாவின் பணியைத்தான் செய்து கொண்டிருக்கிறார். அச்சமயத்தில் அங்கு ஒரு தீர்க்கதரிசனம் நிறைவேறிக் கொண்டிருக்கிறது: "அடிக்கப்படும்படி கொண்டுபோகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப் போலவும், தன்னை மயிர் கத்தரிக்கிறவனுக்கு முன்பாக சத்தமிடாதிருக்கிற ஆட்டைப் போலவும், அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார்."

அவர் ஒரு அற்புதத்தை செய்கிறாரா? அவருடைய சத்தத்திற்குக் காற்றும் கடலும் அடங்குகிறதா? தாம் தெய்வீகமானவர் என்பதை நமக்கு சுவிசேஷமாக அவர் அறிவித்துக் கொண்டிருக்கிறார். அவர் கண்ணீர் சிந்துகிறாரா? தாம் மனிதனாக வந்திருப்பதை நமக்கு சுவிசேஷமாக அறிவித்துக் கொண்டிருக்கிறார். அவர் அப்போஸ்தலர்களைக் கூட்டிச் சேர்க்கிறாரா? தேவனுடைய வார்த்தையை உலகமெங்கிலும் போய் அறிவிப்பதற்காக அவர்களை அனுப்பிக் கொண்டிருக்கிறார். அவர் ஒரு கிணற்றண்டையில் உட்கார்ந்து கொண்டிருக்கிறாரா? அது ஒரு பெண்ணுக்கு தேவகாரியங்களைக் கற்றுத் தருவதற்காக. சமாரியா நாடு முழுவதும் இரட்சிப்பின் வழியை அறிந்து கொள்வதற்காக அவளுக்கு கற்றுத் தருகிறார். இப்படியாக அவர் முன்மாதிரியாகிய பணியையும், தேவகாரியங்களை நிலைநாட்டி ஸ்தாபிக்கும் பணியையும் எப்போதும் தொடர்ந்து செய்வதில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்.

## பிதாவின் பணியில் கிறிஸ்து

*பிராயச்சித்தம்!*

பிரியமானவர்களே, அவர் தமது ஊழியத்தின் உச்சகட்டத்தை அடைந்தபோது, மகா கொடிதான துயரநிலைக்கு ஆளானபோது, ஆயிரம் பேராலும் தாங்க முடியாத நிலைமைக்குள் பிரவேசித்த போது, ***பிராயச்சித்தமாகிய அந்த பெரிதான பணி***யை நிறைவேற்றுகிறபோது, அவர் அதை எவ்வளவு சிறப்பாக செய்து முடித்தார்!

"கெத்சமனே தோட்டத்தில்
முகங்குப்புற விழுந்துகிடக்கிறார்
உன் சிருஷ்டிகர்த்தர்!
கொடிய சிலுவையிலே
மரிக்கும் முன்னதாக மொழிந்தார்:-
**முடிந்தது** என்று."

அவர் தமது பிதாவின் அலுவலைத்தான் நிறைவேற்றினார் என்பதற்கு நிருபணம் இருக்கிறது. பிதாவின் அலுவல்தான் அவரை இரத்த வியர்வை வடிக்கச் செய்தது. பிதாவின் பணியின் நிமித்தமாகத்தான் அவருடைய முதுகில் சாட்டையடிகள் விழுந்தது. பிதாவின் ஊழியத்தின் காரணமாகத்தான் அவர் நெற்றியில் முள்முடி குத்தி இரத்தம் வடிந்தது. பிதாவின் அலுவலினால்தான் அவர் பரியாசம் பண்ணப்பட்டு துப்பப்பட்டார். பிதாவின் பணியை நிறைவேற்றத்தான் அவர் சிலுவை சுமந்தார். சிலுவையில் நிர்வாணமாகத் தொங்கி அவமானத்திற்கு ஆளானார். பிதாவின் பணியை நிறைவேற்றுவதற்காக தன்னையே மரணத்திற்கு ஒப்புக் கொடுத்தார். அவர் விரும்பாவிட்டால் மரித்திருக்க அவசியமில்லை. பிதாவின் பணியின் நிமித்தமாக அவர் பாதாளத்திற்கு இறங்கிச் சென்றார். பிதாவின் ஊழியம் அவரைப் பரலோகத்திற்கு உயர்த்தி, பிதாவின் வலது பாரிசத்திலே உட்காரச் செய்திருக்கிறது. இன்னமும் அவர் பிதாவின் ஊழியத்தை தொடர்ந்து செய்து கொண்டு வருகிறார். இரவும் பகலும் அவர் தம்முடையவர்களுக்காக பிதாவிடம் இடைவிடாமல் பரிந்து பேசிக் கொண்டிருக்கிறார். உயிருள்ளோரையும் மரித்தோரையும் நியாயந்தீர்க்கும் நியாயாதிபதியாக வரும்போதும் அவர் பிதாவின் அலுவலைத்தான் தொடர்ந்து செய்கிறவராய் இருப்பார். செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் பிரிப்பார். பூலோகத்திலுள்ள தம்முடையவர்களை கூட்டிச் சேர்ப்பார். இயேசுக்

கிறிஸ்துவே, உமக்கே கனமும் மகிமையும் உண்டாவதாக. பிதாவின் அலுவலை நீர் செம்மையாக செய்து முடித்தீரே!

## ஆ) கிறிஸ்துவின் சிந்தையோடு பணி செய்யுங்கள்

இதுவரைக்கும் கிறிஸ்துவின் முன்மாதிரியை உங்களுக்கு விவரித்துக் காண்பித்தேன். இப்போது அவருடைய மாதிரியைப் **பின்பற்றும்படி** உங்களுக்கு சில புத்திமதிகளை சொல்லப் போகிறேன்.

கிறிஸ்தவம் ஏன் மெதுவாகவே பரவுகிறது? உலகில் பல காரியங்கள் வெகு விரைவாக பரவி விடுகின்றன. அதற்குக் காரணம் அவைகளை நம்பி ஏற்றுக் கொள்கிறவர்கள், அவற்றைப் பரப்புவதில் அதிக ஆர்வமாய் இருக்கிறார்கள். சில விஷயங்களில் உயிரையும் பொருட்படுத்தாமல் அதற்காக உழைப்பார்கள். கிறிஸ்தவம் அதன் ஆரம்பகாலங்களில் ஏன் அவ்வளவு விரைவாகப் பரவியது என்பதை உங்களால் சொல்ல முடியுமா? ஏனென்றால் பரிசுத்தவான்கள், கிறிஸ்துவுக்காக "தங்கள் உயிரையும் துச்சமாக மதித்தார்கள்." "எல்லாவற்றையும் நஷ்டமென்று இழக்க" துணிந்தார்கள். பவுல் பல நாடுகளுக்குச் சென்று கிறிஸ்துவைப் பிரசங்கித்தார். பேதுருவும் பல்வேறு இடங்களுக்குச் சென்று கிறிஸ்துவைப் பற்றி அறிவித்தார். பிலிப்புவும் மற்ற சுவிசேஷகர்களும் தேசங்களை ஊடுருவிச் சென்று கடவுளின் வார்த்தையைப் பகிர்ந்து கொண்டார்கள். ஆனால், நம்முடைய காலத்தில் கிறிஸ்தவம் பரவுதல் ஏன் இவ்வளவு குறைவாக இருக்கிறதென்பதற்குக் காரணம் சொல்கிறேன். கோபப்படாமல் கேளுங்கள். ஏனென்றால் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்கிறவர்களே அதை நம்புவதில்லை. உண்மைதான்! விசுவாசம் என்பது அவர்களுக்கு அறிவின்பிரகாரமாக இருக்கிறது, ஆனால் உள்ளத்தில் உணர்வுபூர்வமாக அது இல்லை. கிறிஸ்துவின் மீது உண்மையான பக்தி கொண்டவர்கள் அநேகர் இல்லை. இருந்திருந்தால் கடவுள் கணக்கிலடங்கா ஆவிக்குரிய ஆசீர்வாதங்களால் நம்மை நிறைத்திருப்பார் என்பதில் எனக்கு சந்தேகமில்லை. அவருக்காக தங்களை முழுவதுமாக ஒப்புக் கொடுத்திருக்கிறவர்கள் எவ்வளவு குறைவாயிருக்கிறார்கள்!

**பிதாவின் பணியில் கிறிஸ்து**

என் நண்பன் ஒருவருக்கு ஆயிரம் ஏக்கர் வயல் இருக்கிறது. இன்னும் சற்றுத் தொலைவில் நூறு ஏக்கர் நிலமும் அவருக்கு உண்டு. இந்த நூறு ஏக்கர் நிலத்தை குத்தகைக்காரரிடம் கொடுத்துவிட்டால் தனக்கு இன்னும் அதிக வருமானம் வரும் என அவர் அதை குத்தகைக்கு ஒப்படைத்துவிட்டார். அதைக் குறித்து அவர் ஒன்றும் கண்டு கொள்வதில்லை. அதை அவர் தானே பராமரிக்காமல் வேறு ஆட்களிடம் ஒப்படைத்ததால், அதிலிருந்து அவருக்கு அதிகமான வருமானம் எதுவும் வரப்போவதில்லை என்பது நிச்சயம். இப்படித்தான் பலருடைய ஆவிக்குரிய வாழ்க்கையும் இருக்கிறது. வாழ்க்கையில் நீங்கள் அதிக முதலீடு செய்கிற இடம் உங்கள் வியாபாரம் அல்லது அலுவலக வேலைதான். உலகத்து அலுவல்களில்தான் உங்களுடைய பெரும்பாலான நோக்கம் இருக்கிறது. ஆவிக்குரிய வாழ்க்கையை ஒரு சிறிய முதலீடாக ஒரு பக்கத்தில் வைத்துக் கொள்ளவும் விரும்புகிறீர்கள். ஏனென்றால் அதுவும் ஒருசில சிறிய நன்மைகளைக் கொடுக்கக் கூடுமே! மரண நேரத்தில் உதவியாக இருக்கும்பொருட்டு அதிலும் கொஞ்சம் ஈடுபட்டுக் கொள்கிறீர்கள். முழுவதுமான ஆவிக்குரிய வாழ்க்கையை இப்போது வாழ உங்களுக்கு விருப்பமில்லை. உங்கள் வியாபாரத்திலிருந்து தினசரி போதுமான லாபம் உங்களுக்குக் கிடைக்கிறது. ஆவிக்குரிய வாழ்வில் தினந்தோறும் ஈடுபட உங்களுக்கு மனதில்லை.

கிறிஸ்தவம் பரவாததற்கு காரணம், அதன் வேர்கள் உங்கள் இருதயத்தில் ஆழமாக இல்லை. சரீரத்தினாலும், ஆவியினாலும், கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்காக தங்களை முழுவதுமாக அர்ப்பணித்து வாழ்கிறவர்கள் நம் மத்தியில் எவ்வளவு குறைவாயிருக்கிறார்கள்! அப்படி நீங்கள் வாழ முயற்சித்திருந்தால் இந்நேரம் எத்தனை எதிரிகளை சந்தித்திருப்பீர்கள்! சபைக் கூட்டங்களுக்குச் செல்லுங்கள். அங்கு சற்று ஊக்கமாகப் பேசிப் பாருங்கள். என்ன நடக்கும்? தாவீது, கோலியாத்தை எதிர்த்துப் போரிட செல்ல விருப்பம் தெரிவித்தபோது, தாவீதின் சகோதரர் என்ன கூறினார்களோ அதையே இவர்களும் சொல்லுவார்கள்: "உன் துணிகரத்தையும் உன் இருதயத்தின் அகங்காரத்தையும் நான் அறிவேன். யுத்தத்தைப் பார்க்க வந்தாயா?" தள்ளி நில், உன்னால் ஏதாகிலும் செய்ய முடியும் என்று நினைக்காதே. போய்விடு என்பார்கள்.

நீங்கள் ஊழியம் செய்வதற்கு உற்சாகமுடையவராக இருந்தாலும் இதே பதில்தான் கிடைக்கும். சபையிலுள்ள சகோதரர்கள், "கர்த்தாவே உமது

திராட்சைத் தேட்டத்தில் வேலை செய்ய அதிக ஆட்களை அனுப்பும்" என்று ஜெபித்துக் கொண்டிருப்பார்கள். அதைக் கேட்டு, தேவன் ஆட்களை அனுப்பினால், அவர்கள் தங்கள் அருகில் ஊழியம் செய்யாமல், வேறு எங்காவது தள்ளிப் போய் அதை செய்யட்டும் என ஜெபித்தவர்கள் விரும்புவார்கள். ஏனென்றால் புதிதாக வருபவர்கள், சபையாரைக் குழப்பி, சபையில் பாதிப்பை ஏற்படுத்திவிடுவார்கள் என பயப்படுவார்கள். தாங்கள் சரியாக ஊழியம் செய்யவில்லையென சபையார் எண்ணிவிடுவார்களோ என பயந்து, "தள்ளிப் போங்கள்" என்று சொல்லிவிடுவார்கள். ஆனால் சகோதரரே, அதைக் குறித்து நீங்கள் கவலைப்படாதீர்கள். அவர்களுடைய முறுமுறுப்புகளையும் எதிர்ப்புகளையும் உங்களால் மேற்கொள்ள முடியாதென்றால் உங்களால் நன்மை ஏதும் இல்லை. எவ்வளவுக்கு உங்களால் அவைகளைத் தாங்கிக் கொள்ள முடிகிறதோ அவ்வளவுக்குத்தான் நீங்கள் அறிந்து வைத்திருப்பதும் இருக்கிறது. மனிதஞானத்தை தைரியமாக எதிர்த்து நின்று செயல்படுங்கள். வெகுவிரைவில் அவர்கள் உங்கள் தோள்களைத் தழுவி, "அன்பான சகோதரரே" என்று அழைப்பதைக் காண்பீர்கள். ஒவ்வொரு மனிதனும் விழிப்படைய உதவி அவசியமாயிருக்கிறது. விழிப்படைந்தவன் சற்று சறுக்கிவிட்டானென்றால், அவனை "கீழே தள்ளுங்கள்" என்கிற கூக்குரல்தான் அதிகமாகக் கேட்கும். அவன் தானாகத்தான் திரும்பவும் எழுந்திருக்க வேண்டியதாயிருக்கும். தேவையான சமயங்களில் உதவிசெய்யாமல், உங்களுக்கு அவசியம் இல்லாதபோது உதவி செய்ய வருவதுதான் மனிதனின் இயல்பு. எதிர்ப்பு எவ்வளவு கடினமானதாக இருந்தாலும், "நான் என் பிதாவுக்கடுத்த அலுவல்களில் ஈடுபட வேண்டும் என்பதை அறியீர்களா?" என்று யுத்தகுரல் கொடுக்கிறவர்களாய் நீங்கள் இருக்க வேண்டும்.

நீங்கள் தேவனுக்கடுத்த காரியங்களில் மிகவும் தீவிரமாக ஈடுபடும்போது, உங்களுக்கு மிகவும் நெருங்கிய நண்பர்களுங்கூட சில சமயங்களில் உங்களிடம் வந்து மிகவும் அன்போடு, இவ்வளவு தீவிரமாயிருக்க அவசியமில்லை என்று புத்தி கூறுவார்கள். "இவ்வளவு தீவிரமாக உழைக்க வேண்டியதில்லை. உன் சுகத்தையும் பார்த்துக் கொள்" என்று உங்கள் உற்சாகத்தைக் குறைக்க பார்ப்பார்கள். அல்லது நீங்கள் பணஉதவி செய்கிறவராக இருந்தால், "நீ இன்னும் கொஞ்சம் புத்திசாலித்தனமாய் நடந்து கொள்ள வேண்டும். உன் குடும்பத்திற்கு நீ இன்னும் அதிகமாக செய்ய

வேண்டும். இம்மாதிரியான விஷயங்களில் இவ்வளவு பணத்தை கொடுக்க அவசியமில்லை" என்று தடுப்பார்கள். அல்லது ஜெபிப்பதில் நீங்கள் அதிகமான ஆர்வம் காட்டினீர்களானால், "இவ்வளவு ஆர்வம் தேவையில்லை. நீ பக்தியாக இருப்பது நல்லதுதான். ஆனால் ஓரளவிற்கு பக்தியாக இருந்தாலே போதுமானது" என்பார்கள். ஆகவே நண்பர்களாயிருந்தாலும், விரோதிகளாயிருந்தாலும், கிறிஸ்துவுக்கு நீங்கள் உங்களை முழுவதுமாக அர்ப்பணித்திருப்பதை தடுக்க பலர் முயற்சிப்பதைக் காண்பீர்கள்.

ரௌலண்ட ஹில்(Rowland Hill) என்கிற பழங்காலத்துப் பரிசுத்தவான் கூறியது எனக்கு மிகவும் பிடிக்கும். ஒரு மனிதன் அவரிடம், தான் "ஓரளவிற்கு பக்தி" உள்ளவன் என்று கூறினானாம். அதற்கு அவர், "அப்படியானால் நீ பக்தியற்றவன்தான். ஓரளவிற்கு நல்லவன் என்று கூறுகிற மனிதன் உண்மையில் மோசமானவன். ஆகவே ஓரளவிற்கு பக்தி உள்ளவன் என்பது பக்தி இல்லாமையேயாகும்" என்று கூறினார். பக்தியில், கொஞ்சம், அதிகம் என்றெல்லாம் கிடையாது. பக்தி என்றால் முழுவதுமான பக்தி ஆகும். பாதி பக்தி என்றெல்லாம் கிடையாது. பக்தி முழுமையானது. கிறிஸ்துவின் ஆவியை நாம் முழுவதுமாகக் கொண்டிருக்க வேண்டுமானால், அவரைப் போலவே நடக்க வேண்டுமானால், கடவுளுக்கு முழுமையாக நம்மை அர்ப்பணிக்க வேண்டும். அப்போதுதான் நாம் உண்மையுடன் இவ்வாறாகக் கூறமுடியும்

"தேவனில் வைராக்கியத்தோடு
அன்புகூர வேண்டிய கடமை
எனக்கிராவிட்டால்,
என் விருப்பமே பெரிதென்று இருந்திருப்பேன்."

ஒரு காரியத்தை என்னால் மறக்க முடியாது. கிறிஸ்துவுக்கு என்னை முழுவதுமாக அர்ப்பணித்துவிட்டேன் என்று நான் நினைத்துக் கொண்டிருந்தபோது, என்னுடைய குணத்தைக் குறித்த ஒரு அவதூறு என் காதில் விழுந்தது. துயரத்தினால் என் இருதயம் உடைந்தது. கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிற நான் என் குணங்களையும் மாற்றிக் கொள்ள வேண்டுமென உணர்ந்தேன். முழங்காலில் நின்று, "கர்த்தாவே, உமது நாமத்தின் நிமித்தமாக எனது குணத்தைக்கூட நஷ்டமென்று விடுகிறேன்.

எனக்கு அருமையானது எதுவாக இருந்தாலும் உம் நிமித்தமாக விட்டுவிடுகிறேன்" என்று ஜெபித்து அதை மேற்கொண்டேன். "நான் கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கு . . அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன். குப்பையுமாக எண்ணுகிறேன்" என்கிறார் பவுல் அப்போஸ்தலன். கிறிஸ்தவர்களே, நீங்கள் சகலத்தையும் அவருக்கு முழுமையாக ஒப்புவிக்காவிட்டால், உங்களால் அவருக்கு சரியானபடி ஊழியம் செய்ய முடியாது. உங்கள் நேரத்தையும், பொருட்களையும், தாலந்துகளையும் எல்லாம் அவருக்கே என ஒப்புவிக்காவிட்டால் அவற்றால் வருத்தமும் சேதமும் உருவாவதைக் காண்பீர்கள். கிறிஸ்துவுக்கு நீங்கள் சகலத்தையும் ஒப்புவித்தால்தான் அவர் உங்களை எல்லாவற்றிலும் ஆசீர்வதிப்பார். அவருக்குத் தராமல் எதையெல்லாம் விலக்குகிறீர்களோ அதை அவர் சபித்து, வாடச் செய்து, அழிப்பார். முழுமையாக நம்மை அவருக்கு அளிக்க வேண்டும், நமக்கு உரியதெல்லாம் அவருடையதென அர்ப்பணிக்க வேண்டும். இல்லையென்றால் அவர் திருப்தியடைய மாட்டார்.

இது சம்பந்தமாகக் கேட்கப்படும் ஒன்றிரண்டு எதிர்க்கேள்விகளுக்கு நான் விடையளிக்கப் போகிறேன். அதனால் பக்தியாய் இருக்கிறேன் என்பவர்கள் கிறிஸ்துவுக்காக சகலத்தையும் ஒப்புவிக்கும்படியாக தூண்டப்படலாம். ஒருசிலர், "இல்லை, என்னால் முழுவதுமாக கிறிஸ்துவுக்கு ஒப்புவிக்க இயலாது. நான் இன்னும் சரியான ஆவிக்குரிய நிலைக்கு வரவில்லை" என்பீர்கள். ஆம், நீங்கள் சரியாகத்தான் சொல்கிறீர்கள். கிறிஸ்துவுக்கு முழுவதுமாக அர்ப்பணிக்க இயலாத வகையில் ஒரு பக்தி இருக்குமானால் அது சரியான ஆவிக்குரிய நிலையே அல்ல. அந்தவிதமான பக்தியை நாம் கடைப்பிடிக்கவே கூடாது. இன்னும் சிலர், "நான் யார், நான் எப்படி அப்படியெல்லாம் இருக்க முடியும்?" என்பீர்கள். நீங்கள் யாராயிருந்தாலும் சரி, உங்களால் எல்லாவற்றையும் கடவுளின் நாமத்தினால் செய்து, கிறிஸ்துவுக்கு மகிமை தரும் விதத்தில் நடந்து கொள்ள முடியும். கிறிஸ்துவுக்கு உங்களையே ஒப்புக்கொடுக்க வேண்டுமானால், நீங்கள் ஒரு ஊழியக்காரராகத்தான் இருக்க வேண்டும் என நினைத்துக் கொள்ளாதீர்கள். ஊழியக்காரரில் அநேகர் பிரசங்க மேடைக்கு இழுக்கு வரும் விதத்தில் நடந்திருக்கிறார்கள். அதே சமயத்தில் சாதாரண மனிதர்களில் அநேகர் பரிசுத்தராயும் வாழ்ந்திருக்கிறார்கள். பிரசங்கிகள் தவறு செய்திருக்கிறார்கள், அதே நேரத்தில் சாதாரண விவசாயிகூட தன் தொழிலில் உத்தமமாய்

நடந்திருக்கிறான். நமது தொழிலானாலும் சரி, ஆவிக்குரிய நடக்கையானாலும் சரி எல்லாவற்றையும் கிறிஸ்துவுக்காக செய்ய வேண்டும்.

இதற்கு ஒரு உதாரணத்தை கூறுகிறேன். அமெரிக்காவிலுள்ள ஒரு விசுவாசி தனது வருமானத்தில் ஒரு பெரிய தொகையை கிறிஸ்துவின் ஊழியத்திற்காக கொடுத்து வந்தார். அதைக் கண்ட ஒருவர் அவரிடம், "எவ்வளவு பெரிய தியாகத்தை நீங்கள் வருடாவருடம் செய்கிறீர்கள்" என்று சொன்னார். அதற்கு அந்த விசுவாசி கூறிய பதில்: "அப்படியல்ல. என்னிடம் ஒரு குமாஸ்தா வேலை பார்ப்பதாக வைத்துக் கொள்ளுங்கள். அவரிடம் நான் கொஞ்சம் பணம் கொடுத்து, அதை ஒரு பள்ளிக்கூட வாத்தியாரிடம் சென்று கொடுத்துவிட்டு வருமாறு அனுப்புகிறேன். அவன் அந்த ஆசிரியரிடம் சென்று, "இதோ உமது சம்பளம். இதை உமக்குக் கொடுப்பதால் நான் எவ்வளவு பெரிய தியாகம் செய்கிறேன்" என்று சொன்னால் அந்த பள்ளி ஆசிரியர் என்ன சொல்லுவார்? "ஐயா, இது உம்முடைய பணம் அல்ல. இது நீர் செய்கிற தியாகமும் அல்ல" என்று கூறுவாரல்லவா" என்று அந்த அமெரிக்கர் தமது நண்பரிடம் சொன்னார். "நான் தேவனிடம் வந்தபோது எல்லாவற்றையும் அவருக்கு ஒப்புவித்துவிட்டேன். நான் கர்த்தரின் வேலையாள் ஆகிவிட்டேன். இந்த நிறுவனத்திற்கு நான் இனி தலைவன் அல்ல. தேவனையே அதற்குத் தலைவராக்கி விட்டு, நான் அவருடைய வேலைக்காரன் ஆகிவிட்டேன். இந்த வருமானத்திலிருந்து நான் தொகையை வழங்கும்போது, அவருடையதை எடுத்துத் தரும் வேலையாளாகவே செயல்படுகிறேன். இது ஒன்றும் தியாகமல்ல" என்று அந்த மனிதர் விளக்கம் அளித்தார்.

நாம் கடவுளுக்கு செய்வதை தியாகம் என்றெல்லாம் பேசினோமானால் பெரும் தவறு செய்கிறவர்களாயிருப்போம். நமது மதத்தின் உயிர்நாடியே அதுதான் அல்லவா? முதலாவது நம்மைக் கர்த்தருக்கு தத்தம் செய்ய வேண்டும். அதன்பிறகு எல்லாமே அவருக்கு நாம் விரும்பிக் கொடுக்கின்ற காணிக்கையாகும். ஒரு வியாபாரி சொல்கிறார்: "கடவுளுக்கென்று நான் என் கடையைத் திறந்திருக்கிறேன். அதன் வருமானத்தில் நானும் என் குடும்பத்தாரும் வாழ்கிறோம். கடவுள் அதற்கு அனுமதி கொடுத்திருக்கிறார். சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களுக்கு சுவிசேஷத்தினால் பிழைப்பு உண்டாக வேண்டுமென்பது போல, என் வியாபாரத்தின் மூலமாக எனக்குப் பிழைப்பு உண்டாக அவர் அனுமதித்திருக்கிறார். முதிர்வயது மட்டும்

உழைப்பதற்குத் தேவையான பெலனையும் அவர் அளிக்கிறார்". இன்னொருவர் இதையே வேறு விதமாகக் கூறுகிறார்: "நான் சில பொருட்களை விற்பனை செய்கிறேன். அதில் கிடைக்கும் லாபம் எல்லாம் தேவனுக்கு சொந்தம். என்னுடைய உணவுக்கும், உடைக்கும், குடும்ப செலவுகளுக்கும் தேவையானதை அவர் அதிலிருந்து எனக்குத் திரும்பத் தருகிறார். ஏனென்றால் அப்பத்துக்கும் தண்ணீருக்கும் குறைவுபட மாட்டாய் என்று அவர் சொல்லியிருக்கிறார். மீதியெல்லாம் கர்த்தருடையது. என்னுடையதல்ல. நான் எல்லாவற்றையும் கடவுளுக்காகவே செய்கிறேன்" என்று அவர் சொல்கிறார்.

இது எப்படியென்று உங்களுக்கு விளங்கவில்லை அல்லவா? தேவனுடைய காரியமே வேறே. அது உலக வியாபாரத்தைப் போன்றதல்ல. உங்களுடைய இருதயம் சரியானதாக இருந்தால் உங்களுக்கு விளங்கும். கிறிஸ்துவுக்கு சகலத்தையும் ஒப்புவிப்பது, அவருக்காக எல்லாவற்றையும் அர்ப்பணிப்பது - அது சுவிசேஷம்! அப்படி செய்கிறவர்களுக்குத்தான், "என் பிதாவுக்கடுத்த பணிகளில் நான் இருக்க வேண்டியதென்று அறியீர்களா?" என்கிற கேள்விக்குரிய அர்த்தம் விளங்கும். உங்களுடைய பெயரில் செய்யப்படுகிற வியாபாரம், தொழில் யாவுக்கும் கடவுளே அதிபதி. இதை மனிதர்கள் அறியார்கள். நீங்கள் அப்படிப்பட்ட எண்ணத்தோடு அதை செய்து கொண்டிருப்பீர்களானால், அதை வருவோர் போவோருக்கெல்லாம் சொல்லிக் கொண்டிருக்காதீர்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். சில வேளைகளில் சிலபேர் தாங்கள் தொழில்புரிகிற இடங்களில் தங்கள் பக்தியை வெளிப்படையாகக் காட்டிக் கொள்ள விரும்புவார்கள். மனிதர்களின் இந்தவிதமான போலித்தனங்களை நான் வெறுக்கிறேன். நீங்கள் அவர்களிடம் ஏதாவது காரியமாகச் செல்லும்போது, உங்களை உள்ளே அழைத்து, கைப்பிரதிகள் இருந்தால் கொடுத்து, ஜெபிக்கும்படியாக கேட்டுக் கொள்வார்கள். அவர்கள் நோக்கம் என்னவென்பது உங்களுக்கு உடனே தெரிந்துவிடும். தனது தொழில்தளம் ஆசீர்வதிக்கப்பட்டு, ஜனக்கூட்டம் ஏராளமாக அங்கு வர வேண்டும் என்பதே அவர்களுடைய உள்நோக்கமாயிருக்கும். பக்தியாயிருப்பது போலக் காண்பித்து உங்களை உபயோகித்துக் கொள்வதே அவர்கள் நோக்கம். பக்தியில் பாசாங்கு கூடாது.

அதே போல முன்பின் தெரியாத ஒருவர் உங்களை அழைத்து ஜெபிக்கலாம் வாருங்கள் என்று கூறினால், "நன்றி, ஆனால் நான் எனது ஜெபத்தை

பிதாவின் பணியில் கிறிஸ்து

தனிமையில், அறைக் கதவைப் பூட்டி செய்வதைக் கொள்கையாக கொண்டிருக்கிறேன். சற்று காலம் பார்க்கலாம். உங்களுக்கும் ஜெபஆவி இருக்கிறதென்று நான் நினைக்கும்போது, சமயம் வாய்க்கும் காலத்தில் மனதார உங்களோடு ஜெபத்தில் ஈடுபடுவேன்" என்று சொல்லிவிடலாம். இப்படியாக முன்பின் அறியாத ஒருவர் உங்கள் வீட்டில் நுழைந்து, தான் எவ்வளவு பரிசுத்தமும் பக்தியும் உடையவன் என்பதைக் காண்பிப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தால் ஒன்று அவன் ஆவிக்குரிய வியாதியைக் கொண்டிருப்பவன், அல்லது அவன் உயிரற்ற ஆனால் சாயம் பூசப்பட்ட ஜடப்பொருளாக இருக்கிறான் என்றுதான் அர்த்தம். ஜெபத்தை நான் மிகவும் புனிதமான ஒன்றாகக் கருதுகிறேன். "நீயோ ஜெபம் பண்ணும்போது, உன் அறைவீட்டுக்குள் பிரவேசித்து, உன் கதவைப் பூட்டி ஜெபம் பண்ணு. நீயோ தர்மம் செய்யும்போது, உன் தர்மம் அந்தரங்கமாயிருப்பதற்கு, உன் வலது கை செய்கிறதை உன் இடது கை அறியாதிருக்கக் கடவது" என்று இயேசுக்கிறிஸ்து சொல்லியிருக்கிறார். மனிதர்கள் பார்க்க வேண்டும் என்பதற்காக இவைகளை செய்தீர்களென்றால் உங்கள் பலனை அடைந்து தீர்வீர்கள். மனிதர்களின் புகழ்ச்சியாகிய சிறிய வெகுமதியை மாத்திரம் பெறுவீர்கள். அதுவும் ஓரிரு நிமிடங்களில் மறக்கப்பட்டுப் போகும். அதற்காக இதன் அடுத்த எல்லைக்கே போய் ஜெபிக்காமல் இருந்துவிடாதீர்கள். நீங்கள் பக்தியாக வாழ்வதின் மூலமாக உங்கள் தொழில் ஆசீர்வதிக்கப்படட்டும். பக்தியை வெளிப்படையாகக் காட்டிக் கொள்வதில் பிரியப்படாதிருங்கள். ஆனால் தேவைப்படும் சமயங்களில் உபயோகிக்க தயாராக இருங்கள். எல்லா நேரமும் அது உங்களுக்குத் தேவைப்படும் என்பது நிச்சயம்.

சிலர், "நான் எப்படி கடவுளின் பணிகளில் ஈடுபட முடியும்? எனக்கு ஒரு திறமையும் இல்லை. என்னிடம் பணமுமில்லை. நான் சம்பாதிப்பது குடும்பத்திற்கே சரியாகிவிடுகிறது. வாடகைப் பணம் கட்டுவதுகூட சிரமம்தான். ஞாயிறு பாடசாலைப் பிள்ளைகளுக்குச் சொல்லித் தரும் திறனும் என்னிடம் இல்லை" என்பார்கள். சகோதரரே, உங்களுக்கு ஒரு பிள்ளை இருக்கிறதா? அதுவே நீங்கள் உபயோகமாக இருக்கத்தக்க ஒரு வழியாக உங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதே. சகோதரியே, நீ மிகவும் ஏழையாயிருக்கிறாய். உன்னைப் பற்றி யாருக்குமே தெரியாது. உனக்கு ஒரு கணவன் இருக்கிறான். அவன் எவ்வளவு பெரிய குடிகாரனாயிருந்தாலும், நீ கர்த்தருக்கென்று உபயோகமாக இருக்கக்கூடிய ஒரு வாய்ப்பு உனக்கும்

இருக்கிறது. அவனால் வரும் அவமானங்களை எல்லாம் சகித்துக் கொள். அவனுடைய கோபங்களையும், வெறுப்புகளையும் பொறுத்துக் கொள். இப்படியாக நீ கடவுளுடைய பணியை நிறைவேற்றலாம். இன்னொருவர், "ஐயா, நான் வியாதியாயிருக்கிறேன். இன்றைக்கு மாத்திரம்தான் என்னால் எழுந்திருக்க முடிந்தது. மற்றபடி நான் படுக்கையிலேதான் இருக்கிறேன். நான் என்ன செய்ய முடியும்?" என்பார். நீங்களும் கர்த்தரின் அலுவலை செய்யலாம். வியாதிப்படுக்கையில் பொறுமையைக் காத்துக் கொள்வதன் மூலமாக நீங்களும் உங்கள் எஜமானனுடைய வேலையில் ஈடுபடுகிறீர்கள்.

குழிக்குள் பதுங்கி இருக்கும்படியாக கட்டளை பெற்ற படைவீரனும், எதிரியின் கோட்டையை தகர்த்துக் கொண்டு உள்ளே செல்லுமாறு கட்டளை பெற்ற வீரனும் ஒரேவிதமாகத்தான் தங்கள் தளபதிக்குக் கீழ்ப்படிந்து நடக்கிறவர்கள். நீங்கள் செய்கிற காரியம் எல்லாவற்றிலும் நீங்கள் கடவுளுக்கு ஊழியம் செய்கிறவராய் இருக்க முடியும். இருதயம் சரியான வழியில் திருப்பப்பட்டிருந்தால், "என்னால் பிதாவின் பணியை செய்ய முடியாதே" என்று ஒருபோதும் சாக்குப்போக்கு சொல்ல முடியாது. எவ்விதத்திலாவது அவருக்காக வாழ நம்மால் முடியும். சுவிட்சர்லாந்தில் பழங்காலத்தில் நடந்த போர்களைப் பற்றி நாம் படித்திருப்போம். தகப்பன்மார் பீரங்கியில் குண்டுகளை வைத்து எதிரிப்படைக்கு எதிராக வெடிக்கச் செய்வதற்கு உதவியாக தாய்மார்கள் அந்த குண்டுகளை சுமந்து கொண்டு வந்து கொடுப்பார்களாம். வெடிக்காமல் கீழே விழுந்து சிதறிய குண்டுகளை அவர்களுடைய பிள்ளைகள் ஓடிப்போய் எடுத்துக் கொண்டுவந்து கொடுப்பார்களாம். ஒவ்வொருவரும் ஏதோவொரு விதத்தில் உதவியாக இருந்திருக்கிறார்கள். யுத்தங்களை நாம் வெறுக்கிறோம். ஆனால் அவைகளை கிறிஸ்துவின் யுத்தத்திற்கு உவமையாக எடுத்துக் கொள்வோம். நீங்கள் ஒவ்வொருவரும் ஏதாவதொரு விதத்தில் கர்த்தருக்கு சேவை செய்ய முடியும். நமது எஜமானின் மீது அன்பு செலுத்துகிறவர்களே, நன்றியால் அவருக்கு சேவை செய்யும்படியாக கட்டப்பட்டிருக்கிறவர்களே, "நான் என் பிதாவுக்கடுத்த பணிகளில் இருக்க வேண்டும் என்பதை அறியீர்களா?" என்று நாம் சொல்வோமாக.

இங்குள்ள கர்த்தருடைய ஜனங்கள் அனைவரும், முழுமனதோடு அவருக்கு சேவை செய்யும்படியாக இரண்டு மூன்று உற்சாகமளிக்கும் காரணங்களைக் கூறி இந்த பிரசங்கத்தை முடிக்கிறேன்.

### பிதாவின் பணியில் கிறிஸ்து

உங்கள் பிதாவுக்கடுத்த சேவையில் மிகுந்த உற்சாகத்தோடே ஈடுபடுங்கள். அப்போதுதான் நீங்கள் உபயோகமாக இருக்க முடியும். நீங்கள் உங்கள் வேலையையும் பிதாவின் வேலையையும் தனித்தனியே செய்ய முடியாது. அப்படி செய்வது கடவுளுக்கும் உலகப்பொருளுக்கும் சேவை செய்வதாகிவிடும். உங்கள் சொந்த வேலையை கடவுளின் வேலையாக நினைத்து செய்தீர்களானால், உங்கள் வேலையையே சிறப்பாகச் செய்ய முடியும். அதனால் உங்கள் வாழ்நாளில், இந்த சந்ததிக்குப் பிரயோஜனமாக இருப்பீர்கள். கிறிஸ்தவர்கள் அனைவரும் தங்களை முழுவதுமாக கிறிஸ்துவுக்கு ஒப்புவித்து வாழாவிட்டால் நாம் சபையிலோ, இந்த மதத்திலோ எந்தவிதமான பெரிய எழுச்சியையும் காணமுடியாது. நமது ஆர்வத்தைக் கண்டுதான் உலகமனிதர்கள் சபைக்கு வருவார்கள். கிறிஸ்து மனிதர்களை சபைக்கு அழைத்து வருவார். அதற்கு முன்பாக மதத்தில் பெரிய எழுச்சி ஏற்படாது. நாம் பிரசங்க மேடைக்கு அரைகுறையான மனதோடு போகிறவர்களாக இருக்கிறோம். உயிரற்ற பிணங்களைப் போல ஆராதனைக்கு போய்விட்டு வருகிறோம். நாம் முழுமனதோடு இல்லாமல் வெளிப்பிரகாரமான ஆராதனையை செய்துவிட்டு வருகிறோம். ஆகவே கிறிஸ்துவின் வேலை வெற்றிகரமாக நம்மிடையே நடப்பதில்லை. நீங்கள் கிறிஸ்துவுக்கு உபயோகமாக இருக்க விரும்புகிறீர்களா? உங்கள் எஜமானின் ராஜ்ஜியத்தை அதிகப்படுத்த விரும்புகிறீர்களா? அப்படியானால் அவருடைய பணியில் உற்சாகத்தோடு ஈடுபடுங்கள்.

அடுத்தபடியாக நீங்கள் சந்தோஷத்தோடும் மனசமாதானத்தோடும் இருக்க விரும்புகிறீர்களா? உங்கள் பிதாவின் பணியில் உத்தமமாய் ஈடுபடுங்கள். பிதாவின் பணிகளில் ஈடுபடுவது எவ்வளவு இனிமையானது! அதற்காக நீங்கள் உங்கள் தொழிலை விலக்கி வைத்துவிட வேண்டுமென்று அவசியமில்லை. நீங்கள் ஒரு டீ கடையில் டீத்தூள் நிறுத்துக் கொடுக்கிறவராக இருந்தாலும், உங்கள் மனது சுத்தமானதாக இருந்தால், ஒரு பிரசங்கியாரைப் போலவே உத்தமமான மனதுடன் அதைச் செய்யலாம். குதிரை வண்டியோட்டுபவராக பணிபுரிந்தாலும், ஆராதனைப் பாடல்களைப் பாடுவதற்கு சமமான ஈடுபாட்டோடு அதையும் செய்யலாம். எந்த நேரத்திலும், எந்த இடத்திலிருந்தும் தேவனுக்கு சேவை செய்யலாம். "நான் எதைச் செய்தாலும் அதைக் கடவுளுக்கென்றே செய்கிறேன். என் கடையைத் திறந்து வியாபாரம் செய்வதும் கடவுளுக்காக. கடவுளின் நிமித்தமாக நான் லாபம் சம்பாதிக்க ஆசைப்படுகிறேன். அவருக்காக நான் ஆர்வத்தோடு

உழைக்கிறேன். நான் என் முழு மனதினாலும் என் தொழிலை கடவுளுக்கு சமர்ப்பித்து, அதில் விருத்தியடைய உழைக்கிறேன். அதன் லாபம் யாவும் அவருக்குரியது" என்கிற எண்ணம் எவ்வளவு இனிமையானது.

அந்த மாதிரியான எண்ணம் உங்களுக்கு இருக்குமானால் காலையில் எழுந்திருக்கும்போதே சந்தோஷத்தோடே எழுந்திருப்பீர்கள். "இன்றைக்கு நான் தேவனுடைய வேலையை செய்யப் போகிறேன்" என்ற எண்ணத்துடன் எழும்போது, இதுவரை அனுபவித்திராத மகிழ்ச்சியை அடைவீர்கள். இரவிலே, "இன்றைக்கு எனக்கு இவ்வளவு நஷ்டமாயிற்று" என்று சொல்வதற்கு பதிலாக, "இந்த நஷ்டம் என்னுடையதல்ல. கடவுளுடையது. ஆனால் பொன்னும் வெள்ளியும் அவருடையது. அவருக்கு அது தேவையில்லையென்றால், போகட்டும். அவர் வேறு வழிகளில் அதை அடைந்துவிடுவார். எனக்கு அது தேவையில்லை. இந்த முறை நஷ்டமாவது அவருக்கு சித்தமானால் அப்படியே ஆகட்டும். வேறொரு நாளில் வேறொரு விதமாக அவருடைய லாபம் அவருக்குக் கிடைத்துவிடும். என்னுடைய தினசரி லாபநஷ்டங்களிலும் நான் அவரையே விடாமல் சேவிப்பேன்" என்று கூறுகிறவர்களாய் இருப்பீர்கள்.

இந்த மாதிரியாக நடந்தால் சகோதரரே, முடிவில் மகிமையை அடைவீர்கள். கடவுளின் வெகுமதியாக அதைப் பெற்றுக் கொள்வீர்கள். "அநேகரை நீதிக்கு உட்படுத்துகிறவர்கள் நட்சத்திரங்களைப் போல, என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் பிரகாசிப்பார்கள்". தனியாக பரலோகம் செல்வதற்கு உங்களுக்கு விருப்பமா? அப்படி இராதென்று நினைக்கிறேன். எனக்கு மகிழ்ச்சி அளிக்கும் எண்ணம் ஒன்று உண்டு. நான் மரிக்கும்போது, நான் என் நேசரின் மார்பில் சாய்ந்து இளைப்பாறுதலில் பிரவேசிக்கும்போது, நான் தனி ஆளாக அங்கு பிரவேசிக்கவில்லை என்பது தெரிந்தால் நான் மிகவும் மகிழ்வேன். எனது ஊழியத்தின் நிமித்தமாக ஆயிரக்கணக்கானவர்களின் இருதயம் குத்தப்பட்டு, அவர்கள் இயேசுவினிடம் வந்திருப்பார்களானால் எவ்வளவு சந்தோஷமாயிருப்பேன்! மோட்சத்தில், ஆண்டவரிடம், இதோ நானும், நீர் எனக்குத் தந்த பிள்ளைகளும் என்று கூறக் கூடிய பாக்கியம் கிடைத்ததானால் எவ்வளவு நலமாயிருக்கும்! ஒரு வேளை உங்களால் பிரசங்கிக்க முடியாமல் இருக்கலாம். ஆனால் தேவனுக்காக ஆவிக்குரிய பிள்ளைகளை உருவாக்க பல விதங்களில் கடினமாக உழைக்க முடியுமல்லவா? அதற்காக உதவுபவர்கள்கூட, அதற்குரிய கனத்தைப் பெறுவார்கள். நீங்கள் செய்கிற வேலை ஒருவேளை மற்றவர்களுக்குத்

தெரியாமல் இருக்கலாம். ஆனால் கடவுள் உங்களை மகிமையினால் முடிசூட்டுவார். "அவருடைய ராஜ்ஜியத்தில் என்றென்றும் பிரகாசிக்கிற நட்சத்திரங்களாக" நீங்களும் இருப்பீர்கள். இதற்கு மேல் நான் ஒன்றும் உங்களுக்கு சொல்ல வேண்டியதில்லை என நினைக்கிறேன். உங்களை நரகத்தினின்று இரட்சித்த கிறிஸ்துவுக்கு நீங்கள் மிகவும் அதிகமாகக் கடமைப்பட்டிருக்கிறீர்கள் என்பதை மறவாதீர்கள் என்று மட்டும் ஞாபகப்படுத்துகிறேன். உங்களை மீட்டுக் கொண்ட இரத்தத்திற்கு நீங்கள் அதிகக் கடமைப்பட்டிருக்கிறீர்கள். "நான் என்னையே உமக்குத் தருவதையல்லாமல் வேறெதை உமக்குத் தரக்கூடும் கர்த்தாவே" என்று கடமையுணர்வோடு கூறுங்கள்.

நீங்கள் வெளியே செல்லும்போது, உலகம் உங்களை சோதித்தால், "நான் என் பிதாவுக்கடுத்தவைகளில் இருக்க வேண்டும்" என்று சொல்வதற்கு ஆவியானவர் உதவுவாராக. உங்களை மதப்பற்றுள்ளவர் என்று கூறி பரியாசம் பண்ணினார்களானால், நீங்கள் பிதாவின் வேலைகளில் ஈடுபட்டிருப்பதாக சொல்லுங்கள். போங்கள்! ஜெயம் கொள்ளுங்கள்!! கர்த்தர் உங்களோடு இருப்பாராக. "விசுவாசமுள்ளவனாய் ஞானஸ்நானம் பெறுகிறவன் இரட்சிக்கப்படுவான். விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான். கிறிஸ்துவில் விசுவாசம் வைப்பதே இரட்சிக்கப்படுவதற்கு ஒரே வழி. உங்கள் பாவங்களை உணருகிறவர்களே, கிறிஸ்துவிடம் வாருங்கள். உங்களை அவருக்கு ஒப்புவியுங்கள். இங்கே சந்தோஷத்தையும், மறுமையிலே மகிமையையும் நிறைவாகப் பெற்றுக் கொள்வீர்கள்.

*(மார்ச் 15, 1857-ஆம் ஆண்டு, மியூஸிக் ஹால், சர்ரே கார்டன் என்கிற இடத்திலே, ஞாயிற்றுக்கிழமை காலையிலே, சார்ல்ஸ் ஸ்பர்ஜன் அளித்த தியானத்தின்(122) சாராம்சம்)*

# 5. சமாதானத்தோடே போ

*அவர் ஸ்திரீயை நோக்கி: "உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, சமாதானத்தோடே போ" என்றார் - லூக் 7:50*

இந்த ஸ்திரீயின் காரியத்தை கிறிஸ்து நான்கு நிலைகளில் அணுகுவதாகத் தெரிகிறது. இந்த அதிகாரத்தில் எழுதப்பட்டிருக்கும் இந்த சம்பவத்திற்கு முன்னால் என்ன நடந்தது என்பது எனக்குத் தெரியாது. அந்தக் கேள்விக்குள்ளாக நாம் இப்போது போவது அவசியமில்லை. தேவனுடைய ஆவியானவர் அந்தப் பெண்ணின் இருதயத்தில் கிரியை செய்து, அவள் தனது பாவங்களை விட்டுவிட்டு, தனது இரட்சகரிடமாகத் திரும்பும்படி அவளை மாற்றியிருந்தார் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், இப்போது அவள் தனது ஆண்டவரின் பாதங்களின் அருகே பின்னாக நின்று அழுது கொண்டு, அவருடைய பாதங்களைத் தன் கண்ணீரினால் நனைத்து, தனது தலைமயிரால் துடைத்து, அவருடைய பாதங்களை முத்தம் செய்து, பரிமளதைலத்தினால் அவர் பாதங்களை அபிஷேகம் செய்து கொண்டிருக்கின்ற இந்த வேளையில், கர்த்தர் மிகுந்த அன்போடு அவளுடைய காரியத்தை நான்கு நிலைகளில் அணுகுகிறார்.

முதலாவதாக, அவர் அவளுடைய அன்பின் வெளிப்பாடுகளை மௌனமாக ஏற்றுக் கொள்கிறார். அவளுடைய கண்களிலிருந்து வெளிப்பட்ட மிகுதியான கண்ணீர் அவருடைய பாதங்களை நனைத்த போது, அவர் தமது பாதங்களை விலக்கிக் கொள்ளவில்லை. தனது தலைமயிரினால் அவள் அவருடைய

பாதங்களைத் துடைத்த போதும் அவர் தமது பாதங்களை விலக்கிக் கொள்ளவில்லை. அதன்பின் அவள் இன்னுமாக நெருங்கி வந்து, அவருடைய பாதங்களை ஓயாமல் முத்தஞ்செய்தபோதும், அவர் தமது பாதங்களை பின்னுக்கு இழுத்துக் கொள்ளாமல், அவள் செய்பவைகளை அமைதியாக ஏற்றுக் கொள்கிறார். அவருடைய மகிமையான பாதங்களில், விலையேறப்பெற்றதான பரிமள தைலத்தை ஊற்றினபோதும் அவர் அவளைக் கடிந்து கொள்ளவில்லை. அந்த வேளையிலே, அவர் தமது வாயைத் திறந்து அவைகளை தாம் ஏற்றுக் கொண்டதாக சொல்லவில்லையென்றாலும், அவளுடைய அன்பின் செய்கைகளை அவர் மறுக்காமல், மௌனமாக ஏற்றுக் கொண்டார்.

தேவனுடைய வாயிலிருந்து நிச்சயப்படுத்தும் விதத்தில் ஒரு வார்த்தையும் வர்ாவிட்டாலும், மௌனமாக அவரால் ஏற்றுக் கொள்ளப்படுவோமானால் அதுவே மிகப் பெரிய ஆசீர்வாதம் என்றுதான் நான் நினைக்கிறேன். உங்களுடைய கண்ணீர், கதறல், மனதின் அன்பு, ஊக்கமான தேடுதல், பாவத்தை அறிக்கையிடுதல், விசுவாசத்திற்கான போராட்டம், விசுவாசம் தோன்றுதல் ஆகிய யாவற்றையும் கர்த்தர் ஏற்றுக் கொண்டாரானால், அவர் தமது வாயினால் "உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது" என்கிற வார்த்தையை இன்னும் சொல்லியிருக்காவிட்டாலுங்கூட, அது ஒரு ஆசீர்வாதமான நிலைதான். ஏனென்றால், மௌனமாக அவர் ஒப்புதலை அளித்து, ஒருவனை ஏற்றுக் கொள்ளத் தொடங்கிவிட்டாரானால், அவர் ஒருபோதும் பின்வாங்குவதில்லை. இந்த பெண்ணின் அன்பையும் செயல்களையும் கர்த்தர் ஏற்றுக் கொண்டார். ஆனால், தாம் அவைகளை ஏற்றுக் கொண்டதை அவளுக்கு உறுதிப்படுத்தாவிட்டாலும், மௌனமாக அவர் ஏற்றுக் கொண்டதே அந்தப் பெண்ணுக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது. மனோவாவின் மனைவி: "கர்த்தர் நம்மைக் கொன்றுபோடச் சித்தமாயிருந்தால், அவர் நம்முடைய கையிலே சர்வாங்க தகனபலியையும் போஜனபலியையும் ஒப்புக்கொள்ள மாட்டார்" என்று தன் கணவனிடம் கூறினாள். அது போலவே கர்த்தர் இந்தப் பெண்ணுக்கு இரக்கம் காண்பிக்க சித்தமில்லாதவராயிருந்தால், அவளுடைய கண்ணீர் தமது பாதங்களைக் கழுவினதையும், தலைமயிரினால் துடைக்கப்பட்டதையும், பாதங்களில் இடைவிடாமல் முத்தமிட்டதையும், அவற்றில் விலையேறப்பெற்ற பரிமளதைலத்தை ஊற்றினதையும் ஏற்றுக் கொண்டிருந்திருக்க மாட்டார் என்பது நிச்சயம்.

## சமாதானத்தோடே போ

நமது கர்த்தர் இந்தப் பெண்ணுக்கு மிகுந்த ஆதரவாக இருந்தார் என்பதை அவர் அவளுடைய காரியத்தில் அணுகுகின்ற விதத்தின் இரண்டாவது நிலையில் தெளிவாகக் காணமுடிகிறது. அவள்பேரில் குற்றம் சுமத்துகிறவர்களிடம் அவளுக்காக வாதாடுவதில் அதைக் காண்கிறோம். சீமோனின் கெட்ட புத்தி அவள் மீது மாத்திரமல்ல, அவளுடைய ஆண்டவர் மீதும் பழி சுமத்தியது. அவ்வேளையில்தான் இயேசு ஒரு அருமையான உவமையை சொல்லி, அந்தப் பெண்ணின் அன்பின் மகத்துவத்தைக் காண்பிக்கிறார். தனது அன்பை அவள் வெளிப்படுத்திய விதத்தையும் நியாயப்படுத்துகிறார். கிறிஸ்து அவளிடம் நேரிடையாக இப்போது பேசவில்லை. ஆனால் அவளுக்காகப் பேசுகிறார். ஒரு விசுவாசி இயேசுவுக்குள்ளாக வாழ்வதற்கு இதுவே போதுமானதாக இருக்கும் அல்லவா! எனது ஆண்டவர் தம்மை எனக்கு நேரிடையாக வெளிப்படுத்தாவிட்டால் என்ன? அவர் எனக்காக தம்மையே தமது பிதாவிடம் வெளிப்படுத்தியிருக்கிறாரே. அவர் என்னிடம் பேசாவிட்டால் என்ன? அவர் எனக்காகப் பிதாவிடம் பேசிக் கொண்டிருப்பாரானால் அது எவ்வளவு பெரிய காரியம்! பாவிகளுக்காக அவர் வேதாகமத்தில் பரிந்து பேசியிருப்பது எவ்வளவு மேன்மையானது! அவர் பரலோகத்தின் நியாயஸ்தலத்தில் நமக்காக வாதாடிக் கொண்டிருப்பாரானால் நாம் எவ்வளவு நன்றியாயிருக்க வேண்டும்!

மூன்றாவது நிலையில் நமது கர்த்தர் இந்தப் பெண்ணுக்காக இன்னும் அருமையானவைகளை செய்கிறார். "உன்னுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டது" என்கிற கிருபையுள்ள வார்த்தைகளை அவளிடம் சொல்லுகிறார். ஓ! அது ஒரு பனித்துளி போல எவ்வளவு அருமையாக அவளுடைய ஆத்துமாவுக்குள் சென்றிருக்கும்! அந்த வார்த்தைகளால் அவள் எவ்வளவு சமாதானம் அடைந்திருப்பாள்! அவள் ஒரு பாவி, பெரும் பாவி, பலரும் அறிந்த பாவி, பாவத்தையே தொழிலாகக் கொண்டிருந்தவள் - அப்படிப்பட்டவள், "உன்னுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டது" என்று தனது மீட்பர் சொல்லுவதைக் கேட்டாள். ஆசாரியர்கள் என்று அழைக்கப்படுபவர்களிடம் சென்று பாவமன்னிப்பு பெறுவது பிரயோஜனமற்றது. ஆனால் மகா பிரதான ஆசாரியராகிய நமது ஆண்டவரிடமிருந்து பாவமன்னிப்பைப் பெற்றுக் கொள்ள ஆயிரம் உலகங்களைக் கொடுத்தாலும் ஈடாகாது. ஆம், அந்தப் பெண்ணின் பாவங்களையெல்லாம் அவர் அறிவார். அவருக்கே பூலோகத்தில்

பாவங்களை மன்னிக்க அதிகாரம் இருக்கிறது. அப்பேர்பட்டவர்தான் அவளிடம், "உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது" என்று கூறுகிறார். இது அவளுக்குப் போதாதா? அந்த சிறிய வாக்கியம் அவள் வாழும் காலம் வரைக்கும் அவளுடைய இருதயத்தில் ஒலித்துக் கொண்டேயிருக்காதா?

அது மாத்திரமல்ல, நமது ஆண்டவர் இரண்டாவது முறையாகவும் அவளிடம் பேசுகிறார், "உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, சமாதானத்தோடே போ" என்கிறார். அவள் பாவத்தின் குற்றவுணர்விலிருந்து மாத்திரமல்லாமல், பாவத்தின் அதிகாரத்திலிருந்தும் விடுவிக்கப்பட்டாள். அவளுடைய விசுவாசம் அவளை இரட்சித்தது. அவள் இரட்சிக்கப்பட்ட பெண். ஆகவே அவள் சமாதானத்தோடே போகலாம். இப்போது அவள் இரட்சிப்பின் முழு நிச்சயத்தின் வெளிச்சத்திற்குள்ளாக வந்து, அதை அனுபவிக்கிறாள். அவள் ஏற்றுக் கொள்ளப்பட்டது உறுதிப்படுத்தப்பட்ட வெட்டவெளிச்சமாயிற்று: "உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, சமாதானத்தோடே போ." நம்மில் சிலருக்கு இந்த பெரிய ஆசீர்வாதம் கிடைத்திருக்கிறது. அதை நாம் மகிழ்ச்சியோடு அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். மோட்சப் பிரயாணத்தில் இந்த அளவு வரைக்கும் வராத மற்றவர்கள் முணுமுணுக்கவோ, சந்தேகிக்கத் தொடங்கவோ வேண்டாம். ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்து பாவிகளாகிய உங்களுக்கு எந்தவிதத்திலாவது தயை செய்திருந்தால் அதற்காக அவரைத் துதியுங்கள். உங்களுக்கு ஒரு சிறிய கீற்று வெளிச்சமாவது கிடைத்திருந்தால், "நடுப்பகல் வரைக்கும் அதிகமதிகமாகப் பிரகாசிக்கும் சூரியனைப் போல" வெளிச்சமாக்கும்படி அவரிடம் ஜெபியுங்கள். கர்த்தரிடமிருந்து எந்த நன்மையையாவது பெற்றிருந்தால் அதற்காக நன்றியோடு இருங்கள். அது மாத்திரமல்லாமல், "உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, சமாதானத்தோடே போ" என்கிற வார்த்தைகள் ஒரு இனிய கீதமாக உங்கள் ஆத்துமாவில் ஒலிக்கும் வரைக்கும் ஆவலோடே எதிர்பார்த்துக் காத்திருங்கள்.

நாம் எடுத்துக் கொண்டிருக்கிற வசனத்தில் இரண்டு காரியங்கள் தெளிவாகத் தெரிகின்றன. முதலாவது, ஒரு **நிச்சயத்தன்மை:** "உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது", இரண்டாவது, **அனுப்பி விடுதல்:** "சமாதானத்தோடே போ."

சமாதானத்தோடே போ

## அ) நிச்சயத்தன்மை: "உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது."

### *நிகழ்காலத் தன்மையுடையது!*

முதலாவதாக, இந்த நிச்சயத்தன்மை நமக்கு போதிப்பதென்னவென்றால், ***இரட்சிப்பு என்பது நிகழ்காலத் தன்மையைக் கொண்டது***. "உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது." அது ஏற்கனவே நடந்து முடிந்த காரியம். இரட்சிக்கப்படுவாய் என்று எதிர்காலப் பண்பாகக் குறிப்பிடாமல், இரட்சிக்கப்பட்டிருக்கிறாய் என நிகழ்காலத்தில் சொல்லப்பட்டுள்ளது. இப்போதே நீ அந்த விலையேறப்பெற்ற இரட்சிப்புக்குள்ளாக வந்து விட்டாய். "உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது." கிறிஸ்துவின் விசுவாசிகள் அனைவரும் ஏற்கனவே இரட்சிப்பிற்குள்ளாக இருக்கிறார்கள் என்பதை முழு வேதாகமமும், அதிலும் முக்கியமாக புதிய ஏற்பாடும் உறுதிப்படுத்துகிறது. அப்படியாக இருக்கிறதென்பதை நான் நிருபித்துக் காட்டப் போவதில்லை. ஆனால் அதைக் குறித்து சற்று விளக்கமாகக் கூறப்போகிறேன். யாராவது என்னிடம் "விசுவாசிகள் எவ்விதத்தில் இரட்சிக்கப்படுகிறார்கள்?" என்று கேட்டால், அவர்கள் இரட்சிப்பில் நான்கு காரியங்கள் அடங்கியுள்ளது என்பேன். அவர்கள் ஒரு விலைக்கிரயத்தினாலும், வாக்குத்தத்தத்தினாலும், கொள்கைகளினாலும், இரட்சிப்பின் முத்திரையினாலும் இரட்சிக்கப்படுகிறார்கள் என்று கூறுவேன்.

முதலாவது, விசுவாசிகள் யாவரும் ஒரு **விலைக்கிரயத்தினால்** இரட்சிக்கப்படுகிறார்கள். பாவத்தின் காரணமாக, அவர்களுக்காக செலுத்தப்பட வேண்டிய யாவற்றையும் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து செலுத்தியிருக்கிறார். சிலுவையில் மரித்ததின் மூலமாக அவர், அவர்களை மீட்டுக் கொண்டிருக்கிறார். அவர்களுக்கு பதிலாக அவர் அங்கே நின்றார், அவர்களுடைய பாவங்களை சிலுவை மரத்திலே தமது சரீரத்தில் சுமந்தார், பாவத்திற்கான தண்டனை முழுவதையும் அவர் அனுபவித்தார். மீறுதலை அவர் நீக்கிப் போட்டார். பாவத்திற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தார், ஒப்புரவாக்குதலை ஏற்படுத்தினார், அவர்களுக்கு என்றென்றும் நிலைத்திருக்கிற நீதியை சம்பாதித்துக் கொடுத்தார். இதனால்தான் அவர்கள் இரட்சிக்கப்பட்டார்கள். கிறிஸ்து, சிலுவையிலே அவர்களுக்காக தமது ஜீவனைக் கொடுத்ததால் அவர்களுடைய இரட்சிப்பு என்கிற மாபெரும் காரியம் நிறைவேறியது. இப்போது அவர்கள் "கிரயத்துக்குக்

கொள்ளப்பட்டவர்கள்". அதுவும் "குற்றமற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினால்" கிரயமாகக் கொள்ளப்பட்டவர்கள்.

அடுத்ததாக, அவர்கள் இரட்சிப்பின் **வாக்குத்தத்தங்களினாலே** இரட்சிக்கப்படுகிறார்கள். "தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளினார்" என்று பொய்யுரையாதவராகிய நமது ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்து அறிவிக்கிறார். தேவனுடைய வாக்குத்தத்தங்கள் யாவும் உறுதியாக நிறைவேறும். ஆகவே இயேசுவை விசுவாசிக்கின்ற ஒவ்வொரு விசுவாசியும் இரட்சிப்பின் நிச்சயத்தை உணரலாம். நல்ல பணவசதி உள்ள ஒருவரிடமிருந்து நாம் காசோலையை பல சமயங்களில் பெற்றுக் கொள்கிறோம். அந்த காசோலையை உண்மையான பணம் போலவே நம்பி ஏற்றுக் கொள்கிறோம். அதுபோலவே, இரட்சிப்பைக் குறித்த வாக்குத்தத்தத்தை தேவனிடமிருந்து பெற்றுக் கொள்கையில் அதை இரட்சிப்பாகவே எண்ணி நிச்சயித்துக் கொள்கிறோம். தேவனுடைய வாக்குத்தத்தம் ஆணையினாலே ஸ்திரப்படுத்தப்பட்டிருக்கிறது என்று பவுல் நமக்கு சொல்லுகிறார்: "நமக்கு முன் வைக்கப்பட்ட நம்பிக்கையை பற்றிக் கொள்ளும்படிக்கு அடைக்கலமாய் ஓடி வந்த நமக்கு இரண்டு மாறாத விசேஷங்களினால், நிறைந்த ஆறுதல் உண்டாகும்படிக்கு, எவ்வளவேனும் பொய்யுரையாத தேவன் அப்படி செய்தார்."

மூன்றாவதாக, நாம் இரட்சிப்பின் அடிப்படைக் **கொள்கையின்பிரகாரமாக** அதைப் பெறுகிறோம். அதாவது, மேலோகத்தின் பரிபூரண குணாதிசயத்திற்குத் தேவையான சகல நற்குணங்களும், தேவனின் உண்மையான பிள்ளைகள் ஒவ்வொருவரிலும் ஏற்படுகிறது. பரலோகத்திலே நித்தியமாக வாழப்போகின்றதான அதே ஜீவனை, மறுபிறப்பை அடையும்போது நாம் ஒவ்வொருவரும் பெற்றுக் கொள்கிறோம். அதனுடைய விதையை, வேரை நாம் இப்போதே பெற்றிருக்கிறோம். அதிலிருந்து அழியாமையும், முழுமையும் முளைத்தெழும்பப் போவது வெகு நிச்சயம். இப்போது நாம் இன்னும் பூரணராக இல்லாமலிருக்கலாம். ஆனால், பூரணநிலையை அடைவதற்கான தன்மையை நாம் பெற்றுக் கொண்டிருக்கிறோம். பாவம் செய்யக்கூடாத ஒரு புதிய சுபாவத்தை நம்மில் பெற்றிருக்கிறோம். ஏனென்றால் அது தேவனால் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

சமாதானத்தோடே போ

அது கொஞ்சம்கொஞ்சமாக பழைய சுபாவத்தை மேற்கொள்ளும். இஸ்ரவேலர் கானானியரை விரட்டியடித்ததைப் போல, பாவ சுபாவம் விரட்டப்பட்டு, சிங்காசனத்தில் வீற்றிருக்கிற மகிமையானவருக்கு முன்பாக நாம் குற்றமற்றவர்களாகக் காணப்படுவோம். ஒரு விவசாயி ஒரு வயல் முழுவதும் விளைச்சலைத் தரக்கூடிய விதை தானியத்தை ஒரு மூட்டையில் தன்னுடைய சிறிய அறையில் வைத்திருப்பான் அல்லவா! சிறிய அளவில் விதைக்கப்படுவது அறுவடையின்போது ஏராளமான பலனைத் தரும் அல்லவா! அதுபோல, ஆண்டவருடைய கிருபையினாலே, விசுவாசம், அன்பு, பரிசுத்தஆவியின் கிரியைகள் ஆகிய விதை தானியமாக பரலோகத்தின் வாழ்க்கையை நாம் நமது ஆத்துமாவில் பெற்றுக் கொண்டிருக்கிறோம். இவ்வாறாக நாம் இரட்சிப்பை கொள்கையளவிலே அடைந்திருக்கிறோம்.

அடுத்தபடியாக, **அச்சாரத்தினால்** நாம் இரட்சிப்பைப் பெறுகிறோம். பரிசுத்தஆவியானவர் முத்திரையாக நமது இருதயத்தில் வரும்போது, அவரது வருகை ஒரு வாக்குறுதியாகவும் பரலோகத்தின் முன்ருசியாகவும் இருக்கிறது. வாரத்தின் கடைசியிலே சம்பளத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டிய ஒரு மனிதன், இடையிலேயே தன் எஜமானனிடமிருந்து முன்பணமாக கொஞ்சம் சம்பளத்தைப் பெற்றுக் கொண்டானென்றால், அவன் நிச்சயமாக வாரத்தின் முடிவில் மீதியையும் பெறுவான் என்பது உறுதி. அதுபோல, நமக்குள்ளாக வந்திருக்கிற பரிசுத்தஆவியானவர், பரலோக இன்பத்தை இப்போதே முன்ருசியாக கொண்டுவருகிறவர். கிறிஸ்து ஆயத்தம் செய்துவருகிற அந்த பரலோகத்தில் வசிக்க நமக்கு இங்கே பயிற்சி அளிப்பவரும் அந்த தெய்வீக ஆவியானவரே. பரிசுத்தஆவியானவரின் சாட்சியும், கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் கிருபையும், பிதாவாகிய தேவனுடைய அன்பும் நம்மைப் பரிசுத்தத்தை அடையும்படி ஆவல் கொள்ளச் செய்வது எவ்வளவு தயவுள்ள காரியம்! அத்தகைய ஆவல் மறுபிறப்படையாத போது நம்மிடத்தில் இருக்கவில்லை. அவருடைய முத்திரை பரலோகத்திற்குரியவை. அதை நாம் பெற்றிருக்கையில் நாம் இரட்சிப்பையே அடைந்துவிட்டதாகத்தான் அர்த்தம். பரிசுத்தஆவியானவர் நமது உள்ளத்திற்குள் வந்து, ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை அளிப்பது நம்மை பரிசுத்தப்படுத்துவதற்காகவும், கர்த்தருக்குள் நம்மை நித்தியமாக இரட்சிப்பதற்காகவுந்தான்.

ஆகவே இரட்சிப்பு என்பது நிகழ்ந்து கொண்டிருக்கிற ஒரு காரியம். விலைக்கிரயத்தினாலும், வாக்குத்தத்தங்களினாலும், கொள்கைகளினாலும், அச்சாரத்தினாலும் அது உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆனால், உங்கள் ஒவ்வொருவரிடமும் அவசியம் கேட்கப்பட வேண்டிய கேள்வி - நீங்கள் இத்தகைய இரட்சிப்பைப் பெற்றுக் கொண்டிருக்கிறீர்களா? இல்லையென்றால் நீங்கள் மிகவும் ஆபத்தான நிலமையில் இருக்கிறீர்கள். ஏனென்றால் "தேவனுடைய ஒரே பேறான குமாரனின் மீது விசுவாசம் வைக்காதபடியினால் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டிருக்கிறீர்கள்" இந்த இரட்சிப்பைப் பெற்றவர்களாக இருந்தால் நீங்கள் நிரந்தரமான ஐசுவரிய நிலையை அடைந்தவர்களாய் இருக்கிறீர்கள். ஒருவேளை நீங்கள் மிகவும் சிறிய வீட்டில் வசித்துக் கொண்டிருக்கலாம். வாழ்க்கையை நடத்த கடுமையாக உழைக்க வேண்டியதாயிருக்கலாம். ஆனால் உலக சொத்துக்களையும் மகிமையையும் அடைந்திருக்கிற ராஜாக்களுக்கும் சக்கரவர்த்திகளுக்கும் மேலான ஐசுவரியத்தைக் கொண்டிருப்பவர்கள் நீங்கள்தான். ஏனென்றால் அவர்களோ தேவனின் கிருபைக்குள்ளாக இல்லை. இரட்சிக்கப்பட்டிருக்கிற உங்களுக்கு அவருடைய கிருபை இருக்கிறது. உங்களிடமிருந்து ஒருபோதும் பறித்துக் கொள்ள முடியாததான இரட்சிப்பை அவர் உங்களுக்கு அருளியிருக்கிறார். ஆகவே இந்த இரட்சிப்பில் களிகூறுங்கள். உங்களுக்கு உடுத்துவதற்கு அதிகமான உடை இல்லாவிட்டாலுங்கூட, இரட்சிப்பே உங்களுடைய ராஜரீக வஸ்திரமாய் இருக்கட்டும். உங்களுடைய சாப்பாட்டு மேஜையை இந்த இரட்சிப்பு பரலோகத்தின் சுவையால் நிரப்பட்டும். உங்களுடைய பாதை கடினமானதாக இருந்தாலும், இந்த இரட்சிப்பு அதை மென்மையாக்கட்டும். அதிக துயரங்களுக்குள்ளாக நீங்கள் கடந்து செல்ல நேர்ந்தாலும், இந்த இரட்சிப்பு உங்கள் இருதயத்தின் மகிழ்ச்சியாய் இருப்பதாக.

ஆகவே இரட்சிப்பின் நிகழ்காலத்தன்மை, இந்த இரட்சிப்பின் நிச்சயத்தை உறுதிப்படுத்துகிறது.

*விசுவாசத்தின் மூலமாக வருவது!*

அடுத்தபடியாக, ***விசுவாசத்தின் மூலமாக இரட்சிப்பை அடைகிறோம்*** என்கிற சத்தியத்தை அது போதிக்கிறது. "உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது" என்கிறார். ஆனால், இயேசுக்கிறிஸ்து அல்லவா அவளை இரட்சித்தார்?

என்கிற சந்தேகக்குரல் கேட்கிறது. ஆம், அவளை இரட்சித்தது இயேசுதான் என்பது வெகு நிச்சயம். ஆனால், கிறிஸ்து இங்கு என்ன செய்கிறார் பார்த்தீர்களா? அவருக்கு விசுவாசத்தின் மீது மிகவும் பிரியம். ஆகவே அவர் தமது மகிமையின் கிரீடத்தை எடுத்து விசுவாசத்திற்கு அணிவித்து, அந்தப் பெண்ணிடம், "உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது" என்று கூறுகிறார். கிறிஸ்து அப்படி செய்வது சரிதானா? ஆம், மிகவும் சரிதான். ஏனென்றால், உடனடியாக, விசுவாசம் தனக்கு அணிவிக்கப்பட்ட கிரீடத்தை எடுத்து திரும்பவும் கிறிஸ்துவுக்கே முடிசூட்டி, "எனக்கல்ல, கர்த்தாவே எனக்கல்ல, உமது நாமத்துக்கே சகல புகழ்ச்சியும் உரியது" என்று கூறுகிறது. விசுவாசம், கிறிஸ்துவையே கனப்படுத்துவதால், கிறிஸ்து விசுவாசத்தை கனப்படுத்த விரும்புகிறார். தனக்கு பெருமை வருவதை விசுவாசம் சற்றும் பொறுத்துக் கொள்ளாது. அந்த பெருமையை அதற்குரியவரிடம் சேர்த்துவிட்டுதான் மறுவேலை பார்க்கும். "உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது" என்று நமது மீட்பர் ஏன் சொல்லுகிறாரென்றால், விசுவாசம் மாத்திரமே ஒருவனைத் தன்னிடம் இணைக்கும் இணைப்பாக இருக்கிறது என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான். இரட்சிப்பை நிறைவேற்றுவது இயேசுக்கிறிஸ்து. விசுவாசத்தின் மூலமாக விசுவாசி அதைப் பெற்றுக் கொள்கிறான்.

இந்த விசுவாசத்தைக் குறித்த நான்கு காரியங்களை நீங்கள் கவனிக்கும்படியாக நான் விரும்புகிறேன். முதலாவது, அந்தப் பெண்ணின் விசுவாசம், அவள் தன்னிலே சுயமாகக் கொண்டிருந்த ***தனிப்பட்ட விசுவாசம்***: "***உன்*** விசுவாசம் உன்னை இரட்சித்தது." ஓ! நண்பர்களே, இன்னொருவருடைய விசுவாசத்தின் காரணமாக நீங்கள் இரட்சிக்கப்பட்டுவிடலாம் என கனவு காணாதீர்கள். இயேசுவில் நீங்களே சொந்தமாக விசுவாசம் வைத்தால்தான் இரட்சிக்கப்பட முடியும். இல்லையென்றால் நீங்கள் நித்தியமாக அழிந்து போவீர்கள். ஒரு குழந்தையின் பிரதிநிதியாக ஒருவன் எழுந்து நின்று, பலவிதமான பொருத்தனைகளை செய்து, வாக்குறுதிகளை அளிப்பது என்னவொரு பயங்கரமான பொய்யாயிருக்கிறது. அவைகளை நிறைவேற்றும் அதிகாரம் உங்களுக்கு இல்லையே. உங்களுடைய ஆத்துமாவைக் குறித்து யாராவது எதற்காகவாவது உங்களுக்கு உத்திரவாதம் அளித்திருக்கிறார்களா? இந்த மாதிரி விஷயத்தில் இன்னொரு மனிதன் உங்களுக்காக என்ன செய்ய முடியும்? உங்களுடைய பெற்றோரின் உறுதியான விசுவாசம் உங்களை

மோட்சத்திற்கு கொண்டு வந்துவிடாது. உங்களுக்கும் தனிப்பட்ட விதத்தில் இயேசுக்கிறிஸ்துவில் விசுவாசம் ஏற்பட்டால் மாத்திரமே நீங்கள் மோட்சத்தை அடைய முடியும். மற்றவர்கள் தங்களுடைய விசுவாசத்தினால் நமக்காக ஜெபிப்பது மிகப் பெரும் ஆசீர்வாதம்தான். இருந்தாலும், கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவில் நாம் சொந்தமாக, தனிப்பட்ட விதத்தில் விசுவாசம் கொள்ளாவிட்டால், இரட்சிப்பை ஒருபோதும் பெற முடியாது. அவர் அந்தப் பெண்ணிடம், "***உன்*** விசுவாசம் உன்னை இரட்சித்தது" என்று கூறுகிறார். பேதுருவின் விசுவாசம் அல்ல, யாக்கோபின் விசுவாசம் அல்ல, யோவானின் விசுவாசம் அல்ல, அவளுடைய விசுவாசமே அவளை இரட்சித்தது. நீங்களும் சொந்தமாக விசுவாசத்தைக் கொண்டிருக்க வேண்டும். இல்லையென்றால் நிச்சயமாக அழிந்துதான் போவீர்கள். "கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது இரட்சிக்கப்படுவாய்." நீங்கள் தனிப்பட்ட விதத்தில் அவரை விசுவாசிக்காவிட்டால், இரட்சிப்பை அடைய முடியாது.

அடுத்தபடியாக கவனியுங்கள், அந்தப் பெண்ணின் விசுவாசம், ***செயல்படுகிற விசுவாசம்***. அவள் கிரியைகளினால் அல்ல, விசுவாசத்தினால்தான் இரட்சிக்கப்பட்டாள் என்பது மிகவும் உண்மை. ஆனால் கிரியை செய்யாத விசுவாசத்தை அவள் கொண்டிருக்கவில்லை. அவளுடைய கிரியைகளை சிந்தித்துப் பாருங்கள் - அவள் தனது கண்ணீரினால் தனது ஆண்டவரின் பாதங்களைக் கழுவினாள், தனது தலைமயிரினால் அவருடைய பாதங்களைத் துடைத்தாள், ஓயாமல் அவர் பாதங்களை முத்தம் செய்தாள், விலையேறப்பெற்ற தைலத்தினால் அவருடைய பாதங்களை அபிஷேகம் செய்தாள். தன்னால் எதை செய்ய முடிந்ததோ அதை அவள் செய்தாள் என்று நான் உறுதியாகக் கூறுவேன். தனது அன்பு ஏவினவைகளை அவள் பக்தியோடு செய்தாள். ஏனென்றால் அன்பினால் செயல்படுகின்ற விசுவாசத்தை அவள் கொண்டிருந்தாள். நண்பர்களே, உங்களிடமுள்ள விசுவாசம், கிறிஸ்துவுக்காக கிரியை செய்யாவிட்டால், அதை தூரப் போடுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் அத்தகைய விசுவாசம் போலியான விசுவாசமாக மாறிவிடும். அவருடைய பாதங்களை முத்தம் செய்யாத விசுவாசத்தை அவர் தமது பாதங்களுக்குக் கீழாக மிதித்துப் போடுவார். அவரை கனப்படுத்தாத விசுவாசம், சுகந்த வாசனையில்லாத விசுவாசம். அதை அவர் ஏற்றுக் கொள்வதில்லை. கிரியைகளும் விசுவாசமும் கலந்த கலவையினால் நாம் இரட்சிப்பை அடைவதில்லை.

வெறும் கிரியைகளினாலும் இரட்சிப்பை அடைய மாட்டோம். ஆனாலும், இரட்சிக்கும் விசுவாசம் செத்த விசுவாசம் அல்ல. அது கிறிஸ்துவுக்காக அன்பின் கனிகளையும், சேவைகளையும் உருவாக்குகின்ற விசுவாசம்.

இந்தப் பெண்மணியின் விசுவாசம் தனிப்பட்டவிதத்தில் அவளுக்கே உரியதாயும், கிரியைகள் அடங்கியதாயும் இருந்ததைப் பார்த்தோம். அது மாத்திரமல்லாமல், அவளுடைய விசுவாசம் ***மனம் வருந்திய விசுவாசம்***. அவள் கிறிஸ்துவின் பாதங்களுக்கு பின்னாக நின்று கொண்டிருந்தபோது, தனது பாவங்களுக்காக அவள் மனம் வருந்தினபடியால், கிறிஸ்துவின் பாதங்களை நனைக்குமளவிற்கு அவளுடைய கண்கள் கண்ணீரைப் பொழிந்தது. கண்ணீர் சிந்தாத விசுவாசம் எந்த அளவிற்கு உண்மையாக இருக்கும் என்பதைக் குறித்து நான் எப்போதும் சந்தேகப்படுவேன். மனந்திரும்பாமலேயே, விசுவாசத்திற்குள்ளாக வந்துவிட்டதாக அறிவிப்பவர்களைக் குறித்து, நான் உயிரோடிருக்கும் வரை அஞ்சிக் கொண்டுதான் இருப்பேன். பாவத்தைக் குறித்த துயரத்தை வெளிப்படுத்துவதில் பழங்கால முறையில் நம்பிக்கையில்லாமல் இருப்பவர்கள் இப்போது சிலர் இருக்கிறார்கள். தங்களைப் பெரிதாக எண்ணிக் கொள்வதைவிட, தங்களுடைய பழைய பாவவாழ்க்கையின் காரணமாக அவமானமுடையவர்களாய், சற்று நம்பிக்கைக் குறைச்சலோடு இருப்பதே நல்லதென்று தோன்றுகிறது. இந்தப் பெண்மணி, உண்மையாக மனம் வருந்தின விசுவாசத்தை வெளிப்படுத்துகிறாள்.

அடுத்தபடியாக, அவளுடையது ***கலப்படமற்ற எளிய விசுவாசம்***. அவள் அழுதாள், ஆனால் அவள் தனது கண்ணீரில் நம்பிக்கை வைக்கவில்லை. கிறிஸ்துவின் பாதங்களில் பரிமள தைலத்தைப் பூசினாள், ஆனால், தான் தியாகம் செய்வதாக அவள் எண்ணவில்லை. இயேசுவின் பாதங்களை முத்தம் செய்தாள், ஆனால் அந்த முத்தத்தினால் நன்மை ஏற்படும் என அவள் நம்பிக் கொண்டிருக்கவில்லை. அவளுடைய நம்பிக்கை எல்லாவற்றையும் எதில் வைத்தாள்? கிறிஸ்துவில் மட்டுமே தனது முழு நம்பிக்கையையும் அவள் வைத்தாள். அவள் பழைய ஏற்பாட்டை படித்திருப்பாளா என்று எனக்குத் தெரியவில்லை. அவள் நிச்சயமாக புதிய ஏற்பாட்டைப் படித்திருக்க மாட்டாள். ஏனென்றால் அது அப்போது எழுதப்பட்டிருக்கவில்லையே. அவளுக்கு வேதாகமத்தைப் பற்றி அதிகம்

தெரியாமல் இருந்திருக்கலாம். ஆனால் வேதாகமத்தின் கதாநாயகனை அவள் அறிந்து கொண்டாள்.

உண்மையில் சொல்லப் போனால் "தேவனுடைய வார்த்தை" என்பது அவர்தான். அந்தப் பெண் அவரைப் பார்த்திருக்கிறாள். அவரை அறிந்து கொள்ளக் கற்றுக் கொண்டாள். அவர் அவளுடைய பாவங்களை மன்னித்திருக்கிறார். அவர் மீது கொண்ட மிகுந்த அன்பினால் அவள் அந்த வீட்டிற்குள் வருகிறாள். அவரையே முற்றிலுமாக நம்பி வருகிறாள். அவருடைய வாயினாலே இப்போது அந்தக் கிருபை நிறைந்த உறுதிமொழியைப் பெற்றுக் கொள்கிறாள்: "உன்னுடைய விசுவாசம் உன்னை இரட்சித்தது." அவர் மீது கொண்ட விசுவாசம் மாத்திரம்தான் அவளை இரட்சித்தது. வேறு எந்தக் காரணமும் இல்லை. அவளைப் பொறுத்த மட்டில், அவள் வேறு எதன் மீதும், யார் மீதும் நம்பிக்கை கொள்ள வழியில்லை. கிறிஸ்துவை மாத்திரம்தான் அவள் நம்பியிருக்க வேண்டியதாயிருந்தது. அழுத்தந்திருத்தமாக சொல்வதானால் அவள் ஒரு பாவி. அவளுடைய பாவ வாழ்க்கையைக் குறித்து அந்தப் பட்டணத்தில் அநேகர் சாட்சி சொல்லக்கூடும். ஆனால், அவளோ பாவிகளின் மீட்பராகிய இயேசுக்கிறிஸ்துவில் மாத்திரம் தனது முழு நம்பிக்கையையும் வைத்தாள். அவரை மட்டுமே நம்பியிருந்தாள். அவளுடைய விசுவாசம் கலப்படமற்ற எளிமையான தன்மையைக் கொண்டிருந்தது. இந்தவிதமான விசுவாசத்தைக் கொண்டிருப்பவர்கள் அனைவரையும் அது இரட்சிக்கும். உங்களுடைய விசுவாசமும் இத்தகைய தன்மையைக் கொண்டதாக இருக்கட்டும் நண்பரே! தனிப்பட்டதாகவும், கிரியைகள் நிறைந்ததாயும், மனம் வருந்துகிறதாயும், கலப்படமற்ற எளிமையானதாகவும் அது இருக்கட்டும்.

இந்த முதலாவது தலைப்பின் கீழாக, ***இரட்சிப்பு என்பது நிச்சயத்தன்மையை உடையது*** என்கிற கருத்தை கவனியுங்கள். இந்தப் பெண்மணி கிறிஸ்துவின் வாயிலிருந்தே, "உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது" என்கிற உறுதிப்பாட்டைப் பெற்றுக் கொண்டாள். "இரட்சித்தது" என்பதில் அது கிடைத்து விட்டது என்கிற உறுதிமொழி தென்படுகிறது. நீங்கள் இரட்சிப்பின் ஆசீர்வாதத்தை அடைந்திருப்பீர்களானால், அதை பெற்றுக் கொண்டிருப்பதை அறிந்து கொள்வதற்கான வழிமுறைகள் இருக்கிறது. "குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு." ஆம்,

அவன் அதைப் பெற்றுக் கொண்டிருக்கிறான். இப்போதே பெற்றுக் கொண்டிருக்கிறான்.

இயேசுக் கிறிஸ்து நேரிடையாக என்னிடம் சொன்னாரென்றால் நான் அதை விசுவாசிப்பேன்" என்று ஒருவன் சொல்லுகிறான். அருமை சிநேகிதரே, அவர் அதைத் தமது வேதாகமத்தில் சொல்லிவிட்டாரே. அந்த வார்த்தை பொய்யானதா உண்மையானதா? அது உண்மைதானென்றால் உனக்கு வேறென்ன வேண்டும்? கிறிஸ்து அதைத் தமது வேதாகமத்தில் எழுதி வைத்துவிட்டார். ஒரு காரியத்தை வாயினால் சொல்வதைவிட எழுத்தில் எழுதி வைப்பதை நான் சிறந்ததாகக் கருதுகிறேன். ஒரு வியாபாரி, பேரம் பேசியதற்கான நிருபணத்தை எழுத்தில் கேட்பான் அல்லவா: "அதை எழுதிக் கொடுங்கள். எல்லோரும் கேட்கும்படியாக சொல்லியிருந்தாலும், சில மனிதர்கள், நான் அப்படி சொல்லவேயில்லை என்று சத்தியம் பண்ணுவார்கள். ஆகவே நீங்கள் சொல்வதை எழுதிக் கொடுங்கள்" என்று கேட்பான். இதோ கிறிஸ்து இங்கே எழுதிக் கொடுத்திருக்கிறார்: "குமாரனில் விசுவாசமாயிருப்பவன் நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்கிறான்." மேலும், "கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து . . ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை" என்று எழுதி வைக்கப்பட்டிருக்கிறது. இவ்விதமாக நாம் "விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்." ஆகவே, உங்களாலும் "இரட்சிப்பைப் பெற்றுக் கொண்டேன்" என்று சொல்லக்கூடுமல்லவா?

இன்னும் சில பேர் "இருந்தாலும், எனக்கு சில அடையாளங்கள் வேண்டும்" என்று சொல்லுவார்கள். நல்லது, உங்களிடம் அடையாளங்கள் காணப்படும். உங்களைப் புதுப்பித்தவராகிய பரிசுத்தஆவியானவர் உங்களுடைய ஆவியுடனேகூட சாட்சி கொடுப்பார். உங்களுடைய மாற்றமடைந்த வாழ்க்கை சாட்சி கொடுக்கும். உங்களுடைய புதிய சுபாவங்கள் சாட்சி கொடுக்கும். ஆனால், முதலாவதாக கிறிஸ்துவின் வார்த்தைகள் உங்களுக்குப் போதுமானதாக இல்லையா? எழுதப்பட்டிருக்கும் அவருடைய வார்த்தைகள் போதாதா? பரிசுத்தஆவியானவராலே ஏவப்பட்டு எழுதப்பட்டதாக நீங்கள் விசுவாசிக்கிறீர்களே, இந்தப் புத்தகம். அது கர்த்தரின் வார்த்தைகளை வெளிப்படுத்துவதாக நம்புகிறீர்களே, இது

உங்களுக்குப் போதாதா? எனக்கு அது போதுமானதாயிருக்கிறது. நான் இந்த வேதாகமத்தில் படித்த ஒரு காரியத்தைக் குறித்து, இவ்வுலகிலுள்ள அனைத்து மனிதர்களும் என்னிடம் வந்து, அவரவர் மொழியில், அது பொய்யான காரியம் என்று கூறினாலும், அவர்கள் சொல்வதை ஒரு துளியும் நம்ப மாட்டேன். அல்லது அவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து வந்து, அது உண்மையான காரியம்தான் என்று கூறினால், நான் : "ஆம் அவை உண்மைதான் என்பது எனக்குத் தெரியும். கிறிஸ்துவின் வார்த்தைகள் உண்மையானவை என்பதற்கு எனக்கு உங்களுடைய உறுதிமொழிகள் அவசியமில்லை" என்று அவர்களுக்கு பதிலளிப்பேன். அவர் சொல்லியிருப்பவைகளைப் பற்றி எனக்கு எந்த சந்தேகமுமில்லை. அவருடைய வார்த்தைகள் எப்போதும் நிலைநிற்கும். நரகத்தின் அதிகாரம் எதுவும் அதை மேற்கொள்ள முடியாது. அவருடைய வார்த்தைகள் எந்த ஆத்துமாவும் நம்பியிருக்கக்கூடிய உறுதியான கற்பாறையாய் இருக்கிறது. தம்மை விசுவாசிக்கின்ற, தமது இரத்தத்திலும் நீதியிலும் நம்பிக்கை கொள்கிற ஒவ்வொருவரிடமும் கிறிஸ்து, "உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது. சமாதானத்தோடே போ" என்று கூறுகிறார்.

## ஆ) அனுப்பிவிடுதல்: "சமாதானத்தோடே போ."

இப்போது, நாம் எடுத்துக் கொண்டிருக்கிற வசனத்தின் இரண்டாம் பகுதிக்கு வருகிறோம். அதாவது, **அனுப்பி விடுதல்:** "சமாதானத்தோடே போ" என்கிற இவ்வார்த்தைகளின் மூலம் நமது ஆண்டவர் என்ன சொல்லுகிறார்?

"***எதிர்ப்புகள் நிறைந்த இவ்விடத்தைவிட்டு வெளியேறு.*** சமாதானத்தோடே போ" என்கிற அர்த்தத்தில் ஆண்டவர் சொல்வதாக நான் முதலாவது நினைக்கிறேன். அவரோடேகூடப் பந்தியிருந்தவர்கள் தங்களுக்குள்ளாக "பாவங்களை மன்னிக்கிற இவன் யார்?" என்று சொல்லிக்கொண்டிருந்த அந்நேரத்திலே அவர் அந்தப் பெண்ணைப் பார்த்து, "உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது. சமாதானத்தோடே போ" என்று கூறியதை நீங்கள் கவனித்தீர்களா? சீமோனின் வீட்டிலே பந்தியிருந்த யூதர்களும், பரிசேயரும் கடூரமாக தங்கள் முகத்தை வைத்துக் கொண்டிருந்ததை கவனியுங்கள். அவர்கள் காடியைப் போன்ற கசப்பு நிறைந்தவர்களாயும், பெரும் சந்தேகப்பிராணிகளாயும் இருந்தனர். ஆகவே மீட்பர் அந்தப் பெண்ணை

பார்த்து, "நல்ல ஆத்துமாவே, வீட்டுக்குப் போ. இவர்களைவிட்டு விலகிச் செல்" என்கிறார். ஆகவே நண்பர்களே, சந்தேகத்தையும் அவநம்பிக்கையையும் ஏற்படுத்துகிற ஏதாவதொரு புத்தகத்தை நீங்கள் வாசிக்க நேர்ந்தால் அதை தூர எறிந்துவிடுங்கள். அதிலும் புதிதாக இரட்சகரைக் கண்டடைந்தவர்களாயிருந்தால் அவைகளைவிட்டு விலகியிருப்பதே உங்களுக்கு நல்லது. "உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது. சமாதானத்தோடே போ." அவிசுவாசம் உங்களுக்கு உதவாது. விசுவாசம் உங்களை ஏற்கனவே இரட்சித்துவிட்டது. இன்னும் என்ன வேண்டும் உங்களுக்கு?

உங்கள் ஆத்துமத்தில் இரட்சிப்பின் நிச்சயத்தைப் பெற்றுக் கொண்டிருக்கிறீர்கள். வேறு எதையும் தேடி செல்லாதீர்கள். அந்த நிச்சயத்தை பாதிக்கிற எந்தக் காரியத்தையும் செய்யாதீர்கள். நன்றாகக் குளித்து முழுகி சுத்தமாகிக் கொள்கின்ற சந்தோஷத்தைப் பெறுவதற்காக யாரும் சேற்றில் இறங்கி தங்களை அழுக்காக்கிக் கொள்ள மாட்டார்கள். அப்படி செய்வது பாராட்டுக்குரியதல்ல. சிம்சோனைப் போன்ற ஒரு சில பலவான்கள் மாத்திரந்தான் பெலிஸ்தர்களின் நடுவாக சென்று, அவர்களை அவர்களுடைய கோவிலோடுகூட சேர்த்து அழித்துப் போட முடியும். அன்னாளைப் போன்றவர்கள் அப்படி செய்ய முடியாது. துயரத்தின் ஆவியை உடையவர்கள் தங்களுடைய வீடுகளுக்கு செல்வதே மேலானது. வாக்குவாதம் செய்பவர்களை விட்டு விலகிச் சென்றுவிட வேண்டும். எதையும் சரியானபிரகாரம் விளங்கிக் கொள்ளாமலேயே, இந்த வேதசத்தியம், அந்த வேதசத்தியம் என்று சச்சரவு செய்கிறவர்களாக, வீண் வாக்குவாதத்தில் ஈடுபட்டுக் கொண்டிருப்பவர்களாக அவர்கள் இருக்கக்கூடும். ஆகவே மீட்பர் உங்களிடம் கூறுகிறார்: "இரட்சிப்பின் நிச்சயத்தை நீ பெற்றிருக்கிறாய். அதைப் பற்றிய சந்தேகத்தை யாரும் உன்னிடம் எழுப்ப விடாதே. சமாதானத்தோடே போ." இதைத்தான் அப்போஸ்தலரும், "விசுவாசத்தில் பலவீனமுள்ளவர்களை சேர்த்துக் கொள்ளுங்கள். ஆனாலும் அவர்களுடைய மனஐயங்களைக் குற்றமாய் நிர்ணயிக்காமலிருங்கள்" என்று கூறுகிறார்.

அடுத்தபடியாக, அவருடைய ***நியாயஸ்தலத்தில் அவளுடைய வழக்கு முடிந்தாகி விட்டது*** என்கிற அர்த்தத்தில் "உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது. சமாதானத்தோடே போ" என்று நமது இரட்சகர் கூறுகிறார்.

இங்கே சீமோன் தனது மனதிற்குள்ளாக அவள்மீது குற்றம் சுமத்திக் கொண்டிருக்கிறான். அவளை உள்ளே நுழையவும், எஜமானனின் கால்களைத் தொடவும் விட்டிருக்கக்கூடாது என நினைத்துக் கொண்டிருக்கிறான். ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்து இங்கே அவளுக்காக பரிந்து பேசுவது மாத்திரமல்லாமல், அவளுக்கு சாதகமான தீர்ப்பையும் வழங்குகிறார். "உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது. சமாதானத்தோடே போ" என்று தீர்ப்பு கூறுகிறார். "உன் வழக்கு முடிந்துவிட்டது. உனக்கு எதிராக எதுவும் இல்லை. நீதி ஸ்தலம் உன்னை குற்றமற்றவளாகத் தீர்க்கிறது. நல்ல ஆத்துமாவே, நீ வீட்டுக்குச் செல்லலாம்" என்கிற அர்த்தம் தொனிக்கின்ற தீர்ப்பு அவளுக்குக் கிடைத்தது. நமது ஆண்டவர் இவ்விதமாக யாரையாவது பார்த்துக் கூறினாரென்றால் அது எவ்வளவு பெரிய ஆசீர்வாதம்! "தேவன் தெரிந்துகொண்டவர்கள் மேல் குற்றம் சாட்டுகிறவன் யார்? தேவனே அவர்களை நீதிமான்களாக்குகிறவர். ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்? கிறிஸ்துவே மரித்தவர். அவரே எழுந்துமிருக்கிறவர். அவரே தேவனுடைய வலதுபாரிசத்திலும் இருக்கிறவர். நமக்காக வேண்டுதல் செய்கிறவரும் அவரே." நியாயஸ்தலத்திலிருந்து கிறிஸ்து நமக்கு விடைகொடுத்து அனுப்பிவிட்டார். ஆகவே நாம் "சமாதானத்தோடே போக வேண்டும்."

மேலோட்டமாக நாம் பார்ப்பதையும் தவிர்த்து இன்னும் அதிகமான அர்த்தங்களையும் நமது கர்த்தர் இவ்வார்த்தையின் மூலமாக கூறுகிறாரல்லவா? "***சமாதானத்தோடே உன் வீட்டுக்குச் சென்று உனது தினசரி கடமைகளை செய்***" என்கிற அர்த்தத்திலும் அவர் கூறியிருப்பார் அல்லவா? அவள் தனது பாவ வாழ்க்கையின் காரணமாக தனது வீட்டாருக்கு அதிகமான துயரங்களை ஏற்படுத்தியிருந்திருப்பாள். பாவ வாழ்க்கை வாழ்கின்ற பெண்மணி தனது குடும்பத்தாருக்கு எவ்விதமான சந்தோஷத்தையும் தந்திருக்க மாட்டாள். இப்போது நமது இரட்சகர் அவளுக்கு இரட்சிப்பின் நிச்சயத்தைத் தந்துவிட்டார். அவளிடம், "நீ உன் வீட்டுக்குச் சென்று, வீட்டில் உனது கடமைகளை செய். ஒரு பெண்ணாக நீ நிறைவேற்ற வேண்டியவைகளை நிறைவேற்று. தாயாகவோ, மகளாகவோ, வேலைக்காரியாகவோ, நீ எந்த நிலமைக்கு அழைக்கப்பட்டிருக்கிறாயோ அந்த நிலைமையில் நீ செய்ய வேண்டியவைகளை உண்மையாக செய். சமாதானத்தோடே போ" என்கிறார்.

***அவள் வாழும் காலம் வரைக்கும் இவ்வார்த்தைகள் அவளோடேகூட நிலைத்திருக்கும்*** அல்லவா? "சமாதானத்தோடே போ" என்று இரட்சகர் அவளோடே சொன்னதை அவள் தன் வாழ்நாள் முழுவதும் கேட்டுக் கொண்டேயிருப்பாள் அல்லவா? ஒருவேளை அவள் தன் வீட்டிற்குச் சென்றபின் வியாதிப்பட்டிருக்கலாம். ஆனால் அப்போதும் அவள், தன் இரட்சகர் கூறியபடி "சமாதானத்தோடே" இருக்க வேண்டும். ஒருவேளை அவள் தன் வீட்டாரால் எதிர்ப்பையும் துன்பங்களையும் சந்திக்க வேண்டியதிருக்கலாம். ஆனாலும் "சமாதானத்தோடே போ" என்ற செய்தி அவள் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்க வேண்டும். அவள் தினசரி படுக்கையில் இருந்து எழுந்ததுமே இந்த வார்த்தைகள் அவளிடம் வந்து சேரும் என நான் நினைக்கிறேன். அவள் தன் கண்களை மூடி தூங்கச் செல்லும்போதும், அவள் அவைகளைக் கேட்டுக் கொண்டேதான் இருப்பாள். இவ்வளவு கிருபையுள்ள வார்த்தைகளைப் பெற்றுக் கொண்டிருக்கிற அவள், மரணஇருளின் பள்ளத்தாக்கிலும் "பொல்லாப்புக்கு பயப்படாமல்" நடந்து செல்லுவாள். அதற்காகத்தான் ஒருவேளை நமது கர்த்தரும் அப்படி சொல்லியிருந்திருப்பார். அவள் மரணத்தை சந்திக்க நேர்ந்தாலும், ஒருவேளை இரத்தசாட்சியாக மரிக்க வேண்டியதாக இருந்தாலும், மரணநேரத்திலும் "சமாதானத்தோடே போ" என்கிற இவ்வார்த்தைகள் அவள் காதுகளில் ஒலித்துக் கொண்டேயிருக்கும்.

இரட்சிக்கப்பட்டிருக்கும் கிறிஸ்தவர்களுக்கு நான் நடைமுறை பயன்பாடாக சொல்ல விரும்புவது இதுதான்: அருமையான நண்பர்களே, நீங்கள் உங்கள் குடும்பத்திலே செல்லும்போதும், வாழ்க்கையின் எல்லா நேரங்களிலும், நித்தியத்திற்குள் பிரவேசிக்கும் வேளையிலும்கூட "சமாதானத்தோடே" இருங்கள் என்று நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். உங்களுக்கு பரலோகம் இங்கேயே ஆரம்பமாகிவிட்டது. "எல்லா புத்திக்கும் மேலான தெய்வீக சமாதானத்தை" பெற்றுக் கொண்டிருக்கிறீர்கள். எல்லா விசுவாசிகளுக்கும் சமாதானம் இடைவிடாமல் கிடைக்கின்ற பங்காயிருக்க வேண்டும். நமது கர்த்தராகிய இயேசு பூலோகத்தில் வந்தபோது இதைத்தான் தேவதூதர்கள், "உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்பேரில் பிரியமும் உண்டாவதாக" என்று பாடலாகப் பாடினார்கள். நமது இரட்சகரின் வாழ்வு இப்படியாக ஆரம்பித்ததைப் போலவே முடிவிலும் இருந்தது. அதையே அவர் தமது சீஷர்களுக்கும் விட்டுச் சென்றிருக்கிறார். "சமாதானத்தை உங்களுக்கு வைத்துப் போகிறேன்.

என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்" என்று அவர் கூறியிருக்கிறார். இது அவருடைய நாமங்களில் ஒன்றாயிருக்கிறது. அவர் "சமாதானத்தின் தேவன்" என்று அழைக்கப்படுகிறார். அது உங்களுடைய ஆத்துமாவுக்கு மிகவும் அருமையானதாக இருக்க வேண்டும்.

இரட்சகர் உங்களுக்கு செய்திருப்பவைகளின் பலனாகத்தான் நீங்கள் சமாதானத்தைப் பெறுகிறீர்கள். அவர் உங்களை மன்னித்திருக்கிறாரா? அப்படியானால் நீங்கள் சமாதானத்தை அடைந்திருக்கிறீர்கள். அவர் உங்களை இரட்சித்திருக்கிறாரா? அப்படியானால் யாராலும் பறித்துக் கொள்ள முடியாத சமாதானம் உள்ளத்திலே வந்திருப்பதை உங்களால் உணர முடியும். அவர் உங்களுக்காக மரித்திருக்கிறாரா? அப்படியானால் நீங்கள் மரிக்க மாட்டீர்கள். ஆகவே சமாதானம் அடையுங்கள். அவர் உங்களுக்காக உயிரோடு எழுந்திருக்கிறாரா? அவர் உயிரோடிருப்பதால் நீங்களும் உயிரோடிருப்பீர்கள். ஆகவே உங்கள் இருதயம் கலங்காமல் இருப்பதாக. சமாதானத்தோடிருங்கள். அவர் திரும்பவும் வந்து உங்களைத் தம்மோடு சேர்த்துக் கொள்ளப் போகிறாரா? ஓ! அப்படியானால் கடவுளின் சிங்காசனத்திலிருந்தே பாய்ந்து வரும் வற்றாத ஆறு போல உங்கள் சமாதானம் இருப்பதாக.

உங்கள் உள்ளத்திலிருக்கிற இந்த சமாதானம் ஆவியின் கனியாகிய ஆசீர்வாதமாகும். தேவஆவியானவர் எங்கேயிருக்கிறாரோ அங்கெல்லாம் இந்த சமாதானம் இருக்கும். நமது உள்ளத்தில் "எப்போதும் சாந்தமும் அமைதலுமான" ஆவியின் கனி இருக்க வேண்டும். சமாதானம் என்கிற இந்த விலையேறப்பெற்ற வரத்தை அலட்சியப்படுத்தி விடாதீர்கள். இரட்சிக்கப்பட்ட உங்கள் ஆத்துமா அதை மேலும் மேலும் வாஞ்சிக்க வேண்டும். நான் கூறுவது உங்களுக்கு விளங்குகிறதா? இங்கேயிருந்து வீடு திரும்புவர்கள் யாராவது, "ஐயோ, என் வீட்டில் தேவபக்தியற்ற கணவர் இருக்கிறாரே" என்று நினைக்கலாம். அதைப் பற்றி யோசிக்காதே மனைவியே, "நீ சமாதானத்தோடே போ." ஒருவேளை சிலர், "நான் வேலை செய்யுமிடத்தில் தேவபக்தியற்றவர்களாக இருக்கிறார்களே" என நினைக்கலாம். பரவாயில்லை, "சமாதானத்தோடே போ." கலக்கத்தோடும் பயத்தோடும் அவர்கள் நடுவாக செல்லாமல், "தேவனே, என் இருதயம் உம்மை சார்ந்திருக்கிறது" என்று உனக்குள்ளாகப் பாடிக் கொண்டே போ.

**சமாதானத்தோடே போ**

"சமாதானத்தோடே போ." உங்களுக்கு மிகவும் நெருங்கிய நண்பன் ஒருவரின் மரணப்படுக்கைக்கு நீங்கள் செல்ல நேரிடலாம். அல்லது உங்கள் வீட்டிலேயேகூட ஒருவர் மரணதறுவாயில் இருக்கலாம். உங்களை மனசோர்வுக்கு ஆளாக்கும் அளவுக்கு அவர் மிகுந்த துயரமுள்ளவராக காணப்படலாம். பரவாயில்லை, நீங்கள் "சமாதானத்தோடே போங்கள்." அவ்வித மனப்பான்மை உங்கள் இருதயத்தின் சமாதானத்தை வலுப்படுத்தும். ஒரு முறை நான் ஒரு மலைப்பிரதேசத்தில் விபத்து ஒன்றைப் பார்த்தது நினைவிற்கு வருகிறது. ஒரு மனிதனின் கால் எலும்பு முறிந்து விட்டது. யாரோ ஒருவர் மருத்துவரை அழைத்து வர பதட்டத்துடன் ஓடினார். ஆனால் ஆச்சரியம் என்னவென்றால் அந்த மருத்துவர் வந்தபோது, பதட்டமில்லாமல் நிதானமாக நடந்து வந்தார். நான் ஒருவேளை அந்த மருத்துவராயிருந்தால், அடிபட்டவருக்கு உதவி செய்ய பதட்டத்துடன் விரைந்து வந்திருப்பேன். மூச்சு வாங்க நான் அப்படி ஓடி வந்திருந்தால், அவருக்கு செய்யக்கூடிய உதவிகளை என்னால் சரியாக செய்திருக்க முடியாது. ஆனால் இந்த மருத்துவரோ, ஒருவருக்கு அடிபட்டிருப்பதைக் கேட்டதும், அவர் அமைதியாக நிதானத்துடன் வந்ததால், அவர் செய்ய வேண்டிய மருத்துவ உதவிகளை அவரால் சரியாக செய்ய முடிந்தது.

நமது கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து எப்போதுமே அவசரப்பட்டதில்லை. ஊழியர்களிலேயே மிகவும் சிறந்தவராகிய நமது கர்த்தரின் நிதானத்தை சிந்தித்துப் பார்ப்பது நன்மை தரும். அவர் எப்போதுமே பரிசுத்தமான அமைதலோடும், சாந்தம் நிறைந்த பெருந்தன்மையோடும் எல்லா இடங்களுக்கும் சென்றவர். ஆகவே அவர் சகலத்தையும் நேர்த்தியாக செய்து முடித்தார். நீங்களும் அப்படியே "சமாதானத்தோடே" போங்கள். ஏனென்றால் அதுதான் உங்களுக்கு பெலனாயிருக்கும். சில வேளைகளில் செயல்படாமல் அமர்ந்திருப்பதுகூட உங்களுக்கு பெலனாயிருக்கும். கர்த்தருக்கு எது சந்தோஷமோ அதுவே உங்களுக்கு பெலன்.

சமாதானமாக இருப்பதன் மூலமாக நீங்கள் வாழ்க்கையில் தேவனை மகிமைப்படுத்துகிறவர்களாய் வாழ வேண்டும். அந்தப் பெண்மணி தனது பாவ வாழ்க்கையின் போது முன்னர் சமாதானமில்லாதவளாக, உடைந்து போனவளாக, உற்சாகமிழந்தவளாக இருந்திருப்பாள். ஆனால் இப்போது அவள் தனது இரட்சகரின் சொல்லுக்கிணங்கி வீடு திரும்பும்போது வித்தியாசமானவளாக மாறியிருப்பாள். அவளை ஏற்கனவே

அறிந்திருந்தவர்கள், இவளுக்கு என்ன நேர்ந்தது என்று சொல்லுமளவிற்கு அவளுடைய நடவடிக்கைகள் மாறியிருக்கும். சாந்தமானவளாக, அமைதலானவளாக அவள் வீடு திரும்பியிருப்பாள். அதை அவளுடைய அயலகத்தாரும் உணர்ந்திருப்பார்கள். முன்னர் கோபக்காரியாக இருந்திருக்கலாம். இப்போதோ அமைதலாக, நிதானத்தோடு காணப்படுகிறாள். வித்தியாசமாக செயல்படுகிறாள் என்று அவள் சிநேகிதிகள் சொல்லுவார்கள். அவள் இயேசுவிடம் சென்று, அவரிடமிருந்து கற்றுக் கொண்டிருக்கிறாள் என்பதை அவர்கள் அறிந்து கொள்வார்கள். ஏனென்றால் இயேசுக்கிறிஸ்துவின் குணாதிசயங்களும், அவருடைய வழிமுறைகளும் அப்படிப்பட்டவைதானே.

அன்பானவர்களே! கிறிஸ்து உங்களை இரட்சித்திருந்தால், உலகிலேயே சாந்தமுள்ளவர்களாகவும், சந்தோஷம் நிறைந்தவர்களாகவும் நீங்கள் வாழ்வதற்கு நல்லதொரு காரணம் இருக்கிறது. இரட்சிப்பின் நிச்சயத்தைப் பெற்றிருந்த ஒருவனிடம் மற்றொருவன், "உலகிலேயே மகிழ்ச்சி நிரம்பினவராக நீர் காணப்படுகிறீர்" என்று சொன்னான். இரட்சிப்பைப் பெற்றிருந்த அந்த மனிதன் "ஆம், அது உண்மைதான்" என பதிலளித்தான். ஆனால் இரட்சிப்பைப் பெற்றிருந்த அந்த மனிதன் மிகவும் ஏழை என்பது எல்லோருக்கும் தெரியும். அவனிடம் மாற்று உடை கூட இல்லை. இந்த உடை கிழியும் வரைக்கும் அடுத்த உடையைக் குறித்து தான் கவலைப்பட அவசியம் இல்லை என்று அவன் நினைத்தான். அடுத்த நாளின் காலை உணவு தனக்கு எப்படி கிடைக்கும் என்பது அவனுக்குத் தெரியாது என்று மற்றவர்கள் கூறுகிறார்கள். ஆனால் அவனுக்கு இரவு சாப்பாடு கிடைத்துவிட்டது. காலை உணவை தேவன் தரும் வரைக்கும் காத்திருக்க அவன் தயாராக இருக்கிறான். தேவன் மீது அவன் மிகுந்த நம்பிக்கை உடையவனாயிருந்தான். தான் மிகவும் ஏழையாக இருந்தாலும், உலகிலேயே தன்னை மிகவும் மகிழ்ச்சி நிறைந்தவனாக அவன் நினைத்தான்.

நீங்களும் இயேசுவை உண்மையாக விசுவாசிக்கிறவராக இருந்தால் நீங்களும் அப்படிப்பட்ட மகிழ்ச்சியோடு இருக்கலாம். உங்களுடைய மிகப்பெரும் துயரம் தீர்ந்து விட்டது. உங்களுடைய பாரத்தையெல்லாம் கிறிஸ்து சுமந்து தீர்த்துவிட்டார். உங்களுக்கு வந்திருக்கக் கூடிய மிகப்பெரும் அபாயத்தை அவர் நீக்கிவிட்டார். நீங்கள் பயந்து கொண்டிருந்த பேரழிவு உங்களுக்கு வருவதில்லை. நீங்கள் தேவனுடைய சுதந்திரவாளி.

**சமாதானத்தோடே போ**

கிறிஸ்துவின் உடன் பங்காளி. உங்களுக்கு இவ்வுலகில் எதுவெல்லாம் அவசியம் தேவையோ அதை அவர் உங்களுக்குத் தருகிறார். வரப்போகும் உலகில் பரலோகத்தை அவர் உங்களுக்கு வாக்களித்திருக்கிறார். தேவன் தமது உன்னதமான திட்டத்தை நித்திய ஆசீர்வாதத்தோடு உங்களிடத்தில் ஏற்கனவே நிறைவேற்றியிருக்கிறார். பிதா, குமாரன், பரிசுத்தஆவியானவர் ஆகிய மூவரும் சேர்ந்து உங்களை ஆசீர்வதித்திருக்கிறார்கள். சமாதான உடன்படிக்கை கையெழுத்தாகி விட்டது. அது முத்திரையிடப்பட்டிருக்கிறது. உறுதிப்படுத்தப்பட்டுவிட்டது. முடிவில் அதைப் பெறுவீர்கள். ஆகவே, "உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக." நீங்கள் உங்களுக்குள்ளாக சொல்லிக் கொள்ள வேண்டியதெல்லாம்:

> தேவதூதர் வந்து என்னை
> பரலோக ராஜாவிடம் அழைத்துச் செல்லும்வரை
> அன்பு செலுத்துவதையும் பாடுவதையும் தவிர
> வேறொன்றும் நான் செய்ய வேண்டியதில்லை.

கிறிஸ்துவின் நாமத்தினாலே தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக - ஆமேன்.

*(செப்டம்பர் 23, 1883-ஆம் ஆண்டு, மெட்ரோபாலிடன் டாபர்நாகிள், நியுயிங்டன் என்கிற இடத்திலே, ஞாயிற்றுக்கிழமை மாலையிலே, சார்ல்ஸ் ஸ்பர்ஜன் அளித்த தியானத்தின்(2770) சாராம்சம்)*

பூர்வபாதைகள் வெளியீடுகள்













பொதுஆராதனை
(PUBLIC WORSHIP)
ஜெ. சி. ரைல்


சில
அடிப்படைக்
கேள்விகள்
ULTIMATE QUESTIONS
By John Blanchard
ஜான்
ப்ளான்சார்ட்
EP


ULTIMATE
QUESTIONS
John Blanchard


நீங்கள் மறுபடியும்
பிறக்க வேண்டும்
ஜான் பைப்பர்
FINALLY ALIVE
JOHN PIPER



Rs 60



# சார்ல்ஸ் ஹேடன் ஸ்பர்ஜன் (1834-1892)

இங்கிலாந்திலுள்ள எஸெக்ஸ், கெல்விடான் என்கிற இடத்தில் ஜுன் மாதம் 19ஆம் தேதி 1834ஆம் ஆண்டிலே பிறந்தார். இவருடைய தந்தையும், தாத்தாவும் போதகர்களாக இருந்த படியினால் சுவிசேஷத்தைக் குறித்த அறிவைப் பெற்றிருந்தார்.

ஆனால் 1850ஆம் ஆண்டு வரைக்கும் மறுபிறப்படையாதவராகத்தான் இருந்தார். அந்த ஆண்டின் ஜனவரி மாதத்தின் ஒரு காலையிலே மறுபிறப்படைந்தார். அதே ஆண்டின் ஆகஸ்டு மாதத்தில், விவசாயிகள் அடங்கிய ஒரு சிறு கூட்டத்தாருக்கு அவர் தமது முதலாவது பிரசங்கத்தைப் பிரசங்கித்தார்.

ஓராண்டிற்குப் பிறகு, ஒரு கிராம சபை அவரைத் தங்களுடைய போதகராக வரும்படி அழைத்தது. தமது 19ஆம் வயதில், 1854ஆம் ஆண்டில் லண்டனிலுள்ள சௌத்வார்க், நியூ பார்க் ஸ்ட்ரீட் ஆலயத்தில் மேய்ப்பனாக நியமிக்கப்பட்டார். அதுதான் பிற்காலத்தில் மெட்ரோபாலிடன் டேபர்நாகிள் ஆக ஆனது. 1855ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடங்கி, ஸ்பர்ஜனுடைய பிரசங்கங்கள் வாரந்தோறும் வெளியிடப்பட்டது. அந்த பழக்கம் அவர் மரித்து 24 ஆண்டுகள் ஆன பிறகும்கூட 1916ஆம் ஆண்டு வரை தொடர்ந்தது. லண்டனில் அவர் பிரசங்கியாக இருந்த காலங்களில், அவர் ஒவ்வொரு ஞாயிறும் 6000 பேர் அடங்கிய கூட்டத்தாருக்குப் பிரசங்கித்தார். அதையும் தவிர வாரந்தோறும் தமது பிரசங்கங்களை வெளியிட்டார். மாதாந்திரப் பத்திரிகையிலும் எழுதி வந்தார். போதகர்களுக்கென ஒரு பயிற்சி நிலையத்தைத் தொடங்கி நடத்தினார். இரண்டு அநாதை ஆசிரமங்களையும், முதியோர் இல்லம் ஒன்றையும் தொடங்கினார். அநேக ஊழியப் பயிற்சி ஸ்தலங்களையும் ஏற்படுத்தினார்.

அவரது இறுதிக் காலங்களில் சுகவீனத்தினால் சரீரத்தில் வேதனைகள் ஏற்பட்டது. அவருடைய ஊழியத்தை எதிரிகள் தாக்கினார்கள். இருந்தாலும் தளராது, 1892 ஜனவரியில் மரணத்தை சந்திக்கும் வரையிலும் தொடர்ந்து அவர் பிரசங்கித்து வந்தார். ஸ்பர்ஜனுடைய வாழ்க்கையின் வெற்றிக்குக் காரணம், அவருடைய ஜெப வாழ்க்கையும், தமது ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசுக்கிறிஸ்துவின் அன்பிலும் கிருபையிலும் உறுதியான நம்பிக்கை கொண்டிருந்ததுமே.

பூர்வ பாதைகள்

பூர்வ பாதைகள் வெளியீடு